871
16.x.07

வெளியீடு : 25-6-2007 Issued : 25-6-2007

# தமிழ்நாடு
# சட்டமன்றப் பேரவை நடவடிக்கைகள்
# செயலக வெளியீடு

# TAMIL NADU
# LEGISLATIVE ASSEMBLY DEBATES
# OFFICIAL REPORT

**புதன்கிழமை, ஏப்ரல் 4 2007—தொகுதி 25—எண் 1**

**Wednesday, the 4th April 2007—Volume 25—No. 1**

*சட்டமன்றப் பேரவைச் செயலகம், சென்னை-600 009*

**Legislative Assembly Secretariat, Chennai - 600 009**

**[Price Rs. 3.00**

227564

**4-4-2007**

## உள்ளடக்கம்


| | பக்கங்கள் |
|---|---|
| ஆளுநரும் அமைச்சரவையும் | iii-viii |
| Governor and Council of Ministers | ix-xiii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xv-xvii |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | xix-xxix |
| **1. வினாக்கள்–விடைகள்—** | |
| உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-40 |
| **2. விதி 110–ன்கீழ் அறிக்கை—** | |
| நியாய விலையில் உணவுப் பொருட்கள் விநியோகம், தமிழ்ப் புத்தாண்டு நாளான 14-4-2007 முதல் தொடங்குதல்– மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை | 40-41 |
| **3. அறிவிப்புகள்—** | |
| (அ) பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் அமெரிக்கத் தூதர் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்களுக்கு வரவேற்பு | 41-42 |
| (ஆ) கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டாம் என்று அதிமுக. ஆட்சியில் அமைச்சரவை எடுத்த முடிவு குறித்து 3-4-2007 அன்றைய விவாதக் குறிப்புகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு | 46-49,105 |
| (இ) கவன ஈர்ப்புகள்–துறைகள் விரைந்து பதில் அனுப்ப வலியுறுத்தல் | 50 |

பக்கங்கள்

**4. சிறப்புக் கவன ஈர்ப்பு—**

காவிரி டெல்டா பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படாதது — 42-45

**5. அறிக்கைகள் அளித்தல்—**

பொதுக் கணக்குக் குழு — 50

**6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்**—தொடர்ச்சி — 51-178

(அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

(ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

மாண்புமிகு திரு. துரைமுருகன் — 51,74-75, 104,149, 155-156,163, 164-177

* திரு. ஓ. பன்னீர்செல்வம் — 105-120

திரு. வீ. கருப்பசாமி பாண்டியன் — 123-133

* திரு. எம்.ஆர். சுந்தரம் — 133,134-139

திரு. கே.எல். இளவழகன் — 140-146

திருமதி ஜி. லதா — 146-151

திரு. வை. சிவபுண்ணியம் — 151-159

* திரு. நா. இராமகிருஷ்ணன் — 159-164

**7. அரசினர் தீர்மானம்—**

விதி 32–ஐ தளர்த்துதல் — 178-179

**8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்** — 179-180



## ஆளுநரும் அமைச்சரவையும்

**ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா**

**அமைச்சரவையின் உறுப்பினர்கள்**

**1. முதலமைச்சர்** .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

**2. நிதி அமைச்சர்** .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

**3. மின்சாரத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசாரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

**4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:**

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

**5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கோ.சி. மணி:**

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

**6. வேளாண்மைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:**

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

**7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. துரைமுருகன்:**

பொதுப் பணிகள், சிறு பாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

**8. உயர் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:**

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்.



**9. போக்குவரத்துத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.என். நேரு:**

போக்குவரத்து, நாட்டுடைமை யாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

**10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:**

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

**11. ஊரகத் தொழில் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:**

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

**12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:**

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்–அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

**13. சுற்றுலாத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:**

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**14. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

*செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்*

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

*உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு*

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

*வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு*

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

*மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்*

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

*தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எந்தக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு*

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227564
சென்னை-600 008
நூலகம்



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

*இந்து சமய மற்றும் அறநிலையங்கள்*

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

*கைத்தறி மற்றும் துணித் தொழில்*

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

*பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்*

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

*வணிக வரிகள்*

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

*விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)*

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

*வனங்கள் மற்றும் சின்கோனா*

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

*நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்*

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இல்லங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR -- THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

   Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

   Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

   Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

   Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

   Statistics and welfare of Ex-Servicemen

6. **Minister for Agriculture** .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. **Minister for Public Works and Law** .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. **Minister for Higher Education** .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. **Minister for Transport** .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. **Minister for Backward Classes** .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. **Minister for Rural Industries** .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. **Minister for Revenue and Prisons** .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. **Minister for Tourism** .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. **Minister for Information** .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. **Minister for Food and Co-operation** .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. **Minister for Housing and Slum Clearance** .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. **Minister for Health** .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** .. **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** .. **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** .. **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** .. **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** .. **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** .. **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** .. **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona,



25. **Minister for Highways** .. **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** .. **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** .. **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** .. **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** .. **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** .. **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** .. **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்
திரு. துரை சந்திரசேகரன்
டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்
திரு. தி. வேல்முருகன்
செல்வி கே. பாலபாரதி
திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | .. இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | .. இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி சீ. நிர்மலா, பி.காம். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம். | .. குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | .. குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | .. குழு அலுவலர் |
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பி.ஜி.டி.சி.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | .. தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | .. பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | .. தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | .. தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | .. தலைமை நிருபர் |
| திருமதி அ. வெற்றிஸால், பி.ஏ. | .. சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | .. சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | .. சார்புச் செயலாளர் |

திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

1. அங்கையற்கண்ணி, செல்வி ஆ. .. சங்கராபுரம்
2. அப்துல் பாசித், திரு. எச். .. வாணியம்பாடி
3. அப்பாவு, திரு. மு. .. ராதாபுரம்
4. அமரமூர்த்தி, திரு. து. .. அரியலூர்
5. அரி, திரு. கோ. .. திருத்தணி
6. அருண்மொழிதேவன், திரு. ஆ. .. சிதம்பரம்
7. அருள் அன்பரசு, திரு. .. சோளிங்கர்
8. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. .. திருச்செந்தூர்
9. அன்பரசன், திரு. தா.மோ. .. ஆலந்தூர்
10. அன்பழகன், திரு. எம். .. பழனி (செ.வ.)
11. அன்பழகன், திரு. கே.பி. .. பாலக்கோடு
12. அன்பழகன், பேராசிரியர் க. .. துறைமுகம்
13. அன்பில் பெரியசாமி, திரு. .. திருச்சிராப்பள்ளி—1
14. ஆவுடையப்பன், திரு. இரா. .. அம்பாசமுத்திரம்
15. ஆறுமுகம், திரு. கி. .. செங்கல்பட்டு
16. ஆற்காடு நா. வீராசாமி, திரு. .. அண்ணா நகர்
17. இராசசேகரன், திரு. எஸ். .. ஆலங்குடி
18. இராணி, திருமதி இரா. .. உப்பிலியாபுரம் (ஆ.வா.)
19. இராமகிருஷ்ணன், திரு. நா. .. கம்பம்
20. இராமசாமி, திரு. கரி. .. திருவாடானை

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | - ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | - தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | - தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | - வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | - பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | - ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா. | - நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | - திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | - ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | - சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | - அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | - தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | - பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | - கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | - தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | - தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | - தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | - செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | - காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | - சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | - தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | - முகையூர் |
| 52. | கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. | - அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | - தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | - இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | - கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | - மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | - எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | - கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | - தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | - சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | - மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | - குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | - திருநாவலூர் |

64. குருசாமி, திரு. செ. .. அந்தியூர் (செ.வ.)

65. கோபாலன், திரு. போ. .. உதகமண்டலம்

66. கோபிநாத், திரு. கே. .. ஓசூர்

67. கோவிந்தசாமி, திரு. சி. .. திருப்பூர்

68. கோவை தங்கம், திரு. .. வால்பாறை (செ.வ.)

69. சக்கரபாணி, திரு. அர. .. ஒட்டன்சத்திரம்

70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி .. அச்சரப்பாக்கம் (செ.வ.)

71. சண்முகம், திரு. சி.வி. .. திண்டிவனம்

72. சண்முகவேலு, திரு. சி. .. உடுமலைப்பேட்டை

73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. .. வாசுதேவநல்லூர் (செ.வ.)

74. சந்திரகாசி, திரு. மா. .. வரகூர் (செ.வ.)

75. சந்திரா, திருமதி மு. .. ராஜபாளையம் (செ.வ.)

76. சாமி, திரு. ஆர். .. மேலூர்

77. சாமி, திரு. கே.பி.பி. .. திருவொற்றியூர்

78. சாமிநாதன், திரு. மு.பெ. .. வெள்ளக்கோவில்

79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். .. ஆண்டிமடம்

80. சிவபுண்ணியம், திரு. வை. .. மன்னார்குடி

81. சிவராஜ், திரு. சு. .. ரிஷிவந்தியம்

82. சிவானந்தம், திரு. ஆர். .. ஆரணி

83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. .. திருவள்ளூர்

84. சின்னசாமி, திரு. அ. .. பேரணாம்பட்டு (செ.வ.)

85. சின்னசாமி, திரு. ஆர். .. சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. .. மருங்காபுரி

87. சின்னதுரை, திரு. கு. .. தலைவாசல் (செ.வ.)

88. சின்னப்பன், திரு. பொ. .. விளாத்திகுளம்

89. சின்னராஜ், திரு. ஒ.கே. .. மேட்டுப்பாளையம்

90. சீனிவாசன், திரு. கு. .. பூங்கா நகர்

91. சுதர்சனம், திரு. டி. .. பூந்தமல்லி

92. சுந்தரம், திரு. எம்.ஆர். .. ஆத்தூர்

93. சுந்தரம், திரு. ந. .. காரைக்குடி

94. சுந்தர், திரு. க. .. உத்திரமேரூர்

95. சுப்பிரமணியம், திரு. ஓ. .. பவானிசாகர்

96. சுப்புராம், திரு. ராம. .. திருமயம்

97. சுப்ரமணியன், திரு. ந. .. குளத்தூர் (செ.வ.)

98. சுரேஷ் ராஜன், திரு. என். .. கன்னியாகுமரி

99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். .. நாட்ராம்பள்ளி

100. செங்குட்டுவன், திரு. டி. .. கிருஷ்ணகிரி

101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. .. கோபிசெட்டிப்பாளையம்

102. செந்தமிழன், திரு. ஞா. .. சைதாப்பேட்டை

103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. .. மேல்மலையனூர்

104. செந்தில் பாலாஜி, திரு. வே. .. கரூர்

105. செல்வம், திரு. கு. .. மங்களூர் (செ.வ.)

106. செல்வராஜ், திரு. என். .. முசிறி

107. செல்வராஜ், திரு. து. .. ஸ்ரீவைகுண்டம்

108. செல்வி ராமஜெயம், திருமதி .. புவனகிரி

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்
110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்
111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்
112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி
113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி
114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)
115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்
116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி
117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)
118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு
119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை
120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி
121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்
122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)
123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்
124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)
125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்
126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்
127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு
128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்
129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)
130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு
132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)
133. துரைமுருகன், திரு. - காட்பாடி
134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி
135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)
136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு
137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை
138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை
139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2
140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி
141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)
142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்
143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)
144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)
145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி
146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)
147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி
148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்
149. பாண்டுரங்கன், திரு. சு. - அணைக்கட்டு
150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்
151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்
152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்
153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

154. பிரபாவதி, திருமதி பெ. .. தாராபுரம் (செ.வ.)

155. பிரேமா, திருமதி ஆர். .. அவினாசி (செ.வ.)

156. பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். .. கடையநல்லூர்

157. புஷ்பராஜ், திரு. செ. .. கண்டமங்கலம் (செ.வ.)

158. பூங்கோதை, டாக்டர் (திருமதி) .. ஆலங்குளம்

159. பெரியகருப்பன், திரு. கே.ஆர். .. திருப்பத்தூர்

160. பெரியசாமி, திரு. இ. .. ஆத்தூர்

161. பெரியசாமி, திரு. மு.க. .. பூம்புகார்

162. பெரியண்ணன், திரு. பி.என். .. பெண்ணாகரம்

163. பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. .. கோயம்புத்தூர் கிழக்கு

164. பொள்ளாச்சி
வி. ஜெயராமன், திரு. .. பொள்ளாச்சி

165. பொன்முடி, டாக்டர் க. .. விழுப்புரம்

166. பொன்னுசாமி, திரு. கே. .. சேந்தமங்கலம் (ஆ.வா.)

167. பொன்னுதுரை, திரு. செ. .. பெருந்துறை

168. போளூர் ம. வரதன், திரு. .. செங்கம் (செ.வ.)

169. போஸ், திரு. ஏ.கே. .. திருப்பரங்குன்றம்

170. மகேந்திரன், திரு. இ. .. உசிலம்பட்டி

171. மகேந்திரன், திரு. கே. .. பெரம்பூர் (செ.வ.)

172. மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. .. திருவோணம்

173. மணி, திரு. எஸ். .. பொங்கலூர்

174. மணி, திரு. கோ.சி. .. கும்பகோணம்

175. மணி, திரு. ஜி.கே. .. மேட்டூர்

176. மதிவாணன், திரு. உ. .. திருவாரூர் (செ.வ.)



177. மலரவன், திரு. தா. .. கோயம்புத்தூர் மேற்கு

178. மாணிக்கம், திரு. இரா. .. குளித்தலை

179. மாரிமுத்து, திரு. வே. .. நாகப்பட்டினம்

180. மாலைராஜா, திரு. என். .. திருநெல்வேலி

181. முருகவேல், திரு. கே. .. முதுகுளத்தூர்

182. முல்லைவேந்தன், திரு. வ. .. மொரப்பூர்

183. மூர்த்தி, திரு. டி. .. திருப்போரூர் (செ.வ.)

184. மூர்த்தி, திரு. பி. .. சோழவந்தான்

185. மேகநாதன், திரு. த.அ. .. காவேரிப்பட்டினம்

186. மோகன், திரு. பெ. .. ஓட்டப்பிடாரம் (செ.வ.)

187. மைதீன்கான், திரு. டி.பி.எம். .. பாளையங்கோட்டை

188. யசோதா, திருமதி டி. .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.)

189. ரங்கநாதன், திரு. ப. .. வில்லிவாக்கம்

190. ரங்கராஜன், திரு. என்.ஆர். .. பட்டுக்கோட்டை

191. ரவிக்குமார், திரு. து. .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.)

192. ரவிச்சந்திரன், திரு. எல். .. சேலம்—I

193. ராணி வெங்கடேசன், திருமதி .. சாத்தான்குளம்

194. ராதாகிருஷ்ணன், திரு. ல. .. கோவில்பட்டி

195. ராமச்சந்திரன், திரு. கா. .. கூடலூர்

196. ராமநாதன், திரு. கே.வீ. .. பவானி

197. ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். .. இளையான்குடி

198. ராஜகுமார், திரு. எஸ். .. மயிலாடுதுறை

199. ராஜசேகரன், திரு. மா. .. தொட்டியம்

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. - பேளூர்
221. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். - ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். - கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. - விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. - அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. - இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. - நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். - குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. - வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ - ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. - ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. - இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் - நியமனம்
235. (வெற்றிடம்) - மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## பங்குனி 21, விய — திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 ஏப்ரல் 4, புதன்கிழமை

மாண்புமிகு பேரவைத் தலைவர் **திரு. இரா. ஆவுடையப்பன்** அவர்கள் தலைமையில் காலை 9–30 மணியளவில் பேரவை கூடியது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"தெரிதலுந் தேர்ந்து செயலும் ஒருதலையாச்*
*சொல்லலும் வல்ல தமைச்சு."*

ஒரு செயலைத் தேர்ந்தெடுத்தலும், அதனை நிறைவேற்றிட வழிவகைகளை ஆராய்ந்து ஈடுபடுதலும், முடிவு எதுவாயினும் அதனை உறுதிபடச் சொல்லும் ஆற்றல் படைத்திருத்தலும் அமைச்சருக்குரிய சிறப்பாகும்.

## 1. வினாக்கள்—விடைகள்

### உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள். வினா எண்கள் 11 மற்றும் 12, பின்னர் எடுத்துக்கொள்ளப்படும்.

வினா எண் 13, மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள்.

**13—**

### கட்டட வசதி

***9237—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:**

மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) திருவண்ணாமலை மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்துக் கழக அலுவலகம் கட்டுவதற்குப் போதுமான காலி நிலம் உள்ளதால், சொந்தக் கட்டடம் கட்ட அரசால் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, இருக்கையில் இல்லை. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேலூர் மாவட்டத்தில் முன்பு இயங்கி வந்த பட்டுக்கோட்டை அழகிரி போக்குவரத்துக் கழகம் என்பதைத்தான் தமிழ்நாடு அரசுப் போக்குவரத்துக் கழகத்தினுடைய கிளையாகப் பிரித்து, திருவண்ணாமலையில் புதியதாக அரசுப் போக்குவரத்துக் கழகமாக 1½ மாதங்களுக்கு முன்னாலே துவங்கினார்கள். அப்படித் துவங்குவதற்கு முன்னாலே, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் முன்பு போக்குவரத்துத் துறை அமைச்சராக இருந்த காலத்திலே 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டன. இப்பொழுது பல இடங்களிலே—வேலூரில் இருக்கக்கூடிய போக்குவரத்துக் கழகத்திற்குப் பொது மேலாளர் மட்டுமே தலைமை வகித்துக்கொண்டிருக்கிறார். ஆனால், சம்பளம் எல்லாம் பார்த்தால், அவர் M.D. சம்பளத்தை reach செய்து விட்டார். ஆகவே, நீங்கள் எல்லா இடங்களிலும் பொது மேலாளர்கள் என்பதற்குப் பதிலாக, M.D.க்களையே போட்டு, 7 மண்டலங்கள் என்பதை, எங்கெங்கே போக்குவரத்துக் கழகங்களுடைய தலைமையிடம் அமைக்கப்பட்டு இருக்கிறதோ, அந்த இடங்களில் M.D.யினுடைய தலைமையிலே போக்குவரத்துக் கழகம் இயங்குவதற்கு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வாரா? அதேபோல, திருவண்ணாமலைக்கு, நீங்கள் வேலூரிலிருந்து பிரித்து, வேலூரில் இருக்கக்கூடிய ஆட்களை எல்லாம் அங்கே மாற்றம் செய்துவிட்டீர்கள். இப்பொழுது வேலூரிலே அந்தப் போக்குவரத்துக் கழகம்



இயங்குவதற்கான போதிய ஆட்கள் இல்லை. புதியதாகத் திருவண்ணாமலைக்கு ஆட்களை நியமனம் செய்துவிட்டு, எங்களுடைய வேலூர் ஆட்களை எல்லாம் வேலூரிலேயே மீண்டும் நியமனம் செய்வதற்கு அரசு ஆவன செய்யுமா என்று அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அவர் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மூலக் கேள்வி போக்குவரத்துத் துறையைப் பற்றியது. இவர் கேட்டிருப்பது போக்குவரத்துக் கழகத்தைப் பற்றியது. தமிழ்நாட்டில் ஏற்கெனவே 22 போக்குவரத்துக் கழகங்களாக இருந்ததை, செலவுச் சிக்கனம் செய்யும்பொருட்டு நம்முடைய மாண்புமிகு முன்னாள் போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள் பெருமுயற்சி எடுத்து, (குறுக்கீடு) பதில் சொல்லிக்கொண்டிருக்கும்போதே (குறுக்கீடு) திரு. கிருஷ்ணமூர்த்தி, உட்காருங்கள்; மிகவும் அவசரப்படுகிறீர்களே? கேட்கிற நேரத்தில் விட்டுவிட்டு, இப்பொழுது வந்து நின்றுகொண்டு, இடைமறித்தால் எப்படி? 7 மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, 7 பகுதிகளில் சென்னை ஒரு பகுதியாகவும், விழுப்புரம் ஒரு பகுதியாகவும், கும்பகோணம் ஒரு பகுதியாகவும், சேலம் ஒரு பகுதியாகவும், மதுரை ஒரு பகுதியாகவும், விரைவுப் போக்குவரத்துக் கழகம் ஒரு பகுதியாகவும் என இப்படி 7 கழகங்களாக மாற்றப்பட்டிருக்கின்றன. இப்போது மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னதுபோல, ஏற்கெனவே பேருந்து வழித்தடங்கள் குறைவாக இருந்த நேரத்திலே இது சரியாக இருந்தது. இன்றைக்கு 17,200 வழித்தடங்கள் உருவாக்கப்பட்டிருக்கின்றன. புதிய வழித்தடங்களும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாக சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க ஆங்காங்கே உருவாக்கப்பட்டுக்கொண்டிருக்கின்றன. (குறுக்கீடு) அவை போகிற இடத்திற்குப் போகும். நீங்கள் இப்படிக் கேட்டால் நாங்கள் என்ன பண்ணுவது? அதனால், இந்தப் போக்குவரத்துக் கழகங்களை மேற்கொண்டு அதிகப்படுத்தலாமா, 2,000 பேருந்துகள் வரை ஒரு போக்குவரத்துக் கழகம் என அமைக்கலாமா என்ற ஓர் ஆய்வு இருக்கிறது. சட்டமன்றத்தில் மானியக் கோரிக்கை வர இருக்கிறது. அதிலே சரியான நல்லதொரு முடிவு அறிவிக்கப்படும் என்று தெரிவித்துக்கொள்கிறேன். வேலூரைப் பொறுத்தவரையில், நிச்சயமாக

உங்களுக்கு அந்த அலுவலர்கள் மீண்டும் தேவை என்றால், அவர்களையே வைத்துக்கொள்ள இந்த அரசு அனுமதிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

*முற்பகல் 9—35*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வரலாற்றுப் புகழ்பெற்ற திருவண்ணாமலை தமிழகத்திலே வளர்ந்து வரும் நகரங்களில் முதன்மையான ஆன்மீக நகரம். திருவண்ணாமலை, போக்குவரத்து மிகுந்த புதுச்சேரி-பெங்களூர் தேசிய நெடுஞ்சாலையிலும், கடலூர்-சித்தூர் நெடுஞ்சாலையிலும் அமைந்துள்ள ஒரு முக்கியமான போக்குவரத்து நகரம். திருவண்ணாமலையில் மாதந்தோறும் பௌர்ணமி தினத்தன்று தமிழகம் முழுவதுமிருந்தும், இந்தியாவின் பல பகுதிகளிலிருந்தும், இன்னும் குறிப்பாகச் சொல்லப் போனால், பல சட்டமன்ற உறுப்பினர்கள் உட்படப் பல இலட்சம் பக்தர்கள்—சுமார் 5 இலட்சம் முதல் 10 இலட்சம் வரை, கிரிவலம் வர வருகின்றார்கள். குறிப்பாக, கார்த்திகை மாத மகாதீபத்தன்று தமிழகம், இந்தியா மட்டுமல்லாமல் பல வெளிநாடுகளிலேயிருந்துகூட சுமார் 25 இலட்சம் மக்கள் வருகின்ற தீபத் திருநகராகும். பௌர்ணமி தினத்தன்று சுமார் 25 ஆயிரம் வாகனங்களும், மகாதீபத்தன்று ஒரு இலட்சம் வாகனங்களும் வருகின்றன. எனவே, அந்த வாகனங்களைக் கட்டுப்படுத்த, ஒழுங்குபடுத்த திருவண்ணாமலை வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைச் செம்மைப்படுத்த வேண்டும். திருவண்ணாமலையை உள்ளடக்கிய ஒன்றுபட்ட வடாற்காடு மாவட்டமாக இருந்தபோதே திருவண்ணாமலையில் மோட்டார் வாகன ஆய்வாளர் பகுதி அலுவலகம்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** வாடகைக் கட்டடத்திலே இயங்கி வந்தது. திருவண்ணாமலை, மாவட்டத் தலைநகராக மாறியும்கூட, வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் இதுவரை சுமார் 15 ஆண்டுகளுக்கும் மேலாக வாடகைக் கட்டடத்திலேயே இயங்கி வருகின்றது. தற்போது திருவண்ணாமலை மாவட்டத்தில் வாகனங்களுடைய எண்ணிக்கை அதிகரித்துவிட்டது. மாவட்ட ஆட்சித்





தலைவர் அலுவலகத்திலேயிருந்து வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் ஐந்து கிலோ மீட்டர் தொலைவிலே வாடகைக் கட்டடத்தில் இயங்கி வருகின்றது. எனவே, பொது மக்களுடைய நலனைக் கருதி கடந்த ஆட்சிக் காலத்திலேயே போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்கு . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. கிருஷ்ணமூர்த்தி, சொந்தக் கட்டடம் வேண்டுமா, வேண்டாமா, கட்டித் தருவீர்களா என்பதுதான் கேள்வி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இடம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. ஏற்கெனவே ரூ. 15 இலட்சம் மதிப்பீட்டில் test track அமைக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆட்சியில் உடனடியாக அந்தப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்து, கட்டடம் கட்டுவதற்கு உடனடியாக ஆவன செய்யப்பட வேண்டும். ஏற்கெனவே இடம் ஒதுக்கி இருக்கின்ற காரணத்தினால் . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடுகள்) அவர் முதலிலேயே பதிலும் சொல்லிவிட்டார். (குறுக்கீடுகள்) நீங்கள் எங்கோ போய்விட்டீர்கள்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கெனவே இங்கே பதில் கூறப்பட்டிருக்கிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டுவதற்குப் போதுமான காலி நிலம் உள்ளதால், சொந்தக் கட்டடம் கட்ட அரசு உரிய நடவடிக்கை மேற்கொள்ளும் என்று பதில் சொல்லப்பட்டிருக்கிறது. அது, 7-3-1988 அன்று தொடங்கப்பட்டு, மாத வாடகை ரூ. 7,500 என்ற அளவிலே சௌந்திரபாண்டியன் என்ற தனியாருக்குச் சொந்தமான இடத்தில்—எண் 217 என்ற இடத்திலே அந்த அலுவலகம் அமைக்கப்பட்டிருக்கிறது. இப்போது புதிய இடம் தரப்பட்டிருக்கிறது. 88 இலட்சம் ரூபாய் செலவிலே இந்த ஆண்டு புதிய கட்டடம் கட்டுவதற்காகக் கருத்துரு உருவாக்கப்பட்டிருக்கிறது. இந்த ஆண்டே அந்தக் கட்டடம் கட்டப்படும். நம்முடைய மாண்புமிகு உணவுத் துறை அமைச்சர் அவர்கள், திருவண்ணாமலை பகுதியிலே அந்தக் கட்டடம் கட்ட வேண்டுமென்றும், அதேபோல, அந்தப் பேருந்துகளுக்காக அங்கே தனியாக ஓர் அலுவலகம் திறக்கப்பட வேண்டுமென்றும் பல்வேறு முயற்சிகளை எடுத்த காரணத்தால், உடனடியாக இந்த ஆண்டே

அந்தக் கட்டடத்தைக் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்பதனால், ஒரே ஒரு கேள்வி கேட்பதற்கு அனுமதிக்கிறேன்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** இன்னொரு துணைக் கேள்வி அனுமதிக்கலாம் அல்லவா?

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, கேளுங்கள்.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொது மக்கள் நலன் கருதி, ஏற்கெனவே திருவண்ணாமலையில் செயல்பட்டு வரும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தைத் தொடர்ந்து, ஆரணியிலே மோட்டார் வாகன பகுதி நேர அலுவலகம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது; அதேபோல், கலசப்பாக்கம் தொகுதி உள்ளடங்கிய போளூர் வட்டாரத்தினுடைய தலைமையிடமான போளூரில் வாகன ஆய்வாளர் பகுதிநேர அலுவலகம் அமைக்க இந்த அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்று ஆரணித் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் நமது சகோதரர் சிவானந்தம் அவர்கள், ஆரணியிலே சொந்த இடம் உங்களுக்குத் தந்திருக்கிறோம்; அதனால் Unit அலுவலகத்தையும் சொந்தக் கட்டடமாக நீங்கள் கட்டித் தர வேண்டுமென்று சொன்னார். அவருடைய கோரிக்கையை ஏற்று, திருவண்ணாமலையிலே R.T.O. அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடமும், ஆரணியிலே Unit அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடமும் இந்த ஆண்டு கட்ட இருக்கிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) கலசப்பாக்கம் தொகுதிக்கு ஆய்வு செய்யச் சொல்லலாம். ஆய்வு செய்யச் சொல்லி, அவசியம் இருக்குமானால் அதைப் பற்றி யோசித்து முடிவு செய்யலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வ. முல்லைவேந்தன்.

**திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரூரில் 1996–97-ல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கலைஞருடைய ஆட்சியில் தொடங்கப்பட்டு, அதற்குப் பிறகு அதற்குக் கட்டடம் கட்டுவதற்காக நிலம் எல்லாம் தேர்வு செய்யப்பட்டு, கடந்த ஐந்து ஆண்டு காலமாகக் கட்டப்படாமல் நிலுவையிலே இருக்கிறது. எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள், அரூர் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு இடம் தேர்வு செய்யப்பட்டிருக்கிற சூழ்நிலையில், நடப்பாண்டிலேயே கட்டடம் கட்டித் தர முன்வருவாரா என அறிய விரும்புகிறேன்.





முற்பகல் 9–40

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் R.T.O. Offices மொத்தம் 47 இருக்கின்றன. Unit Offices 44 இருக்கின்றன. அவற்றிலே 23 R.T.O. அலுவலகங்கள் சொந்தக் கட்டடத்திலே இயங்கிக்கொண்டிருக்கின்றன. Unit Office ஒரேயொரு இடத்திலே மட்டும்தான் சொந்தக் கட்டடத்தில் இயங்கிக்கொண்டிருக்கிறது. இந்த ஆண்டு 6 இடங்களிலே R.T.O. அலுவலகங்களுக்குப் புதிய கட்டடங்கள் கட்டிக்கொண்டு இருக்கிறோம். திருப்பூர், ஈரோடு, திருச்சி, சேலம், தஞ்சாவூர், மதுரைபோன்ற 6 இடங்களில் கட்டிக்கொண்டு இருக்கிறோம். இந்த ஆண்டும் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிகமான அலுவலகங்கள் கட்டுவதற்கான நிதியை ஒதுக்கித் தருவதாகச் சட்டமன்றத்தில் எங்களுக்கு உறுதி அளித்திருக்கிறார்கள். எனவே, போக்குவரத்துத் துறை மானியத்திலே நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் முல்லைவேந்தன் அவர்களுடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருவண்ணாமலை நகரிலே ஏற்கெனவே தேர்ந்தெடுக்கப்பட்ட இடம் சில பேருடைய ஆக்கிரமிப்பில் இருப்பதால், அந்தக் கட்டடம் கட்டப்பட முடியாத நிலை இருக்கிறது. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர் பெருந்திட்ட வளாகத்திலே 200 ஏக்கருக்கு மேற்பட்ட இடங்கள் இருக்கின்றன. ஆகவே, அந்த இடத்திலே இந்த வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்தை விரைவில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்க முடியும். அதற்கு அரசு ஆவன செய்யுமா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.என். நேரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சொந்தக் கட்டடம் கட்டுவதற்காகத் திருவண்ணாமலை, வேங்கிக்கால் என்னும் இடத்தில் பெருந்திட்ட வளாகத்தில் 5 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு பெறப்பட்டுள்ளது. அதில் ஓட்டுநர் தேர்ச்சித் தளம் அமைக்கப்பட்டிருக்கிறது. அதன் அருகிலேயே, மாவட்ட ஆட்சித் தலைவர் அனுமதியைப் பெற்று, அந்தக் கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும். நம்முடைய மாண்புமிகு முன்னாள் அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே அதற்கான முயற்சியை எடுத்து இருப்பாரேயானால்—நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு இருக்கிறது. 88 இலட்சம் ரூபாய்—விரைவிலே கட்டடம் கட்டுவதற்குரிய முயற்சி எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 12, செல்வி கே. பாலபாரதி, மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**12—**

## தொழில்நுட்பக் கல்லூரி

***16299—செல்வி கே. பாலபாரதி:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல்லில் தொழில்நுட்பக் கல்லூரி துவக்க அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் தரப்பில் திண்டுக்கல் மாவட்டத்தில் புதியதாக அரசுத் தொழில்நுட்பக் கல்லூரி தொடங்குவதற்கான செயற்குறிப்பு எதுவும் அரசின் ஆய்வில் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டம் வரலாற்று ரீதியாகப் புகழ்பெற்ற ஒரு மாவட்டம். அந்த மாவட்டத்தினுடைய தலைநகரமாக விளங்கக்கூடிய திண்டுக்கல்லிலும் சரி, அந்த மாவட்டத்தினுடைய இதர பகுதிகளிலும், அரசு சார்ந்த பொறியியல் மற்றும் தொழில்நுட்பக் கல்லூரிகள்



இதுவரை தொடங்கப்படவில்லை. திண்டுக்கல்லினுடைய பாரம்பரியத் தொழில் leather. தோல் பதனிடக்கூடிய தொழில் என்பது 100 ஆண்டு காலத்திற்குமேலாக நடைபெற்று, இப்போது நலிவடைந்த நிலையிலே இருந்துகொண்டிருக்கின்றது. திண்டுக்கல் மாவட்டத்தில் மட்டும் கிட்டத்தட்ட 300-க்கும் மேற்பட்ட ஜவுளி உற்பத்தி செய்யக்கூடிய பஞ்சாலைகள் இருக்கின்றன. அதே மாதிரி, திண்டுக்கல் என்றால் பூட்டுதான் உலக அளவிலே புகழ்பெற்றது. ஆகவே, இத்தகைய பாரம்பரியம் மிக்க தொழில்கள் அழிந்துகொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், இந்தத் தொழிலுக்குப் புத்துயிர் ஊட்டக்கூடிய 21-வது நூற்றாண்டில், இத்தகைய கல்வியை, மண் சார்ந்த தொழில்நுட்பக் கல்வியை அந்த மாவட்டத்தில் வழங்குவதற்குத் தொழில்நுட்பக் கல்லூரி என்பது மிகத் தேவை என்று நான் கருதுகின்றேன். அந்த வகையில், எதிர்காலத்திலாவது ஒரு மண் சார்ந்த, மாவட்டம் சார்ந்த, தொழிலை வளர்க்கக்கூடிய கல்வியை, கல்வி நிலையத்தை அமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதனை மாண்புமிகு அமைச்சர் அவர்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திண்டுக்கல் மாவட்டத்தில் தற்போது ஓர் அரசு உதவிபெறும் பாலிடெக்னிக் கல்லூரியும், 4 சுய நிதி பாலிடெக்னிக் கல்லூரிகளும், ஓர் இணைவு பாலிடெக்னிக் கல்லூரியும் அகில இந்தியத் தொழில்நுட்பக் கல்விக் குழுமத்தின் அங்கீகாரத்துடன் இயங்கி வருகின்றன. இப்போது இருக்கிற கல்லூரிகளிலேயே இடங்கள் காலியாக இருக்கிற சூழ்நிலையும் இருக்கிறது. மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன கருத்துகளின் அடிப்படையிலே புதிய பாடத் திட்டங்களை உருவாக்குவதற்கு அங்கு இருக்கிற கல்லூரிகள் முன்வருமானால், நிச்சயமாக அனுமதி வழங்குவதற்கு இந்த அரசு தயாராக இருக்கிறது. அது மட்டுமல்ல, இந்த ஆண்டு Community Colleges என்ற அடிப்படையில் ஆங்காங்கே இதுபோன்ற தேவைக்கேற்பக் கல்லூரிகளைத் தொடங்குவதற்கான ஆய்வுகளும் இந்த அரசின் பரிசீலனையில் இருக்கின்றன. மானியக் கோரிக்கையின்போது அவை தெளிவாக அறிவிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் செல்வி கே. பாலபாரதி.

**செல்வி. கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரிட்டிஷ் ஆட்சிக் காலத்தில் அவர்களுக்குத் தேவையான கல்வியைப் புகுத்தினார்கள். தனியார் நிறுவனங்களும் அவர்களுக்கு எது இலாபம்

தருகிறதோ, அந்தக் கல்வியையே கொண்டு வருகிறார்கள். நான் சொல்வது, ஏற்கெனவே மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள், தஞ்சை மாவட்டத்தில் தகவல் தொழில்நுட்பப் பூங்கா என்பது தேவையில்லை என்று வலியுறுத்தினார்கள். அவ்வாறு இருக்க, திண்டுக்கல் மாவட்டத்தில் 100 ஆண்டு காலமாக இருக்கக்கூடிய Leather, Textile, பூட்டு, இதுபோன்ற தொழில்நுட்பக் கல்வியை, கல்வி நிறுவனத்தைக் கொண்டு வருவதற்கு, தயவுசெய்து எதிர்காலத்திலாவது நமது அரசு பரிசீலிக்க முன்வருமா என்பதை மீண்டும் ஒரு முறை கேட்க விரும்புகிறேன்.

முற்பகல் 9–45

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தனியார்கள் கல்லூரியைத் துவங்கினாலும்கூட, வேலைவாய்ப்பை அடிப்படையாகக் கொண்டுதான் துவங்குகிறார்கள். அப்போதுதான் அவர்களுக்கும் இடங்களை முழுமையாக நிரப்பச் செய்ய முடியும். அந்த அடிப்படையிலே திண்டுக்கல்லிலே இருக்கிற இளைஞர்களை இதுபோன்ற தொழில்களிலே பயிற்சிபெற வைக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு தனியார் கல்லூரிகள் முன்வருமானால், அதற்கு வாய்ப்பு அளிக்கவும் இந்த அரசு தயாராக இருக்கிறது. அதே நேரத்தில், நான் முன்பே குறிப்பிட்டதைப்போல, ஒரு புதிய திட்டத்தையேகூட இந்த ஆண்டு மானியக் கோரிக்கையில் அறிவிக்கலாம் என்ற ஆலோசனையும் இருக்கிறது. எல்லா இடங்களிலுமே இதுபோன்று, அந்தந்தப் பகுதிகளிலே இருக்கிற தொழிலை அடிப்படையாகக்கொண்ட கல்விகளுக்குப் பட்டயப் படிப்புகளை உருவாக்குவதற்கு அவர்களை அனுமதிக்கலாமா என்பதெல்லாம் ஆய்விலே இருக்கின்றன. நிச்சயமாக வருங்காலங்களிலே, அங்கே இருக்கிற தோல் தொழிலாக இருந்தாலும், அதேபோல, நூல் தொழிலாக இருந்தாலும், அவற்றுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு இந்த அரசு நடவடிக்கைகளை விரைவில் எடுக்கும் என்பதை மட்டும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் பயிற்சிகளை அளிப்பதற்கு அரசு ஆவன செய்யும் என்கிற அளவிலே பதில் சொல்லியிருக்கிறார். பயிற்சிகள் அளிக்கின்றபோது, அந்தப் பயிற்சியைக் கற்றுத் தருவதற்கான உபகரணங்கள்—இன்றைக்கு நவீன விஞ்ஞான



உலகத்தில் அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் போதுமான தொழில்நுட்ப வசதிகளுடன்கூடிய கருவிகள் இல்லை, இயந்திரங்கள் இல்லை. ஆனால், தனியார் கல்லூரிகளிலே படிக்கின்ற மாணவர்களுக்குத் தனியார்கள் பல இலட்சம் ரூபாய் செலவு செய்து, அதற்கான உபகரணங்களையும், பொருட்களையும் வாங்கி வைத்திருக்கிறார்கள். அங்கு படிக்கின்ற மாணவர்களுக்கு ஓரளவுக்குத் தெரிதலும், கற்கின்ற கல்வியின்மேல் புரிதலும் ஏற்படுகின்றது. ஆனால், அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகளில் அதுபோன்ற வாய்ப்பு இல்லாமல் இருக்கின்ற காரணத்தினால், இந்த நவீன விஞ்ஞான உலகத்தில் உருவாகியிருக்கின்ற கருவிகளையும், சாதனங்களையும் கொண்டு அரசுத் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும், உதவிபெறும் தொழில்நுட்பக் கல்லூரிகளிலும் அவற்றைக் கொண்டு வந்து, புரிதலோடு மாணவர் சமுதாயம் எதிர்காலக் கல்வியைக் கற்பதற்கான வாய்ப்பை இந்த அரசு ஏற்படுத்தித் தருமா என்பதைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இது குறித்துக் கருத்துகளை உருவாக்குவதற்காகத்தான் நேற்றுக்கூட பல்கலைக்கழகங்களுடைய துணை வேந்தர்கள் அனைவரையும் அழைத்து ஒரு கூட்டத்தில் பேசியிருக்கிறேன். அடுத்த வாரம் இங்கே இருக்கிற தொழில் முனைவர்கள் அனைவரையும் அழைத்து ஒரு கூட்டத்தைக் கூட்ட இருக்கிறோம். ஆகவே, தொழிற்சாலைகள், கல்லூரிகள், பல்கலைக்கழகங்கள் ஆகியவை எல்லாம் இணைந்து, வேலைவாய்ப்புக்கு ஏற்ப பயிற்சி கொடுக்கிற திட்டத்தையும் உருவாக்க வேண்டுமென்று இந்த அரசு முயற்சிகளை மேற்கொண்டிருக்கிறது. இவற்றைப் பற்றி எல்லாம் மானியக் கோரிக்கையில் விளக்கமாகத் தெரிவிக்கப்படும் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. காமராஜ்.

**திரு. பெ. காமராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கிருஷ்ணராயபுரம் தொகுதியில் அரசுத் தொழில்நுட்பக் கல்லூரியோ, பொறியியல் கல்லூரியோ இதுநாள் வரையில் இல்லை. எனவே, மேற்கண்ட கல்லூரிகளைத் துவக்க அரசு ஆவன செய்யுமா என்று கேட்டுக்கொள்வதோடு, குறைந்தபட்சம் ஒரு கலை மற்றும் அறிவியல் கல்லூரியாவது அரசால் துவக்கப்படுமா என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருமே தங்களுடைய தொகுதிகளிலே அரசுக் கல்லூரிகள் வேண்டுமென்று கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அது பற்றிக்கூட நேற்று ஆய்வு செய்யப்பட்டது. தனியார் அல்லது அரசுக் கல்லூரிகளே இல்லாமல் இருக்கின்ற தொகுதிகள் எத்தனை என்பதைக் கணக்கெடுக்கச் சொல்லியிருக்கிறோம். தனியார் கல்லூரிகள், அரசுக் கல்லூரிகள், இரண்டுமே இல்லாத தொகுதிகள் இருக்குமானால், அங்கு உருவாக்குவது பற்றி இந்த அரசு பரிசீலித்துக்கொண்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 14, மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம், மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**14—**

## திருத்தேர்

***676—திரு. கி. ஆறுமுகம்:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூர் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் திருத்தேர் அமைக்கும் பணியைத் தொடங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், திருக்கச்சூரில் அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயில் மற்றும் அருள்மிகு மருந்தீஸ்வரர் திருக்கோயில் ஆகியவை உள்ளன. இத்திருக்கோயில்களுக்கு ஆண்டுதோறும் சித்திரைத் திங்களில் நடைபெறும் பிரம்மோத்சவத் திருவிழாவின் ஏழாம் நாள் தேரோட்டம் நடைபெறுவது வழக்கம். அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலினுடைய மரத்தேர் முற்றிலும் பழுதடைந்து சிதைந்துவிட்டது. அதன் காரணமாகக் கடந்த 25 ஆண்டுகளாகத் தேரோட்டம் நடைபெறவில்லை. எனவே, புதிதாக மரத்தேர் செய்துதான் தேரோட்டம் நடத்தப்பட வேண்டுமென்று கருதி, புதிய மரத்தேர் செய்வதற்கு ரூபாய் 15 இலட்சம் மதிப்பீடு செய்யப்பட்டு, தேர்த் திருப்பணி நிதியிலிருந்து 10 இலட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு, புதிய திருத்தேர் செய்வதற்கான ஏற்பாடுகளைச் செய்ய இந்து சமய அறநிலையத் துறை ஆணையர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளார். அவரால் தொடர் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.





**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது சொந்தக் கிராமமான இந்தக் கிராமத்திலே பிரசித்திபெற்ற அருள்மிகு தியாகராஜ சுவாமி திருக்கோயிலும், மருந்தீஸ்வரர் திருக்கோயிலும் இருக்கின்றன. இந்தத் திருக்கோயில் சுந்தரரால் பாடப்பெற்ற புகழ்பெற்ற திருத்தலமாகும். இந்தத் திருத்தலத்திலே சுந்தரர் பதிகம் பாடிக் களைப்புற்றபோது, அவர் பசியோடு இருந்தபோது, இறைவனே வீடுதோறும் சென்று, உணவை இரந்து வந்து சுந்தரருக்கு விருந்திட்ட புனிதத் தலமாகும். இந்தத் திருத்தலத்திலே கடந்த 25 ஆண்டுகளாகத் திருத்தேர் ஓடவில்லை. இப்போது அதற்கான பணிகளை நம்முடைய அரசு துவங்கும் என்று நம்முடைய அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இந்தத் திருத்தேர் 42 அடி உயரம் கொண்ட திருத்தேராக ஏற்கெனவே இருந்தது; நம்முடைய அதிகாரிகள் அதைச் சிறிய தேராகச் செய்ய வேண்டும் என்று, வெறும் 15 இலட்சம் ரூபாய்க்கு மட்டும்தான் அதற்கு இசைவு அளித்துள்ளார்கள். ஆனால், இதற்கு உத்தேச மதிப்பீடு ஏறக்குறைய 30 இலட்சம் ரூபாய்க்குமேலாக இருக்கும். எனவே, அந்தத் தொகை முழுவதையும் நம்முடைய அரசு ஏற்று, புதிய தேர் அமைப்பதற்கு உடனடியாக பணியைத் துவங்குமா என தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-50

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் முதலிலே தேர் இல்லை என்று கேட்டார்கள். கேட்கும்போதே இத்தனை அடியிலே தேர் வேண்டுமென்று சொல்லியிருந்தால், அத்தனை அடியிலே தேர் அமைப்பதற்கான மதிப்பீடுகளும் செய்யப்பட்டிருக்கும். 25 ஆண்டுகளாகத் தேர் ஓடாதிருந்த அந்தத் திருக்கோயிலுக்குத் தேர் செய்வதற்குண்டான முயற்சி மேற்கொள்ளப்பட்டிருப்பதே, இந்த அரசு இந்தத் துறையில் எத்தகைய ஈடுபாடுகொண்டிருக்கின்றது, ஆர்வம்கொண்டு செயல்படுகிறது என்பதற்கு எடுத்துக்காட்டு. ஆகவே, உறுப்பினர் அவர்கள் தற்போது வைத்திருக்கின்ற கோரிக்கையைத் துறை

அதிகாரிகளோடு கலந்து பேசி, தேவைப்பட்டால் சட்டமன்ற உறுப்பினர் அவர்களையும் கலந்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய அமைச்சர் அவர்கள் இப்போது சொல்லியிருக்கிற பதிலுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். ஏற்கெனவே நிலையோடு இருக்கிற அந்தத் தேர் அளவுக்கே செய்ய வேண்டுமென்று மீண்டும் ஒரு முறை சொல்லிக்கொள்கிறேன். அதேபோன்று, என்னுடைய தொகுதியிலே இருக்கிற திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்குத் திருத்தேர் இப்போது செய்துகொண்டிருக்கிறார்கள். வருகின்ற சித்திரை மாதத்திலே தேரோட்டம் நடைபெற வேண்டும். அதை அதற்குள்ளாக வெள்ளோட்டம் விடுவதற்கு நம்முடைய அரசு முயற்சி எடுக்குமா என்று கேட்டுக்கொள்கிறேன். நம்முடைய அமைச்சர் அவர்கள் ஏற்கெனவே கடந்த ஆண்டே சட்டமன்றத்திலே சொல்லியிருக்கிறார்கள். திருக்கழுக்குன்றம் அருள்மிகு வேதகிரீஸ்வரர் திருக்கோயிலுக்குக் கம்பிவட ஊர்தி இந்த நிதி ஆண்டிலேயே அனுமதிக்கப்படும் என்று சொல்லியிருக்கிறார்கள். அதையும் அனுமதிப்பார்களா என்று தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் கேட்டிருப்பது முதலிலே திருக்கச்சூர்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை, அமைச்சருக்கு நன்றாக ஞாபகம் இருக்கும். அவருக்குத் தெரியும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அமைச்சர் அவர்களிடம் பதில் இருக்கிறதா அல்லது தனிக் கேள்வி போட வேண்டுமா? (குறுக்கீடு)

**திரு. கி. ஆறுமுகம்:** ஏற்கெனவே சொல்லியிருக்கிறார்கள். போன வருடம்கூடச் சொல்லியிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதற்குத் தனிக் கேள்வி போட வேண்டுமென்று சொல்லிவிட்டார்கள், விடுங்கள்.

**திரு. கி. ஆறுமுகம்:** இல்லை, போன தடவை சொல்லியிருக்கிறார்கள்.





**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். (குறுக்கீடு)

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மலைமேல் இருக்கக்கூடிய அனைத்து ஆலயங்களுக்கும் கம்பிவடம் வேண்டுமென்று கேட்கிறார்கள். நம்முடைய உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, எப்படி அனைத்துத் தொகுதிகளிலும் கல்லூரிகள் வேண்டுமென்று கேட்கிறார்களோ, அதேபோல, மலைத் திருத்தலங்களுக்குக் கம்பிவட ஊர்தியையே கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். தேவைப்படின், ஆங்காங்கு இருக்கக்கூடிய பக்தர்களுடைய எண்ணிக்கையைப் பொறுத்து, நிதி வசதியைப் பொறுத்துப் பரிசீலிக்கலாம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, திருக்கச்சூர் கோயிலுக்குத் தேர் செய்வதற்கு நிதியில்லை; அதேபோல, தமிழகத்திலே பல கோயில்களிலே பூஜைகள் செய்வதற்குரிய நிதி போதுமானதாக இல்லை என்று தொடர்ந்து அந்தக் கருத்துகள் வந்துகொண்டிருக்கின்றன. ஆனால், தமிழ்நாட்டிலே இருக்கிற நமது ஸ்ரீரங்கத்திலிருந்து திருப்பதி ஏழுமலையானுக்குக் கிட்டத்தட்ட *35* இலட்சம் ரூபாய் செலவிலே பூணூல் செய்யப்பட்டு அணிவிக்கப்படுகிறது. ஆகவே, அந்தப் பணிகளுக்காகச் செலவிடக்கூடிய இலட்சக்கணக்கான பணத்தை இப்படிப்பட்ட காரியங்களுக்குச் செய்யலாமே! இதையெல்லாம் செய்வதைத் தடுப்பதற்குரிய முயற்சியை அறநிலையத் துறை எடுக்குமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எல்லாத் திருக்கோயில்களிலும் நிதிநிலை குறிப்பிடத்தக்க அளவிலே இருப்பதில்லை. தமிழ்நாட்டிலே இருக்கக்கூடிய *200* திருக்கோயில்களில்தான் செலவுக்கு மிஞ்சிய வருவாய்கள் இருக்கின்றன. ஆகவே, இருக்கக்கூடிய *40,000* திருக்கோயில்களுடைய அன்றாட பூஜை, காரியங்களைச் செய்வதற்கு அந்த நிதி பயன்படுத்தப்படுகிறது. நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஆறுமுகம் அவர்கள் கேள்வி எழுப்பிய அந்தக் கோயிலிலேகூட ஆண்டுக்கு *51,000* ரூபாய்தான் வருமானம்

[2007 ஏப்ரல் 4

வந்துகொண்டிருக்கிறது. அந்தக் கோயிலுக்கு இப்போது 15 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டிலே தேர் செய்வதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கின்றது என்றால், அதைப் பிற கோயில்களிலிருந்துதான் பெற்றுச் செய்ய முடிகிறதே தவிர, இந்த வருவாய் பிற மாநிலங்களுக்குச் செல்லவில்லை. தமிழ்நாட்டிலே வரக்கூடிய நிதி தமிழ்நாட்டுக் கோயில்களுக்குத்தான் செலவு செய்யப்படுகிறது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. செல்வம். (குறுக்கீடு) சொல்லிவிட்டார்கள், உட்காருங்கள். (குறுக்கீடு) போதும். (குறுக்கீடு) உட்காருங்கள். சொல்லிவிட்டார் இல்லையா? (குறுக்கீடு) திரு. சிவபுண்ணியம், துணைக் கேள்விக்குத் துணைக் கேள்வி எல்லாம் கிடையாது, உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) திரு. செல்வம், சொல்லுங்கள். (குறுக்கீடு) Supplementary-க்கு Supplementary கிடையாது, உட்காருங்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை, Not allowed. திரு. செல்வம், சொல்லுங்கள்.

முற்பகல் 9–55

**திரு. கு. செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியிலே விருத்தாசலம் தொகுதியிலே கொளஞ்சியப்பர் ஆலயம் இருக்கிறது. அந்த ஆலயத்திலே மதில் சுவர் இடிந்து விழுந்துள்ளது. அங்கே பிராது சாமி என்ற ஓர் ஆலயம் இருக்கிறது. வெளிநாடுகளிலே வாழ்பவர்கள் எல்லாம் அந்தச் சாமியிடம் இரகசியமாக பேப்பரிலே எழுதி பிராது செய்தால், கேட்பதெல்லாம் நடக்கிறது என்ற ஒரு நம்பிக்கையோடு அந்தப் பகுதியிலே மக்கள் வாழ்ந்துகொண்டு இருக்கிறார்கள். பிராது சாமி-- fraud சாமியல்ல. அந்தப் பிராது சாமி கோயிலுக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தரப்படுமா என்பதை அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பதில் சொல்கிறீர்களா? (குறுக்கீடு) மாண்புமிகு அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எழுப்பப்பட்ட கேள்வி, காஞ்சிபுரம் மாவட்டத்திலே இருக்கக்கூடிய கோயில்களுக்கு. தற்போது மாண்புமிகு உறுப்பினர் திரு. செல்வம் அவர்கள், அவருடைய தொகுதி பற்றிக் கேட்கிறார். ஆகவே, அவர் தனியாகக் கேள்வி எழுப்பினால், அதற்கு விடையளிப்பதற்கு ஏதுவாக இருக்கும்.



2007 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன். நீங்கள் இந்தக் கோயில் சம்பந்தமாகக் கேட்கிறீர்களா?

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரம் ஒன்றியத்தில் திப்பு சுல்தான் காலத்திலே கட்டப்பட்ட நரசிம்மசுவாமி கோயிலுக்கு ஒரு தேர் உள்ளது. அந்தத் தேர் இப்பொழுது பழுதடைந்துள்ளது. ஆகையால், அரசு அந்தத் தேரைச் சீர்செய்ய முன்வருமா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே ஏறத்தாழ 668 திருக்கோயில்களிலே தேர்கள் இருக்கின்றன. அவற்றில் மொத்தம் 830 திருத்தேர்கள் உள்ளன. அவற்றிலே நல்ல நிலையிலே 521 திருத்தேர்கள் இருக்கின்றன. செப்பனிடப்பட வேண்டியவை என்று கணக்கிடப்பட்டவை 309. அவற்றிலே அனுமதி பெற்றவை 241. அந்தப் பட்டியலில் அவருடைய கோயில் இருக்கின்றதா என்பதை அவர் தெரிந்துகொள்ள வேண்டும். இல்லையென்றால், கவனத்திற்குக் கொண்டு வந்தால் அது பற்றி நடவடிக்கை மேற்கொள்வதற்குத் துறை தயாராக இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 15, மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன். மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**15—**

## நூலகம்

***7460—திரு. தி. வேல்முருகன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமத்தில் நூலகம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பண்ருட்டி தொகுதி, குடியிருப்பு கிராமத்தில் நூலகம் திறக்கக் கோரி விண்ணப்பம் ஏதும் பெறப்படவில்லை. நிர்ணயிக்கப்பட்டுள்ள கீழ்க்கண்ட நிபந்தனைகளைப் பொது மக்கள் பூர்த்தி செய்யும்பட்சத்தில் முதல் கட்டமாகப் பகுதிநேர நூலகம் திறக்கலாம்.

(1) நூலகம் செயல்பட வாடகையில்லா இலவசக் கட்டடம் நூலக ஆணைக் குழுவிற்கு வழங்கப்பட வேண்டும்.

(2) சொந்தக் கட்டடம் கட்ட 5 சென்ட் காலிமனை நூலக ஆணைக் குழுவிற்கு இலவசமாகப் பத்திரப் பதிவு செய்து தரப்பட வேண்டும்.

(3) தலா ரூ. 1,000/- வீதம் நன்கொடையாகச் செலுத்தி, 2 பேர் புரவலர்களாகச் சேர வேண்டும்.

(4) நூலக உறுப்பினர் காப்புத் தொகை ரூ. 15/-ம், ஆண்டுச் சந்தா ரூ. 5-ம், ஆக மொத்தம் ரூ. 20 செலுத்தி 200 பேர் நூலக உறுப்பினர்களாகச் சேர வேண்டும்.

(5) ரூ. 2,000/- மதிப்புள்ள தளவாடங்கள் இலவசமாக வழங்கப்பட வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிக் கல்வித் துறையில் சிறப்பாகப் பணியாற்றி வருகின்ற மாண்புமிகு அமைச்சர் அவர்களே கையில் வைத்திருக்கின்ற இந்த நூலகத் துறைக்கு இத்தனை நிபந்தனைகள் வைத்து கிராமங்களிலே நூலகங்களைத் தொடங்க வேண்டும் என்று சொன்னால், எந்தப் பொது மக்களும் கிராமங்களில் நூலகங்களைத் தொடங்குவதற்கு முன்வரமாட்டார்கள். 5 சென்ட் நிலம் கேட்கிறார். 2 புரவலர்கள் கேட்கிறார். வாடகையில்லாமல் ஓர் இடம் எழுதித் தர வேண்டும் என்று கேட்கிறார். இந்த நிபந்தனைகளையெல்லாம் தளர்த்த வேண்டும். இன்றைக்குத் தொல்லைக்காட்சிகள் என்று சொல்லக்கூடிய தொலைக்காட்சிகள் மக்களுடைய வாழ்க்கையைத் தொலைத்து





வருகின்றன இன்றைக்கு அரசு அல்லது பொது வெளியீடுகளிலே ஆர்வம் உள்ளவர்கள் Book Fair என்று சொல்லக்கூடிய புத்தகக் கண்காட்சியைத் தொடங்குகின்றபோது, இலட்சக்கணக்கான மக்கள் சென்னையிலே கூட அந்த Book Fair-க்குச் சென்று வருவதாக வெல்லாம் பத்திரிகையில் செய்தி வந்துகொண்டிருக்கிறது. படிக்கின்ற அந்த ஆற்றலை, படிக்கின்ற அந்த அறிவைக் கிராமப்புறங்களிலும் மக்களிடையே எடுத்துச் செல்கின்ற வகையில் நம்முடைய மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் அந்த விதிகளையெல்லாம் தளர்த்தி, தங்களுடைய துறை அதிகாரிகளை ஒரு பஞ்சாயத்திற்கு—இப்போது யுனெஸ்கோ கூரியர் வருவதுபோல் அனைத்துப் பத்திரிகைகளும், அனைத்துப் புத்தகங்களும்—சமுதாயத்திற்கும், இளைய தலைமுறைக்கும் உத்வேக உணர்ச்சியையும், தன்னம்பிக்கையையும் உருவாக்குகின்ற வகையில் தயார் செய்கின்ற புத்தகங்களையெல்லாம் கிராமப்புறங்களுக்குக் கொண்டு வந்து அந்த…

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்விக்கு வாருங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** கேள்விக்கு வந்துவிடுகிறேன். விரைவாகச் சொல்லிவிடுகிறேன், பேரவைத் தலைவர் அவர்களே! ஏனென்றால், அமைச்சர் நல்ல முறையில் செயல்படுகிறார். அதே துறையில் இதையும் நன்றாகச் செய்ய வேண்டும் என்கிற ஆர்வத்தில்தான் சொல்கிறேன்; வேறு ஒன்றுமில்லை. ஆதலால், மாண்புமிகு அமைச்சர் அவர்கள், நிபந்தனைகளையெல்லாம் தளர்த்தி, அனைத்துப் பஞ்சாயத்துக்களிலும் அரசே இந்த நூலகங்களைத் தொடங்குவதற்கு ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் அமைப்பதற்கு அடிப்படையாக ஒரு கட்டடம் தேவை. சொந்த குடியிருப்பு கிராமத்திலேயே வேண்டும் என்று கேட்டால்--அங்கே வாடகைக்கு இல்லாமல் ஒரு கட்டடம் அவர்கள் கொடுப்பதாக இருந்தால்--அடிப்படைத் தேவையாக ஒரு கட்டடம் தேவை. அப்புறம் அந்த நிபந்தனைகள் வேண்டுமானால் கொஞ்சம் நீளமாக இருக்கின்றனவேயொழிய, மொத்தமாகக் கூட்டிப் பார்த்தால் ரூ.5,000 தான் வரும். அது ஒன்றும் பெரிய காரியமாக இல்லை. எனவே, அதிலே நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டுமென்கின்ற ஒரு நிலை இப்போது இல்லை. இருந்தாலும்கூட, நம்முடைய மாண்புமிகு

[2007 ஏப்ரல் 4

உறுப்பினர் அவர்கள் இப்போது ஒரு முக்கியமான கோரிக்கையை வைத்திருக்கின்றார்கள். கிராமப் பகுதியிலே இருக்கக்கூடிய மக்கள், அவர்கள் மற்ற பொழுதுபோக்கு அம்சங்களைவிட நூலகங்களை அதிகமாகப் பயன்படுத்தக்கூடிய வகையிலே ஒவ்வொரு பஞ்சாயத்துக்கும் இந்த நூலகங்களை உருவாக்க வேண்டுமென்ற ஒரு நல்ல கோரிக்கையை இங்கே தெரிவித்தார்கள். இது குறித்து நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அண்ணன் தளபதி அவர்களோடு நாங்கள் ஒரு முறை எங்களுடைய துறையின் சார்பிலே கலந்து பேசியிருக்கிறோம். அவர்களும் அது குறித்து ஆய்வினை நடத்தியிருக்கிறார்கள். எனவே, அவருடைய மானியக் கோரிக்கையிலேகூட அது குறித்து நல்ல செய்தி வரும் என்று நானும் எதிர்ப்பார்க்கிறேன். எனவே, சற்றுப் பொறுத்திருப்பீர்களேயானால் உங்களுக்கு ஒரு நல்ல செய்தி கிடைப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வேல்முருகன். Short ஆகக் கேளுங்கள்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகத் துறையினுடைய மாவட்ட நூலக அலுவலர், அவருக்குக்கீழ் பணிபுரிகின்ற நூலக அலுவலர்கள்மூலமாக அனைத்துப் பஞ்சாயத்துக்களுக்கும் ஒரு விழிப்புணர்வுப் பிரச்சாரத்தை ஏற்படுத்தி, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொல்வதுபோல, நன்கு படித்த செல்வந்தர்கள் அந்த 1,000 ரூபாய் புரவலர் நிதியைக் கட்டி அந்த நூலகத்திற்கு, அரசுக்குச் செய்யலாம். அப்படிச் செய்யக்கூடிய தூண்டுதலையும், அந்த உணர்வையும் மக்களுக்கு எடுத்துச் செல்லுகின்ற ஒரு பிரச்சாரத்தை நூலகத் துறை மக்களிடத்திலே எடுத்துச் செல்லுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு நல்ல கருத்தை நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வழங்கியிருக்கிறார்கள். எப்படிப் பள்ளிக் கல்வித் துறையிலே பள்ளிச் சீரமைப்பு மாநாடு நடைபெற்று, ஆங்காங்கே இருக்கக்கூடிய பொது மக்களுடைய பங்களிப்பினைப் பெறக்கூடிய வகையிலே இந்த விழிப்புணர்வு மற்றும் பிரச்சாரம் நடைபெறுகிறதோ, அதேபோல நூலகத் துறையிலும் அதுபோன்றதொரு கருத்துரு அரசின் பரிசீலனையில் இருக்கிறது. மானியக் கோரிக்கை வருகிறபோது அரசு நிச்சயமாக அதைப் பற்றிப் பரிசீலித்து அறிவிக்கும்.



2007 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்ப்புற நூலகத்தில் பணியாற்றுகின்ற ஊழியர்கள் ஒரு மாவட்டத்திலிருந்து இன்னொரு மாவட்டத்திற்கு இடம் மாறுதல் பெறுவது மிகப் பெரிய பிரச்சினையாக இருக்கிறது. குறிப்பாக, பெண்கள் திருமணமாகி இன்னொரு மாவட்டத்திற்குச் சென்ற பிறகு, அவர்கள் பணியாற்றுவதில் மிகப் பெரிய சிரமங்கள் ஏற்படுகின்றன. எனவே, இதில் இருக்கின்ற சட்டப் பிரச்சினைகளைத் தீர்த்து, அவர்களுக்கு அரசு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஊர்ப்புற நூலக விஷயத்திலே நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய அரசு எப்போதும் மிகுந்த பரிவோடு இருந்து வந்திருக்கிறது. உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமென்று சொன்னால், அரசாணை நிலை எண் 66/30–1–1996–லே உருவாக்கப்பட்டிருக்கக்கூடிய 584 ஊர்ப்புற நூலகர்களை எல்லாம் முறையான சம்பள விகிதத்திலே நியமித்து இருக்கிறது. இன்னும் சொல்ல வேண்டுமென்றால், அதற்குப் பிறகு ஊர்ப்புற நூலகர்களிலே பகுதிநேர நூலகர்களாகவும், அதைப்போல ஊர்ப்புற நூலகர்களாகவும், 5 ஆண்டுகள் முடித்த 185 நூலகர்களையும் 3 ஆம் நிலை நூலகர்களாக இந்த அரசு பணி நியமனம் செய்து, முறையான சம்பள விகிதத்திலே அவர்களை நியமித்து இருக்கிறது. ஆக மொத்தம் 739 நூலகர்களுக்கு, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய கோரிக்கையைக்கூட அன்றைக்கு ஏற்றுக்கொண்டு நாங்கள் அறிவித்து, அவற்றையெல்லம் செய்திருக்கிறோம். அவர்களுக்கு மாறுதல் வழங்குகிற அந்த முறைகூட— முதன்முறையாக நூலகத் துறையிலே ஒளிவுமறைவற்ற கலந்தாய்வு முறையிலே இந்த முறை வழங்கப்பட்டிருக்கிறது. தொடர்ச்சியாக அவர்கள் தெரிவிக்கக்கூடிய அத்தகைய இடர்ப்பாடுகள் இருக்குமானால், அரசு அவற்றை நிச்சயமாகப் பரிவோடு கவனித்து, அவற்றுக்கு ஆவன செய்ய முயற்சிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பீட்டர் அல்போன்ஸ்.

[2007 ஏப்ரல் 4

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள் பல புதிய சிந்தனைகளை இப்பொழுது புகுத்தி வருகிறார். நம்முடைய நூலகங்களிலே, கிராம நூலகங்களிலே இருக்கிற இட வசதிகளை முன்னிட்டு, ஒவ்வொரு கிராமத்திலும் ஒரு Browsing Centre—அதாவது, இப்பொழுது e-libraries என்று சொல்லி புத்தகங்கள் எல்லாம்கூட மின் அஞ்சலிலே வருகின்றன. அப்படிப்பட்ட வாய்ப்பினைக் கிராமங்களிலே இருக்கின்ற இளைஞர்களுக்கு, இளம் பெண்களுக்கு உருவாக்கித் தருகின்ற வகையிலே, கிராமங்களிலே இருக்கின்ற நூலகங்களிலே அத்தகைய அந்த e-browsing centres—Computer Browsing Centres-ஐத் துவங்குவதற்கு அரசு முன்வருமா? அப்படிப்பட்ட ஒரு திட்டத்தை அரசு சிந்திக்குமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நல்ல யோசனையைத் தெரிவித்திருக்கிறார்கள். இப்போது அரசினுடைய மைய நூலகமாக இருக்கக்கூடிய கன்னிமாரா நூலகத்திலே அந்த வசதி செய்யப்பட்டிருக்கிறது. இன்றைக்கு மாண்புமிகு முதல்வர் அவர்கள் நம்முடைய மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் வாயிலாக அறிவித்திருக்கக்கூடிய இந்த பட்ஜெட் உரையிலேகூட சென்னையிலே அப்படிப்பட்ட அதிநவீன, உலகத் தரத்திலே, பன்னாட்டுத் தரத்திலே இருக்கக்கூடிய ஓர் அற்புதமான நூலகத்தை உருவாக்குவதற்கு உத்தரவிட்டிருக்கிறார்கள். அதைத் தொடர்ந்து, மாவட்ட நூலகங்களிலே முதற்கட்டமாக, இந்த Internet Browsing Centres—அங்கே நம்முடைய நூலகங்களை உருவாக்கக்கூடிய வசதியையும், அதைத் தொடர்ந்து கிளை நூலகங்கள், ஊர்ப்புற நூலகங்களுக்கும் உருவாக்கக்கூடிய ஒரு முயற்சியையும் அரசு நிச்சயமாக மேற்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

முற்பகல் 10–05

நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் வேல்முருகன் அவர்களுடைய கேள்விக்குப் பதில் அளிக்கும்போது நான் சொன்னதைப்போல, இந்த நூலகங்களை ஒவ்வொரு கிராமப் பகுதியிலேயும் உருவாக்கக்கூடிய நிலை வருகின்றபோது, படிப்படியாக நிச்சயமாக இந்த வசதிகள் செய்யப்படும். ஏனென்றால், காலத்திற்கேற்ப இத்தகைய புதிய முறைகள், அணுகுமுறைகள் கடைப்பிடிக்கப்பட வேண்டியது நிச்சயமாக அவசியம். எனவே, புத்தகங்களை ஒரு பக்கம் வாசிக்கக்கூடிய பழக்கங்கள் இருந்தாலும்கூட, இத்தகைய நவீன



2007 ஏப்ரல் 4]

யுக்திகளையும் புகுத்துவதற்கு அரசு நிச்சயமாகப் பரிசீலித்து, ஆவன செய்யும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே. மகேந்திரன்.

**திரு. கே. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதிய நூலகங்கள் அமைப்பதற்கு நூலக ஆணைக் குழுவினுடைய நிபந்தனைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். சென்னை மாநகரத்தைப் பொறுத்தவரை, இன்றைக்குப் புத்தகத் திருவிழா, நிரந்தரப் புத்தகக் கண்காட்சி போன்ற நடவடிக்கைகள் கூடுதலாகிக் கொண்டிருக்கக்கூடிய சூழ்நிலையில், அமைச்சர் அவர்கள் தெரிவித்ததுபோல, நிபந்தனைகளில், 5 சென்ட் நிலம் வேண்டும் என்று சொல்லியிருக்கிறார்கள். சென்னை மாநகரத்திலே 5 சென்ட் நிலம் என்பது இப்போது அரிதாக இருக்கக் கூடிய சூழ்நிலையில், 1,000 சதுர அடி நிலம் கிடைத்தால், அதிலே விதிகளைத் தளர்த்தி நூலகம் அமைப்பதற்கான நடவடிக்கைகளை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மேற்கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நூலகம் துவக்குவதற்குச் சொந்தக் கட்டடம் முதலிலே அமைப்பதற்கு இடம் இல்லாவிட்டாலும்கூட, அங்கே இருக்கக்கூடிய இத்தகைய ஆர்வலர்கள் ஒன்றாக இணைந்து, முதற்கட்டமாக வாடகை இல்லாமல் ஒரு கட்டடத்தைத் தருவார்களேயானால், உடனடியாக அந்த நூலகங்களைத் துவக்குவதற்கு நம்மால் ஆவன செய்ய முடியும்.

அடுத்தபடியாக, அவர்கள் இப்போது விதித்து இருக்கக்கூடிய அந்த 5 சென்ட் இடம் என்பது, சென்னைபோன்ற பெருநகரங்களிலே அதிகபட்சமான நில அளவையாக இருக்கிறது என்று தெரிவித்திருக்கிறார்கள். இதுபோன்ற பல்வேறு கோரிக்கைகள், பள்ளிக் கல்வித் துறையிலே இருக்கக்கூடிய பள்ளிகளை அமைக்கக்கூடிய சூழ்நிலையிலேகூட அரசுக்கு இத்தகைய கருத்துருக்கள் வரப்பெற்று இருக்கும்போது, அரசு அவற்றை ஆய்வு செய்த முன்னுதாரணங்கள் இருக்கின்றன. எனவே, வருங்காலங்களிலே அதைக் குறித்து அரசு ஆய்வு செய்யக்கூடிய ஒரு வாய்ப்பு இருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 16, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ், மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

16—

## கட்டட வசதி

***14712—திரு. ஓ.கே. சின்னராஜ்:**

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மேட்டுப்பாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) மேட்டுப்பாளையம் வணிக வரித் துறை அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்டும் திட்டம் அரசின் நடவடிக்கையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டுப்பாளையத்தில் உள்ள நகர வணிக வரித் துறை அலுவலகம் கடந்த பல ஆண்டு காலமாக வாடகைக் கட்டடத்திலே இயங்கி வருகிறது. இக்கட்டடத்திலே போதுமான இட வசதி இல்லாமல் இருப்பதை அறிந்து, கடந்த காலத்திலே அரசு இடத்தைத் தேர்வு செய்து, திட்ட மதிப்பீடும் 40 இலட்சம் ரூபாயிலே தயார் செய்யப்பட்ட நிலையிலே இருந்துகொண்டிருக்கிறது. ஆகவே, விரைவிலே அதற்குப் புதிய கட்டடத்தைக் கட்ட அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிந்துகொள்ள விரும்புகிறேன். அதோடு, அந்த வணிக வரித் துறையிலே பணியாற்றுகின்ற வணிக வரித் துறை அலுவலர், இன்று பொறுப்பு அலுவலராக ஓராண்டு காலமாகப் பணிபுரிந்து வருகிறார். அதிலே கூடுதலாக இருக்கின்ற A.C.T.O.—உதவி வணிக வரி அலுவலர் பணியிடம் காலியாக இருக்கிறது. ஆகவே, அந்த இடங்களையெல்லாம் பூர்த்தி செய்து, அவற்றை உடனடியாக நிவர்த்தி செய்கின்ற வகையிலே அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வட்டாட்சியர் வளாகத்திலே 1,416.5 சதுர மீட்டர் பரப்பில், மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலகம் கட்ட, கோவை மாவட்ட ஆட்சியர் 26-3-2000 அன்று அனுமதி வழங்கி உத்தரவு பிறப்பித்துள்ளார். அதன் அடிப்படையில், மேற்குறிப்பிட்ட நிலம் வணிக வரித் துறைக்கு நில மாற்றம் செய்யப்பட்டு, 10-5-2000 அன்று மேட்டுப்பாளையம் வட்டாட்சியரால், மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலரிடம் ஒப்படைக்கப்பட்டது. அந்த இடத்தில் வணிக வரி அலுவலகம் கட்ட மேட்டுப்பாளையம் செயற்பொறியாளர் அவர்களிடமிருந்து திருத்திய மதிப்பீடு கோரப்பட்டுள்ளது. அவரிடமிருந்து திருத்திய மதிப்பீடு வரப்பெற்றவுடன், இப்பணியினை 2008-2009, பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்த்து, மேட்டுப்பாளையம் வணிக வரி அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட மேல் நடவடிக்கை எடுக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அலுவலர்கள் பணியிடங்கள் பற்றிய குறிப்புகளைக் கேட்டார்கள். அது பற்றித் தனிக் கேள்வி போட்டால், அதற்கு விவரம் அளிக்க முன்வருகிறேன் என்று சொல்லி, அமைகிறேன்.

முற்பகல் 10-10

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** காலியாக இருக்கின்ற அந்தப் பணியிடங்களில் உடனடியாகப் பணியமர்த்தி, தொடர்ந்து பொறுப்பிலே இருக்கின்ற அந்த வணிக வரித் துறை அலுவலர்களை விடுவித்து, நிரந்தரப் பொறுப்பு வகிக்கிற அலுவலர்களைப் போட வேண்டும் என்று இந்த நேரத்திலே வலியுறுத்தி, அதை விரைவிலே செய்து கொடுக்க அமைச்சர் அவர்கள் முன்வருவாரா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** முன்னாலேயே தனிக் கேள்வி போட வேண்டும் என்று நான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். தனிக் கேள்வி போட்டால், அதற்குரிய விவரங்கள் தரப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 17, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**17—**

## சாலை வசதி

***1026—டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருத்தணி நெடுஞ்சாலைக் கோட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொதட்டூர்ப்பேட்டைக்கும் பள்ளிப்பட்டு நகருக்கும் இடையே உள்ள சாலையை அகலப்படுத்தும் திட்டம் அரசிடம் உள்ளதா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தங்களின் அனுமதியோடு திருத்திய விடையை அளிக்க முன் வருகிறேன். திருத்தணி—பொதட்டூர்ப்பேட்டை—பள்ளிப்பட்டு சாலையானது மாவட்ட இதர சாலையாக கடந்த ஆண்டு தேர்தலுக்கு முன்பு இருந்தது. இது நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு பொறுப்பேற்ற பிறகு மாநில நெடுஞ்சாலையாக வகைப்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. இந்தச் சாலையினுடைய நீளம் சுமார் 32 கிலோ மீட்டர். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள், பொதட்டூர்ப்பேட்டைக்கும் பள்ளிப்பட்டுக்கும் இடையே இருக்கிற சாலை அகலப்படுத்தப்படுமா என்று கேட்டிருக்கின்றார். அந்த சுமார் 6 கிலோ மீட்டர் சாலையில் கடந்த நிதியாண்டு— 2006–2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலை உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தில் 211 இலட்சம் ரூபாய் மதிப்பில் அகலப்படுத்துகின்ற பணி நடைபெற்று வருகின்றது. மீதி இருக்கின்ற கிலோ மீட்டர் சாலைக்கு வரும் ஆண்டில் முன்னுரிமை வழங்கப்பட்டு, அந்தப் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தென் கோடியில் இருக்கின்ற கன்னியாகுமரிக்கு எவ்வளவு சிறப்பு உண்டோ, அதேபோல வட கோடியில் இருக்கின்ற எங்களுடைய பள்ளிப்பட்டுத் தொகுதிக்கும் சிறப்பு உண்டு. தமிழகத்தின் வட புலத்தில் இருக்கின்ற எங்களுடைய பள்ளிப்பட்டுத் தொகுதி சிறப்பு வாய்ந்த தொகுதி. அதே நேரத்திலே கவனத்திற்குரிய தொகுதி என்பதிலே எந்தவித ஐயப்பாடும் யாருக்கும் இருக்க முடியாது. நான்





நன்றியோடு கூற வேண்டுமானால், மாண்புமிகு முதல்வர் கலைஞர் அவர்கள் 4–வது முறையாக ஆட்சியிலே இருந்தபோது எங்களுடைய சந்தான வேணுகோபாலபுரத்திலே சமத்துவபுரம் தந்து, முதல் கட்டத்திலேயே எங்களைப் பெருமைப்படுத்தினார்கள். அந்த வகையிலே இந்த முறை ஆட்சிக்கு வந்த பிறகு எங்களுடைய பொதட்டூர்ப்பேட்டை—திருத்தணி—பள்ளிப்பட்டு சாலையை, O.D.R. என்று சொல்லப்படுகின்ற மாவட்ட இதர சாலையிலிருந்து double promotion கொடுத்து, மாநில முதன்மைச் சாலையாக ஆக்கியிருக்கின்றார்கள்; அதற்காக எங்களுடைய தொகுதி மக்கள் சார்பாக முதலமைச்சர் அவர்களுக்கும், நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கும் எங்களுடைய உளமார்ந்த நன்றியை நான் காணிக்கையாகச் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்று சொன்னால், மிகவும் பிற்படுத்தப்பட்ட பகுதி மட்டுமல்ல, 1960–க்கு முன்பு ஆந்திராவுடன் இருந்த பகுதி. அந்த வகையிலே ஒரு சிறப்புத் தகுதி அதற்கு உண்டு. அந்த வகையிலே அங்கு நெடுஞ்சாலைத் துறைக்காக ஒரு தனி உட்கோட்டம் அமைக்க வேண்டும் என்ற கோரிக்கை வெகுநாட்களாக நிலுவையில் இருக்கின்றது. ஆகவே separate sub-division என்று சொல்லப்படுகின்ற தனி உட்கோட்டத்தை பள்ளிப்பட்டிற்கு அமைப்பதற்கு அமைச்சர் முன்வருவாரா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பள்ளிப்பட்டுக்கு நெடுஞ்சாலைத் துறையினுடைய ஒரு தனி உட்கோட்டம் கேட்டிருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சென்று, இந்த நிதி ஆண்டில் அதற்குரிய நடவடிக்கையை அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய முதல்வர் ஆடசிக்கு வருகின்றபோதெல்லாம் கண்ணாடி போன்ற தார்ச் சாலை என்று குறிப்பிடுவது எல்லோருக்கும் வழக்கமாக இருக்கிறது. அதேபோல, அருமையான சாலைகள் அமைக்கின்றபோது, குறிப்பிட்ட இடங்களிலே, குறிப்பாகப் பள்ளிக்கூடங்களுக்கு அருகே, மருத்துவமனைகளுக்கு அருகே வேகத் தடைகள் ஏற்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை நீண்ட

நாட்களாக நிலுவையில் இருக்கின்றது. அதற்கு உயர் நீதிமன்றத் தடை இருப்பதாக நான் அறிகின்றேன். அந்த நிலையிலே, அரசினுடைய நிலைப்பாடு என்ன என்பதனைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

*முற்பகல் 10–15*

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேகத் தடையைப் பற்றிக் குறிப்பிட வேண்டும் என்று சொன்னால், அதற்கு ஒரு சிறப்பு உண்டு. முக்கிய இடங்களில், பள்ளி வளாகம் இருக்கின்ற இடங்கள், மருத்துவமனைகள், மக்கள் அதிகம் போக்குவரத்தில் இருக்கின்ற இடங்களில் வாகனங்களுடைய வேகத்தைக் கட்டுப்படுத்தக்கூடிய அளவில் அந்த வேகத் தடை அமைக்கப்படுகின்றது. அவற்றில் சில இடங்களில், தேவையில்லாத இடங்களிலும்கூட, அதுவும் குறிப்பாக, நெடுஞ்சாலைத் துறைக்குத் தகவல் தெரிவிக்காமல், கல்வி நிறுவனங்களோ, வேறு நிறுவனங்களோ அமைத்துக்கொள்கின்றன. கடந்த சட்டமன்றத் தேர்தலுக்கு முன்பு நம்முடைய மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு தொகுதிவாரியாகச் சுற்றுப் பயணத்தை மேற்கொண்டிருந்தபோது எங்கள் ஊருக்கு வந்திருந்தார்கள். அப்பொழுது ஈரோட்டிலிருந்து அவரைத் தாராபுரத்திற்கு அழைத்துச் செல்கின்றபொழுது, நான் அவருடைய காருக்கு முந்தைய காரில் சென்றுகொண்டிருந்தேன். என்னுடைய கண்ணிலே நேரடியாக அங்கு பட்ட காட்சி, ஒரு பெரியவர் இரு சக்கர வாகனத்திலேயிருந்து கீழே விழுந்துவிட்டார். காரணம் என்னவென்று தெரியவில்லை. வேகமாக அந்த இடத்திற்குச் சென்று பார்க்கின்றபொழுது, வேகத் தடையைப் பார்க்காமல் இரு சக்கர வாகனத்தை ஓட்டி வந்த அந்தப் பெரியவர் அந்த வேகத் தடைமீது ஏறிய காரணத்தினால் கட்டுப்பாட்டை இழந்து, கீழே விழுந்து, உயிருக்குப் போராடிக்கொண்டிருந்த அந்த நேரத்தில், தளபதி அவர்களுடைய காரும் என்னுடைய காருக்கு அருகில் நெருங்கிவிட்டது. அப்பெரியவரை உடனடியாக மருத்துவமனையில் சேர்க்கத் தளபதி அவர்கள் என்னிடம் சொன்னார்கள். சேர்த்த பிறகு, அவர் உயிர் பிழைத்து, அதற்குக்கூட நன்றியையும் தெரிவித்து, எனக்கு அவர் வாழ்த்துச் செய்தியையும் அனுப்பியிருந்தார்கள். அந்த அடிப்படையில் நேரடியாக அதைச் சந்தித்த அந்த உணர்வு.

அதே நேரத்தில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் ஒவ்வொரு நேரத்திலும் சாலை விபத்தைக் குறைக்க வேண்டும், உயிரிழப்பைத் தடுக்க வேண்டும் என்று சொல்லித் தன்னுடைய ஆதங்கத்தை எங்களிடத்திலே



வெளிப்படுத்தியிருக்கிறார்கள். அதற்குரிய நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது. வேகத் தடை அமைக்கின்றபொழுது, கல்வி நிறுவனங்களோ, வேறு நிறுவனங்களோ நெடுஞ்சாலைத் துறைக்குத் தெரிவிக்குமானால், நிச்சயமாக நவீன வேகத் தடையாக அமைக்கப்படும். மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய ஆலோசனையின்பேரில் நடைபெற்று வரும் நெடுஞ்சாலைத் துறை, இப்பொழுது நவீன வேகத் தடையை அமைத்து வருகிறது. வேகத் தடைக்கு முன்பு பெயர்ப் பலகை வைத்திருந்தால், அதைச் சில பேர் படிப்பதில்லை. அதனால் நேரடியாக அந்த வேகத் தடைமீது ஏறி, விழக்கூடிய சூழ்நிலை ஏற்பட்டு, விபத்தும் ஏற்படுகிறது அல்லது முன்னே செல்லக்கூடிய உயரமான வாகனங்கள் அந்த வேகத் தடையை அறிந்தவுடன், ஓட்டுநர் திடீரென்று பிரேக் போடுகின்றபொழுது, பின்னால் வரக்கூடிய வாகனம் அதன்மீது மோதுகிறது. இப்படி ஏற்படும் விபத்தைத் தவிர்ப்பதற்காக, அந்தப் பெரிய வேகத் தடைக்கு முன்பு இரண்டு சிறிய வேகத் தடைகளும், இரவு நேரத்திலே பளிச்சென்று தெரியக்கூடிய அளவிலே அதிலே ஒளிருகின்ற விளக்குகளையும் பொருத்தி, இப்போது புதிய வேகத் தடையை நவீன வேகத் தடையாக நெடுஞ்சாலைத் துறை அமைத்து வருகிறது. மக்களிடத்தில் அதற்கு நல்ல வரவேற்பும் கிடைத்து இருக்கிறது. அதை நாடு முழுவதும் நடைமுறைப்படுத்துவதற்கு இந்த ஆண்டு விரைந்து நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்னை முதல் கொல்கத்தா செல்லும் G.N.T. சாலை 4 வழிப் பாதையாக உள்ளது. இதில் கவரப்பேட்டைப் பகுதியிலிருந்து பிரிந்து செல்லும், கவரப்பேட்டை–சத்தியவேடு சாலை, தமிழகத்திலுள்ள எல்லையில் ஒரு வழிப் பாதையாக உள்ளது. அதன் பிறகு ஆந்திராவிற்குச் செல்லுகின்ற அந்தச் சாலை, ஆந்திராவில் இரு வழிப் பாதையாக உள்ளது. தமிழகத்திலுள்ள 18 கிலோ மீட்டர் சாலையை அகலப்படுத்துவதற்காக நெடுஞ்சாலைத் துறை 8 பாகமாகப் பிரித்து, அதில் 3 பாகம், சுமார் 7½ கிலோ மீட்டர் அகலப்படுத்தும் பணி நடைபெற்றுக்கொண்டிருக்கின்றது. மீதமுள்ள 5 பாகம், சுமார் 10 கிலோ மீட்டர் சாலையை அகலப்படுத்தும் பணியை இந்த அரசு மேற்கொள்ளுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞருடைய அரசு ஏற்பட்டதிலிருந்து சாலைக் கட்டமைப்பு வசதியை மேம்படுத்தி, பொருளாதாரத்தை மேம்படுத்துகின்ற வகையிலும், பல்வேறு தொழிற்சாலைகளை உருவாக்குகின்ற வகையிலேயும், கட்டமைப்பு வசதிகளில் முக்கியமான ஒன்றான சாலை வசதியை மேம்படுத்த வேண்டுமென்று சொல்லி, அதற்கேற்ப நிதியைக் கூடுதலாகக் கடந்த இரண்டாண்டு காலமாக வழங்கி வருகிறார்கள். அந்த அடிப்படையில், இருக்கின்ற மாநில நெடுஞ்சாலைகள் ஏறத்தாழ 9,256 கிலோ மீட்டர் நீளம் உள்ளன. இவற்றிலே இன்னும் ஒரு வழிச் சாலையாகவும், இடைவழிச் சாலையாகவும் ஏறத்தாழ 3,000 கிலோ மீட்டர் சாலைகள் உள்ளன. அவற்றை இந்த ஆண்டு வரக்கூடிய நிதியாண்டிலே, ஏறத்தாழ 1,000 கிலோ மீட்டருக்குமேலே ஒரு வழிச் சாலையாகவும், இடைவழிச் சாலையாகவும் இருக்கக்கூடிய சாலைகளை இரு வழிச் சாலைகளாக மாநில நெடுஞ்சாலைகளை உயர்த்துவதும், படிப்படியாக எதிர்காலத்தில், விரைவில் மாநில நெடுஞ்சாலைகள் அனைத்தையும் இரு வழிச் சாலைகளாக ஆக்குவதுமே இந்த அரசினுடைய, இந்தத் துறையினுடைய நோக்கம். எனவே, அதை எட்டுகின்ற வகையிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிடுகின்ற சாலையும் பரிசீலிக்கப்படும். அதைத் தனிக் கேள்வியாகவும், அதே நேரத்தில் கடிதம்மூலமாகவும் எங்களுக்குத் தெரிவித்தால் உடனடியாக நடவடிக்கை எடுப்பதற்கு ஏதுவாக இருக்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சங்ககிரிப் பகுதியானது இந்தியாவிலேயே மிக அதிகமான கன ரக வாகனங்கள் இருக்கின்ற ஒரு பகுதியாக இருந்துகொண்டிருக்கின்றது. அங்கேயிருந்து மிக அதிகமான வாகனங்கள் பெங்களூருக்குச் செல்கின்றன. அவை ஓமலூர் வழியாகச் செல்கின்றன. சேலம்–ஓமலூர் வழியாகத்தான் அந்த வாகனங்கள் எல்லாம் சென்றுகொண்டிருக்கின்றன. எனவே, சங்ககிரியிலிருந்து தாரமங்கலம், ஓமலூர் வழியாக வருகின்ற நெடுஞ்சாலைத் துறைப் பாதையை இரு வழிப் பாதையாக மாற்றி அமைத்தால், 20 கிலோ மீட்டர் தூரம் குறைந்து, கன ரக வாகனங்கள் ஓமலூர் வழியாக பெங்களூருக்குச் செல்கின்ற வாய்ப்பு இருக்கின்றது. எனவே, அதை இரு வழிப்





பாதையாக நெடுஞ்சாலைத் துறை மாற்றி அமைக்குமா என்று தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அதைத்தான் ஏற்கெனவே குறிப்பிட்டேன். மாநில நெடுஞ்சாலைகளை இரு வழிச் சாலைகளாக விரைவில் மாற்றுவதே இந்த அரசினுடைய நோக்கம். எனவே அந்த அடிப்படையில், வரக்கூடிய இந்த மாத இறுதியிலே அந்த மாவட்டத்திற்குச் செல்ல இருக்கின்றோம். ஓமலூரிலே அமைக்கப்பட்டிருக்கிற இரயில்வே மேம்பாலம் திறக்கப்பட இருக்கின்றது. அதற்குப் பிறகு, அந்தச் சாலையை, அந்த நிகழ்ச்சிக்குச் செல்லும்பொழுது நானே நேரடியாகப் பார்க்க இருக்கிறேன். அந்த அடிப்படையில் மாண்புமிகு உறுப்பினருடைய கோரிக்கை பரிசீலிக்கப்படும்.

*முற்பகல் 10–20*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 18, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம், மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**18—**

## மிதவைகள்

***19467—திரு. எம். பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மீனவர்களுக்குக் கடலில் இரவும், பகலும் எல்லையை அறியும் வகையில், வழிகாட்டும் விளக்குகளுடன்கூடிய மிதவைகளை நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி, மீன்வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே.

நமது தமிழக மீனவர்கள் கடலில் மீன் பிடிக்கும் நேரத்தில், இரவும், பகலும் எல்லையை அறியும் வகையில், வழிகாட்டும விளககுடன்கூடிய மிதவைகளை நிறுவும் திட்டம் நமது அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எம். பன்னீர்செல்வம்.

**திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் மீன்பிடித் தொழிலைச் செய்யக்கூடிய மீனவர்களுக்குக் கடலில் இரவிலும், பகலிலும் எல்லையை அறிய வழிகாட்டும் விளக்குகள் பொருத்தப்பட்ட மிதவைகளை அமைத்துக் கொடுக்கும் திட்டம் பரிசீலனையில் உள்ளதாக மாண்புமிகு அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். அப்படிப்பட்ட வழிகாட்டும் விளக்குகள் பொருத்தப்பட்ட மிதவைகளைத் தமிழகத்தில் எத்தனை மையங்களில் அமைக்க இருக்கிறார்கள், எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டிருக்கிறது, இது எந்த ஆண்டு நடைமுறைப்படுத்தப்படும் என்பதைத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்குக் கடலில் இரவும், பகலும் எல்லையை அறியும் வகையில் வழிகாட்டும் விளக்குகளுடன்கூடிய மிதவைகள் அமைத்திடும் திட்டம் 2001 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையில் முன்னாள் நிதி அமைச்சர் அவர்களால் அறிவிக்கப்பட்டது. இத்திட்டத்திற்காக 2002 ஆம் ஆண்டு அளவில் ரூ. 3.40 கோடி செலவினத்திற்கான மதிப்பீடு பெறப்பட்டது. இதற்கு மத்திய அரசு நிதியுதவி கிடைக்கப்பெறவில்லை. எனவே, இதனை மாநில அளவிலான திட்டமாகச் செயல்படுத்திட அரசின் பரிசீலனையில் உள்ளது. இத்திட்டத்தினைத் தற்போது செயல்படுத்த ஏற்படும் தொடரும் மற்றும் தொடராச் செலவினம் குறித்து அரசினால் மதிப்பீடு கேட்கப்பட்டுள்ளது. இதற்குத் தேசிய கடல் வளத் தொழில்நுட்ப நிறுவனத்திடம் விவரம் கேட்கப்பட்டுள்ளது. விவரங்கள் வரப்பெற்றதும், இது குறித்துப் பரிசீலனை செய்து, விரைவில் முடிவெடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய சாத்தான்குளம் தொகுதியிலுள்ள பெரியதாழையில் பத்தாயிரத்திற்கும் மேற்பட்ட மக்கள் மீன்பிடித் தொழிலையே நம்பியிருக்கிறார்கள். இவர்கள் நாட்டுப் படகுகளையே உபயோகித்து வருகிறார்கள். இதுபோன்று கன்னியாகுமரியிலும், தூத்துக்குடியிலும், திருநெல்வேலியிலும் உள்ள மீன்பிடித் தொழிலை நம்பியிருக்கும் மக்கள் நாட்டுப் படகை உபயோகிக்கிறார்கள். இதற்குத் தேவையான மண்ணெண்ணெய் ரேஷன் விலையில் அளிக்கப்படுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்ன அந்தக் கோரிக்கை அரசின் பரிசீலனையில் உள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. ஹசன் அலி.

**திரு. கு. ஹசன் அலி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடலிலே மீன்பிடி எல்லையைக் காட்டுவதற்கு விளக்குகள் அமைத்தாலும், மீனவர்களைப் பொறுத்தவரை அவர்கள் எல்லையைப் பார்ப்பதில்லை. மீனைப் பார்த்துத்தான் பின்னால் செல்வார்கள். அதுதான் இப்போது வழக்கமாக நடந்துகொண்டிருக்கிறது. ஆகவே, முக்கியமாக அதற்கு வேறு என்ன நாம் செய்யலாம் என்பதைத்தான் நாம் ஆராய வேண்டுமென்று நான் கருதுகிறேன். வருகின்ற அடுத்த வாரத்திலிருந்தே 45 நாட்களுக்கு மீனவர்கள் கடலுக்குச் செல்ல முடியாது. அவர்களுக்கு, அந்த மீன் பிடிக்கச் செல்ல முடியாத சமயத்திலே 30 கிலோ அரிசி மானியமாக வழங்க வேண்டுமென்று ஏற்கெனவே கோரிக்கை விடுத்திருந்தேன். அது நிறைவேற்றப்படுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேள்வி கேட்டதுபோல, மீனவர்களுக்காக நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள் அரசுப் பொறுப்பேற்று நல்ல பல காரியங்களை ஆற்றி வருகிறார்கள். அதிலே குறிப்பாக, மீனவ மக்களுடைய நீண்ட நாள் கோரிக்கையாக இருந்த மீனவர் நல வாரியத்தை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தியத் திருநாட்டிலேயே முதன்மையாக நம்முடைய தமிழகத்திலே அறிவித்து, மீனவ மக்களுடைய இதயங்களிலே, உள்ளங்களிலே பால் வார்த்திருக்கின்றார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அப்படிப்பட்ட மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஆட்சியிலே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதைப்போல, மீனவர்கள் மீன் பிடிக்கச் செல்லாமல் இருக்கின்ற அந்த 45 நாட்கள் குறித்து முதல்வர் அவர்களோடு ஆலோசனை செய்து, விரைவில் அதற்கான நடவடிக்கை எடுக்கப்படும்.

*முற்பகல் 10–25*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கரி. இராமசாமி.

**திரு. கரி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது அன்னிய நாட்டினரால் நமது மீனவர்கள் தாக்கப்படுகிறார்கள். அவர்களில் நூற்றுக்கணக்கான பேர்கள் இறந்திருக்கிறார்கள். இதைத் தடுப்பதற்கு அரசாங்கம் இன்றைக்குப் பல வழிகளிலே முயன்றாலும், கடல் எல்லையை நமது மீனவர்கள் தாண்டக் கூடாது. அதற்கு ஒளிரக்கூடிய மிதவைகளை நமது கடல் border-ல் தொடர்ந்து ஏற்படுத்தினால்தான் அதைத் தடுக்க முடியும். இந்தக் கேள்வியைத் தொடர்ந்து 6, 7 ஆண்டுகளாகக் கேட்டு வருகிறோம். அப்போது இருந்த அரசும் இதைப் பரிசீலிப்பதாகச் சொன்னது. ஆனால், இன்றைக்கு மத்திய அரசிடமிருந்து இன்னும் நிதி கிடைக்கவில்லை என்று நமது அமைச்சர் அவர்கள் சொல்லியிருக்கிறார்கள். இதை முழுமையாக நமது மாநில அரசே ஏற்று, ஒளிரக்கூடிய மிதவைகளைக் கடலிலே அமைத்துத் தர முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு சீர்காழி சட்டமன்ற உறுப்பினர் அண்ணன் திரு. எம். பன்னீர்செல்வம் அவர்கள் இந்தக் கேள்வியைத்தான் கேட்டார்கள். கடந்த ஆட்சியிலே நிதி அமைச்சர் அவர்கள் இதைப்போன்ற மிதவைகள் வேண்டுமென்றும், 3 கோடியே 40 இலட்சம் ரூபாய் செலவிலே அவை அமைக்கப்பட வேண்டுமென்றும் மத்திய அரசிடம் கோரினார்கள். மத்திய அரசு அதனைத் தராத காரணத்தால், மாநில அரசே ஏற்று, கலைஞருடைய அரசு அதை நடைமுறைப்படுத்த வேண்டுமென்ற நிலையிலே இப்போது இருக்கிறது. அதற்கான ஆய்வுகள் செய்யப்பட்டு, விரைவிலே அதற்கான ஏற்பாடுகள் செய்யப்படும் என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மீனவர்களுக்கு நம்முடைய நாட்டினுடைய எல்லை தெரிவது மிகவும் முக்கியமான செய்தியாக இப்போது கருதப்படுகிறது. இதிலே இந்த மிதவைகள் அமைப்பதற்கு மிகுந்த பொருள் செலவாகும் என்று சொல்கிறார்கள். இப்போது புதிய தொழில்நுட்ப யுகத்திலே வாழ்கிற நாம், கடலில் மீன் பிடிக்கச் செல்கின்ற மீனவர்களுக்கு, Electronic Alarms—அதாவது, நம்முடைய நாட்டின் எல்லையிலிருந்து, நம்முடைய கடல் எல்லையைக் கடக்கின்றபோது, சிறிய கடிகாரம் போன்ற ஒரு கருவிமூலம், அபாய மணியை ஒலிக்கின்ற அளவிலே இப்போது நிறையக் கண்டுபிடிப்புகள் வந்திருக்கின்றன. உதாரணமாக, நாம் இப்பொழுது Cell phone வைத்திருக்கிறோம். அந்த Cell phone சில எல்லைகளைத் தாண்டினால், அதில் பேச முடிவதில்லை; 'No signal' என்று வரும். அதைப்போல, அந்தக் கடலில் நம்முடைய எல்லையைத் தாண்டுகின்றபோது, அந்த signal அதிலே கிடைக்கின்ற வகையிலே, 'நீ எல்லையைக் கடக்கிறாய்' என்கிற அந்த அறிவிப்பைக் கொடுக்கக்கூடிய புதிய தொழில்நுட்பக் கருவியை வாங்கி, நம்முடைய மீனவர்களுக்கு மானிய விலையிலே கொடுப்பதற்குத் தமிழக அரசு ஒரு தற்காலிக ஏற்பாட்டையாவது செய்ய முன்வருமா என்று நான் அறிய விரும்புகிறேன்.





**மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:** மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் இங்கே சொன்னதைப்போலத்தான், நம்முடைய மீனவர்கள் பற்றிய பிரச்சினையை அவையிலே விவாதிக்கிறபோது, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் தொழில் செய்யும்போது, அவர்களுடைய உயிர்களை, உடைமைகளைத் தற்காத்துக் கொள்வதற்காக எந்தளவிற்கு அதிநவீனக் கருவிகளை அரசால் வழங்க முடியுமோ, அவற்றையெல்லாம் நம்முடைய கலைஞர் அரசு வழங்கும் என்று ஏற்கெனவே அறிவித்திருக்கின்றார்கள்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 19, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி, மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**19—**

## பால் பவுடர் தொழிற்சாலை

***19504—திரு. வை. காவேரி:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) எடப்பாடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 ஏப்ரல் 4

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) எடப்பாடியில் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கான திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

முற்பகல் 10–30

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது. மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எடப்பாடித் தொகுதியில் பெரும்பாலும் வேளாண்மைத் தொழில் செய்கின்றவர்கள்தான் அதிகமாக இருந்து வருகின்றார்கள். அவர்கள் கால்நடைகளையும் வளர்த்து அங்கு பால் உற்பத்தி அதிகமாகச் செய்கின்றார்கள். தினந்தோறும் சுமார் 25,000 லிட்டர் பால் அங்கு கொள்முதல் செய்யப்படுகின்றது. அதேபோல், சங்ககிரியில் கொள்முதல் செய்யப்படுகின்ற பாலும் பரமத்திவேலூர் மற்றும் சேலம் பகுதிகளுக்குச் சென்று அந்தப் பால் பவுடர் தொழிற்சாலைக்கு அதனைக் கொண்டு செல்கின்றார்கள். ஆகவே, இந்தப் பகுதிகளுக்கெல்லாம் சேர்த்து எடப்பாடியிலே ஒரு பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைத்தால், அங்கு வேலைவாய்ப்பும் பெருகும்; பால் உற்பத்தியும் மேலும், மேலும் பெருகும். எனவே, பால் பவுடர் தொழிற்சாலையை எடப்பாடியில் அரசு அமைக்குமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்..

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், எடப்பாடிப் பகுதியினைச் சுற்றி 24 பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் செயல்பட்டு வருகின்றன. இச்சங்கங்களிலிருந்து நாளொன்றுக்கு சுமார் 10,700 லிட்டர் பாலை சேலம் மாவட்டப் பால் உற்பத்தியாளர் கூட்டுறவு ஒன்றியம் கொள்முதல் செய்து வருகிறது. இவ்வாறு கொள்முதல் செய்யப்பட்ட பால், லாரிகள்மூலம் சுமார் 32 கிலோ மீட்டர் தொலைவிலுள்ள சேலம் பால் பண்ணைக்குக் கொண்டு வரப்பட்டுப் பதப்படுத்தப்பட்டு வருகிறது. சேலம் பால் பண்ணையில் நாள் ஒன்றுக்கு 10 டன் பால் பவுடர் உற்பத்தி செய்யும் தொழிற்சாலை உள்ளதால், எடப்பாடியில் தனியாகப் பால் பவுடர் தயாரிக்கும் தொழிற்சாலை அமைப்பதற்கு வாய்ப்பில்லை என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.



2007 ஏப்ரல் 4]

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள், முதலில் பள்ளிக் குழந்தைகளுக்குக் கூடுதலாக ஒரு முட்டை வழங்கினார். மீண்டும் இப்பொழுது ஒரு கூடுதல் முட்டை வழங்கியிருக்கின்றார். பால் என்பது மிகவும் சத்துணவான பொருள். பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவில் எப்படி முட்டை வழங்குகின்றார்களோ. அதேபோல் பாலும் வழங்கினால், ஒரே கல்லில் இரண்டு மாங்காய் என்பதுபோல், பால் உற்பத்தியாளர்களும் பயன்பெறுவார்கள்; பள்ளிக் குழந்தைகளும் பயன்பெறுவார்கள் என்பதைத் தங்கள்மூலமாகத் தெரிவிக்க விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் ஒரு நல்ல யோசனையைச் சொல்லியிருக்கிறார்கள். இதைப் பற்றி மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களிடம் ஆலோசனை செய்து, தக்க நடவடிக்கை எடுப்பதற்கு வாய்ப்பு இருப்பின், அது செய்யப்படும் என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 20, மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன். மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் அவர்கள்.

**20—**

## விற்பனை நிலையம்

***8921—திரு. க. இராஜேந்திரன்:**

மாண்புமிகு கதர்த் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தா. பழூர் பகுதியில் காதி விற்பனை நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன், கதர்த் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) தா. பழூர் பகுதியில் காதி விற்பனை நிலையம் அமைக்கும் உத்தேசம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) இவ்வினாவிற்கு இடமில்லை.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது ஜெயங்கொண்டம் சட்டமன்றத் தொகுதியில் தா. பழூர் ஒன்றியம் உள்ளது. தினமும் சுமார் 33 கிராமப் பஞ்சாயத்து மக்கள் வந்து செல்லுகின்ற மையப் பகுதி. தா. பழூர் ஒன்றிய அலுவலகம், காவல் நிலையம், கால்நடை மருந்தகம், அரசு மருத்துவமனை, இரண்டு வங்கிகள் மற்றும் மளிகை, ஜவுளி, காய்கறிக் கடைகள் உட்படப் பல வர்த்தக நிறுவனங்கள் உள்ளன. ஆனால், அரசு சார்பு நிறுவனமான காதி வஸ்திராலயம் இல்லை. அதனால், தா. பழூரில் காதி வஸ்திராலயம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்பதைத் தங்களின்மூலம் அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக ஒரு கதர் அங்காடி துவக்க நகரப் பகுதியாகவோ, பேரூராட்சிப் பகுதியாகவோ இருக்க வேண்டும். இந்த தா. பழூர் பகுதி ஒரு கிராமம். கிட்டத்தட்ட 4,570 நபர்களே வாழ்கின்ற பகுதி. ஒரு கதர் அங்காடி அமைக்க வேண்டுமென்று சொன்னால், குறைந்தபட்சம் ஓராண்டுக்கு 5 இலட்சம் ரூபாய் வரையிலாவது விற்பனை செய்ய வேண்டும். இந்த ஊருக்கு அருகில் ஜெயங்கொண்டத்தில் ஏற்கெனவே ஒரு கதர் அங்காடி உள்ளது. 13 கிலோ மீட்டர் தொலைவில் உள்ளது. இந்த தா. பழூர் பகுதியிலுள்ள பஞ்சாயத்து யூனியன் அலுவலகத்தில் கிராமப் பொருட்களைப் பண்டிகைக் காலத்தில் விற்பனை செய்கிறபோதுகூட, தீபாவளி நேர காலத்திலேயே 15,000 ரூபாய்க்குமேல் விற்பனையாவதில்லை. எனவே, இந்தப் பகுதியில் காதி விற்பனை அங்காடி அமைக்கும் வாய்ப்பில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அங்கு வசிக்கின்ற மக்கள் மிகவும் ஏழை, பின்தங்கிய விவசாயப் பெருமக்களாவர். காதி வஸ்திராலயம் என்றால் என்னவென்றே தெரியாது. அதை அரசு விளக்க வேண்டும். காதிமூலம் தரமான, விலை குறைந்த கட்டில், பீரோ, இலவம் பஞ்சு மெத்தை, தலையணை, தேன், நாட்டு மருந்துகள்போன்ற பல பொருட்களை வழங்க முடியும். அந்தப் பகுதி மக்கள் அரியலூருக்கு 30 கிலோ மீட்டர் செல்ல வேண்டும். அந்தத் தா. பழூர் பார்டரிலிருந்து ஜெயங்கொண்டத்திற்கு 25 கிலோ





மீட்டர் செல்ல வேண்டும். அவர்களின் நலன் கருதி, தா. பழூரில் காதி வஸ்திராலயம் அமைக்க வேண்டுமாய் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள்மூலம் அரசை வலியுறுத்துகின்றேன்.

*முற்பகல் 10–35*

**மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் துறை அலுவலர்களை வைத்து மீண்டும் ஆய்வு செய்யச் சொல்லி, அப்படி ஒரு வாய்ப்பு இருக்குமானால் மீண்டும் அது பற்றிப் பரிசீலிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 11, மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி, மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்..

**11—**

## துணை மின் நிலையம்

***11818—திரு. அர. சக்கரபாணி:**

மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஜவ்வாதுப்பட்டியில் துணை மின் நிலையம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஆம்.

(ஆ) ஜவ்வாதுப்பட்டியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளது. வாரிய ஒப்புதல் அளிக்கப்பட்டுத் தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டவுடன், 11-வது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் துணை மின் நிலையம் நிறுவுவதற்கான பணிகள் மேற்கொள்ளப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அர. சக்கரபாணி.

**திரு. அர. சக்கரபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒட்டன்சத்திரம் தொகுதிக்குட்பட்ட ஜவ்வாதுப்பட்டியில் துணை மின்

[2007 ஏப்ரல் 4

நிலையம் அமைக்க வேண்டும் என்பது அந்தப் பகுதிப் பொது மக்கள், விவசாயிகளுடைய நீண்ட நாள் கோரிக்கை. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இன்றைக்கு அந்தப் பகுதியில் 110/22 கி.வோ. துணை மின் நிலையம் அமைப்பதற்கான கருத்துரு பரிசீலனையில் உள்ளதாகவும், வாரிய அனுமதி கிடைத்தபின், தேவையான நிலம் கையகப்படுத்தப்பட்டபின், பணிகள் ஆரம்பிக்கப்படும் என்றும் அறிவித்துள்ளார்கள். அதற்காக அந்தப் பகுதி மக்களின் சார்பாக மாண்புமிகு தமிழக முதல்வர், முத்தமிழறிஞர் தலைவர் கலைஞருடைய அரசுக்கும், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சருக்கும் நன்றியைத் தெரிவிப்பதுடன், அந்தத் துணை மின் நிலையத்தின் மதிப்பீடு எவ்வளவு என்பதை அறிவதுடன், அந்தப் பணி உத்தேசமாக எப்போது ஆரம்பிக்கப்படும் என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** தலைவர் அவர்களே, இந்தத் துணை மின் நிலையம் அமைப்பதற்கு 15 கோடி ரூபாய் செலவாகும். 2008–2009 ஆம் ஆண்டில் இந்தத் துணை மின் நிலையப் பணிகள் ஆரம்பிக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்—விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

## 2. விதி 110—ன்கீழ் அறிக்கை

### நியாய விலையில் உணவுப் பொருட்கள் விநியோகம், தமிழ்ப் புத்தாண்டு நாளான 14-4-2007 முதல் தொடங்குதல்— மாண்புமிகு முதலமைச்சரின் அறிக்கை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று, (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். (குறுக்கீடுகள்) பின்னர் எடுக்கப்படும், உட்காருங்கள்.

பேரவை விதி 110—ன்கீழ் அறிக்கை ஒன்றை அளிக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அனுமதி கோரியுள்ளார்கள்; அனுமதியளிக்கப்படுகிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டுக்கான நிதிநிலை அறிக்கையில்



2007 ஏப்ரல் 4] [கலைஞர் மு. கருணாநிதி]

"பொது விநியோகத் திட்டத்தின்கீழ் வழங்கப்படும் அரிசியின் விலையைக் குறைத்து, இந்தியாவிலேயே மிகக் குறைவான விலையில், இரண்டு ரூபாய்க்கு ஒரு கிலோ அரிசி வழங்கி வருகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி) இதன் காரணமாக, கடந்த பத்து மாதங்களாக வெளிச்சந்தையில் அரிசியின் விலை உயராமல் கட்டுப்பாட்டிற்குள் உள்ளது. இதுபோன்றே, பொது மக்கள் அன்றாடம் பயன்படுத்தும் அத்தியாவசிய உணவுப் பொருட்களான பருப்பு வகைகள், சமையல் எண்ணெய் ஆகியவற்றின் விலைகளைக் கட்டுப்படுத்தி, ஏழை, நடுத்தரக் குடும்பங்களைப் பாதுகாக்கும் உடனடித் தற்காலிக நடவடிக்கையாக, அப்பொருட்களை அரசே கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள் மூலமாகப் பொது மக்களுக்கு வழங்க முடிவு செய்யப்பட்டது" என்று அறிவிக்கப்பட்டது.

அந்த அறிவிப்பையொட்டி, தற்போது பாமாயில், துவரம் பருப்பு, உளுத்தம் பருப்பு, ரவை, மைதா ஆகிய உணவுப் பொருட்களைக் கொள்முதல் செய்து, நியாய விலைக் கடைகள்மூலமாக விநியோகம் செய்யும் திட்டம் தமிழ்ப் புத்தாண்டு நாளான 14–4–2007 அன்று (மேசையைத் தட்டும் ஒலி) சென்னை மாநகரத்திலே தொடங்கப்பட்டு, இத்திட்டம் படிப்படியாக மே மாதம் முதல் வாரத்திலிருந்து தமிழகத்திலே உள்ள அனைத்து நியாய விலைக் கடைகளுக்கும் விரிவுபடுத்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 10–40

## 3. அறிவிப்புகள்

### (அ) பார்வையாளர் மாடத்திலிருந்து பேரவை நடவடிக்கைகளைக் கண்ணுறும் அமெரிக்கத் தூதர் மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்களுக்கு வரவேற்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடுகள்) முதலில் உட்காருங்கள். பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள (குறுக்கீடுகள்) உட்காருங்கள் சார். நான் கூப்பிட்டால்தானே? (குறுக்கீடுகள்) உட்காருங்கள் முதலிலே. நான் கூப்பிடுகிறேன். இதை முடித்துவிட்டு நான் கூப்பிடுகிறேன், உட்காருங்கள். (குறுக்கீடுகள்) பேரவைக்கு ஓர் அறிவிப்பு. சென்னையில் உள்ள அமெரிக்கத் தூதர் Thiru. David T. Hopper மற்றும் அமெரிக்கத் தூதரகத்தின் உயர் அலுவலர்கள் பார்வையாளர் மாடத்தில் அமர்ந்து,

பேரவை நடவடிக்கைகளைப் பார்வையிட வந்துள்ளார்கள். அவர்களை வரவேற்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

I welcome the dignitaries from the U.S. Consulate, Mr. David T. Hopper, Consul-General for South India, Mr. Rohit Nepal, Consul for Economic and Political Affairs, Mr. George Mathew, Economic Specialist and Mr. Finny Jacob, Political and Economic Specialist who are now witnessing the proceedings of our House. (Thumping of desks)

## 4. சிறப்புக் கவன ஈர்ப்பு

### காவிரி டெல்டா பகுதியில் நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் செயல்படாதது

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *1-4-2007 முதல் காவிரி டெல்டா பாசனப் பகுதியான தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்கள்மூலம் நெல் கொள்முதல் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதால் ஏற்பட்டுள்ள நிலை குறித்து மாண்புமிகு உறுப்பினர்கள் திருவாளர்கள் பொள்ளாச்சி வி. ஜெயராமன், ஆர். வைத்திலிங்கம், அக்ரி. எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி, வை. சிவபுண்ணியம் ஆகியோர் ஒத்திவைப்புத் தீர்மான அறிவிப்புகள் கொடுத்திருக்கிறார்கள். இதனைச் சிறப்புக் கவன ஈர்ப்பு அறிவிப்பாக எடுத்துக்கொள்கிறேன். இது குறித்து, அ.தி.மு.க. சார்பாக மாண்புமிகு உறுப்பினர் ஆர். வைத்திலிங்கம் அவர்கள் உரையாற்றுவார்கள்.*

*** திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த 1 ஆம் தேதியிலிருந்து தஞ்சாவூர், திருவாரூர், நாகப்பட்டினம் ஆகிய மாவட்டங்களில் நேரடிக் கொள்முதல் நிலையங்களில் நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. விவசாயிகளுடைய உற்பத்திச் செலவு அதிகமாகி, விளைபொருட்களுக்குக் கட்டுப்படியான விலை கிடைக்காத நிலையில், அவர்களுடைய நெல்லைக் கொள்முதல் செய்யாமல், இந்த மூன்று நாட்களாக விவசாயிகளிடம் ஒரு பதட்டம் ஏற்பட்டிருக்கின்றது.

*"உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்மற் றெல்லாம்*
*தொழுதுண்டு பின்செல் பவர்"*

என்ற காலம் போய், இன்றைக்கு விவசாயிகள் மற்றவர்களைத் தொழுகின்ற காலம் நடந்துகொண்டிருக்கிறது. மேலும், கொள்முதல்





நிலையங்களில் சாக்குப் பற்றாக்குறை இருப்பதாக விவசாயிகள் தெரிவிக்கின்றார்கள். நேற்று நாங்கள் இங்கே ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்குப் பிறகு, தொலைபேசி மூலமாக எஸ்.ஆர்.எம். அலுவலகத்திற்குச் செய்தி சென்று, நெல் கொள்முதல் செய்யுங்கள் என்று உத்தரவிடப்பட்டிருக்கிறது. இருந்தும் நேற்று பணம் பட்டுவாடா செய்யப்படாமல், நெல் கொள்முதல் செய்யப்படவில்லை. இன்று கொள்முதல் செய்யப்படலாம் என்று தகவல் வந்திருக்கின்றது. நாங்கள் ஒத்திவைப்புத் தீர்மானம் கொடுத்ததற்குப் பிறகு இந்த நடவடிக்கையை எடுத்திருக்கிறீர்கள். இது எங்களுக்கு மகிழ்ச்சி. இதை நீங்கள் நிறுத்தாமல், தொடர்ந்து கொள்முதல் செய்து, விவசாயிகளுடைய பதட்டத்தைத் தீர்த்திருக்கலாம் என்று கூறி, தந்த வாய்ப்பிற்கு நன்றி சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம். *(குறுக்கீடு)* சிவபுண்ணியம், பேசுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் வழங்கப்பட்டு வந்த ஊக்கத் தொகை 40 ரூபாயை மத்திய அரசாங்கம் நிறுத்தியது. இது மத்திய அரசாங்கத்தினுடைய நேரடிக் கொள்முதலாக இருக்கிற காரணத்தினாலே, தேசிய அளவிலே நெல் கொள்முதல் பணிகள் மற்ற மாநிலங்களில் நிறுத்தப்பட்டிருக்கிற காரணத்தினாலோ என்னவோ, மத்திய அரசு அந்த ஊக்கத் தொகையை நிறுத்தியதாக ஒரு காரணம் சொல்லப்பட்டது. ஆனால், நமது மாநிலத்தில், பின்னால் சாகுபடி செய்யப்பட்ட பணிகளிலே கொள்முதல் செய்ய வேண்டிய அவசியம் இருக்கிறது என்ற அந்தக் கோரிக்கையை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலேயும், நமது உணவுத் துறை அமைச்சரிடத்திலேயும் நாங்கள் நேற்று முன்தினமே வைத்தோம். இதை உடனடியாக மத்திய அரசிடத்திலே பேசி, ஊக்கத் தொகை நிறுத்தப்படக் கூடாது என்பதை மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எங்களிடத்திலே ஒப்புக்கொண்டு, மத்திய அரசாங்கம் மீண்டும் அதை ஏற்றுக்கொண்டிருக்கிறது என்ற தகவலையும் சொன்னார்கள். ஆகவே, உத்தரவு வந்து, இங்கே நிறைவேற்றுகிற அந்தக் காலம் வரையிலும், இடைப்பட்ட காலத்தில் விவசாயிகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படும் என்ற உத்தரவாதத்தையும் அளித்தார்கள். இதை எங்களுடைய மாவட்ட விவசாயப் பெருமக்களுக்குச் சொல்லி,

அவர்கள் மகிழ்ச்சியாக இருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) கொள்முதல் பணி என்பது இப்பொழுது நிறுத்தப்படவில்லை. ஆனால், எல்லா இடங்களிலேயும் கொள்முதல் என்பது இப்பொழுது கிடையாது. காரணம், அறுவடை என்பது பெரும் பகுதி 95 சதவீதத்திற்குமேலே முடிவடைந்துவிட்டது. ஆகவே, அங்கொன்றும், இங்கொன்றுமாக இருக்கின்ற அந்தக் காலங்களைப் பயன்படுத்திக் கொள்முதல் நடைபெறுகிறது என்பதுதான் இதிலே இருக்கிற உண்மை. இதிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும், நமது அரசையும் நான் பணிவாகக் கேட்டுக்கொள்வது, சென்ற அ.தி.மு.க. ஆட்சிக் காலத்திலேயே மத்திய அரசாங்கத்தினுடைய முகவராகக் கொள்முதல் செய்கின்ற அந்த முறை கொண்டு வரப்பட்டு, அது நடைமுறைப் படுத்தப்படுகிறது, இப்பொழுதும் அது தொடருகிறது. ஆகவே, வருங்காலங்களிலாவது நமது மாநில அரசே கொள்முதல் செய்வதற்குரிய முயற்சிகளை மேற்கொள்ள வேண்டுமென்று நான் கேட்டு, அமர்கிறேன். வணக்கம்.

*முற்பகல் 10–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய தமிழ்நாட்டிலே சம்பா, குறுவை என்று எப்படி இரண்டு பருவங்கள் இருக்கின்றனவோ, அதைப்போல வட மாநிலங்களிலே கரிஃப் பருவம் என்றும், ராபி பருவம் என்றும் இரண்டு வகையாகப் பிரிக்கப்பட்டிருக்கின்றன. அதிலே அந்த கரிஃப் பருவம் என்பது 30–3–2007 உடன் முடிவடைகிறது. எனவே, அந்தத் தேதியைக் கணக்கிட்டு மத்திய அரசாங்கம் 40 ரூபாய் ஊக்கத் தொகை தந்தது. ஏற்கெனவே குவிண்டாலுக்கு சன்ன ரகத்திற்கு 610 ரூபாயும், பொது ரகத்திற்கு 580 ரூபாயும் விலை கொடுக்கிறோம். ஊக்கத் தொகையாக 40 ரூபாய் கொடுக்கப்படுகிறது. இது 31–3–2007 வரை தொடர்ந்து கொடுக்கப்பட்டு வந்தது. அதோடு நின்றுவிடக் கூடாது என்பதைத் தமிழக அரசு கவனத்தில் எடுத்துக்கொண்டு, ஒரு வார காலத்திற்கு முன்னால் கடிதம் எழுதி, எங்களுடைய பகுதியைப் பொறுத்தளவிற்கு சம்பா என்பது தொடர்ந்து இன்னும் ஒரு மாத காலம் இருக்கிறது; எனவே, தொடர்ந்து நீங்கள் ஊக்கத் தொகை தர வேண்டுமென்று மாண்புமிகு மத்திய உணவுத் துறை அமைச்சர் திரு. சரத் பவார்



அவர்களுக்குக் கடிதம் எழுதியிருக்கிறோம். அதே நேரத்திலே, அந்த 31 வரை முடிகிற நிலைமையையும் அறிந்து முதலமைச்சருடைய கவனத்திற்குக் கொண்டு போனபோது, மத்திய அரசாங்கம் அனுமதிக்கிற வரையில் நிறுத்திட வேண்டாம் என்று அவர்கள் சொன்னார்கள். எனவே, தமிழக அரசின் சார்பாக 40 ரூபாய் ஊக்கத் தொகை தர வேண்டுமென்று ஆணை பிறப்பித்திருக்கிறார்கள். ஆனால், இதிலே என்னவென்று சொன்னால் 30 ஆம் தேதி வரை கொடுத்துக்கொண்டிருந்தோம், கொள்முதல் செய்துகொண்டிருந்தோம், 31 ஆம் தேதி பொது வேலைநிறுத்தம், மூன்றாம் தேதி ஞாயிற்றுக்கிழமை, இரண்டாம் தேதி—எப்பொழுதும் ஆண்டுக்கு ஒரு முறை வங்கிகளிலே லீவு விடுவார்கள், வங்கியைப் பொறுத்தளவிற்கு இரண்டாம் தேதி— லீவு விடப்பட்டிருக்கிறது. ஆனாலும்கூட, 30 ஆம் தேதி கையிருப்பிலே இருந்த பணம், ஆங்காங்கு இருக்கிற நேரடிக் கொள்முதல் நிலையங்களில், இரண்டாம் தேதி வங்கிகள் லீவாக இருந்தாலும் சரி, கையிருப்பில் இருந்த பணத்தை வைத்துக்கொண்டு அன்றைக்குக் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. அதுவும் காவிரி டெல்டா பகுதியிலே அன்றைக்கு 93 டன் கொள்முதல் செய்யப்பட்டிருக்கிறது. நேற்றையதினத்தைப் பொறுத்தளவிற்கு எடுத்துக்கொண்டால், தஞ்சாவூரிலே 688 மெட்ரிக் டன், திருவாரூரிலே 752 மெட்ரிக் டன், நாகையிலே 606 மெட்ரிக் டன் நேற்றையதினம்கூடக் கொள்முதல் நடைபெற்றது, தொடர்ந்து நடைபெறுகிறது.

இங்கே கவன ஈர்ப்பு கொண்டு வந்ததன்மூலமாக நடைபெற்றது என்பது தவறான ஒரு கருத்து; இது தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. அது மட்டுமல்ல, இன்னும் எங்கும் பொது விநியோகக் கிடங்குகளே மூடப்படவில்லை. 1,200 இடங்களிலே தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வரத்துக் குறைவாக இருக்கிறது, இப்பொழுதுகூட வருவதை வாங்கிக்கொண்டிருக்கிறோம். எனவே, 40 ரூபாய் ஊக்கத் தொகை தொடர்ந்து தரப்படும். எந்தக் கொள்முதல் நிலையங்களும் மூடப்படவில்லை. விவசாயிகளின் நலனைக் கருதி, சென்ற ஆண்டைப்போல அல்லாமல் இந்த முறை தலைவர் கலைஞர் ஆட்சிப் பொறுப்பேற்றவுடனேயே இந்த ஊக்கத் தொகை 40 ரூபாய் கொடுக்கப்படுகிறது. மத்திய அரசாங்கம் கொடுக்கிற வரை தமிழக அரசு பொறுப்பேற்றுக்கொண்டு கொடுக்கிறது என்ற நல்ல செய்தியையும் இந்த நேரத்திலே சபையின் வாயிலாகத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டாம் என்று அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சரவை எடுத்த முடிவு குறித்து 3-4-2007 அன்றைய விவாதம்–கோப்புகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. (குறுக்கீடு) உட்காருங்கள், அனுமதி இல்லை.

3-4-2007 அன்று வேளாண்மைத் துறை மானியக் கோரிக்கைக்கு மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் பதிலுரையாற்றும்போது, மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் தெரிவித்த கருத்தினையொட்டி–கோப்புகளைப் பார்த்து நான் தீர்ப்புக் கூற வேண்டுமென்று சட்டப் பேரவையில் எடுத்த முடிவிற்கிணங்க, கரும்புக்கு மாநில அரசு பரிந்துரை விலை நிர்ணயம் செய்வது தொடர்பான இரண்டு கோப்புகளையும், அந்தப் பொருள் குறித்து இரண்டு அமைச்சரவைக் கூட்டங்களிலே வைக்கப்பட்ட குறிப்புகள் மற்றும் முடிவுகள் ஆகியவற்றையும் விரிவாக நான் பரிசீலனை செய்தேன்.

19-11-2001 அன்று நடந்த அ.தி.மு.க. அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு, கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்கு அரசு, மாநில அரசின் பரிந்துரை விலையை நிர்ணயம் செய்து அறிவிக்க வேண்டியது இல்லையென்ற முடிவினை எடுத்து, அதனைப் பதிவு செய்ததைக் கோப்பில் காண முடிகிறது.

முற்பகல் 10-50

தி.மு.க. அரசு 1998-1999, 1999-2000, 2000-2001 ஆகிய ஆண்டுகளில் தனியார் சர்க்கரை ஆலைகள் உயர் நீதிமன்றத்தில் தடையாணை பெற்றிருந்த காலத்திலும் தொடர்ந்து கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகளுக்குக் கரும்பு வழங்கும் உற்பத்தியாளர்களுக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை வழங்கி வந்தது என்பது கோப்பிலிருந்து தெரிய வருகிறது.

மாநில அரசின் பரிந்துரை விலையைக் கொடுப்பதை எதிர்த்துத் தனியார் சர்க்கரை ஆலைகள் 30-1-2000 அன்று உயர் நீதிமன்றத்தின் டிவிஷன் பெஞ்சுக்கு மேல்முறையீடு செய்தன. ஏற்கெனவே இந்த வழக்கு தனியார் சர்க்கரை ஆலைகளால் உச்ச நீதிமன்றத்திற்கு எடுத்துச் செல்லப்பட்டது.



19-11-2001 அன்று அமைச்சரவையில் எடுத்த முடிவினைத் தொடர்ந்து, அரசு கடித நிலை எண் 164, வேளாண்மைத் துறை, நாள் 25-6-2002 என்ற கோப்பில் பின்வருமாறு விவரங்கள் உள்ளன:

"19-11-2001 அன்று நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டு, மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டியதில்லை என்று முடிவு எடுக்கப்பட்டது. மேலும், கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள் முதற்கண் மத்திய அரசு நிர்ணயம் செய்யும் சட்டபூர்வக் குறைந்தபட்ச விலையை வழங்க வேண்டுமென்றும், அவ்வரைவைப் பருவத்தின் பின்பகுதியில் கிடைக்கும் சர்க்கரைக் கட்டுமானம் மற்றும் வெளிச்சந்தை விலை ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பீட்டு இலாபத் தொகைக்கு ஏற்ப கரும்புக் கட்டுப்பாடு ஆணை பிரிவு 5(ஏ)-ன்கீழ் சர்க்கரை ஆலைகள் வழங்க வேண்டிய தொகையை முன்பணமாக வழங்கலாம். தமிழ்நாட்டிலுள்ள சர்க்கரை ஆலைகள், மகாராஷ்டிரா மற்றும் வடக்கு கர்நாடகா பகுதிகளிலுள்ள கூட்டுறவுச் சர்க்கரை ஆலைகளில் நடைமுறையில் இருந்து வரும் வழக்கத்தைக் கடைப்பிடிக்க வேண்டும். எனவே, ஆலைவாரியான உண்மையான மிகைத் தொகையைக் கணக்கிட்டு, அதன் அடிப்படையில் ஒவ்வொரு சர்க்கரை ஆலையும் கூடுதல் விலை வழங்குவதை முடிவு செய்வது குறித்து சர்க்கரைத் துறை ஆணையரைக் கேட்டுக்கொள்ளலாம். தற்போது உத்தேசிக்கப்பட்டுள்ள உயர்மட்டக் குழு தேவையில்லை. சர்க்கரைத் துறை ஆணையர் மகாராஷ்டிராவில் உள்ள வழக்கத்தை ஆய்வு செய்து, இம்மாநிலத்தில் கூட்டுறவுத் துறை சர்க்கரை ஆலைகள் பின்பற்ற வேண்டிய வழிமுறைகளை உருவாக்கினால் போதுமானதாகும்."

தலைமைச் செயலாளர் கையெழுத்திட்டு அனுப்பிய இந்தக் கோப்பில் அப்போதைய வேளாண்மைத் துறை அமைச்சர் திரு. ஜீவானந்தம், தொழில் துறை அமைச்சர் திரு. எஸ்.எம். வேலுசாமி, நிதித் துறை அமைச்சர் திரு. சி. பொன்னையன், அன்றைய முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா ஆகியோர் கையொப்பமிட்டு, ஒப்புதல் அளித்துள்ளார்கள்.

இந்தக் கோப்பில் இவ்வாறு ஒப்புதல் பெறப்பட்ட பின்னர், 'அரசு இப்பொருள் குறித்து நன்கு ஆய்வு செய்தபின், மாநில அரசு பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டியதில்லை என்று முடிவு செய்துள்ளது' என வேளாண்மைத் துறை, சர்க்கரைத் துறை ஆணையருக்கு 25-6-2002 அன்று கடிதம் அனுப்பியுள்ளது. இந்தக் கடிதம் அந்தக் கோப்பில் 55 மற்றும் 56 ஆம் பக்கங்களில் உள்ளது.

கோப்பைப் பரிசீலனை செய்ததிலிருந்து, 2001-2002, 2002-2003, 2003-2004 மற்றும் 2004-2005 ஆம் ஆண்டு வரை அ.தி.மு.க. ஆட்சியில் கூட்டுறவு மற்றும் பொதுத் துறை சர்க்கரை ஆலைகள் வழங்கிட வேண்டிய மாநில அரசின் பரிந்துரை விலை அறிவிக்கப்படவும் இல்லை, வழங்கப்படவும் இல்லையென்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

இது குறித்து எதிர்க்கட்சி உறுப்பினர்கள் என்னுடைய அறைக்கு வந்து சம்பந்தப்பட்ட ஆவணங்களைப் பார்வையிடலாம் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of Order. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். *(குறுக்கீடு)* என்ன? நீங்கள் ஆவணங்களை வந்து பாருங்கள். *(குறுக்கீடுகள்)* மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of Order...

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பேரவைத் தலைவர் அவர்கள் ஒரு தீர்ப்பு அளித்தால், அதில் கேள்வி கேட்கக் கூடாது என்பது அவையினுடைய விதிமுறை. அந்த விதிமுறையை இந்த அவையிலே பல ஆண்டு காலமாகப் பின்பற்றி வருகிறோம். எனவே, இந்தப் பிரச்சினை பற்றி எழுப்புவது முறையல்ல.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** Point of order. . .

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** தலைவர் அவர்களே...

*(அ.இ.அ.தி.மு.க. உறுப்பினர்கள் அனைவரும் எழுந்து நின்றனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** Not Permitted, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* பேரவைக்கு ஓர் அறிவிப்பு. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள். நீங்கள் வந்து அறையில் ஆவணங்களைப் பார்க்க வேண்டுமென்றால் பாருங்கள். யாரும் பேச வேண்டுமென்றால் எழுந்து நின்று பேசுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* என்ன சொல்கிறீர்கள் என்பதைச் சொல்லுங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* நீங்கள் வந்து ஆவணங்களைப் பார்க்க வேண்டுமென்றால் பாருங்கள். *(குறுக்கீடுகள்)*



*(கூச்சல்—குழப்பம்)* உட்காருகிறீர்களா, இல்லையா? *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* எல்லோரும் அமைதியாக உட்காருங்கள். என்னுடைய தீர்ப்புரைக்குமேல் யாரும் பேச முடியாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* கிடையாது. அனுமதியில்லை, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* இது சம்பந்தமாகப் பேச முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* இது சம்பந்தமாகப் பேசுவதற்கு அனுமதியில்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* இல்லை. *(குறுக்கீடுகள்) (கூச்சல்—குழப்பம்)* அனுமதி இல்லை.

*முற்பகல் 10—55*

அனுமதி இல்லை சார், உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* முடியாது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* குழுக்களின் அறிக்கைகள் அளித்தல், பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)* என்னுடைய தீர்ப்புக்குமேலே பேசுவதற்கு உங்களுக்கு உரிமை கிடையாது. உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்னுடைய அறிவிப்பைச் சொல்லியாகிவிட்டது, உட்காருங்கள். *(குறுக்கீடுகள்)* என்னுடைய அறிவிப்பைச் சொல்லியாகிவிட்டது. *(குறுக்கீடுகள்)* உட்காருங்கள், முடியாது. *(குறுக்கீடுகள்)* திரு. ஞானசேகரன். *(குறுக்கீடுகள்)*

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. . . *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பார்த்துக்கொள்ளுங்கள், என் அறைக்கு வந்து. *(குறுக்கீடுகள்)* போங்கள், கூச்சல் போட வேண்டாம். *(குறுக்கீடுகள்)* போங்கள். *(குறுக்கீடுகள்)* இருக்கையிலே இருக்கிறீர்களா, வெளியே போகிறீர்களா? *(குறுக்கீடுகள்)* இருக்கையிலே இருக்கிறீர்களா, வெளியே போகிறீர்களா? *(குறுக்கீடுகள்)* திரு. கருப்பசாமி. *(குறுக்கீடுகள்)* திரு. ஞானசேகரன்.

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் கோஷமிட்டுக்கொண்டே அவையிலிருந்து வெளியேறினர்.)*

*(மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவையிலிருந்து வெளியேறினர்.)*

## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (இ) கவன ஈர்ப்புகள்—துறைகள் விரைந்து பதில் அனுப்ப வலியுறுத்தல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை விதி 55(3)-ன்கீழ் மாண்புமிகு உறுப்பினர்களால் கொடுக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு அறிவிப்புகள் அனுமதி பெற்ற நாளிலிருந்து 7 நாட்களுக்குள் அவையில் எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும். அவ்வாறு அனுமதிக்கப்பட்ட முன்னறிவிப்புக்களுக்கான விவர அறிக்கைகள் பெரும்பாலான துறைகளிலிருந்து உரிய காலத்தில் அனுப்பி வைக்கப்பெறுவதில்லை என்று என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டுள்ளது. எனவே, அனுமதிக்கப்பட்டுள்ள கவன ஈர்ப்பு முன்னறிவிப்புகளுக்கான விவர அறிக்கைகளைப் பேரவைச் செயலகத்திற்கு உடனடியாக அனுப்பி வைக்கத் துறைச் செயலாளர்களுக்கு அறிவுறுத்துமாறு அனைத்துத் துறை அமைச்சர்களையும் கேட்டுக்கொள்கிறேன்.

## 5. அறிக்கைகள் அளித்தல்

### பொதுக் கணக்குக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுவின் அறிக்கைகள் அளித்தல். பொதுக் கணக்குக் குழுவின் அறிக்கைகள் அளித்தல், திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006–2007 ஆம் ஆண்டுக்கான பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது முதல் முப்பத்தைந்தாவது வரையிலான மூன்று அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.



## 6. மானியக் கோரிக்கைகள் 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

### (அ) கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

### (ஆ) கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை)

---

### (அ) கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை), மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ. 303,61,37,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 31, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 162, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 301, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1163, திரு. மா. ராஜசேகரன்.

**திரு. மா. ராஜசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1329, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11164, திரு. து. அமரமூர்த்தி.



**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1091, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

*(அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் அவைக்குள் வந்தனர்.)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2309, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2835, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2946, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/–மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3977, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4953, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1819, திரு. சி. கோவிந்தசாமி.



**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2429, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

முற்பகல் 11–00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2006, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2575, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2281, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2240, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரை நீதிமன்றத்தில் வழக்கறிஞர்களுக்கு ஓய்வு அறை ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2627, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிணத்துக்கடவில் உள்ள பத்திரப் பதிவுத் துறை ஆவணப் பதிப்பகத்தின் பழைய கட்டடத்திற்குப் பதிலாக புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற



ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1755, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர் தொகுதியில் உள்ள அரசு மாணவ, மாணவியர் விடுதிகளுக்குப் புதியதாகக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1770, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அலுவலகத்தைப் பராமரிக்கப் பொதுப் பணித் துறைமூலம் வருடந்தோறும் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1790, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3111, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் அரசுப் பள்ளிக் கட்டடம் பழுதுபார்க்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2445, திரு. ஆர். வைத்திலிங்கம், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3167, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை அரசினர் இராசாசி மருத்துவமனை விரிவாக்கத்திற்காக அண்ணா பேருந்து நிலையம் இருந்த இடத்தில் கட்டடம் கட்டும் பணியை விரைவுபடுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4244, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டுத் தொகுதியிலுள்ள திருக்கழுக்குன்றம் மகளிர் மேல்நிலைப் பள்ளி, சூராடிமங்கலம் மேல்நிலைப் பள்ளி, அஞ்சூர் மேல்நிலைப் பள்ளி, திருக்கழுக்குன்றம் ஆண்கள் மேல்நிலைப் பள்ளி, செங்கல்பட்டு பெண்கள் மேல்நிலைப் பள்ளி, அறிஞர் அண்ணா உயர்நிலைப் பள்ளி ஆகிய பள்ளிகளுக்குக் கூடுதல் வகுப்பறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4563, திருமதி மு. சந்திரா.



**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் ஜமீன் செல்லல்கொண்டான் அரசு ஆரம்ப மருத்துவமனைக்கு சித்தா மருத்துவப் பிரிவுக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4718, திரு. செ.ம. வேலுசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1474, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரமக்குடி தொகுதி, போகலூர் ஒன்றியத்திலுள்ள மென்னந்தி கிராமத்தில் உள்ள கால்வாயில் புதிய பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3200, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவேரிப்பட்டினம் தொகுதியில் உள்ள அனைத்துப் பள்ளிகளின் பழைய கூரைகளை அகற்றி, புதிய மேல் ஓடு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1526, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல், நரசிங்கபுரம் ஆரம்பப் பள்ளி, பெண்கள் மேல்நிலைப் பள்ளி மற்றும் அரசு மருத்துவமனை ஆகியவற்றின் கட்டடங்களைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1619, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தேனித் தொகுதியில் உள்ள அரசு தொழிற்பயிற்சிப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1426, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டித் தொகுதி, திருத்துறைப்பூண்டி நகரத்தில் உள்ள நெடுஞ்சாலைத் துறைக்குச் சொந்தமான பழைய கட்டடத்தை மாற்றிப் புதிய கட்டடம் கட்ட நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1689, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டித் தொகுதி, கும்மிடிப்பூண்டி வட்டம், மங்களம் ஊராட்சியில், ஆரணி ஆற்றின் குறுக்கே ஆரணியை இணைக்கும் பாலம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3176, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குளச்சல் சட்டமன்றத் தொகுதியிலுள்ள புதூர் மண்டைக்காடு மீனவர் கிராமத்தில் தூண்டில் வளைவு அமைக்க நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3195, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரித் தொகுதியில், பொன்னேரி வட்டம், வேம்பாக்கம் ஊராட்சியில் வாடகைக் கட்டடத்தில் இயங்கி வரும் வேளாண்மை அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3299, திரு. வே. செந்தில் பாலாஜி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1640, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரித் தொகுதி, மணப்பாறை ஒன்றியம், பண்ணங்கொம்பு அரசு உயர்நிலைப் பள்ளிக்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1229, திரு. இ. மகேந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 904, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காங்கேயம் அரசு மேல்நிலைப் பள்ளி மற்றும் படியூர் அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்தும், பழைய பாழடைந்த கட்டடத்தைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 775, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் நபார்டு திட்டத்தின்மூலம் கட்டப்படும் அனைத்து



உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளின் கட்டடங்களுடன் சுற்றுச் சுவர் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 830, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறுத் தொகுதி, திருவட்டாறு ஆய்வு மாளிகையைப் பராமரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 693, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர்த் தொகுதி, மடவாளம் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளிக்குப் போதிய கட்டட வசதியில்லை; கூடுதல் கட்டடங்கள் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 854, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஸ்ரீவில்லிபுத்தூர்த் தொகுதி, வத்திராயிருப்பு சார் பதிவாளர்

அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 604, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரநயினார்கோவில் தொகுதியில் பழைய கட்டடத்தில் இயங்கி வருகிற வட்டாட்சியர் அலுவலகத்தை மாற்றி, நவீன புதிய கட்டடம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 582, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறைமூலமாகக் கட்டப்படும் கட்டடங்களுக்கான பொருட்கள் வாங்கும்போது அதற்கான முகவர்களாக ஆதி திராவிடர்களைக் குறிப்பிட்ட அளவு நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 417, திரு. ஞா ஜாண் ஜோசப்.



**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடுத் தொகுதி, முளமூட்டுக்கடவில் தாமிரபரணி ஆற்றுக்குக் குறுக்கே பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 304, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர்த் தொகுதியில் உள்ள விருந்தினர் மாளிகை சரிவரப் பராமரிக்கப்படாமலும், உபயோகப்படுத்த ஏற்ற நிலையிலும் இல்லை. எனவே புதிய விருந்தினர் மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 371, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் கூடுதலாக மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் சுற்றுலா மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 223, திரு. டி. ஜெயக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5554, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆலங்குடியில் அரசினர் தங்கும் விடுதி ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5551, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர்த் தொகுதியில் முகையூர், கொடுங்கால், ஆற்காடு, சென்னகுணம், ஆயந்தூர், காரணை, மாரங்கியூர், விளந்தை சொறையப்பட்டு, காங்கியனூர் ஆகிய இடங்களிலுள்ள H.S.C. கட்டடங்கள் முழுவதும் பாதிக்கப்பட்டுள்ளன; அனைத்தும் புதுப்பிக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4460, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டித் தொகுதியில் உள்ள கடலையூர், ஈராச்சி கீழ ஈரால், வில்லிசேரி ஆகிய கிராமங்களில் உள்ள ஆரம்ப சுகாதார மையங்களில் அதிக வசதியுடன்கூடிய கட்டடங்கள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5520, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுராந்தகத்திலுள்ள பள்ளிக் கட்டடங்களைப் பழுதுபார்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4521, திரு. நா. இராமகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4529, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அவினாசித் தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறைக் கட்டுப்பாட்டில் உள்ள அன்னூர் பயணியர் விடுதிக் கட்டடங்களைப் பராமரிப்புச் செய்து, விஸ்தரித்து, நவீனப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5003, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறைத் தொகுதியில் திருச்சிற்றம்பலம், கடலூர் மாவட்டம் மா. ஆதனூர் இடையே ஆற்றின் குறுக்கே ரெகுலேட்டருடன்கூடிய

பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4827, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரித் தொகுதி, பரங்கிப்பேட்டை ஒன்றியத்தில் அமைந்துள்ள வெள்ளாற்றில் கடல் நீர் கலப்பதால் குடிநீர் முழுவதும் உவர் நீராக மாறி வருகிறது; அதனைத் தடுக்கும்பொருட்டு, வெள்ளாற்றின் குறுக்கே ஒரு தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4766, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர்த் தொகுதி, உளுந்தூர்பேட்டை—திருவெண்ணெய்நல்லூர் நெடுஞ்சாலையில் 30 கிராமங்கள் பயனடையும் வகையில் பிள்ளையார் குப்பத்தில் கெடிலம் ஆற்றின் குறுக்கே மேம்பாலம் கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4045, திருமதி ராணி வெங்கடேசன்.



**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கருங்குளம் கொங்கராயகுறிச்சி செல்லத் தாமிரபரணி ஆற்றில் புதிய பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4103, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மன்னார்குடியில் பயன்படுத்த இயலாத பழமையான விருந்தினர் இல்லத்திற்குப் பதில், புதிதாக ஒரு விருந்தினர் மாளிகை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4042, திரு. செ. பொன்னுதுரை. இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4044, திரு. ஆர்.கே. பாரதி மோகன். இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4085, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருப்போரூர்த் தொகுதி, திருப்போரூர் பேரூராட்சியில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையக் கட்டடங்கள் மிகவும் பழுதடைந்தும் பற்றாக்குறையாகவும் உள்ளன. எனவே, கூடுதல் கட்டடம், ஆய்வகம் மற்றும் படுக்கையறையுடன்கூடிய கட்டடம் கட்டித் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4023, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நன்னிலம் தொகுதியில் திருக்கண்டீஸ்வரத்தில் வடிகால் மதகு அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3882, திரு. போ. சின்னப்பன்.

**திரு. போ. சின்னப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "விளாத்திகுளம் தொகுதி, விளாத்திகுளம், புதூர், சிவஞானபுரம் அரசு மேல்நிலைப் பள்ளிகளுக்குக் கூடுதல் கட்டடங்கள் கட்டித் தரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2995, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காவிரியின் உபரி நீரைத் திருமணிமுத்தாற்றில் விட ஆவன செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2939, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, சட்டமன்ற அலுவலகத்தில் பார்வையாளர்கள் வாகனம் நிறுத்துவதற்குப் புதிய கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2789, திரு. பெ. மோகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2693, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் தொகுதி, தாரமங்கலத்தில் பயணியர் மாளிகை அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2699, திரு. பெ.சு. விஜயகுமார்.

**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர்த் தொகுதி, போளூர், அல்லிநகர், வெல்லூர், ஏரிகுப்பம் திரிசூர் ஏரிகளைத் தூர் வாரி

ஆழப்படுத்திச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3642, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், அரூர் அரசு ஆண்கள் மேல்நிலைப் பள்ளிக்கு ரூபாய் ஒரு கோடி மதிப்பில் புதிய பள்ளிக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3721, திரு. எல். ரவிச்சந்திரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3422, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகுடஞ்சாவடியில் விருந்தினர் விடுதி கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3590, திரு. ந. சுப்ரமணியன்.



**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர்த் தொகுதி, அன்னவாசல் ஊராட்சி, மலைக்குடிப்பட்டி அரசு உயர்நிலைப் பள்ளிக்குக் கூடுதல் வகுப்பறைக் கட்டடம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3332, திரு. தா. மலரவன்.

**திரு. தா. மலரவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோனலவின்செண்ட் ரோட்டில் உள்ள வீட்டு வசதி வாரியக் குடியிருப்பில் ஆயாங்குளம் தண்ணீர் உள்ளே புகுந்துவிடாமல் இருக்கத் தடுப்புச் சுவர் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3359, திரு. எஸ். ஜான் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜான் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிள்ளியூர்த் தொகுதி, சிராயன்குழியில் உள்ள துணை சுகாதார நிலையம் மிகவும் பாழடைந்துள்ளது; அதனைச் சீரமைத்து அல்லது புதிய கட்டடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1907, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சமீபத்தில் ஏற்பட்ட பெருமழை, வெள்ளத்தால் சிதம்பரம் தொகுதி பெரிதும் பாதிக்கப்பட்டது. அதிலும், வெள்ளாற்றங்கரையில் ஆனந்தக்கரையில் இருந்து கீரப்பாளையம் வரை கரையோரக் குடியிருப்புகள், விளைநிலங்கள் அடித்துச் செல்லப்பட்டன. அந்தப் பகுதிகளில் வெள்ளாற்றில் தடுப்புச் சுவர் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1965, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டித் தொகுதி, பண்ருட்டி ஒன்றியம், மருங்கூர் அரசு மருத்துவமனைக் கட்டடம் மற்றும் மருத்துவர்கள் குடியிருப்புகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.303,61,37,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)., மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 11–05*

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.646,06,41,000/– மற்றும்



மூலதனக் கணக்கில் ரூ.549,17,06,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 41, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 163, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 302, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1160, திரு. மா. ராஜசேகரன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1165, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1083, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்.

**திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3733, திரு. மு.க. பெரியசாமி.

**திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3968, திரு. கே.வீ. ராமநாதன்.



**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1844, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2007, திரு. ஆர். சின்னசாமி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 2530, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4104, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 925, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு அரசு பொதுப் பணித் துறை-நீர்வள ஆதார அமைப்புத் திட்டத்தின்கீழ் பணிபுரியும் தற்காலிக தினக்கூலிப் பணியாளர்கள் நிரந்தரம் குறித்து தமிழகச் சட்டமன்றத்தில் அறிவிக்கப்பட்டு ஆறு மாதங்களுக்கு மேலாகியும், இதுவரை நிரந்தரம் செய்திட அரசு ஆணை வழங்கப்படவில்லை. இது குறித்து அரசாணை உடனே வெளியிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1100, திரு. ஆர். ஞானதாஸ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1231, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், உசிலம்பட்டித் தொகுதியில் உள்ள பொதுப் பணித் துறை நீர்வள ஆதார அமைப்பு, பெரியாறு-வைகை வடிநிலக் கோட்டம், கோட்டம் எண் 7 மூலம் நடைபெறும் உசிலம்பட்டி 58 கிராமக் கால்வாய்த் திட்டத்தை விவசாயிகள் பயன்பெறுவதற்கு ஏற்ப உடன் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1270, திரு. ஆர். சாமி.

**திரு. ஆர். சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேலூர்த் தொகுதி, பெரியாறு பிரதானக் கால்வாய் 10-வது பிரிவு வாய்க்கால் மருதூர் கண்மாயிலிருந்து பிரியும் சுண்ணாம்பூர் கால்வாய், கீரனூர் வரை நிலவும் தண்ணீர்ப் பற்றாக்குறையைப் போக்கிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1348, திரு. அ. தமிழரசு.

**திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓமலூர்த் தொகுதி, மூங்கிலேரி, கோட்டமேட்டுப்பட்டி, இராமலாபுரம், பொட்டியபுரம், தும்பிப்பாடி, தாரமங்கலம் தொகுதி வெளயேளப்பட்டி, வேடப்பட்டி, திணிடமங்களம், செமரப்பட்டி, ஏரிகளின் கரைகளைப் பலப்படுத்தி ஏரியைத் தூர் வார அரசு நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 883, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எல்.பி.பி. வாய்க்கால் மற்றும் அமராவதி ஆற்றுப் பாசனம் ஆகியவை சார்பில் கேரள அரசிற்கு மத்திய நீர்வள ஆணையம் வழங்கக் கோரியுள்ள நீர் பற்றி மேல்முறையீட்டிற்கு முறையாக விண்ணப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 857, திரு. கே.ஏ. செங்கோட்டையன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 812, திரு. தி. இராமசாமி.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீர்ப்பாசனத்திற்கு ஸ்ரீவில்லிபுத்தூர்த் தாலுகா, நெடுங்குளம் கிராமத்தில் புதிய கண்மாய் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 820, திருமதி ரா. லீமா றோஸ்.

**திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டம், திருவட்டாறுத் தொகுதி, சுருள்கோடு ஊராட்சி, பரளியாற்றில் தடுப்பணை கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 745, திருமதி ஜி. லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குடியாத்தம் தொகுதியில் உள்ள நெல்லூர்பேட்டை, உறிபாக்கம் ஏரி போன்ற ஏரிகளைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 602, திரு. சொ. கருப்பசாமி.

**திரு. சொ. கருப்பசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சங்கரநயினார்கோவில் தொகுதியில் பொதுப் பணித் துறையைச் சேர்ந்த 47 கண்மாய்களையும் தூர் வாரி, ஷட்டர்களைப் புதுப்பித்து, வரத்துக் கால்வாய்களையும் தூர் வாரிச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 674, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர்த் தொகுதியில் பொதுப் பணித் துறையில் தினக்கூலித் தொழிலாளர்களாக உள்ளவர்களைப் பணி நிரந்தரம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 581, திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வீராணத்திலிருந்து சென்னைக்குக் கொண்டு வரப்படும் தண்ணீருக்காக, லிட்டருக்கு ஒரு பைசா என்ற அளவில் ராயல்டி

வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 419, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "குமரி மாவட்டம், விளவங்கோடு தொகுதியில் சுமார் 400 குளங்கள் உள்ளன. ஆண்டுதோறும் பருவ காலங்களில் கடலில் சென்று வீணாகும் நீரைத் தேக்கி வைப்பதற்கு வசதியாக இக்குளங்களைத் தூர் வாரக் கூடுதல் நிதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 369, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பாலாற்றின் குறுக்கே வாணியம்பாடி, ஆம்பூர், வெட்டுவாணம், விரிஞ்சிபுரம், வேலூர், கருகம்புத்தூர், வசூர், வெங்கட்டவரம் பகுதிகளில் தடுப்பணைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 348, திரு. பெ.சு. விஜயகுமார்.



**திரு. பெ.சு. விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், போளூர் பேரூராட்சியில் உள்ள போளூர் ஏரியைத் தூர் வாரிச் சீரமைத்து ஆழப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 305, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சோளிங்கர்த் தொகுதியிலுள்ள காவேரிப்பாக்கம் ஏரி ஏறத்தாழ 30 ஆண்டுகளாகத் தூர் வாரப்படாமல் ஏரி மண் பத்தடிக்கு மேல் தூர்ந்துவிட்டது. அதனால் காவேரிப்பாக்கம் ஏரியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5396, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "1971 ஆம் ஆண்டிற்குப் பிறகு தூர் வாராமல் இருக்கும் மதுராந்தகம் ஏரியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8669, திரு. இரா. குமரகுரு.

**திரு. இரா. குமரகுரு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருநாவலூர்த் தொகுதி, திருவெண்ணெய்நல்லூர் ஒன்றியத்திலுள்ள மலட்டாற்றில் 20 கி.மீ.க்குத் தூர் வாரும் பணி மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5559, திரு. எஸ். இராசசேகரன்.

**திரு. எஸ். இராசசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்சி நகரத்தில் உபரியாகக் கிடைக்கும் தண்ணீரைப் புதுக்கோட்டைக்குத் திருப்பிவிடும் திட்டத்தில், வெள்ளாறு, பாலாறு, பாம்பாறு ஆகியவற்றுடன் இணைக்கப்படும் என்ற அறிவிப்பு வந்திருப்பதைக் கவனத்தில்கொண்டு, மேலும் ஆலங்குடித் தொகுதிக்குட்பட்ட வில்லுணி ஆறு, அம்புலி ஆறு ஆகியவற்றையும் இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4706, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பல்லடம் தொகுதி, சர்மளாபுரம், மாதிப்பூர், செம்மாண்டம்பாளையம், இருகூர், நொய்யல் ஆறு அணைகளைப் புதுப்பிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2252, திரு. செ. சின்னச்சாமி.

**திரு. செ. சின்னச்சாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மருங்காபுரித் தொகுதி, வையம்பட்டி ஒன்றியம், பொன்னியாறு dam தூர் வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2286, திரு. சு. குணசேகரன்.

**திரு. சு. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆறு மற்றும் நீர்நிலைகளில் மணல் மற்றும் வண்டல் மண் அள்ளும் கொள்கை வகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1939, திரு. தி. வேல்முருகன்.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கடலூர் மாவட்டம், பண்ருட்டித் தொகுதியில் உள்ள வீரப்பெருமாநல்லூர் கிராமத்தில் உள்ள ஏரியைத் தூர் வாரி ஆழப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2068, திரு. செ. பொன்னுதுரை.

**திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஈரோடு மாவட்டம், பெருந்துறைத் தொகுதியில் உள்ள குளம், குட்டைகளுக்கு நீர் நிரப்பக் கோரும் அவினாசி–அத்திக்கடவுத் திட்டத்தைச் செயல்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2227, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மானாமதுரைத் தொகுதி, கீழப்பசலைக் கால்வாய்க்கருகில் வைகை ஆற்றில் ஒரு தடுப்புச் சுவர் (Bed Tank) கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2307, திரு. கே.எல். இளவழகன்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருவண்ணாமலை மாவட்டம், காஞ்சிபுரம் மாவட்டம் ஆகியவற்றில் வாழ்கின்ற மக்களுக்குக் குடிநீருக்கும், விவசாயத்திற்கும் ஆதாரமாக இருக்கும் பாலாற்றில் ஆந்திர அரசு குப்பம் பகுதியில் அணை கட்டும் முயற்சியைத் தடுத்திட



வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3982, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி :** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர்த் தொகுதிக்குட்பட்ட மாவத்தம்பதி ஊராட்சியில், சின்னம்பதி, புதுப்பதி கிராமங்களில் விவசாயம் அதிகமாக இருப்பதால், தடுப்பணை ஒன்று கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3981, திரு. வை. காவேரி.

**திரு. வை. காவேரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "எடப்பாடி நகரம், சரபங்கா நதியைச் சீரமைத்து இரு சுவர்களையும் கான்கிரீட் தளமாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2438, திரு. இரா. விசுவநாதன்.

**திரு. இரா. விசுவநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டம், செந்துறை கிராமத்தில்

பஞ்சித்தாங்கி அணை கட்டுவதற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, இன்னும் நிதி ஒதுக்கப்படாமல் உள்ளது; நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4843, திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புவனகிரித் தொகுதிக்குட்பட்ட சேத்தியாத்தோப்பு அணைக்கட்டு, அரியகோஷ்டி வாய்க்காலின் கிளை வாய்க்காலான அஞ்சலை அம்மாள் வாய்க்காலின் ஒரு பகுதி இடிந்து விழுந்துவிட்டதன் காரணமாக வாய்க்காலை மாற்றுத் திசையில் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1613, திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரியாறு—வைகைக் கோட்டம் P.T. ராஜன் கால்வாய் மற்றும் தந்தை பெரியார் வாய்க்கால் தரம் மேம்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1766, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்தணித் தொகுதியில் திருத்தணி ஒன்றியம், திருவாலங்காடு ஒன்றியம், கடம்பத்தூர் ஒன்றியம் ஆகியவற்றில் இருக்கின்ற ஏரிகளை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தி, பாசனத்திற்குப் பயன்படும் வகையில் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1524, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள காமராஜர் நீர்த்தேக்க அணையில் தூர் வாரும் பணியை மேற்கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4039, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமருகல் ஒன்றியம், நரிமணம், தென்படுகை, ஏர்வாடி, ஆலத்தூர், திருப்பயத்தங்குடி ஆகிய பகுதிகளில் வடிகால் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4324, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தருமபுரி மாவட்டம், நல்லம்பள்ளி ஒன்றியம், பாளையம்புதூர் ஊராட்சியில் மாரியம்மன் கோயில் அணைக்கட்டுத் திட்டம் செயல்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4407, திருமதி ஆர். பிரேமா.

**திருமதி ஆர். பிரேமா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொதுப் பணித் துறைக் கட்டுப்பாட்டிலுள்ள குளங்கள், ஏரிகள் தனியார் ஆக்கிரமிப்பில் உள்ளன. அந்த ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3900, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மோகனூர் ராஜ கால்வாய் தூர் வாரப்பட்டு, பாசன வசதியை மேம்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4173, திரு. ஓ.கே. சின்னராஜ்.

**திரு. ஓ.கே. சின்னராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மேட்டுப்பாளையம் தொகுதியிலுள்ள கட்டாஞ்சிமலை பெட்டதம்மன் கோயில் கீழ்ப்புறம் இரண்டு குன்றுகளுக்கு நடுவே தடுப்பணை கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4139, திரு. அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4743, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொன்னேரித் தொகுதியில் பெரும்பான்மையான பாசன ஏரிகள் மராமத்துப் பணி செய்யப்படாமல் உள்ளன. ஏரி மராமத்துப் பணி மற்றும் பாசனக் கால்வாய் மராமத்துப் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4388, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "காஞ்சிபுரம் தொகுதியில் உள்ள ஆர்ப்பாக்கம் ஏரி ஆழப்படுத்தப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற

ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4815, திரு. மா. சந்திரகாசி.

**திரு. மா. சந்திரகாசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பெரம்பலூர் மாவட்டம், குன்னம் வட்டம், எழுமூர் ஏரியிலிருந்து பெருமத்தூர் ஏரிக்குச் செல்லும் உபரி நீர் ஆற்றில் கலப்பதைத் தவிர்த்து, தூர் வாரி, ஏரியை ஆழப்படுத்தி, பெருமத்தூர் மக்கள் பயனடையச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1694, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கும்மிடிப்பூண்டித் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளிலும் தூர் வாரி, மதகுகள் செப்பனிடப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2629, திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பரம்பிக்குளம்-ஆழியாறுத் திட்டத்தில் உள்ள பாசனக் கால்வாய்களின் தண்ணீர் சேதாரத்தைத் தடுப்பதற்கு சிமென்ட் தளம் உடனடியாக அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4565, திருமதி மு. சந்திரா.

**திருமதி மு. சந்திரா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராசபாளையம் தொகுதியில் அய்யனார் கோயில் ரோடு, மருங்கூர் விவசாய நிலங்களுக்குச் செல்லும் வழியில் புதிதாகப் பாலம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4523, திரு. நா. இராமகிருஷ்ணன்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கம்பம் தொகுதி, உத்தமபாளையம் அருகே முல்லைப் பெரியாற்றில் தடுப்புச் சுவர் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

*(முற்பகல் 11-10)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5001, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மயிலாடுதுறைத் தொகுதியில் கோடங்குடியிலிருந்து குளச்சார் வரையிலும் மற்றும் குளச்சார் மதகிலிருந்து வாசி மதகு வரையிலும

தூர் வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும், அய்யனாறு பாப்பான் ஓடை பாசன வாய்க்காலில் தூர் வாரப்பட வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4929, திரு. கோ. எதிரொலி மணியன்.

**திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர்த் தொகுதிக்குட்பட்ட ஓதலவாடியில் உள்ள செய்யாற்று மணல் குவாரியில், அளவுக்கும் அதிகமாக மணலை அள்ளுவதோடு நீர் ஆதாரம் பாதிக்கும் அளவிற்கு மணல் அள்ளுவதைத் தடுப்பதோடு, அரசுக்கு உரிய வருவாய் கிடைக்காமல், இடையில் சிலர் கொள்ளையடிப்பதைத் தடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2455, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடுத் தொகுதியில் உள்ள அனைத்து ஏரிகளையும் தூர் வாரிச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2428, திரு. வே. மாரிமுத்து.

**திரு. வே. மாரிமுத்து:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நாகை மாவட்டம் முழுவதும் பாசன வாய்க்கால்களைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2641, திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்.

**திரு. பொள்ளாச்சி வி. ஜெயராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவா அவர்களே, "பரம்பிக்குளம்–ஆழியாறுத் திட்டக் கால்வாயில் நீர் சேதாரத்தைத் தடுக்கின்ற வகையில் அனைத்துக் கால்வாய்களிலும் கான்கிரீட் தளம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1489, திரு. இரா. இராம்பிரபு.

**திரு. இரா. இராம்பிரபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "இராமநாதபுரம் மாவட்டத்தில் வைகை நதியில் 7 மதகு அணைகள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1130, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருத்துறைப்பூண்டித் தொகுதி, கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், கோரையாற்றில் பொன்னுக்கு முண்டான் ஆற்றுத் தலைப்பில் விவசாயிகள் நலன் கருதி படுக்கை அணை கட்டித் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1789, டாக்டர் தி. சதன் திருமலைக்குமார், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 1752, திரு. ஆ. அருண்மொழிதேவன்.

**திரு. ஆ. அருண்மொழிதேவன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிதம்பரம் தொகுதி, பாளையங்கோட்டையில் உள்ள சுமார் 750 ஏக்கர் பரப்பளவுகொண்ட பெரிய ஏரியைத் தூர் வாரி, நிலத்தடி நீரைப் பாதுகாக்கின்ற வகையிலும், பாசன வசதிபெறுகின்ற வகையிலும், குடிநீர்த் தட்டுப்பாட்டை நீக்கும் வகையிலும் நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2089, திரு. ஏ.கே. போஸ்.

**திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றம் தொகுதியில் உள்ள நிலையூர்க் கால்வாயைத் தூர் வாரி, அதில் தண்ணீர் செல்ல வழிவகுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2994, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கபிலர்மலைத் தொகுதியில் உள்ள இராஜா வாய்க்காலை ரீமாடலிங் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1750, திரு. ந. கணபதி.

**திரு. ந. கணபதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வானூர்த் தொகுதியில் உள்ள கால்வாய்ப் பாசனப் பகுதியில் உள்ள ஏரிகளைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/–ல் ரூ. 100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1798, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமங்கலம் தொகுதியில் உள்ள நெடுமதுரை, தொட்டியம்பட்டி ஆகிய கிராமங்களுக்கு நிலையூர்ப் பாசனக் கால்வாய்மூலம் பாசன விரிவாக்கம் செய்யப்பட வேண்டியதன் அவசியம் குறித்து விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4456, திரு. ல. ராதாகிருஷ்ணன்.

**திரு. ல. ராதாகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவில்பட்டித் தொகுதியில் உள்ள குளங்களை ஆழப்படுத்தி, கரைகளைப் பலப்படுத்தி, நீர் ஆதாரம் பெருக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4974, திரு. து. செல்வராஜ், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3907, திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சேலம் மாவட்டம், மேட்டூர்த் தொகுதி, கொளத்தூர் ஒன்றியத்திற்குட்பட்ட காவேரிபுரம், கருங்கல்லூர், லக்கம்பட்டி, மூலக்காடு ஊராட்சிகளில் நீரோடைகள் அதிகம் உள்ளதால், கிணறுகளுக்கு ஊற்றுக் கிடைக்கும் வகையில் கசிவு நீர்க் குட்டைகள், தடுப்பணைகள் அமைக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ. 549,17,06,000/-ல் ரூ. 100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4223, திரு. கி. ஆறுமுகம்.



**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "செங்கல்பட்டு, குண்டூர் ஏரியை ஆழப்படுத்தியும், கரைகளைப் பலப்படுத்தியும், நீர் வடியும் கால்வாய்களைச் செப்பனிட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4049, திருமதி ராணி வெங்கடேசன்.

**திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மணிமுத்தாறு நான்காவது நீர்க் குளங்கள், மொத்தம் 179 குளங்கள் தூர்ந்துவிட்டன. அவற்றைத் தூர் வாருவது குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4093, திரு. டி. மூர்த்தி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3862, திரு. சி. துரைராஜ்.

**திரு. சி. துரைராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சேடப்பட்டித் தொகுதி, மன்னப்புரம் பகுதியில் கட்டப்பட்டு வரும் அய்யனார் கோயில் தடுப்பணைப் பணியை விரைந்து முடிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3601, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஏரி ஆற்றுப் பாசனம் தொடர்பாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3379, திரு. வீ.ஏ.டி. கலியவரதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முகையூர்த் தொகுதி ஆற்காடு, ஆயந்தூர், ஆலம்பாடி, வீரபாண்டி, வீரசோழபுரம், வடகரைதாழனூர், கோட்டமருதூர், விளந்தை கொழிந்திராம்பட்டு, சித்தப்பட்டினம், அத்தியூர்திருக்கை, பனமலை, நல்லாபாளையம், அன்னியூர் ஆகிய ஏரிகளைத் தூர் வாரி பாசன வசதியை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3300, திரு. வே. செந்தில் பாலாஜி.

**திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கரூர் சட்டமன்றத் தொகுதியில் உள்ள கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்ற வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2749, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர்த் தொகுதி, குளத்தூர் பெரியகுளம் கலிங்கி வாரியைத் தூர் வாருதல், புலியூர் ஊராட்சி, வீரப்பட்டி பரப்பியாமடை மராமத்து, செட்டிபட்டி ஊராட்சி, காயாம்பட்டி கலரான் புதுக்குளம், உறவிக்காடு உரைகுளம் மடை மராமத்து, பனங்கொண்டான்குளம் மராமத்து, மண்டையூர் ஊராட்சி, பாப்பான்குளம் வரத்துவாரி சீர் செய்தல் மற்றும் தூர் வாருதல், கண்ணாங்குடி பெரியகுளம், உமையான்குளம்–குமாரமங்களம் பெரியகுளம், குன்னத்தூர் பெரியகுளம், கதவம்பட்டி நவாக்குளம் ஆகியவற்றைத் தூர் வாருதல் மற்றும் வரத்துவாரி சீர் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3163, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "நீர் வள நில வள மேம்பாட்டுத் திட்டத்தில் வைகை நதியை இணைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2764, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒட்டப்பிடாரம் சட்டமன்றத் தொகுதி, ஒட்டப்பிடாரம் ஒன்றியத்தில் உள்ள ஒட்டப்பிடாரம் கிராமத்தில் [illegible] கண்மாயில்



227564

தூர் வாரி, மடையைக் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3205*, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதி, பாரூர் ஊராட்சி, பாரூர் ஏரியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3186*, திரு. ஆர்.கே. பாரதி மோகன்.

**திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தஞ்சை மாவட்டம், திருவிடைமருதூர்த் தொகுதி, அணைக்கரை கீழராமன் வாய்க்காலைப் பழுது நீக்கம் செய்து, தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3182*, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள பாசனக் கால்வாய்களை ஆண்டுதோறும் தூர் வார ஒதுக்கப்படும் நிதி போதுமானதாக இல்லை



என்பதால், அதிக நிதி ஒதுக்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *2692*, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தாரமங்கலம் ஏரியைத் தூர் வார வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3044*, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, வீரளூர் ஏரியைச் சீரமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய *40* ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*646,06,41,000*/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.*549,17,06,000*/–ல் ரூ.*100*/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் *3351*, திரு. எஸ். ஜாண் ஜேக்கப்.

**திரு. எஸ். ஜாண் ஜேக்கப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கன்னியாகுமரி மாவட்டத்தில் நிலத்தடி நீர்மட்டத்தை அதிகரிப்பதற்குக் குளங்களின் கொள்ளளவை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2942, திரு. பி. தங்கமணி.

**திரு. பி. தங்கமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருச்செங்கோடு சட்டமன்றத் தொகுதி, மேட்டூர் இடதுகரைக் கால்வாயில் காந்தி நகர்ப் பகுதியில் புதிய பாலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.549,17,06,000/–ல் ரூ.100/– குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கட்டடங்கள் மற்றும் பாசனம் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கின்ற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்தில் படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 181 முதல் 278 வரையிலான பக்கங்களில் இணைப்பு–I மற்றும் II ஆக அச்சிடப்பெற்றுள்ளன.



## 3. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) கரும்புக்கு மாநில அரசின் பரிந்துரை விலையை அறிவிக்க வேண்டாம் என்று அ.தி.மு.க. ஆட்சியில் அமைச்சரவை எடுத்த முடிவு குறித்து 3-4-2007 அன்றைய விவாதம்-கோப்புகள் குறித்து பேரவைத் தலைவரின் தீர்ப்பு—தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** ஓர் அறிவிப்பு. இன்று 4–4–2007 பேரவையில் அளிக்கப்பட்ட என்னுடைய தீர்ப்பினைத் தொடர்ந்து மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரையில் ஏற்கெனவே 3–4–2007 அன்று நிறுத்தி வைக்கப்பட்ட நிகழ்வு குறித்த நடவடிக்கைகள்மீண்டும் பேரவை நடவடிக்கைக் குறிப்பில் பதிவு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 39—கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)**
**(ஆ) கோரிக்கை எண் 40—பாசனம் (பொதுப் பணித் துறை)** } தொடர்ச்சி

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகள்மீது விவாதமும் வாக்கெடுப்பும். பேசுவோர் பட்டியலில் 7 பேர் இருக்கிறார்கள். முதலில், மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. பன்னீர்செல்வம். Let it be short and sweet.

***திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுமை, புரட்சி, துணிச்சல், அறிவாற்றல், செயலாற்றல், மன உறுதி, மனித நேயம், இப்படி மனித குலத்தின் பன்முகச் சிறப்புகளை ஓர் உருவாகத் தாங்கி, ஒரு கோடித் தொண்டர்களின் தன்னிகரற்ற தலைவியாக (மேசையைத் தட்டும் ஒலி) எங்களை வழிநடத்திச் செல்கின்ற மாண்புமிகு அம்மா அவர்களின் பொற்பாதம் பணிந்து வணங்குகின்றேன்.

முற்பகல் 11–15

இன்றைக்குப் பொதுப் பணித் துறையினுடைய மானியக் கோரிக்கையில் எனக்குப் பேசுவதற்கு வாய்ப்பு வழங்கிய மாண்புமிகு சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுவாக, பொதுப் பணித் துறையினுடைய செயலாக்கங்களைப் பற்றி நாம் அனைவரும் நன்றாகவே அறிந்திருக்கின்றோம். அதிலும் குறிப்பாக, பாசனம் சார்ந்து அந்தத் துறை வருவதால், அந்தத் துறை எவ்வாறு, எவ்வளவுக்கெவ்வளவு சிறப்பாகச் செயல்படுகின்றதோ, அவ்வளவுக்கவ்வளவு 65 சதவீதம் மக்கள் சார்ந்திருக்கின்ற விவசாயத் தொழிலும், அதனால் பாதுகாக்கப்படுகின்ற நீர், அந்த நீர் இன்றைக்கு எந்த அளவுக்கு மனித குலத்திற்கு இன்றியமையாத பொருளாக இருக்க முடியும் என்பதற்கு நாம் பல்வேறு உதாரணங்களை எடுத்துச் சொல்லலாம்.

எந்தவொரு நாடும் பொருளாதார அடிப்படையில் முன்னேறுவதற்கு அடிப்படைத் தேவையாக விவசாயம், தொழில், இன்னும் பிற பொருளாதார முன்னேற்றத் திட்டங்கள் செயலாக்கப்படுகின்றபோது, நீரின் முக்கியப் பங்கு அந்த முன்னேற்றத்தில் இருக்கின்றது என்பதைக் கவனத்தில் எடுத்துக்கொண்டுதான் அரசு அந்த நீரைப் பாதுகாப்பதற்கு பல்வேறு திட்டங்கள்மூலமாக மற்ற, மற்ற திட்டங்களைக் காட்டிலும் இந்தப் பாசன வசதியைப் பெருக்குகின்ற திட்டங்களுக்கு முன்னுரிமை வழங்குகின்றது என்றவொரு தலையாய கொள்கையை எந்த அரசு வந்தாலும் எடுத்துச் செய்கின்ற கடமை அந்த அரசுகளுக்கு இருக்கின்றது என்பதை நான் இந்த நல்ல நேரத்திலே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதைப்போலவே, மாண்புமிகு அம்மா அவர்கள் பொதுப் பணித் துறைக்கு, அதிலும் குறிப்பாக, பாசன வசதியைப் பெறுகின்ற இந்தத் துறைக்கு மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில் பல்வேறு வகையான திட்டங்கள், அந்தத் திட்டங்கள்மூலமாகத் தமிழ்நாட்டிலே இருக்கின்ற ஏரிகள், பெரிய அணைக்கட்டுகள், வரத்துக் கால்வாய்கள் போன்ற நீர் ஆதாரங்களை முறையாக, செம்மையாக, அந்த விவசாயப் பெருமக்களுக்குக் கொண்டு செல்கின்ற அந்தக் கட்டமைப்புகளை எந்த அளவில் உறுதியாக மேம்படுத்துகின்றோமோ, அந்த அளவில் நீரைச் சிக்கனமாகவும், விவசாயிகளுக்குப் பயனுள்ளதாகவும் ஆக்க முடியும் என்பதை மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஐந்தாண்டு கால ஆட்சியில் நிரூபித்துக் காட்டியிருக்கிறார்கள்.



தமிழகத்தில் 62 பெரிய நீர்த்தேக்கங்களும், 8 சிறிய நீர்த்தேக்கங்களும், குடிநீர்த் தேவைக்காக நீர்த்தேக்கங்கள் ஐந்தும், 39,202 ஏரிகள் மற்றும் ஊரணிகளும், 2,295 பாசன முதன்மைக் கால்வாய்களும், நிலத்தடி நீரைப் பெறுவதற்காக 20,26,276 பாசனக் கிணறுகளும் இன்றைக்கு இருப்பதாக நம்முடைய புள்ளிவிவரங்கள் கூறுகின்றன. 1950 ஆம் ஆண்டுகளில் 21.11 இலட்சம் எக்டேராக இருந்த பாசனப் பரப்பளவு இன்றைக்கு 29.20 இலட்சம் எக்டேராக உயர்ந்திருக்கிறது. அந்த 29.20 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பளவிற்கு அவை பெறுகின்ற நீரைத் தருகின்ற பொறுப்பும், கடமையும், யார் ஆட்சிக்கு வந்தாலும் தருகின்ற பொறுப்பு அவர்களுக்கு உள்ளது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்த நல்ல எண்ணத்தில்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இம்மாதிரியான நீர் நிலைகளை மேம்படுத்துதல், புனரமைத்தல்போன்ற பணிகளுக்கு அதிமுக்கியத்துவம் கொடுத்தார்கள் என்பதற்கு நான் பல உதாரணங்களைக் கோடிட்டுக் காட்ட முடியும். மாண்புமிகு அம்மா அவர்கள் 1991–1996 ஆட்சிக் காலத்தில், 1995 ஆம் ஆண்டு உலக வங்கியினுடைய நிதியாக 840 கோடி ரூபாய் என்ற அளவில் நிதியைப் பெற்று, ஏற்கெனவே செயலாகத்திலிருந்த அணைக்கட்டுகள், ஏரிகள், குளங்கள், வரத்து வாய்க்கால்கள், இப்படி அந்தப் பணிகள் எல்லாம் எடுத்துக்கொள்ளப்பட்டு, அந்தப் பணிகள் முழுமையாக 2004–ல் முடிக்கப்பட்டன.

முற்பகல் 11–20

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

அதற்குப் பின்னாலே மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறையை நீண்ட ஆய்வு செய்து, இருக்கின்ற 63 வடிநிலப் பகுதிகளில் அத்தனை வடிநிலப் பகுதிகளையும் மேம்படுத்த வேண்டும் என்ற நல்ல நோக்கத்தோடு உலக வங்கியினுடைய தொடர் திட்டமாக இன்றைக்கு இருக்கின்ற அரசு அறிவித்திருக்கிறதே, ஒருங்கிணைந்த நீர்ப்பாசன மேலாண்மை, நீர் வள நில வள ஆதார மேலாண்மைத் திட்டம் என்று, அந்தத் திட்டத்தை மாண்புமிகு அம்மா அவர்கள் 3,900 கோடி ரூபாய் என்ற அளவில உலக வங்கிக்கு அனுப்பி, உலக வங்கியும். 'நீங்கள் பரிட்சார்த்தமாக ஏதாவது ஒரு வடிநிலத்தில் ஒருங்கிணைந்த நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டத்தின் அடிப்படையில் உங்களுடைய பணிகளை முன்மாதிரியாகச் செய்து முடியுங்கள்' என்று சொல்லி, மாண்புமிகு அம்மா அவர்களும் தாமிரபரணி வடிநிலத்தில் அனுமான் நதியினுடைய உப வடிநிலத்தில் 62 கோடி ரூபாய் என்ற

அளவிற்குத் திட்டங்கள், அதாவது பல்வேறு துறைகள், வேளாண்மைத் துறை, மீன்வளத் துறை, வருவாய்த் துறை, இப்படி 9 துறைகளை ஒருங்கிணைத்து ஒருங்கிணைந்த நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம் என்ற அந்தத் திட்டத்திற்கு மாண்புமிகு அம்மா அவர்கள் 62 கோடி ரூபாயைத் தந்து, அந்தத் திட்டமும் உலக வங்கி எந்த அளவிற்குத் திருப்திப்பட வேண்டுமோ, அந்த அளவிற்கு அந்தப் பணிகளைச் செய்து முடித்ததற்குப் பின்னால்தான், உலக வங்கியும் அதற்கு இன்றைக்கு ரூ.2,547 கோடியாகக் கொடுத்திருக்கிறது என்று நீங்கள் சொல்லியிருக்கின்ற அந்தத் திட்டம் மாண்புமிகு அம்மா அவர்களுடைய பெருமுயற்சியின் காரணமாகக் கொண்டு வரப்பட்ட திட்டம் என்பதனை நான் இந்த நேரத்திலே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சென்ற ஆண்டும் கொள்கை விளக்கக் குறிப்பினைக் கொடுத்திருந்தார்கள். சென்ற ஆண்டில் நாம் அதிகமாக உள்ளே சென்று விவாதிக்கக்கூடிய ஒரு நிலையை நாம் எடுக்கவில்லை. ஏனென்று சொன்னால், அப்போதுதான் இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டிருந்தது. இவை யாவும் வளர்ச்சித் திட்டப் பணிகளை உள்ளடக்கிய துறை. வந்த ஒரு மாதத்திற்குள்ளாக அவர்களைக் கேட்பதும் நியாயம் அல்ல என்ற நல்ல நோக்கத்தோடு ஒரு வருடம் பொறுத்திருந்தோம். இப்போது ஒரு வருடம், ஒரு நிதி ஆண்டு முழுமையாக முடிந்திருக்கிறது. 2006–2007–ல் கொள்கை விளக்கக் குறிப்பில் என்ன இருந்ததோ, அதையே மீண்டும் மறுபதிப்பாகத்தான் 2007–2008–ல் அவர்கள் அச்சடித்துக் கொடுத்திருக்கின்றார்கள் என்பதை நான் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன். அதற்குச் சில, பல உதாரணங்களாக, பாசனத் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை என்று 38 பணிகளை இங்கே சொல்லியிருக்கின்றார்கள். அவை தொடர் திட்டங்களாக தி.மு.க. அரசினுடைய காலத்திலும் வந்திருக்கும். மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்திலும் கொண்டு வரப்பட்ட இந்தத் திட்டங்கள் தொடர்ந்து வந்திருக்கின்றன. ஆனால், ஒரு வருட காலத்தில் அதனுடைய செயலாக்கம், எந்த அளவிற்குச் சாதனைகள் இருக்கின்றன என்பதை நாம் ஆய்ந்து பார்க்கின்றபொழுது, அதனுடைய செயலாக்கம் மிகவும் குறைவான அளவே இருப்பது நன்றாகவே தெரிகிறது. அதிலும், அவர்கள் 2006–2007 கொள்கை விளக்கக் குறிப்பிலும், 2007–2008 கொள்கை விளக்கக் குறிப்பிலும் தெளிவாகக் குறிப்பிட்டு இருக்கிறார்கள்.



இன்றைக்கு இருக்கின்ற அரசு இந்த 38 பணிகளை வேகப்படுத்தி, துரிதப்படுத்துவதன்மூலமாக எந்த நோக்கத்திற்காக இந்தப் பணிகள் நாட்டு மக்களுக்குக் கொண்டு வரப்பட்டனவோ, ஒன்று அல்லது இரண்டு கருத்துகள் அதில் பதிந்திருக்கின்றன. ஒன்று, அந்தத் திட்டத்தினுடைய பலன் மக்களுக்குக் காலதாமதமாகச் சென்றடைகிறது. இன்னொன்று, அரசினுடைய பணம் செலவழிக்கப்படுகின்றபோது கால நேரத்திற்குள் நாம் செலவழித்தால், நாம் என்ன திட்ட மதிப்பீடு அதற்கு நிர்ணயம் செய்திருக்கின்றோமோ, அதற்குள் அந்தத் திட்டத்தை முடிக்கின்ற ஒரு சூழ்நிலை நமக்கு ஏற்படுகின்றது. ஆனால், காலதாமதமாக எந்தவொரு திட்டத்தினையும் நாம் கொண்டு செல்கின்றபோது, அதனுடைய திட்ட மதிப்பீடு ஒரு மடங்கு, இரு மடங்கு, மூன்று மடங்கு, நான்கு மடங்கு என்று செல்கின்றபோது, அரசினுடைய பணம், மக்களுடைய வரிப் பணம், இவற்றையெல்லாம் அரசுப் பொறுப்பில், அரசாட்சி நடத்திக்கொண்டிருப்பவர்களே வீணாகச் செலவழிக்கின்ற ஒரு சூழ்நிலை ஏற்படுகின்றது. ஆகவே, அந்த 38 பணிகளையும் கால நேரத்தில் முடித்திட வேண்டுமென்று நான் இந்த அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–25

அடுத்ததாக, 36–வது பக்கத்தில், 2005–2006 ஆம் ஆண்டு நபார்டு நிதி உதவியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொண்ட திட்டங்கள் என்று கிட்டத்தட்ட 24 திட்டங்கள், 60 கோடி ரூபாய் செலவில் எடுத்துக்கொள்ளப்பட்டு, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதாகச் சென்ற ஆண்டிலும் சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பணிகள் யாவும் மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட பணிகள் என்பதனை நான் இந்த மன்றத்தில் பதிவு செய்வதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாநில நிதியாதாரத்தில் மட்டுமல்லாமல், எவ்வாறு உலக வங்கியினுடைய நிதியைப் பெற்று மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தத் துறையினுடைய வளர்ச்சிக்கு உறுதுணையாக இருந்தார்களோ, அதேபோலவே, நபார்டு வங்கியிலிருந்து நிதியினைப் பெறுகின்ற ஒரு நல்ல முயற்சியினை எடுத்து, நபார்டு வங்கி முன் எப்போதும் இல்லாத அளவிற்கு ஐந்து ஆண்டு காலத்தில் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் அதிகமான நிதி உதவியைத் தந்தது என்பதனை நான் இந்தச் சபையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதைப்போலவே, கடந்த 2006–2007 ஆம் ஆண்டினுடைய கொள்கை விளக்கக் குறிப்பேட்டில், நபார்டு வங்கியினுடைய உதவியைப் பெற்று, R.I.D.F. XI என்ற தலைப்பின்கீழ் கிட்டத்தட்ட 17 பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன. 71 கோடி ரூபாய் என்று இங்கே செய்தி சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தத் திட்டமும் மாண்புமிகு இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா அவர்கள் காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்றே நான் இங்கு கூறுவதற்குக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போலவே, மேலும், சிறு பாசன ஏரிகளை நவீனப்படுத்தி மேம்படுத்துவதற்காக, பக்கம் 46–ல், 17 மாவட்டங்களிலுள்ள 157 மானாவாரி சிறு பாசனக் குளங்களை மேம்படுத்துவதற்கு 48.43 கோடி ரூபாய்க்குப் பணிகள் எடுத்துக்கொள்ளப்பட்டன என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பணியும் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில்தான் கொண்டு வரப்பட்டது என்பதனை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், நபார்டு வங்கியின்மூலமாக 23 மாவட்டங்களில் 250 மானாவாரி சிறு பாசனக் குளங்களைச் சீரமைப்பதற்கு 68.02 கோடி ரூபாய் நிதி ஒதுக்கி, பணி செயலாக்கத்தில் உள்ளது என்று சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பணியும் மாண்புமிகு அம்மாவினுடைய ஆட்சிக் காலத்தில் கொண்டு வரப்பட்டதுதான் என்பதனை நான் இங்கே பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மேலும், ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி, அதாவது, R.I.D.F. XI–ன்கீழ் 16 மாவட்டங்களில் 96 மானாவாரி சிறு பாசனக் குளங்களைச் சீரமைப்பதற்கு ரூ. 20.59 கோடி அனுமதி அளித்து, பணிகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன என்று கொள்கை விளக்கக் குறிப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. இந்தப் பணியும் மாண்புமிகு அம்மாவினுடைய காலத்தில் கொண்டு வரப்பட்ட பணி என்பதனை நான் இங்கே சொல்லிக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, 2005 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம், நிலை 2–ன்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் 97 ஏரிகளைப் புனரமைக்கும் பணிகளுக்கு 22.56 கோடி ரூபாயை மாண்புமிகு அம்மா அவர்கள் ஒதுக்கித் தந்தார்கள். அதுவும்



இவ்வருடத்திய கொள்கை விளக்கக் குறிப்பிலே இருக்கின்றது. இதுவும் மாண்புமிகு அம்மாவினுடைய காலத்தில் கொண்டு வரப்பட்ட திட்டம் என்றே நான் இங்கே சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சென்ற ஆண்டு, இன்றைக்கு ஆட்சிப் பொறுப்பிலே இருக்கின்ற அரசு, பகுதி–2 திட்டத்தின்கீழ்—மாநில அரசினுடைய நிதியாதாரத்தைக் கொண்டு பகுதி–2 திட்டங்கள் வகுக்கப்படுகின்றன—அந்தத் திட்டத்தின்கீழ் ரூ.36.62 கோடிக்கு 17 திட்டங்கள் சென்ற கொள்கை விளக்கக் குறிப்பிலே குறிக்கப்பட்டிருந்தன. மீண்டும் அதையே 2007–2008 கொள்கை விளக்கக் குறிப்பிலும் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கின்றார்கள். அந்தத் திட்டப் பணிகள் எந்த அளவில் முன்னேற்றத்தில் இருக்கின்றன என்ற விவரங்கள் இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே இல்லை. ஒரு வருடம் ஆகியும் அந்தப் பணி எந்த நிலையில், முன்னேற்றத்தில் இருக்கின்றது என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலுரையில் தந்தால் போதும் என்பதனை நான் அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்குக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11–30

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** 16 நிமிடங்கள் முடிந்துவிட்டன. (குறுக்கீடு) அதையெல்லாம் சொல்ல வேண்டாம். நான் time-ஐப் பார்த்துக்கொண்டு இருக்கிறேன். (குறுக்கீடுகள்) 16 நிமிடங்கள் முடிந்துவிட்டன. சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** சரி. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உங்கள் இஷ்டம். (குறுக்கீடு) அது உங்கள் இஷ்டம்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** இந்த ஆண்டினுடைய 2007–2008, பகுதி–2 திட்டத்தின்கீழ் ரூ.8.49 கோடி ஒதுக்கி இருக்கிறார்கள். சென்ற ஆண்டு பகுதி–2 திட்டத்தின்கீழ் ஒதுக்கப்பட்ட பணிகளும் இன்னும் முடிவடையாமல் இருக்கின்ற நிலையில், தள்ளாடிக்கொண்டிருக்கின்ற நிலையில், இவ்வாண்டு இந்த 8 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டிருக்கினறது. இந்தப் பணிகளையும் சேர்த்து, இந்த நடப்பு நிதியாண்டிற்குள் முடிக்கும்படி நான் இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, நபார்டு வங்கியிலே ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டம் என்று இங்கே பக்கம் 58-லே சொல்லப்பட்டிருக்கிறது. அந்தத் திட்டத்தின்மூலம் கிட்டத்தட்ட 11 திட்டங்கள். அந்த 11 திட்டங்களையும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசுதான் நபார்டு வங்கிக்கு அனுப்பி, ஒப்புதல் வாங்கி வைத்திருந்த நிலையில்தான் நாங்கள் ஆட்சியில் இருந்து கீழே இறங்குகின்ற சூழ்நிலை இருந்தது என்பதை நான் இந்த அவைக்குத் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். அதைப்போல, நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ள திட்டங்களாக 8 திட்டங்கள், 280 கோடி ரூபாயில் சொல்லப்பட்டு இருக்கிறது. இந்தத் திட்டங்களும் மாண்புமிகு அம்மா அவர்களுடைய காலத்தில்தான் நபார்டு வங்கியினுடைய பரிசீலனைக்கு எடுத்துச் செல்லப்பட்ட திட்டங்கள் என்பதை நான் இங்கே சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இவற்றையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், இங்கே இருக்கிற அத்தனை வளர்ச்சித் திட்டப் பணிகளும், ஒன்று, மாண்புமிகு அம்மா அவர்கள் காலத்தில் தொடங்கப்பட்ட, முடிக்கப்பட்ட திட்டங்கள். ஆனால், இந்த அரசு பொறுப்பேற்றுக்கொண்டதற்குப் பின்னால், இந்த ஒரு வருட காலத்தில் புதிதாக ஏதாவது திட்டங்களை இந்த நாட்டுக்குப் பொதுப் பணித் துறையின்மூலமாகத் தந்தார்களா என்ற வினாவை நான் இந்த அவையின்முன் வைக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். (குறுக்கீடு) இல்லை, பகுதி-2 திட்டத்தின்கீழ் சென்ற ஆண்டு அறிவித்தார்கள். அது இன்னும் நடைபெறவில்லை. இந்த ஆண்டும் அறிவித்திருக்கின்றார்கள். அதுவும் இனிமேல் நடைபெறுமா, நடைபெறாதா என்பதை மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர்தான் சொல்ல வேண்டும். அதேபோல, வெலிங்டன் நீர்த்தேக்கச் சீரமைப்புப் பணிகளுக்காக 20 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். அந்த ஏரி மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஏரி. அதில் மாண்புமிகு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் பல்வேறு புனரமைப்புப் பணிகள் நடைபெற்றன. ஆனால்...(குறுக்கீடு)

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Yes, திரு. ஞானசேகரன். சொல்லுங்கள். Point of order தானே?

**திரு. சி. ஞானசேகரன்:** Point of order. (குறுக்கீடுகள்)



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** Point of Order கூட raise பண்ணக் கூடாதா? அமைச்சர்களுக்கு வேறு, உறுப்பினர்களுக்கு வேறு. Point of order raise பண்ணுங்கள். (குறுக்கீடுகள்) திரு. ஞானசேகரன், பேசுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, I am on a Point of order. (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** என்ன சொல்கிறார் என்று தெரிந்துகொள்ளலாம். (குறுக்கீடுகள்) உட்காருங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஒரே ஒரு Point of order. (குறுக்கீடுகள்) மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடுகள்) மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், இன்றைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் பேசிக்கொண்டிருக்கின்றபோது, அம்மா அவர்கள் ஏற்கெனவே கொண்டு வந்த வளர்ச்சித் திட்டங்கள்தான் இப்போது நிலுவையில் இருப்பதாகச் சொன்னார்கள். திருவண்ணாமலை மாவட்டத்திலே செண்பகத்தோப்பு அணை 34 கோடி ரூபாயில் களிமண்ணால் கட்டப்பட்டு, இன்று அதெல்லாம் உடைந்து, அமுங்கிப் போய் இருப்பது வளர்ச்சிப் பணித் திட்டம்தானா என்பதை—அவர்கள் காலத்தில் கட்டப்பட்டது என்பதனால் அதனுடைய விளக்கம் தேவை. ஏனென்று சொன்னால், வளர்ச்சிப் பணிகள், வளர்ச்சிப் பணிகள் என்று சொல்லி...

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர். (குறுக்கீடுகள்) எல்லோரும் உட்காருங்கள், துணைத் தலைவர் சொல்வார்.

*முற்பகல் 11–35*

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் நின்று பேசிக்கொண்டிருக்கிறார். உட்காருங்கள். (குறுக்கீடு)

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே...(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் உட்காருங்கள். (குறுக்கீடு) ஞானசேகரன், உட்காருங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்... (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** நீங்கள் ஏதாவது மனம் புண்படுமாறு comment அடித்தீர்கள் என்றால்—நான் மற்றவர்கள்போல் கிடையாது—திரு. சின்னசாமி, எச்சரிக்கிறேன். (குறுக்கீடு) என்ன பேசுகிறீர்கள்? (குறுக்கீடு) இது ஒரு மன்றம் என்பதை நினைத்துப் பேசுங்கள். நாங்கள் Chair-ல் உட்கார்ந்துகொண்டு, நீங்கள் பேசுவதை எல்லாம் கேட்க வேண்டும் என்ற அவசியம் இல்லை, எச்சரிக்கிறேன்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், அதாவது நம்முடைய காங்கிரஸ் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்களுடைய மருமகன், மாண்புமிகு உறுப்பினர் ஞானசேகரன் அவர்கள் (குறுக்கீடு) (சிரிப்பு) இங்கே ஒரு குற்றச்சாட்டைச் சொல்லியிருக்கின்றார்கள். செண்பகத்தோப்பு அணை உங்கள் காலத்தில்தானே கட்டப்பட்டது, அந்தப் பணிகள் திருப்திகரமாக இல்லை என்று இங்கே கேள்வி எழுப்பியிருக்கின்றார்கள். செண்பகத்தோப்பு அணை கடந்த தி.மு.க. ஆட்சிக் காலத்திலிருந்து எங்களுடைய ஆட்சிக் காலம் வரை தொடர்ந்தது. அந்தப் பணிகளில் எங்களுடைய ஆட்சிக் காலத்தில் எந்தத் தவறு நடந்திருந்தாலும், அது குறித்து இன்றைக்கு இருக்கின்ற தமிழக அரசு விசாரணை வைத்து, விசாரணை செய்து, யார் தவறு செய்திருந்தாலும், அவர்களைத் தண்டிப்பதற்கு அவர்களுக்கு நேரம் இருக்கின்றது, உரிமை இருக்கின்றது. அந்த நடவடிக்கையை எடுக்கும்படி அவரோடு சேர்ந்து நானும் தமிழக அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, 2004 டிசம்பர் 26 ஆம் தேதி தமிழகத்தில் இருக்கின்ற கடலோர மாவட்டங்களை சுனாமி என்ற பேரலை சுருட்டியடித்தபோது 8,002 மனித உயிர்கள் மாண்டு போயின. பல்வேறு நிவாரணப் பணிகளை அம்மா அவர்கள் எடுத்தார்கள். மறுவாழ்வு மற்றும் நிரந்தரப் பணிகள் என்கிற பணிகள் இப்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. வருமுன் காப்பவனதான் அறிவாளி என்ற நிலைக்கேற்ப, 1,076 கிலோ மீட்டர் அளவில் இந்தியாவிலேயே தமிழகம்தான் அதிகக் கடல் பரப்பளவைக் கொண்டிருக்கிறது. அந்தக் கடல் பரப்பினை இம்மாதிரியான சுனாமி பேரலை தாக்குகின்றபோது, அந்தப் பகுதியில் இருக்கின்ற அப்பாவி மீனவர்களையும், அவர்களுடைய வாழ்வாதாரங்களையும் காக்க வேண்டிய பொறுப்பும், கடமையும் அரசுக்கு இருக்கின்றது. அதை



எண்ணித்தான் மாண்புமிகு அம்மா அவர்கள் இந்தியத் தொழில்நுட்பக் கழகத்தினரை அழைத்து, ஆய்வு செய்து, அந்தப் பகுதியில் இருக்கின்ற மீனவர்களைக் காக்கின்ற வகையில் நிரந்தரமாகத் தடுப்புச் சுவர்கள் அமைத்தல் மற்றும் இன்னின்ன பணிகளைச் செய்தால், இம்மாதிரியான சுனாமி அடிக்கும்போது அவர்களைக் காப்பாற்றுவதற்கு முடியும் என்று ஆய்வு செய்து, அறிக்கை தர வேண்டுமென்று கேட்டு 3½ இலட்சம் ரூபாய்கூட மாண்புமிகு அம்மா அவர்கள் தந்தார்கள். அந்த அறிக்கையும் இன்றைக்குத் தமிழக அரசின் கையில் இருக்கின்றது. அந்த அறிக்கையின் அடிப்படையில், இருக்கின்ற 1,076 கிலோ மீட்டரில் பல்வேறு வகையான கழிமுகப் பகுதிகளை நீக்கி, அபாயகரமான பகுதிகள் என்று சில பகுதிகளை அவர்கள் தேர்வு செய்திருக்கின்றார்கள். அந்தப் பகுதிகளில் நிரந்தரமாகத் தடுப்புச் சுவர்கள் மற்றும் மாங்குரோவ் காடுகள்மூலமாக எதிர்காலத்தில் இம்மாதிரியான சுனாமி அலைகள் எவ்வளவு வந்தாலும், அவற்றைத் தடுத்து நிறுத்துகின்ற பணிகளை, நிரந்தரப் பணிகளை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று இந்த அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

12-வது திட்டக் குழுவின்மூலமாக நாம் அனுப்பிய இந்தப் பணிக்கு 50 கோடி ரூபாயை மத்திய அரசு ஒதுக்கியுள்ளதாகத் தகவல் கிடைத்திருக்கின்றது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** எதிர்க்கட்சித் துணைத் தலைவர், விரைவில் உரையை முடித்துவிடுங்கள்.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** ஆகவே, அந்தப் பணியையும் எடுத்து நடத்தும்படி நான் இந்த அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11-40

அடுத்ததாக, பொதுப் பிரச்சினை. காவிரி நடுவர் மன்றத்தினுடைய தீர்ப்பு இப்போது வழங்கப்பட்டிருக்கிறது. நான் அந்த வழக்கிற்குள்ளே செல்லவில்லை. ஏனென்று சொன்னால், ஏற்கெனவே மாண்புமிகு உறுப்பினர் சிவபுண்ணியம் அவர்கள்—லாவணி பாடுவதிலேயே நீங்கள் யாராக இருந்தாலும் இங்கே இருக்கின்றீர்கள்; ஆகவே, நல்ல பல கருத்துகளைச் சொல்லுங்கள் என்று நல்ல அறிவுரைகளை அவர்கள் ஏற்கெனவே இந்த மாமன்றத்தில் வழங்கியிருக்கின்றார்கள். இன்றைக்குத் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்பில்

சொல்லப்பட்டிருக்கின்ற சாராம்சம் என்ன? இடைக்காலத் தீர்ப்பாக 205 டி.எம்.சி. நமக்கு வழங்கப்பட்டது. ஆனால், இறுதித் தீர்ப்பில் 192 டி.எம்.சி. நீர் நமக்கு வழங்கப்பட்டிருக்கிறது. அதில் 7 டி.எம்.சி. பாண்டிச்சேரிக்கு நாம் கொடுத்தது போக, 185 டி.எம்.சி. தண்ணீர் நமக்குக் கிடைக்கும் என்று அந்தத் தீர்ப்பிலே சொல்லப்பட்டிருக்கின்றது. கிடைத்திருக்கின்ற அந்த இறுதித் தீர்ப்பின்மூலமாக அந்த 185 டி.எம்.சி. தண்ணீரையும் உறுதிப்படுத்துவதற்கு நாம் நடவடிக்கை மேற்கொண்டே ஆக வேண்டுமென்ற காலக்கட்டத்தில் இன்றைக்கு இருந்து கொண்டிருக்கின்றோம்.

கடந்த காலங்களிலே, 50, 60 ஆண்டு காலமாக யாரையும் நம்பிப் பிரயோஜனம் இல்லை என்ற நீண்ட அனுபவம் இதற்கு முன்னால் இருந்த அத்தனை அரசுகளுக்கும் இருந்திருக்கின்றது. சட்டபூர்வமான நடவடிக்கை ஒன்றேதான் தீர்வான வழி என்பதனையும் கடந்த கால அனுபவங்கள் நமக்கு உணர்த்தியிருக்கின்றன. நடுவர் மன்றம் அமைக்கப்பட்டதே உச்ச நீதிமன்றத்தின்மூலமாகத்தான். அதற்கு முன்னாலே பல நிகழ்வுகள் நிகழ்ந்தன. அதுவும் நாம் சட்டபூர்வமாகத்தான் பெற்றோமேயொழிய, யாருடைய தயவிலேயும் எந்தவிதப் பலனும் காவிரிப் பிரச்சினையில் நமக்குக் கிடைக்கவில்லை. ஆகவே, அந்த அனுபவங்களையெல்லாம்கொண்டு, இன்றைக்கு அளிக்கப்பட்டிருக்கின்ற தீர்ப்பை நாம் பெறுவதற்கு, மத்திய அரசினுடைய அரசிதழில் அதை வெளியிடச் செய்து, அந்த நீரை உறுதிப்படுத்துவதற்குண்டான வழியை இந்த அரசு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கின்றேன். காரணம், மாநிலத்திலும் நீங்கள் ஆட்சியிலே இருக்கின்றீர்கள், மத்தியிலும் நீங்கள் ஆட்சியிலே இருக்கின்றீர்கள். இது ஒரு நல்ல தருணம். உங்களுடைய செல்வாக்கை மத்தியிலே காட்டுவதற்கு ஒரு பரிட்சார்த்தமாக இந்தத் தீர்ப்பு இன்றைக்குக் கிடைத்திருக்கின்றது. அதைப் பெறுவதற்குரிய வழிவகைகளை நீங்கள் செய்ய வேண்டுமென்று இன்றைக்குத் தமிழ்நாடு எதிர்பார்க்கிறது. அதைச் செய்து முடிப்பீர்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றதோ, இல்லையோ, தமிழக மக்கள் அப்படி எண்ணுகிறார்கள். அதைத் தீர்த்து வைக்கின்ற பொறுப்பு தமிழக அரசுக்கு இருக்கின்றது என்பதனை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அமராவதி அணைக்கட்டுப் பிரச்சினையில் மாண்புமிகு உறுப்பினர்



அவர்கள் கேள்வி கேட்டதற்குச் சில பதில்களைச் சொன்னதாக அறிகிறேன்; நான் அந்த நேரத்திலே அவையில் இல்லை. 8 டி.எம்.சி. அமராவதிக்குக் கிடைக்கிறது என்றும், அதில் 3 டி.எம்.சி.—கேரள மாநிலத்திற்கு 30 டி.எம்.சி. எனத் தீர்ப்பில் வழங்கப்பட்டிருக்கின்றது; அதில் அமராவதிக்கு வருகின்ற நீரில் 3 டி.எம்.சி.—வழங்க வேண்டுமென்று இறுதித் தீர்ப்பில் சொல்லப்பட்டிருக்கின்றது. அமராவதியினுடைய கொள்ளளவு 4 டி.எம்.சி. என்று நினைக்கின்றேன். பொதுவாக, எந்தவொரு அணைக்கட்டுக் கட்டினாலும், அதனுடைய முழுக் கொள்ளளவில் 2 தடவை என்ன நீர் நிரம்புகின்றதோ அதை வைத்துத்தான் அந்த அணைக்கட்டின்கீழ் இருக்கின்ற நிலப் பாசனப் பரப்புகளை விரிவாக்கம் செய்வதும், பணிகளை எடுத்துக்கொள்வது என்பதும், பயன்பாட்டுக்கு நிலங்கள் எடுத்துக்கொள்ளப்படுவது என்பதும் காலம், காலமாகக் கடைப்பிடிக்கின்ற முறைகள். அந்த வகையில்தான் 8 டி.எம்.சி. நீரைப் பயன்படுத்துகின்ற அளவுக்கு அமராவதி அணைக்கட்டின் கீழுள்ள பகுதிகள் ஏற்கெனவே பாசனத்தை நம்பி, அந்தப் பெருமக்கள் விவசாயப் பணிகளைக் காலம், காலமாகச் செய்து வந்துகொண்டிருக்கின்றார்கள். ஆனால், இன்றைக்கு 3 டி.எம்.சி. தண்ணீரைக் கேரளாவுக்குத் தர வேண்டுமென்று இறுதித் தீர்ப்பு வழங்கப்பட்டிருக்கின்றது. நாம் கடுமையாக அதை எதிர்த்தே ஆக வேண்டுமென்று இந்த அரசைக் கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு அமைச்சர் அவர்கள்கூடச் சொன்னார்களாம், அவர்கள் நீரைப் பயன்படுத்துகிற வரை நாம் பயன்படுத்திக்கொள்ளலாம், அதற்குத் தடையில்லை என்று சொன்னார்களாம். சொன்னதாகப் பதிவேட்டிலேயிருக்கிறது. ஆனால், அது வரை நாம் சும்மா இருக்கக் கூடாது. ஏனென்று சொன்னால், அந்த 3 டி.எம்.சி. நீரை எடுப்பதற்குண்டான திட்டங்களை இப்போதே கேரள அரசு தயாரிப்பதற்குண்டான ஆயத்தப் பணிகளிலே ஈடுபட்டிருக்கின்றது. இந்தத் தீர்ப்பு எது மாதிரி இருக்கிறது என்று சொன்னால், ஏற்கெனவே நமக்கிருந்த உரிமை, அதை நம்பி அந்த அணைக்கட்டின்கீழ் இருக்கிற பாசனதாரர்கள் பாசன நிலங்களைப் பெற்றிருக்கிறார்கள். இந்த நீர் கிடைக்கவில்லை என்றால் அந்தப் பாசன நிலங்கள் தரிசாக மாறக்கூடிய ஒரு சூழ்நிலை இருக்கின்றது. கிராமத்திலே ஒரு பழமொழி சொல்வார்கள்;'பிடித்த மீனும் போயிற்று பெட்டியிலிருந்த மீனும் போயிற்று' என்று. அதே மாதிரி, நம் கையிலிருந்த, நாம் காலம், காலமாக அனுபவித்து வந்தோமே, அந்தக்

காவிரி நீரின் உரிமை, அதெல்லாம் பறிக்கப்பட்டு, இன்றைக்கு அது மெல்ல, மெல்ல, மெல்ல, 666 டி.எம்.சி. என்ற நிலையிலிருந்து மெல்ல, மெல்லக் குறைந்து, இன்றைக்கு 185 டி.எம்.சி.யாகக் கிடைத்திருக்கின்றது.

அதேபோல, பவானியிலேயிருந்து வருகின்ற நீரிலிருந்து 6 டி.எம்.சி. நீரைக் கேரளா பயன்படுத்திக்கொள்ளலாம் என்ற தீர்ப்பும் இந்தத் தீர்ப்பில் வழங்கப்பட்டிருக்கின்றது. அந்தத் தீர்ப்பையும் நாம் எதிர்த்தேயாக வேண்டுமென்ற ஒரு சூழ்நிலை. இன்றைக்கு இருக்கின்ற அரசு அதை உச்ச நீதிமன்றத்திற்கோ அல்லது நடுவர் நீதிமன்றத்தில் மேல் முறையீட்டிற்கோ எடுத்துச் செல்ல வேண்டுமென்று நான் இந்த அரசை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

முற்பகல் 11–45

அதைப்போல, முல்லை பெரியாற்றில் இன்றைக்கு உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பு வழங்கப்பட்டும், அந்த நிலையினை, தீர்ப்பினுடைய பலனை நாம் அனுபவிக்க முடியாத ஒரு சூழ்நிலை. அதாவது, 136 அடியிலிருந்து 142 அடியாக உயர்த்துவதற்குரிய பலனை நாம் அனுபவிக்க முடியாத ஒரு சூழ்நிலை இருக்கின்றது. நான் மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம் அவர்களை மெத்தப் பணிவோடு கேட்டுக்கொள்வது, கம்யூனிஸ்ட் கட்சியினுடைய சகாக்கள்தான் அங்கு ஆட்சி செய்துகொண்டு இருக்கிறார்கள். நீங்கள் நினைத்தால் கம்யூனிஸ்டுகளுடைய சகாக்கள்—பொதுவாக கம்யூனிஸ்ட்டுகள் என்று நான் இரு கம்யூனிஸ்டுகளையும்தான் சொல்லுகின்றேன்—இன்றைக்கு அந்தத் தீர்ப்பு வந்து ஒரு வருடத்திற்கு மேல் ஆகிவிட்டது; நீங்கள் யாராவது, இரண்டு கம்யூனிஸ்டுகளும் சேர்ந்து கேரளாவிற்குத் தூது சென்று, ஏதாவது ஒரு முயற்சி எடுத்தீர்களா என்றால், இதுவரை இல்லை. இனிமேலாவது நீங்கள் ஒரு நல்ல முயற்சியினை எடுத்து, அங்கு போய், அங்கு இருக்கின்ற மாண்புமிகு முதலமைச்சர் அச்சுதானந்தன் அவர்களிடம் சொல்லி 'ஏங்க, உச்ச நீதிமன்றத் தீர்ப்பெல்லாம் வாங்கியிருக்கிறோம்' (குறுக்கீடுகள்) முடிக்கப் போகிறேன். நீங்கள் அப்புறம் பேசுங்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் உரையை முடிக்கப் போகிறார். (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தசாமி, அடுத்தது உங்களுக்கு அந்த வாய்ப்பினைத் தருகிறேன். உரையை முடிக்கட்டும்.



**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** 'அண்ணே, நீங்கள்தான் சொன்னீர்கள். அணைக்கட்டு மிகவும் பழுதுபட்டு இருக்கின்றது, அதைப் பழுது நீக்குங்கள் என்று சொன்னீர்கள். தமிழக அரசும் ரொம்பச் சிரமப்பட்டு பழுது நீக்கி இருக்கிறது. பழுது நீக்கியதற்குப் பிறகும் நீங்கள் சில ஆட்சேபனைகளைத் தெரிவித்தீர்கள். மத்திய நீர்க் குழுவும் வந்து பார்த்தது. அவர்கள் திருப்தியடைந்து, அணையில் நன்றாகப் பழுது நீக்கப்பட்டு இருக்கிறது என்று சான்றிதழ் தந்துள்ளார்கள். திரும்பவும் நீங்கள் சில ஐயப்பாடுகளைச் சொன்னீர்கள்.'-- மத்திய நீர் வளக் குழுமம், தமிழ்நாடு இல்லாமல், கேரளாவும் இல்லாமல் மத்தியில் இருக்கின்ற Technical Expert, தொழில்நுட்ப வல்லுநர் குழுவினை அனுப்பி அவர்கள் ஐயப்பாடு தெரிவிக்கிறார்கள், பூகம்பம் எல்லாம் வந்து அந்த அணை உடைந்துவிடும் என்று. அந்த அளவுக்கு அந்த அணை பலமுள்ளதாக இருக்கிறதா என்று அவர்கள் பரிட்சித்துப் பார்த்தார்கள். பூகம்பம் எந்த அளவுக்கு வந்தால், அணை உடையும் என்ற நிலையில் ரேடியேசனை அணைக்கட்டுகளில் செலுத்தி, அப்படி செலுத்துகின்றபோது அந்த அணை உறுதியாக இருக்கின்றது என்ற ஒரு நிலையைத் தொழில்நுட்ப வல்லுனர் குழு அறிந்திருக்கின்றது.

இவ்வளவும் நடந்ததற்குப் பின்னாலும், கேரள அரசு 136 அடியிலிருந்து 142 அடி வரை தேக்குவதற்கு மறுக்கின்றது. இறையாண்மை எங்கே இருக்கின்றது? இந்திய அரசமைப்புச் சட்டம் எங்கே நடைமுறையில் கொண்டு வரப்பட்டிருக்கின்றது என்பதையெல்லாம் நீங்கள் அவர்களிடத்திலே எடுத்துச் சொல்லுங்கள். அவர்கள் உங்களுடைய சகாக்கள். ஆகவே, அந்த வேலையை நீங்கள் செய்வீர்கள் என்ற நம்பிக்கை நாட்டு மக்களுக்கு இருக்கின்றது. அந்த நம்பிக்கைக்குரிய பாத்திரமாக நீங்கள் நடந்துகொள்ள வேண்டும் என்று நான் இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

அதேபோல, பல்வேறு பிரச்சினைகள் இன்றைக்கு இருக்கின்றன. கட்டடப் பணியைப் பொறுத்தவரையில் சென்ற 2006–2007–ல் 790 கோடி ரூபாய் அளவிற்குக் கட்டடப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று சொல்லப்பட்டிருக்கிறது.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடிக்கிற மாதிரி இருக்கிறது. ஆனால், முடிக்கமாட்டேன் என்கிறீர்கள். இதுதான் உங்களுக்குண்டான special கலை.

**திரு. ஓ. பன்னீர்செல்வம்:** முடிந்துவிட்டது. 790 கோடி ரூபாய் அளவிற்கு எடுத்துக்கொள்ளப்படும் என்று கொள்கை விளக்கக்

குறிப்பில் உள்ளது. ஆனால், எவ்வளவு ரூபாய்க்குப் பணிகள் செய்து முடித்தீர்கள் என்ற விவரம் இன்றைக்குக் கொடுக்கப்படவில்லை. மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அவருடைய பதிலுரையில் தருவார்கள் என்ற நம்பிக்கையும் எனக்கு இருக்கின்றது. 2007–2008–ல் 435 கோடி ரூபாய்க்குப் பணிகள் எடுத்துக்கொள்ளப்படும் என்று தெரிகிறது. அந்தப் பணிகளையும் என்னென்ன முறையில் நீங்கள் செயலாக்கப் போகின்றீர்கள் என்ற விவரத்தினையும் இன்றைக்கு மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் பதிலில் கூற வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, பொதுப் பணித் துறையினுடைய மானியக் கோரிக்கையில் என் உரையை இவ்வளவு நேரம் பொறுமையாக இருந்து கேட்ட அத்தனை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்து, வளர்ச்சித் திட்டப் பணிகளில், யார் அரசாட்சியில் இருந்தாலும், அவர்கள் காலதாமதம் இல்லாமல், கால நேரத்தில் அவற்றை முடித்தால்தான் நாட்டுக்கும், நாட்டு மக்களுக்கும் அது பயன் உள்ளதாக இருக்கும் என்பதனை உணர்ந்து இந்த அரசு செயல்பட வேண்டும் என்று கேட்டு, விடைபெறுகின்றேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ. கருப்பசாமி பாண்டியன். (குறுக்கீடு) திரு. சி. கோவிந்தசாமி, (குறுக்கீடு) ஒரு Point of order கேட்கிறார்.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் இங்கே எங்களுக்கு ஒரு வேண்டுகோளை விடுத்தார். வழக்கமாக ஒரு மாநிலத்திலே இருக்கக்கூடிய கட்சி இன்னொரு மாநிலக் கட்சிகளுக்கிடையே பேசி இந்தப் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணக்கூடிய நடைமுறை இல்லை என்பதை அவர் அறியாதவர் அல்ல.

*முற்பகல் 11–50*

அங்கே இருக்கிற C.P.M., C.P.I. மட்டும் பிரச்சினையில்லை. அந்த அரசு அந்த மாநில மக்களின் நலன் கருதி சில முடிவுகளை அவர்கள் எடுக்கிறார்கள். ஆகவே, இங்கே இருக்கிற அரசு நம்முடைய மாநில நலன் கருதி பல முடிவுகளை எடுக்கிறது. நான் நிதிநிலை அறிக்கை மீதான பொது விவாதத்தில் பேசுகிறபோதே சொன்னேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், இந்த அரசும் எடுக்கிற நிலையைத் தமிழக மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சி ஆதரிக்கிறது,



வரவேற்கிறது; தமிழ்நாட்டு நலனைப் பாதுகாக்க வேண்டும் என்று தெளிவுபடுத்தியிருக்கிறோம். ஆகவே, இரண்டு மாநிலக் கட்சிகளுக்கிடையிலே பேசித் தீர்க்கக்கூடிய பிரச்சினை இது அல்ல என்பதை நான் இந்த நேரத்தில் தெளிவுபடுத்துகிறேன்.

அது மட்டுமல்லாமல், கேரளாவில் ஏதோ முதலமைச்சராக திரு. அச்சுதானந்தன் அவர்கள் இருக்கிறதனாலே, C.P.M. மட்டும்தான் நீர் மட்டத்தை உயர்த்த மறுப்பதைப்போல, ஒரு தோற்றத்தை இங்கேயிருக்கிற பல கட்சிகள் உருவாக்க முயற்சிக்கிறார்கள். அங்கே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்ட் கட்சி, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சி, பாரதீய ஜனதா கட்சி உட்பட என்னென்ன கட்சிகள் இருக்கின்றனவோ, எல்லாக் கட்சிகளும் சட்டமன்றத்தில் ஒன்றாக நின்றுதான் இந்தப் பிரச்சினையை எழுப்புகிறார்கள். அங்கே முதலமைச்சர் என்ற முறையில் அதை அவர் வெளிப்படுத்துகிறாரேயொழிய, அங்கே இருக்கிற C.P.M. நேரடியாக இந்தப் பிரச்சினையில் தலையிடவில்லை என்பதை மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வர விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. கருப்பசாமி பாண்டியன். (குறுக்கீடு) இல்லை, நீங்கள் பாருங்கள், ஒரு second-லே உங்களாலே பேச முடியாது. நாங்கள் watch பண்ணிக்கொண்டுதானே இருக்கிறோம்? (குறுக்கீடு) இல்லை, உங்களாலே முடியாது.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, முல்லை பெரியாறு அணைப் பிரச்சினை சம்பந்தமாக நேற்றையதினம் சென்னை உயர் நீதிமன்றத்தில் அப்பகுதி விவசாயச் சங்க மக்களின் சார்பாக ஒரு வழக்குத் தொடுக்கப்பட்டு, அந்த வழக்கு சம்பந்தமாக மத்திய அரசுக்கும், மாநில அரசுக்கும் நோட்டீஸ் வழங்கப்பட்டிருக்கிறது. அந்த வழக்கைத் தொடுக்கின்றபோது, நம்முடைய தமிழக அரசின் சார்பாகத் தமிழக அரசினுடைய வழக்கறிஞர்களை, அந்த வழக்கு விசாரணைக்கு வருகிறபோது ஆஜராகச் சொல்லி, நம்முடைய நியாயமான வாதங்களை எடுத்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்திருக்கிறதா என்பதையும் இந்த நேரத்தில் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் கருப்பசாமி பாண்டியன். (குறுக்கீடு) இல்லை, உங்களுக்கு வாய்ப்பு இருக்கிறதே! (குறுக்கீடு)

**திரு. வை. சிவபுண்ணியம்:** இல்லை, சொன்னதே எனக்குத்தான் சொன்னார். எல்லோரும் விளக்கம் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** பேச எழுந்துவிட்டார்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, (குறுக்கீடு) மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் ஒரு விளக்கத்தை இங்கே சொன்னார்கள். வாழைப்பழத்தில் ஊசி ஏற்றுவதுபோல ரொம்பச் சாதுர்யமாக அந்தச் செய்தியைச் சொன்னார். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி, இந்திய கம்யூனிஸ்டு கட்சி, முல்லை பெரியாறு விஷயத்திலே அங்கே கேரளாவிலே சொல்லவில்லையே என்று சொன்னார். அதேபோலத்தான் காவிரிப் பிரச்சினையிலே கர்நாடகத்திலே பேசுகிறபோது, அங்கே அனைத்து அரசியல் கட்சிகளும் ஒன்று கூடித் தீர்மானம் போடுகிறபோது, கர்நாடக அரசாங்கம் எடுக்கிற அனைத்து முடிவுகளுக்கும் கட்டுப்படும் என்று அ.தி.மு.க. அந்த மாநிலத்திலே சொன்னது. அந்தத் தீர்மானத்தை ஏற்றுக்கொண்டது. ஆகவே, இங்கே பேசுகிற அ.தி.மு.க. இங்கே பேசுகிறபோது இந்தச் செய்தியை இங்கே வலியுறுத்திப் பேசுகிறார்கள். அங்கே இருக்கிற அ.தி.மு.க. அந்தக் கர்நாடக மாநிலத்தினுடைய அந்தக் கோரிக்கைகளை ஏற்று, அங்கே தீர்மானம் நிறைவேற்ற வேண்டிய அவசியத்திலே இருக்கிறார்கள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஆம், உண்மைதான்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** இதைப்போலத்தான், இந்தப் பிரச்சினையைப் பொறுத்தவரையிலும், அந்தந்த மாநிலத்தினுடைய நலன் என்ற முறையில், அங்கே இருக்கிற கட்சிகள் அவர்களுடைய உரிமைகளை நிலைநாட்டுவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன. ஆனால், இந்தத் தமிழகத்தைப் பொறுத்தவரையிலும், இங்கே இருக்கிற மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியோ, இந்திய கம்யூனிஸ்ட் கட்சியோ, முல்லைப் பெரியாறு அணையினுடைய உயரத்தை உச்ச நீதிமன்றத் தீர்ப்பின்படி உயர்த்த வேண்டும் என்பதிலே உறுதியாக நாங்கள் இருக்கிறோம். அதை அந்த மாநில அரசு எதிர்க்கிறபோது, நாங்களும் இங்கே வலுவாக எதிர்ப்போம். அதைத் தெளிவாக எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் புரிந்துகொள்ள வேண்டுமென்று அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் வீ. கருப்பசாமி பாண்டியன்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** மாண்புமிகு சட்டப் பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தமிழ் இனத்தினுடைய உயர்வுக்காக 70 ஆண்டு காலத்திற்கும் மேலான பொது வாழ்வு, ஜனநாயகக் கடமைகளை நிறைவேற்றிப் பொன் விழாக் கொண்டாடுகின்ற அளவிற்கு 50 ஆண்டு கால நிறைவுப் பணி, இவற்றின்மூலம் சுய மரியாதைதான் வாழ்க்கையிலே முக்கியம், பதவி, பணத்தைவிட என்று எண்ணுகிற ஒரு கோடி திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களுக்கு அண்ணனாக, உலகம் எங்கும் வாழுகிற சுய மரியாதை உள்ள தமிழர்களுக்குத் தாயாக விளங்குகிற நம்முடைய முதல்வர் தலைவர் கலைஞருடைய தம்பிமார்களில் ஒரு தம்பியாக (மேசையைத் தட்டும் ஒலி) இந்தப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையிலே பேசுகிற வாய்ப்புக் கிடைத்ததற்காக மகிழ்ச்சி அடைகிறேன்.

வாய்ப்புத் தந்த, எங்களுக்கெல்லாம் தாயாக இருந்து பாதுகாத்து வருகிற எங்கள் தலைவர் முதல்வர் கலைஞர் அவர்களுக்கும், பேரவைத் துணைத் தலைவர் அவர்களுக்கும் என் இதயபூர்வமான நன்றியை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகின்றேன். இங்கே எதிர்க் கட்சியினுடைய துணைத் தலைவர் அவர்கள் இந்த மானியக் கோரிக்கை விவாதத்தைத் துவங்கி வைத்துப் பேசுகிறபோது, அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் நிறையப் பணிகள் நடைபெற்றன என்பதை எடுத்துச் சொல்லி, இந்த ஓராண்டு காலத்திலே எந்தப் பணிகளும் நடைபெறாததுபோல இங்கே சித்தரித்துப் பேசினார்கள், அது அவர்களுக்கு இருக்கிற உரிமை. ஆனால், நான் தெரிவித்துக்கொள்ள விரும்புவது, "மாடு கட்டிப் போரடித்தால் மாளாது என யானை கட்டிப் போரடித்த சோழ மண்டலம்" என்கிற பெருமைக்குரிய தஞ்சைச் சீமை, காவிரி டெல்டா பகுதியிலே இருக்கிற விவசாயி, விவசாயம் செய்வதற்கு வழியில்லாமல் வறண்ட பூமியைப் பார்த்து ஏங்கி, இந்தியாவிற்கே உணவு supply செய்கிற அந்த வாய்ப்பைப் பெற்ற டெல்டா விவசாயிகள் எலிக் கறி சாப்பிடுகிற நிலைமையும், தற்கொலை செய்துகொள்கிற நிலைமையும் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலேதான் ஏற்பட்டது என்பதை (மேசையைத் தட்டும் ஒலி) நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். (குறுக்கீடுகள்) எதற்கு இப்போது? நீங்கள் பேசும்போது நாங்கள் அமைதியாகத்தானே கேட்டுக்கொண்டிருந்தோம்? (குறுக்கீடு)

முற்பகல் 11–55

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** *அவ்வளவு நேரம் பேசினாரே! நாங்கள் அமைதியாகத்தானே இருந்தோம் ? (குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சரி, நீங்கள் உட்காருங்கள், நான் பேசச் சொல்கிறேன். *(குறுக்கீடுகள்)*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** நீங்கள் மட்டும் எதை வேண்டுமானாலும் பேசலாம். *(குறுக்கீடுகள்)*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** தொடர்ந்து பேசுங்கள். *(குறுக்கீடுகள்)*

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** ஏற்கெனவே அந்தப் பிரச்சினை நாங்கள் எதிர்க்கட்சியாக இருந்தபோது இங்கே கிளப்பப்பட்டபோது அன்றைய முதல்வர் அவர்கள், தமிழ்நாட்டிலே ஒரு பிரிவினர் வழக்கமாக எலிக் கறி சாப்பிடுவது வழக்கம்தான் என்று சொன்னதும் பதிவாகி இருக்கிறது. யாரும் மறுக்க முடியாது. *(குறுக்கீடுகள்)* எனவே, நம்முடைய பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் படித்த காலத்தில் வரலாற்றுப் பாடப் புத்தகத்திலே ஒரு வரி வரும். மன்னர்கள் காலத்தில் சந்திர குப்த மௌரியருடைய ஆட்சிக் காலம் பொற்காலம் என்பார்கள். சுதந்திரம் கிடைத்த பிறகு இந்தியாவிலே தமிழகத்தில் தலைவர் கலைஞர் ஆளுகிற காலம் எல்லாம் தமிழகத்திற்கு ஒரு பொற்காலம் என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன். *(மேசையைத் தட்டும் ஒலி)*

அதிலேயும் குறிப்பாக, இந்த ஆண்டு நம்முடைய தலைவர் கலைஞருடைய வழிகாட்டுதலோடு, எங்கள் இனமானப் பேராசிரியர், நிதி அமைச்சர் அவர்கள் இந்த மாமன்றத்திலே அளித்து இருக்கிற நிதிநிலை அறிக்கை தென் மாவட்டங்களுக்கு ஒரு வளமான எதிர்காலத்திற்கு வித்திட்டிருக்கிறது என்பதையும், குறிப்பாக, நான் சார்ந்திருக்கிற நெல்லை மாவட்டத்திற்கு இந்த நிதிநிலை அறிக்கை ஒரு வரப்பிரசாதம் என்றும் சொன்னால் நிச்சயமாக மிகையாகாது. நாங்களே கோரிக்கை வைக்காத அளவிற்கு, தென் பகுதியிலே இருக்கிற நெல்லை, தூத்துக்குடி, கன்னியாகுமரி மாவட்ட மக்களே எதிர்பார்க்காத சில சிறப்பான, சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த அறிவிப்புகளை நிதிநிலை அறிக்கையிலே இன்றைக்குத் தென் மாவட்டங்கள் பெற்றிருக்கின்றன.



குறிப்பாக, நெல்லையிலே அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகம், படித்துவிட்டு இருக்கிற பட்டதாரி இளைஞர்களுக்குப் பல்லாயிரக்கணக்கானோருக்கு வேலைவாய்ப்புத் தருகிற மென்பொருள் பூங்கா; நாங்குநேரியிலே தொழில்நுட்பப் பூங்காவிற்கு மீண்டும் புத்துயிர்; அதற்காகக் கூடுதலான இட ஆர்ஜிதம்; தென் மாவட்டங்களிலே இப்பொழுது சென்னையை ஒட்டி இருக்கிற பகுதிகளிலே தொழில் பெருகியிருப்பதைப்போல, புதிய தொழில்கள் வருவதற்கு வித்திடுகின்ற வகையிலே தென் மாவட்டங்களை இணைத்து விருதுநகரிலே பொருளாதார மண்டலம்; ஆயத்த ஆடை, பின்னலாடைப் பயிற்சி நிலையம் நெல்லையிலே; நெல்லை மருத்துவக் கல்லூரிக்குக் கட்டமைப்பு விரிவாக்கம்; நெல்லை மாவட்டத்திலே தென்காசி, குலவணிகர்புரம், பாவூர்சத்திரம் போன்ற தேசிய நெடுஞ்சாலைப் பகுதிகளிலே இரயில்வே மேம்பாலங்கள்; பாளையங்கோட்டை மையப் பகுதியிலே இருக்கிற கோபாலசுவாமி கோயில் திருப்பணிக்கு 40 இலட்சம் ரூபாய் முதல் கட்ட ஒதுக்கீடு; இதைப்போன்ற பணிகள் இந்த நிதிநிலை அறிக்கையிலே மட்டும் நெல்லை மாவட்டத்திற்கு அளிக்கப்பட்டிருக்கின்றன.

ஏற்கெனவே சுதந்திரம் கிடைத்த பிறகு நெல்லை மாவட்டத்திலே நடைபெற்றிருக்கிற வரலாற்றுச் சாதனைகள்—கிட்டத்தட்ட 90 சதவிகிதப் பணிகள்—5 முறை தலைவர் கலைஞர் அவர்கள் ஆட்சிப் பொறுப்பிலே இருந்த காலத்திலேதான் எங்கள் மாவட்டம் பல தேவைகளைப் பெற்று, நிறைவு செய்யப்பட்டிருக்கிறது.

நண்பகல் 12–00

ஆசியாவிலேயே இரண்டாவது பெரிய மேம்பாலம், நெல்லை ஈரடுக்கு மேம்பாலம். நம்முடைய தாய் மொழியான தமிழ்த் தாய் வாழ்த்து தந்த நெல்லை மண்ணின் மைந்தர் மனோன்மணியம் சுந்தரனார் பெயரிலே நெல்லைக்குப் பல்கலைக்கழகம்; தமிழர்களுக்குச் சுய மரியாதை உணர்வை ஊட்டிய நம்முடைய இதய வேந்தர் அண்ணாவின் துணைவியார் இராணி அம்மையார் பெயரிலே அரசுக் கலைக் கல்லூரி; திருநெல்வேலியிலே போக்குவரத்து நெரிசலைக் குறைக்கின்ற பை–பாஸ் சாலை; நெல்லை, பாளை, மேலப்பாளையம் சுற்றுப்புறங்களை இணைத்து, நெல்லை மாநகராட்சி அந்தஸ்து; நெல்லைக்கு சட்டக் கல்லூரி; நெல்லையினுடைய எதிர்கால நலனைக் கருதி, வேய்ந்தான்குளம் புதிய பேருந்து நிலையம்; பாரதி கண்ட புதுமைப் பெண்களை உருவாக்குகிற அளவிற்கு 2,000 மகளிர் படிக்கிற

குற்றாலம் பராசக்தி மகளிர் கல்லூரி; நாங்குநேரி தொழில்நுட்பப் பூங்கா; அனைத்துப் பகுதிகளுக்கும் - - நெல்லை மாவட்டம் மட்டுமல்ல, எங்கள் மாவட்டத்திலே வற்றாத ஜீவநதியாக இருக்கிற தாமிரபரணியின்மூலம் 4 தென் மாவட்டங்களில் எல்லா நகராட்சிகளுக்கும் குடிதண்ணீர்த் திட்டம் இன்றைக்கு நிறைவேற்றப்பட்டிருக்கிறது என்று சொன்னால், அந்தத் திட்டங்கள் அனைத்தையும் தந்தது கலைஞர் ஆட்சிதான் (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் பெருமிதத்தோடு குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

நெல்லை மாவட்டத்திலே, சங்கரன்கோவில், கடையநல்லூர், புளியங்குடி, தென்காசி, செங்கோட்டை, அதேபோல நெல்லை மாவட்டத்தின் தென் பகுதியிலே இருக்கிற பகுதிகள், சகோதர மாவட்டமான தூத்துக்குடியிலே இருக்கிற அனைத்துப் பகுதிகள், சகோதர மாவட்டமான விருதுநகருக்கு, தற்போது விருதுநகர் வரை தாமிரபரணி ஆற்றுத் தண்ணீர் திட்டம் நடைபெற்றுக் கொண்டிருக்கிறது (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகின்றேன்.

நெல்லை மாவட்டம் வீரத்தினுடைய விளைநிலம் என்கிற பெருமையுண்டு. வீரத்தாலும், தியாகத்தாலும் நனைந்த சீமை எங்கள் நெல்லைச் சீமை. ஆனால், வானம் பார்க்கிற பூமி பாதி; தாமிரபரணி பாய்கிற பகுதி பாதி. வானத்தினை எதிர்பார்க்கிற பகுதி பாதி. அது வறண்டு போகிறபோதுதான், அங்கே பல நேரம் வன்முறைகள் உருவாவது என்பது வரலாற்றிலே கண்கூடாக நாம் கண்டுகொண்டிருக்கின்ற ஒன்றாகும். அதையெல்லாம் போக்குகிற வகையில், 1969–லேயிருந்து 2007 வரை, 5 முறை தலைவர் கலைஞர் ஆட்சியிலே இருந்த காலத்திலேதான்—இப்போது நெல்லை மாவட்டம் முழுவதும் இருக்கிற அணைக்கட்டுகள் மொத்தம் 11. இங்கே எதிர்க்கட்சித் துணைத் தலைவர், பொதுப் பணித் துறையிலே உங்கள் ஆட்சி ஒன்றும் செய்யவில்லை, நாங்கள்தான் சாதித்தோம் என்றார்கள். நான் ஆதாரத்தோடு இங்கே குறிப்பிட விரும்புகிறேன். நெல்லை மாவட்டத்திலே இன்றைக்கு 11 அணைகள் இருக்கின்றன. இந்த 11 அணைகளிலே, பாபநாசம் அணை வெள்ளைக்காரர்கள் கட்டியது. மணிமுத்தாறு அணை பெருந்தலைவர் காமராஜர் காலத்தில் அமரர்கள் கே.டி. கோசல்ராம், ஐயா வீரபாகு, ஐயா செல்லப்பாண்டியன், ஐயா சங்கர ரெட்டியார், அவர்களைப்போன்ற பெருமக்களுடைய முயற்சியால் வந்த அணை. (மேசையைத் தட்டும்



ஒலி) அவை தவிர அம்பாசமுத்திரம் தாலுகாவிலே சேர்வலாறு, கடனா நதி, இராம நதி அணை, செங்கோட்டை தாலுகாவிலே குண்டாறு அணை, தென்காசி தாலுகாவிலே அடவிநயினார் அணை, கருப்பா நதி அணை, நாங்குநேரி தாலுகாவிலே வடக்குப் பச்சையாறு, நம்பியாறு, ராதாபுரம் தாலுகாவிலே கொடுமுடியாறு என 9 அணைகளுக்கான திட்டத்தைத் தீட்டி, அதற்கு நிதியும் ஒதுக்கித் தந்து, தன்னுடைய பதவிக் காலத்திலே அந்தப் பணியையும் முடித்து, நெல்லை மாவட்டத்து மக்களுக்கு அர்ப்பணித்த ஆட்சி கலைஞருடைய ஆட்சி (மேசையைத் தட்டும் ஒலி) என்பதை நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். உங்கள் ஆட்சி 10 ஆண்டு காலம் இருந்தது. ஏதாவது ஒரு அணை அந்தத் தென் மாவட்டத்திற்கு, எதற்காவது கால்கோளாவது நாட்டியிருக்கிறோம் என்று சொல்லுங்கள். நான் ஒத்துக்கொள்கிறேன். அதைப்போல, பேரிக்காடாக இருக்கிற சாத்தான்குளம் தொகுதி நம்முடைய சகோதரி ராணி வெங்கடேசன் இருக்கிற பகுதி; கிட்டத்தட்ட தார்ப் பாலைவனம் போன்ற பகுதி; மலைமறைவுப் பிரதேசம்; அமரர் கே.பி.கே. அவர்கள் எடுத்த முயற்சியின் பயனாக எங்களுடைய தலைவர் கலைஞர் காலத்திலேதான் சடையனேரி கால்வாய்த் திட்டம் வந்தது. இன்றைக்கு அந்தப் பகுதிக்கும் மணிமுத்தாறுத் தண்ணீர் (மேசையைத் தட்டும் ஒலி) போய்க்கொண்டிருக்கிறது என்பதை நான் குறிப்பிட்டுச் சொல்ல விரும்புகிறேன்.

ராதாபுரம், நாங்குநேரி பகுதிகள். தமிழ்நாட்டிலே வெள்ளச் சேதம், 400, 500 பேர் உயிர்கள் பலி என்றால், நாங்குநேரி, ராதாபுரத்திலே மழை இல்லை என்கிற வரலாறு உண்டு. அதைக் கருத்திலேகொண்டுதான், நம்முடைய அண்ணன் அப்பாவு அவர்களுடைய கோரிக்கையை ஏற்று, 3 மாதங்களுக்குள்ளாக நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் நேரிலே வந்து ஆய்வு செய்து, அவர் வந்து பார்த்துவிட்டு வந்த 10 நாட்களில் இங்கே அளிக்கப்பட்ட நிதிநிலை அறிக்கையிலே இன்றைக்கு அந்த வறண்ட எமால்டு ஏரிப் பகுதிகளுக்கு, ராதாபுரம், நாங்குநேரி பகுதிகளுக்குத் (மேசையைத் தட்டும் ஒலி) தாமிரபரணி ஆற்றுத் தண்ணீரில் மழை, வெள்ளக் காலத்திலே கடலுக்குப் போய் கலக்கிற வீணான தண்ணீரைத் திருப்பி விடுகிற ஒரு திட்டமாக இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையிலே பொதுப் பணித் துறைமூலம் 198 கோடி ரூபாய் அதற்காக ஒதுக்கப்பட்டிருக்கிறது என்பதை நான் இங்கே சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

*பிற்பகல் 12–05*

நெல்லை மாவட்டத்திலே இருக்கிற கோரிக்கை, சுதந்திரத்திற்குப் பிறகு, இன்னும் இரண்டே இரண்டு பகுதிகள்தான் அணை கேட்கிற பகுதிகள். ஒன்று, ஜம்பு நதி அணை; அது கீழப்பாவூர், ஆலங்குளம் ஆகிய இரண்டு ஒன்றியங்களுக்கும் இணைந்து பயனளிக்கிற ஒரு திட்டம். வாசுதேவநல்லூர், சிவகிரி தாலுகாவுக்கு உள்ளாறு. ஆனால், நம்முடைய பொதுப் பணித் துறையினுடைய பொறியாளர்கள் போய் ஆய்வு செய்து, அந்த இரண்டிலேயும் அணைக்கட்டுத் திட்டம் கொண்டு வருவது சாத்தியமில்லை என்கிற அடிப்படையிலே இன்றைக்கு அதற்கு மாற்று வழியைக் கண்டுபிடித்து, தாமிரபரணியிலே வெள்ளக் காலத்தில் உபரியாகக் கடலுக்குப் போய்க் கலக்கிற வீணான தண்ணீரைக் கொண்டுவர ராதாபுரம் பகுதிக்கும், நாங்குநேரி பகுதிக்கும் 198 கோடி ரூபாய் மதிப்பீட்டிலே எப்படி ஒரு புதுக் கால்வாய்த் திட்டத்திற்கு இன்றைக்குத் தமிழக அரசு உத்தரவிட்டிருக்கிறதோ, அதைப்போல, இராம நதி நீர்த்தேக்கம் தலைவர் கலைஞர் கொண்டு வந்த அணை; 84 அடிக் கொள்ளளவு. கிட்டத்தட்ட நெல்லை மாவட்டத்தைச் சார்ந்த சட்டமன்ற உறுப்பினர்கள் அனைவருக்கும் தெரியும்.

நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் துரைமுருகன் அவர்கள், நெல்லை மாவட்டத்தில் மட்டுமல்ல, தமிழ்நாட்டிலே இருக்கிற எல்லா அணைகள், வாய்க்கால்கள், குளங்கள் ஆகியவற்றின் பெயர்களை முதற்கொண்டு மனதிலே பாடமாகப் பதிய வைத்திருக்கிற அளவிற்கு அனுபவம் மிக்க ஒருவர். அந்த 84 அடிக் கொள்ளளவு கொண்ட இராம நதி அணை, 4 நாள் மழைக் காலத்திலே, ஐப்பசி, கார்த்திகையிலே பெருகி, பாப்பாக்குடி, கடையம் பகுதிகளுக்கு மட்டும் பயனளிக்கிற அந்த அணைத் திட்டம், முக்கூடலிலேயிருந்து ஆற்றிலே பெருவெள்ளமாக விழுந்து, ஸ்ரீவைகுண்டத்திற்குக்கீழே கடலிலே போய்க் கலப்பது ஒவ்வோர் ஆண்டும் வாடிக்கை. கடந்த ஆண்டிலேகூட பல கோடிக்கணக்கான cusecs தண்ணீர் ஸ்ரீவைகுண்டத்தையும் தாண்டி, கடலிலே போய், புன்னக்காயலிலே கலந்து வீணாகி, அது உப்புத் தண்ணீராக ஆகியிருக்கிறது.

தமிழ்நாட்டிலே மிகச் சுவையான, 2,300–க்கும் மேற்பட்ட மூலிகைகள் கலந்து வருகிற தண்ணீர்தான் எங்கள் மாவட்டத்திலே இருக்கிற பொதிகை மலையிலேயிருந்து உருவாகி வருகிற தண்ணீர் என்பதை அனைவரும் அறிவார்கள். எனவே, இன்றைக்கு ஒரு கோரிக்கையை



நாங்கள் எல்லோரும் வைத்து, பொதுப் பணித் துறை அதிகாரிகள் ஆய்வு செய்து, வேளாண்மைத் துறை அதிகாரிகளும், குறைந்த செலவிலே அதிக வருவாய் வருகிற திட்டம் என அதற்குப் பரிந்துரை செய்து, இராம நதியிலே 80 அடிக்கு மேலே வருகிற தண்ணீரை, இராம நதி மேல்மட்டக் கால்வாய் என்று அமைத்து, ஏற்கெனவே பெருந்தலைவர் காமராஜர் பெயரிலே இருக்கிற காமராஜர் கால்வாய்மூலம் அந்தக் கால்வாயை மராமத்துச் செய்து, அந்த இராம நதி மேல்மட்டக் கால்வாய் தொடங்கப்பட்டால், ஆலங்குளம் ஒன்றியம், கீழப்பாவூர் ஒன்றியத்திலே இருக்கிற கிட்டத்தட்ட 20 ஆயிரம் ஏக்கர் நிலம் ஒரு போகம் பாசன உத்தரவாதம் பெறும் என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதியான தென்காசியிலே, தென்னிந்தியாவிலே இருக்கிற 5, 6 மாநிலங்களின் மக்கள் வந்து செல்கிற குற்றாலம் திருத்தலம் இருக்கிறது. ஏழைகளினுடைய சொர்க்கமாகக் கருதப்படுகிறது குற்றாலம். அதிலே பொங்கி வருகிற தண்ணீர் சித்தாறு மூலமாக வந்து, அது தாமிரபரணியிலே சீவலப்பேரி என்கிற இடத்திலே வந்து கலக்கிறது. 3, 4 மாதங்களிலே தண்ணீர் வரும். கோடையிலே 4, 5 மாதங்கள் வறண்டு போகும். வறண்டு போகிற நேரத்தில் தென்காசி நகரத்திற்குள்ளே போகிற அந்த சித்தாறு நம்முடைய கூவத்தைவிட மிக மோசமான ஒரு நிலையை அடைந்துவிடுகிறது. எனவே, என்னுடைய வேண்டுகோளாக என் தொகுதி மக்கள் சார்பாக — நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர், நம்முடைய தலைவர் கலைஞருடைய காலத்திலே இந்தத் தேவைகள் நிறைவேறவில்லையென்றால், வேறு ஓர் ஆட்சியிலே இந்தத் தேவைகள் நிறைவேறாது என்கிற கருத்து மக்கள் மத்தியிலே இருக்கிற காரணத்தினால், (மேசையைத் தட்டும் ஒலி) நெல்லை மாவட்டத்தின் மேற்குப் பகுதியில், 5 சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி ஓடுகிற சித்தாற்றை, நீங்கள் உலக வங்கியிலே இன்றைக்கு 2,841 கோடி ரூபாய் பெற்று வந்திருக்கிறீர்களே. அதிலே இந்த சித்தாறு சீரமைப்பு, மேம்பாட்டுப் பணிகளையும் இணைத்து, அந்தப் பணிகளைத் துவக்கிட வேண்டுமென்று உங்களை நான் பணிந்து வேண்டுகிறேன்.

அதைப்போல, என்னுடைய தொகுதியிலே 40 ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஜனத்தொகைகொண்ட 'A' Grade Town Panchayat சுரண்டை. அந்த சுரண்டைப் பேரூராட்சியின் மத்தியிலே செண்பகக் கால்வாய் என்று பொதுப் பணித் துறைக்குப் பாத்தியப்பட்ட கால்வாய் ஓடுகிறது. கோடைக் காலத்திலே, மழையில்லாத காலத்திலே ஊரிலே உள்ள சாக்கடைகள் எல்லாம் வந்து தேங்கி நின்று, இதனாலே பல தொற்று

வியாதிகள் வருகிற நிலை. எனவே, வருகிற ஆண்டாவது நம்முடைய பொதுப் பணித் துறை அதை ஆய்வு செய்து, அந்த செண்பகக் கால்வாயையும் சீரமைக்க வேண்டுமென்று நான் மெத்தப் பணிவன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகின்றேன்.

பிற்பகல் 12-10

தாமிரபரணியிலே கிட்டத்தட்ட 9 கால்வாய்கள் இருக்கின்றன. ஓடைமேல் அழகியான் கால்வாய், கன்னடியன் கால்வாய், திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாய், பாளையம் கால்வாய், மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், திருவைகுண்டம் தென்கால், திருவைகுண்டம் வடகால் என்று தாமிரபரணியிலே இந்த ஒன்பது கால்வாய்கள் இருக்கின்றன. இந்த ஒன்பது கால்வாய்களிலே, தலைவர் கலைஞர் அவர்கள் பொதுப் பணித் துறை அமைச்சராக இருந்த இரண்டு ஆண்டு காலத்திலும், பிறகு 1969-க்குப் பிறகு முதல்வராக வந்த அவர்களுடைய காலத்திலேதான் ஓடைமேல் அழகியான் கால்வாய், கன்னடியன் கால்வாய், மருதூர் மேலக்கால், மருதூர் கீழக்கால், திருவைகுண்டம் தென்கால், திருவைகுண்டம் வடகால் ஆகிய ஆறு கால்வாய்களிலும் cement slab பதித்து, அந்தக் கால்வாய்கள் சீரமைக்கப்பட்டன. நாளடைவிலே மக்களே அந்த slab-களையெல்லாம் தோண்டி எடுத்துக்கொண்டு போய், இப்போது சில கால்வாய்களில் cement concrete போடப்பட்டு, அந்த மராமத்துப் பணிகள் செம்மையாகச் செய்யப்பட்ட காரணத்தினால்-- நம்முடைய பொதுப் பணித் துறைச் செயலாளர் அவர்கள், நெல்லை மாவட்டத்தினுடைய ஆட்சித் தலைவராக இருந்தவர்; அவருக்கும் தெரியும் 150 cusecs தண்ணீரைத் தாமிரபரணியிலேயிருந்து எடுத்தால்கூட, ஒரு கால்வாயினுடைய கடைக்கோடிக் குளத்திற்கு 24 மணி நேரத்திற்குள்ளே தண்ணீர் போய்விடுகிறது, அந்த concrete அமைத்த பாதைகளிலே. ஆனால், திருநெல்வேலி கால்வாய், கோடகன் கால்வாய், பாளையம் கால்வாய் ஆகிய மூன்று கால்வாய்களிலே அந்த மராமத்துப் பணிகள் இதுவரை நடைபெறாத காரணத்தினால், அந்த மூன்று கால்வாய்களும் திருநெல்வேலி, பாளையங்கோட்டை, மேலப்பாளையம் நகரங்களுக்குள்ளே ஓடுகிற காரணத்தினால், அதிலே அமலைச் செடி என்கிற ஒரு விஷச் செடி இன்றைக்குப் பரவி, அதனாலே மீன் இனமும் மிகப் பெரிய அளவிலே பாதிக்கப்பட்டு, அரசாங்கத்திற்கு வருவாயும் குறைந்து, உள்ளாட்சி மன்றங்களுக்கு வருகிற பங்குத் தொகையும் போய், பொது மக்கள் சாப்பிடுகிற அந்த ருசியான குளத்து மீனும், கால்வாய் மீனும் இப்போது அறவே இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது.



இதைவிட என்னவென்றால், 200 cusecs-க்கு மேல் திறந்தால், பாதிக் கால்வாய்க்குக்கீழே தண்ணீர் போவதில்லை, இப்பொழுது மூன்று, நான்கு வருடங்களாக. அணையிலே தண்ணீர் நிரம்பியிருக்கின்றது. ஆனால், கால்வாயிலே தண்ணீர் திறந்தால், இந்த அமலைச் செடிகள் நிரம்பியிருக்கின்ற காரணத்தினால், கால்வாயின் முன் பகுதியிலே கரைகளைக் கட்டி, மீண்டும் தாமிரபரணி ஆற்றுக்கு அந்தத் தண்ணீர் போகிறது. எனவே, நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள், நெல்லை மாவட்டத்திற்கு ஒன்பது அணைகளைத் தந்த கலைஞர் அவர்கள், இந்த மூன்று கால்வாய்களுக்கும் cement concrete lining அமைத்துக் கொடுத்தால், இப்போது கார் பருவத்திலே ஒவ்வொரு கால்வாயிலும் பாதிப் பகுதி நடவே நடக்காத நிலைமை 4, 5 வருடங்களாக இருந்துகொண்டிருக்கிறது. (மணியடிக்கப்பெற்றது) இரண்டே இரண்டு நிமிடங்களில் முடித்துவிடுகிறேன். எனவே, இந்த மூன்று கால்வாய்களுக்கும் cement concrete lining அமைத்துக் கொடுக்க வேண்டுமென்று உங்களை அன்போடு நான் கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல, இன்னொரு முக்கியமான குறை என்னவென்று சொன்னால், கடந்த காலத்திலே lascar என்கிற பொறுப்பிலே, இந்தப் பொதுப் பணித் துறைக் கால்வாய்களைப் பராமரிக்கும் பணியிலே கடைநிலை ஊழியர்கள் இருந்தார்கள். அவர்கள் மழை, வெள்ளக் காலங்களிலே திறக்க வேண்டிய மடைகளை ஆற்றிற்குத் திறப்பார்கள்; அடைக்க வேண்டிய மடைகளை அடைப்பார்கள். கடந்த கால ஆட்சியிலே 5 ஆண்டு காலம் வேலை நியமனத் தடைச் சட்டம் போடப்பட்ட காரணத்தினால், இந்தப் பணியிலேயிருந்து நீக்கப்பட்ட lascar இடங்கள் எல்லாம் நிரப்பப்படாமல் இருப்பதால், இப்போது 5 ஆண்டு காலமாக அந்தக் கால்வாய்களிலே, மழைக் காலங்களிலே தண்ணீர்ப் பராமரிப்பினை ஒழுங்காகச் செய்வதற்கு ஆள் இல்லாமல், தண்ணீர் விரயமாகிறது. அதே நேரத்திலே, ஒரு பகுதியிலே விவசாய நிலங்கள் காய்கின்ற ஓர் அவல நிலையும் ஏற்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தலைவர் கலைஞருடைய காலத்தில் நான் இங்கே குறிப்பிட்ட அந்தப் பணிகளைச் செய்து கொடுத்தால், பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையிலே, ஏன், பாசனத் துறையில் நெல்லை மாவட்டம் ஒரு தன்னிறைவுபெற்ற பகுதியாக அமையும் என்பதைக் கருத்திலே கொள்ள வேண்டுமென்று தெரிவித்துக்கொள்கிறேன்.

தன்னுடைய கோரிக்கையாக, மத்தியிலே கூட்டாட்சி; மாநிலத்திலே சுயாட்சி என்று குரல் கொடுத்தவர், தென் கோடியிலே, இந்தியாவிலே

நம்முடைய முதல்வர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) தன்னுடைய அரசியல் வாழ்க்கையிலே அதை நிரூபித்துக் காட்டி, பல சரித்திரச் சாதனைகளைப் படைத்திருக்கிற தலைவர் நம்முடைய கலைஞர் அவர்கள், நெல்லை மாவட்டத்திலே இந்த ஒன்பது அணைகளைக் கட்டி, நெல்லை மாவட்டத்தினுடைய வறட்சியின் பெரும் பகுதியைப் போக்கித் தந்து, தாயாக இருக்கின்ற நம்முடைய முதல்வர் அவர்கள், அவருடைய காலத்தில் இந்தக் கால்வாய்ப் பராமரிப்புகளையும் செம்மையாகச் செய்து தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இன்னும் இரண்டே இரண்டு கோரிக்கைகள்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** அடவிநயினார் அணை, நம்முடைய சகோதரர் திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்களுடைய தொகுதியிலேயும், என்னுடைய தொகுதியிலேயும் கலந்து வருகிற அணை.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அவர் தனியாக அதைப் பேசுவார்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** காங்கிரஸ் கட்சியும், திராவிட முன்னேற்றக் கழகமும் இணைந்திருப்பதைப்போல, அந்த அணையும் இணைந்து அங்கே வருகிறது. அது திராவிடர் இயக்கத்தினுடைய மறைந்த மூத்த முன்னோடிகளில் ஒருவரும், எல்லாக் கட்சிகளைச் சார்ந்தவர்களுடைய அன்பிற்குப் பண்பாளர் என்று பெயர்பெற்றவருமான திரு. கா.மு. கதிரவன் அவர்கள் 30 ஆண்டு காலம் போராடி, அவர் கடைசியிலே இந்த அவையினுடைய கொறடாவாக இருந்த காலத்தில், கலைஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நிறைவேற்றப்பட்ட திட்டம்தான் அந்த அடவிநயினார் அணைத் திட்டம். கட்டி முடிக்கிறபோது அவர் உயிரோடு இல்லை; அமரராகி விட்டார். எனவே, என்னுடைய வேண்டுகோளாக, திராவிட இயக்கத்தைப் பெருமைப்படுத்துகிற வகையில், அதற்காக 40 ஆண்டு காலம் உழைத்தவர் என்கிற முறையில், அந்த அடவிநயினார் நீர்த்தேக்கத்திற்கு 'கா.மு. கதிரவன் அரசு அடவிநயினார் நீர்த்தேக்கம்' என்று பெயர் சூட்ட வேண்டுமென்கிற வேண்டுகோளை இந்த நேரத்தில் நான் அன்போடு வைத்துக்கொள்கிறேன். (மணியடிக்கப்பெற்றது)



ஒன்றே ஒன்று, ராதாபுரம் பகுதி வறண்ட பகுதி, அது திருநெல்வேலி மாவட்டத்திலே இருக்கிறது. அந்தப் பகுதிக்குத் தோ ாளைக் கால்வாயிலிருந்து பெருந்தலைவர் காமராசர் காலத்திலே ஒரு ால்வாய் வெட்டப்பட்டது. காமராசருடைய நினைவாக இன்றைக்கு அந்தக் கால்வாய் இருக்கிறது. இதற்குப் பெருஞ்சாணி, பேச்சிப்பாறை அணையிலிருந்து தோவாளைக் கால்வாய்மூலம் தண்ணீர் கொடுக்க வேண்டுமென்பது அரசாங்கத்தினுடைய திட்டம். 180 கன அடித் தண்ணீர் கொடுக்கப்பட வேண்டுமென்ற உத்தரவாதம் இருக்கிறது. ஆனால், இப்பொழுது கொள்ளளவு 450 கன அடியாக இருக்கிற தோவாளைக் கால்வாயிலே, அந்த 450 கன அடித் தண்ணீரைத் திறந்தாலும், அந்தத் தண்ணீர் ராதாபுரத்திற்கு வருவதில்லை. ஏனென்றால், 340 cusecs–க்குமேல் எடுத்தால் பல இடங்களிலே உடைப்பு ஏற்படுகிறது. எனவே, தோவாளைக் கால்வாயை 600 கன அடி அளவுக்கு அகலப்படுத்தி ராதாபுரம் தாலுகாவையும் வளப்படுத்த வேண்டும்.

பிற்பகல் 12–15

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** உரையை முடித்து விடுங்கள்.

**திரு. வீ. கருப்பசாமி பாண்டியன்:** ஏற்கெனவே வானம் பார்த்த பூமியிலே இருக்கிற மானம் காக்கிற மக்களையெல்லாம் காத்து நிற்கிற தலைவர் காலத்தில் இந்தத் திட்டங்கள் நிறைவேறவில்லையென்றால், அந்த மக்களுக்கு வேறு நாதியில்லை என்பதைச் சொல்லி, இதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, நிறைவு செய்கிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. எம்.ஆர். சுந்தரம். (குறுக்கீடு)

**Tmt. BADER SAYEED:** Two minutes Sir.

**Hon. DEPUTY SPEAKER:** Two minutes? (Interruption)

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே,....

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஒரு நிமிடம் இருங்கள், திரு. எம்.ஆர். சுந்தரம்.

**Tmt. BADER SAYEED**: Sir, regarding construction of MLA's Office Buildings, in page 21 in the Policy Note itself, it has been mentioned that in Triplicane the site to build the MLA's Office is to be decided. Actually it is not true. Five months earlier, the Tahsildar has come and surveyed it and said that it is alright and he has given a report. So, it is not true to say that the site is to be decided. I am glad that our Hon. Minister is here. The site is already there, but it has been waiting for the last 8 months. I request you to kindly see that this Triplicane building is built. I just want to clarify that this is not correct.

**Hon. DEPUTY SPEAKER**: I will request the Hon. Minister to give a suitable reply to you.

**திருமதி பதர் சயீத்:** *நன்றி, ரொம்ப நன்றி.* Thank you for giving me this chance.

**Hon. DEPUTY SPEAKER:** Mr. Sundaram.

***திரு. எம்.ஆர். சுந்தரம்:** *மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, தன்னிகரில்லாத் தமிழகத்தின் ஒப்பற்ற தலைவர், தமிழக முதல்வர், டாக்டர் கலைஞர் அவர்களே, எனக்கு வழிகாட்டிய மக்கள் தலைவர் ஐயா அவர்களே, இந்தச் சட்டமன்றத்திற்கு வருவதற்கு எனக்கு வாய்ப்பளித்த அன்னை சோனியா காந்தி அவர்களுக்கும், எங்கள் மக்கள் தளபதி அவர்களுக்கும், என்னுடைய வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டு, இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியின் சார்பில் எனக்குப் பேச வாய்ப்பளித்த சட்டமன்ற காங்கிரஸ் கட்சித் தலைவர் மாண்புமிகு, நாங்கள் 'நைனா' என்று அழைக்கக்கூடிய அண்ணன் திரு. சுதர்சனம் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் பெருமக்களே, சட்டமன்ற உறுப்பினர்களே, உங்கள் அனைவருக்கும் எனது வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*தமிழகத்தில் நடைபெறும் பதின்மூன்றாவது சட்டமன்றத்தில், தமிழர்களுக்காகத் தன்னையே அர்ப்பணித்துக்கொண்டு ஏழையெளிய, பாட்டாளி மக்கள் வாழ்வில் முன்னேற்றம் கண்டிட அரும்பணியாற்றிய, 50 ஆண்டு காலம் தமிழகச் சட்டமன்றத்தில் தொடர்ந்து பணியாற்றிய சாதனை படைத்து, தமிழகத்தில் ஐந்தாவது முறையாக முதல்வராகப் பொறுப்பேற்று, தமிழக மக்களின் இதயங்களில் நிறைந்து இடம்பெற்றுள்ள முதல்வர் தலைவர் கலைஞர் அவர்களின் தலைமையிலுள்ள இந்த அரசில் நான் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்ற வாய்ப்புக் கிடைத்தமைக்கு மிகவும்*



*பெருமைப்படுகின்றேன்; எனது வாழ்வில் கிடைத்த பெரும் பேறாகவும் கருதுகிறேன்.*

*மிகச் சாதாரண விவசாயக் குடும்பத்தில் பிறந்து, இன்றளவும் விவசாயத்தையே நம்பி வாழ்ந்துகொண்டிருக்கும் என்னைப்போன்ற விவசாயப் பெருங்குடி மக்களுக்கு இந்த நிதிநிலை அறிக்கை ஒரு அட்சயப் பாத்திரமாகவே விளங்குகின்றது. விவசாயக் கடன்களுக்கு 9 சதவிகிதத்திலிருந்து 7 சதவிகிதமாக வட்டிக் குறைப்பு. மீண்டும் அதனை 5 சதவிகிதமாகக் குறைத்து விவசாயிகள், விவசாயத் தொழிலாளர்களுக்கு சமூகப் பாதுகாப்புத் திட்டம் என்று ஏற்படுத்தி நிலமற்ற ஏழை விவசாயிகளுக்கு 77,117 ஏக்கர் நிலத்தைப் பண்படுத்தி இலவசமாக வழங்கியது; 10 இலட்சம் விவசாயிகளுக்குப் பயிர்க் காப்பீடு செய்துகொள்ள 15 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு வழங்கியதுபோன்ற எண்ணற்ற திட்டங்களால் விவசாயிகள் வாழ்வில் வளம் சேர்த்தமைக்கும் விவசாயிகள் சார்பில் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.*

*மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த நிதிநிலை அறிக்கை கூட்டத் தொடரில் எனக்குப் பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைமீது பேச வாய்ப்பு வழங்கியமைக்கு நன்றி தெரிவித்துக்கொள்கின்றேன்.*

*பிற்பகல் 12–20*

*பொதுப் பணித் துறையும், விவசாயத் துறையும், கூட்டுறவுத் துறையும் ஒன்றோடொன்று பின்னிப் பிணைந்து உள்ளன. பொதுப் பணித் துறைக்கு வழங்கப்படும் நிதி ஆதாரங்கள் பெரும் பகுதி விவசாயத்திற்குப் பயன் அளிக்கக்கூடியவையாக இருக்கும். இந்த நிதிநிலை அறிக்கையில் நீர் வள மேம்பாட்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்து, அதன்மூலம் ஏரிகள், வாய்க்கால்களைச் சீர் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது.*

*மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் நவீன விவசாயத் தொழில்நுட்பத்தை அறிந்து வர ஆஸ்திரேலியா பயணம் சென்று திரும்பி வந்துள்ளார்கள். அங்கு விவசாயிகள் குறைந்த தண்ணீரைக்கொண்டு அதிகப்படியான நிலங்களில் பயிர் செய்து அதிக விளைச்சல் பெற்றிடும் தொழில்நுட்பத்தையும் அறிந்து வந்துள்ளார்கள். அதாவது, மரியாதைக்குரிய வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள் எப்பொழுது வேளாண்மைத் துறைக்கு*

அமைச்சராகப் பொறுப்பேற்கின்றார்களோ, அப்பொழுதெல்லாம் விவசாயிகளிடம் அன்புகொண்டதனால் விவசாயப் பெருமக்களுக்கு மின்சாரக் கட்டணத்தை அறவே தள்ளுபடி செய்தார்கள். அதேபோல, ஐந்தாவது முறையாகத் தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் பொறுப்பேற்றவுடன், நமது மரியாதைக்குரிய மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அண்ணன் வீரபாண்டியார் அவர்கள் வேளாண்மைத் துறை அமைச்சராகப் பொறுப்பேற்றபொழுது, விவசாயக் கடன் அத்தனையையும் தள்ளுபடி செய்து, விவசாயிகளின் வாழ்வில் மகிழ்ச்சிகரமான ஒரு போக்கை ஏற்படுத்தினார்கள். அந்த வகையிலே, அத்தகைய தொழில்நுட்பத்தைத் தமிழகத்திலே நடைமுறைப்படுத்தி, விவசாயம் செழிக்க ஏற்பாடு செய்திட வேண்டுமென்று இந்த நல்ல நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)

பேரவைத் தலைவர் அவர்களே, இந்த ஆண்டு நீர் வள, நில வளத் திட்டத்தினை 2,547 கோடி ரூபாய் மதிப்பில் 63 துணை வடிநிலங்களில் நடைமுறைப்படுத்தவும், வராக நதி–கூவம் நதி தூர் வாருதல் உள்ளிட்ட தூர் வாருகின்ற நீர் வளத் திட்டப் பணிகளுக்கு 2007–2008 ஆம் ஆண்டிற்கு 260 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

தாயுள்ளம்கொண்ட தமிழக முதல்வர் தலைவர் அவர்களே, 1971–ல் தங்களது ஆட்சிக் காலத்தில் சேலம் மாவட்டம், ஆத்தூர் தொகுதியில் இராமநாயக்கன்பாளையத்தில் கல்லாறு அணைத் திட்டம் சுமார் 25 இலட்சம் செலவில் திட்டமிடப்பட்டது, நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆனால், அந்த நேரத்தில் ஆட்சி மாற்றத்தால் திட்டம் கைவிடப்பட்டது. அதன்பின் மீண்டும் கழக ஆட்சி ஏற்படும்போதெல்லாம் அதற்கான வேலைகள் தொடங்கப்பட்டு, திட்டம் நடைபெறாமலேயே நின்றுவிடுகின்றது.

இந்தத் திட்டத்தைத் தற்போது நடைமுறைப்படுத்த சுமார் 30 கோடி ரூபாய் என்று மதிப்பிடப்படுகின்றது. இந்தத் திட்டத்தால் ஆத்தூர்த் தொகுதி, தலைவாசல் தொகுதி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட கிராமப் பகுதிகளில் 25 ஆயிரம் ஏக்கர் விவசாய நிலங்கள் நீர்ப்பாசன வசதி பெறுவதுடன், அடிநீர் ஊற்றும் அதிகமாகக் கிடைக்க வாய்ப்பு ஏற்படும். வறட்சிப் பகுதியாக விளங்கிடும் ஆத்தூர், ஆத்தூர் நகராட்சி, நரசிங்கபுரம் மூன்றாம் நிலை நகராட்சி உள்ளிட்ட நூற்றுக்கும் மேற்பட்ட பஞ்சாயத்துக்களுக்கும் குடிநீர் கிடைக்க வாய்ப்பு உண்டு.



விவசாயத்தையே நம்பி வாழும் இப்பகுதி விவசாயிகள் விவசாயத் தொழிலாளர் நலன் கருதி, 1971 முதல் தொடர்ந்து ஒன்பது சட்டமன்றங்களிலும் இத்திட்டம் பேசப்படும் நிலையிலேயே உள்ளது. எனவே, நீண்ட காலமாகவே ஆத்தூர்த் தொகுதி மக்கள் ஆவலுடன் எதிர்நோக்கும் இந்தத் திட்டத்தை இந்த நிதிநிலை அறிக்கையிலேயே சேர்த்து நடைமுறைப்படுத்த வேண்டுமென்று மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களையும், மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களையும் பணிவோடு கேட்டுக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறு வாய்க்கால்கள், ஏரிகளிலிருந்து விவசாய நிலங்களுக்குத் தண்ணீர் வெளியேற்றும் வாய்க்கால்கள் அரசின் கவனத்திற்குத் தெரியாமலேயே பெரும் பகுதி அடைபட்டுவிடுகின்றன; தடைப்பட்டும் தண்ணீர் வீணாகின்றது. இதனால் ஏரிகளுக்குத் தண்ணீர் வந்து சேராத நிலை உள்ளது. இத்தகைய வாய்க்கால்களைத் தூர் எடுப்பதன்மூலம் இலட்சக்கணக்கான விவசாய நிலங்கள் பாசன வசதி பெறும்.

வாய்க்கால்களைத் தூர் எடுக்கும் காலங்களில், அவற்றின் கரைகளைப் பலப்படுத்தாமல் விட்டுவிடுகின்றனர். இதனால் வாய்க்கால்கள் மீண்டும் சிதைந்து அடைப்பு ஏற்பட்டுவிடுகின்றது. எனவே, தூர் எடுத்துச் செப்பனிடும் ஏரி, வாய்க்கால்களின் கரைகளைக் கற்களைக்கொண்டு உறுதியாகக் கட்டி, நீண்ட காலம் சிதையாமல் இருக்க ஏற்பாடு செய்திட இந்தச் சந்தர்ப்பத்தில் கேட்டுக்கொள்கிறேன். அதே நேரத்தில், ஏரிகளுக்கு வரக்கூடிய வாய்க்கால்களின் அகலம் பல இடங்களில் குறைந்து போய் உள்ளது. எனவே, இத்தகைய குறைபாடுகளை நிவர்த்தி செய்திட அரசு அதிகாரிகள் முறையாகச் செயல்பட்டு, உண்மையாக வாய்க்கால்களின் அகலத்தை ஏற்படுத்தித் தரவும் இந்த நேரத்தில் வேண்டிக் கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பணிகளால் ஏரிகள் நிரம்பும். அதனால், விவசாயம் செழிக்கும். அதன்மூலம் தமிழகம் சிறக்கும். எனவே, ஏரி, வாய்க்கால்களை மிகச் சிறந்த முறையில் தூர் எடுத்து, கற்களால் கரைகளைப் பலப்படுத்தி ஆவன செய்திட வேண்டுமென அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

பிற்பகல் 12–25

ஆத்தூர் நகரப் பகுதியில் ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த நீதிமன்ற வளாகம்

கட்டுவதற்கு 2007–2008 ஆம் நிதியாண்டில் நிதியொதுக்க வேண்டுமாய் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, ஆத்தூர் நகரப் பகுதியில் அமைந்துள்ள காவல் நிலையம் 1887 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இது சுமார் 120 ஆண்டுகள் பழமை வாய்ந்த கட்டடமாகும். மழைக் காலங்களில் கட்டடங்கள் மிகவும் பாதிக்கப்பட்டு, சுவர்கள் மழை நீரில் ஊறிவிடுகின்றன. இதனால், காவல் துறையைச் சேர்ந்த காகிதக் கோப்புகளை வைத்துப் பராமரிக்க முடியாத சூழ்நிலை உண்டாகின்றது. மேலும், விசாரணைக் கைதிகளை விசாரிக்கப் போதுமான அறைகள் இல்லை. நகரப் பகுதியில் நாளுக்கு நாள் மக்கட்தொகை அதிகரிப்பதால், குற்றங்களைத் தடுக்கவும், காகிதக் கோப்புகளைப் பாதுகாக்கவும் நவீன வசதிகளுடன் ஆத்தூர் காவல் நிலையத்தைப் புதுப்பித்துக் கொடுக்க இந்த 2007–2008 ஆம் நிதியாண்டில் நிதியொதுக்கீடு செய்து கொடுக்குமாறு மாண்புமிகு தமிழக முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, ஆத்தூர்த் தொகுதிக்கு ஒரு மகளிர் கல்லூரி அமைத்துக் கொடுக்குமாறு மாண்புமிகு அமைச்சர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, உலக வங்கியிலிருந்து, ஏரி, கால்வாய்களைத் தூர் வாரப் பல ஆயிரம் கோடி ரூபாய் நிதியை மத்திய அரசு உதவியுடன் பெற்று, அது மாநிலங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்படுகின்றது. இந்த நிதி பெரிய ஏரிகள், கால்வாய்கள்போன்ற பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகிறது. ஆனால், கிராமப்புறங்களில் உள்ள ஓடை என்று சொல்லக்கூடிய சிறிய கால்வாய்கள், சிறிய ஏரி ஆகியவை அரசின் கவனத்திற்கு வருவதில்லை. நிதியொதுக்கீடு செய்வதும் இல்லை. ஆனால், கிராமப்புறங்களில் உள்ள சிறிய குட்டை, குளம் ஆகியவற்றிற்கு மழைக் காலங்களில் நீர்வரத்து சரியாக வராத காரணத்தால், நிரம்புவதில்லை. அதனால், நிலத்தடி நீராதாரத்தைப் பெற முடிவதில்லை. இதனை அரசு கவனத்தில் கொண்டு நிதியொதுக்கீடு செய்து, சீர்படுத்த வேண்டுமாய் நான் நமது தமிழக முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

அதேபோல, சேலம் மாவட்டத்தில் உள்ள ஜவ்வரிசி ஆலையில் ஜவ்வரிசி தயாரிக்கப்படுகின்றது. ஜவ்வரிசி தயாரிப்பதற்குக் குச்சிக் கிழங்கு என்ற மரவள்ளிக் கிழங்கு தேவைப்படுகின்றது. அந்த மரவள்ளிக் கிழங்கு, விழுப்புரம், பண்ருட்டி, கடலூர், ஈரோடுபோன்ற மாவட்டங்களில், ஏன் தமிழகம் முழுவதும் விளைகிறது. அந்த மரவள்ளிக் கிழங்கிலிருந்துதான் ஜவ்வரிசி தயாரிக்கப்படுகின்றது.



மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன், இந்த ஜவ்வரிசியை வாரத்தில் இரண்டு நாட்களுக்கு நமது பள்ளிக் குழந்தைகளுக்குச் சத்துணவோடு சேர்த்து வழங்கினால், பல்லாயிரக்கணக்கான விவசாயிகளும், இலட்சக்கணக்கான தொழிலாளர்களும் பயன்பெறுவார்கள். ஏனென்றால், இந்தக் குச்சிக் கிழங்கு என்பது, மழையில்லாமல் வளரக்கூடிய ஒரு பயிராகும். அப்படிச் செயல்படுத்தினால், மழை குறைவாக உள்ள எல்லா இடங்களிலும் இந்தக் குச்சிக் கிழங்கைப் பயிர் செய்வதற்கு விவசாயிகளுக்கு ஏதுவாக இருக்கும் என்பதை இந்த நல்ல நேரத்திலே நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதேபோல, இன்றைக்கு வால்பாறைத் தொகுதியில் சுமார் 15 ஆயிரம் தென்னை மரங்கள் காய்ந்து வருவதாக நான் அறிகின்றேன். நமது மரியாதைக்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அந்த 15 ஆயிரம் தென்னை மரங்களைப் பாதுகாக்கின்ற வகையிலே அதற்கு நீர் வழங்க ஏற்பாடு செய்து கொடுக்க வேண்டுமென்று நான் அன்போடு இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல,...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. சுந்தரம், சீக்கிரம் பேசி முடியுங்கள். நேரமாகிறது.

**திரு. எம்.ஆர். சுந்தரம்:** ஒரேயொரு நிமிடம். திருப்பூர் சாயக் கழிவுகள் நொய்யல் ஆற்றில் ஒரத்துப்பாளையம் அணையில் கலந்து, அந்த நீரால் பாதிக்கப்பட்ட விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்கப்பட வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அதேபோல, ஈரோடு மாவட்டம், காங்கேயம், நொய்யல் ஆறு, ஒரத்துப்பாளையம் அணை நீர்த்தேக்கத் திட்டத்திற்கு நிலம் கொடுத்த ஏழையெளிய விவசாயிகளுக்கு இதுநாள் வரை இழப்பீடு வழங்கப்படவில்லை. எனவே, நிலம் கொடுத்த விவசாயிகளுக்கு உடனடியாக இழப்பீடு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்பிற்கு நன்றி கூறி, அமர்கின்றேன். நன்றி, வணக்கம். ஜெய்ஹிந்த். (மேசையைத் தட்டும் ஒலி)

*பிற்பகல் 12–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.எல். இளவழகன்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன point of order? உட்காருங்கள். (குறுக்கீடு) இதில் point of order எல்லாம் ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2007–2008 ஆம் ஆண்டு பொதுப் பணித் துறையினுடைய மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கும், தமிழினப் போராளி, எங்கள் குடும்பத் தலைவர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், இளைஞர்களுடைய எழுச்சி நாயகர், மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களுக்கும், ஓய்வறியா உழைப்பாளி மாண்புமிகு அண்ணன், தலைவர் கோ.க. மணி அவர்களுக்கும் இந்த நல்ல நேரத்திலே என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றேன். (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உட்காருங்கள். என்ன point of order? Point of order ஒன்றுமில்லை. உட்காருங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** பொதுப் பணித் துறை என்றாலே நமக்குப் பொதுவாக நினைவுக்கு வருவது, நம்முடைய நீர் வள ஆதாரங்களைப் பேணிக் காக்கின்ற ஒரு மாபெரும் துறை என்பதை மறுக்க முடியாது. குறிப்பாக, மழை நீரைச் சேமிக்கின்ற ஆறுகள், குளங்கள், ஏரிகளைப் பாதுகாக்கின்ற ஓர் அற்புதமான துறை பொதுப் பணித் துறையாகும்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, Point of order.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சரி, சொல்லுங்கள், என்ன?

***திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் கடலூர் மாவட்டம் சமீபத்திலே ஏற்பட்ட பெருவெள்ளத்தினால் மிகவும் பாதிக்கப்பட்ட மாவட்டமாகும். ஆனால் குறிப்பாக, வெள்ளாற்றில் ஏற்பட்ட கடும் வெள்ளத்தால், மங்களூர், சிதம்பரம், விருத்தாசலம் மற்றும் புவனகிரி ஆகிய தொகுதிகளில் பல இடங்களிலே கிராமங்கள், வீடுகள், விளைநிலங்கள் ஆகியவை அடித்துச் செல்லப்பட்டன. அது எல்லோரும் அறிந்தது. ஆனால், இந்த நிதிநிலை அறிக்கையிலே வெள்ளாற்றில் தடுப்புச் சுவர் கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்படவில்லை. ஆதலால், வெள்ளாற்றில் தடுப்புச் சுவர் கட்டுவதற்கு ஆவன செய்யுமாறு தங்கள் வாயிலாகக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இதுதானா point of order? உட்காருங்கள். திரு. இளவழகன், நீங்கள் பேசுங்கள் சார். (குறுக்கீடு) திருமதி செல்வி ராமஜெயம், நீங்கள் பேசும்பொழுது அதைச் சொல்லுங்கள்.



**திரு. கே.எல். இளவழகன்:** பொதுப் பணித் துறை என்றாலே நமக்குப் பொதுவாக நினைவுக்கு வருவது, நம்முடைய நீர் வள ஆதாரங்களைப் பேணிக் காக்கின்ற ஒரு மாபெரும் துறை என்பதை யாரும் மறுக்க முடியாது. குறிப்பாக, இயற்கை நமக்குத் தரும் மழை நீரைச் சேமிக்கின்ற ஆறுகள், குளங்கள், ஏரிகளைப் பாதுகாக்கின்ற ஓர் அற்புதமான துறை பொதுப் பணித் துறையாகும்.

தமிழகத்தில் பருவ மழை பல ஆண்டுகளாகச் சீரான அளவில் பொழியாமல் பொய்த்துக்கொண்டுள்ள சூழ்நிலையில், இருக்கின்ற நீரையும், நீர் வள ஆதார அமைப்புகளையும் இத்துறை மிகவும் உன்னிப்பாகக் கண்காணிக்க வேண்டும் என அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

குறிப்பாக, ஆறுகளில் நீரைச் சேமித்து வைக்கின்ற ஆதார அமைப்பு, மணல். இந்த மணல் நம்முடைய தேவைக்கு அவசியம் தேவைப்படுகிறது. என்றாலும், அதை அளவோடு அரசு விதிமுறைகளுக்குட்பட்டு எடுத்தால் தவறில்லை. ஆனால், நடப்பது என்ன? அரசு சொன்ன விதிமுறைகளை மீறி, அளவுக்கு அதிகமாக மணல் அள்ளப்படுவதோடு, நீர் ஆதாரங்களை அழிப்பதோடு, அரசுக்கு வருவாய் இழப்பையும் பொதுப் பணித் துறை அதிகாரிகள் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கின்றார்கள். அரசாணையிலே சொல்லப்படுவது என்னவென்று சொன்னால், பொதுப் பணித் துறையினுடைய மணல் எடுப்பு மற்றும் விற்பனை மணல் குவாரிகள் செயல்பாட்டினை முறைப்படுத்தல் ஆணை வெளியிடப்பட்டிருக்கின்ற 6–7–2005–லே சொல்லப்பட்டிருக்கின்றது என்னவென்று சொன்னால், அனுமதிக்கப்பட்ட இரண்டு யூனிட்டுக்கு மேல் லாரிகளில் அதிக அளவு மணல் கொண்டு செல்லாமல் பொதுப் பணித் துறை அலுவலர்கள் கவனத்துடன் சரிபார்க்க வேண்டுமென்று சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. ஆனால், இந்த அதிகாரிகள் அதை முறைப்படுத்தவில்லை, சரி செய்யவில்லை என்பதை வேதனையோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

வேலூர் முதல் காஞ்சிபுரம் மாவட்டம், புதுப்பட்டினம் வரை பாலாற்றிலே நடைபெறுகின்ற மணல் கொள்ளைகளால்—குறிப்பாகப் பாலாற்றில், வேலூர் மாவட்டத்திலுள்ள வாலாஜா அருகே திருமலைச்சேரி, குடிமல்லூர் அருகே பாலாற்றுப் படுகையில் பொதுப் பணித் துறைமூலம் நடத்தப்படும் மணல் குவாரியில் அரசு விதிமுறைகளுக்குப் புறம்பாக மூன்று அடி ஆழம் எடுக்க வேண்டிய மணலை, சுமார் 15 அடி முதல் 20 அடி ஆழம் வரை, கிட்டத்தட்ட

150 ஏக்கர்களுக்குமேல் மணல் எடுத்து, பாலாற்றுப் படுகை, குளங்களாகவும், ஏரிகளாகவும் இன்று காட்சியளிக்கின்றன. இதனால், அந்தப் பகுதியின் நீர் ஆதாரம் 30 அடி ஆழத்திற்குச் சென்றுள்ளது. இதனால் அந்தப் பகுதியிலுள்ள வாலாஜா நகாம், பூண்டி, சென்னசமுத்திரம், திருமலைச்சேரி, புதுப்பாடி, மாங்காடு மற்றும் 20-க்கும் மேற்பட்ட ஊராட்சிகளில் வசிக்கும் மக்களுடைய குடிநீர் ஆதாரம் தற்போது ஒரு கேள்விக்குறியாக உள்ளது. அது மட்டுமல்லாமல், விவசாய நிலங்களுடைய நீர் ஆதாரம் பொய்த்துப் போய்விட்டது. இந்த அவல நிலைக்குக் காரணம், சம்பந்தப்பட்ட, பொறுப்புள்ள அதிகாரிகளின் பொறுப்பற்ற தன்மையால் இது ஏற்பட்டது என்பதை வேதனையோடு இந்த அவையின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். இதைத்தான் எங்களுடைய மருத்துவர் அய்யா அவர்கள்கூட, பாலாற்றை பிளேக் நோய் தாக்கத் தொடங்கிவிட்டது; அது தடுக்கப்பட வேண்டும் என்று சொன்ன கூற்றுக்கு ஏற்ப, பாலாற்றைப் பாதுகாக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கின்றேன். மேலும், இங்குள்ள மணல் குவாரியில் லாரிகளில் எடுத்துச் செல்கிற மணலுக்குரிய கட்டணத்தைப் பெற்றுக்கொண்டு முறையாக ரசீது கொடுக்காமல், அரசுக்கு வர வேண்டிய வருவாயை இழக்கச் செய்து பொதுப் பணித் துறை அதிகாரிகள் மோசடி செய்துள்ளார்கள் என்பதை வேதனையோடு மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

*பிற்பகல் 12–35*

நான் இந்த அவையில் இப்போது சொன்ன தகவல்களை எல்லாம் மேம்போக்காகச் சொல்லவில்லை. கடந்த 13–2–2007 அன்று மாலை 4 மணியளவில் பொது மக்களோடு நானும், வட்டாட்சியர், கோட்டாட்சியர், மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களுடைய உதவியாளர் ஆகியவர்களோடு மணல் ஏற்றப்பட்ட லாரி டிரைவர்களை நிறுத்தி, ரசீதுகளை வாங்கிப் பார்த்து விசாரித்தபோது எங்களுக்கு அதிர்ச்சியாக இருந்தது. அதாவது, பத்து வீல் கொண்ட டிப்பர் லாரிகளில 7 யூனிட் மணல் ஏற்றப்பட்டு, ரசீது கொடுக்கப்பட்டது என்று சொன்னால், 626 ரூபாய்க்கு மட்டுமே, அதாவது இரண்டு யூனிட்டுக்கு மட்டும்தான் ரசீது கொடுத்திருக்கிறார்கள். ஆனால், அந்த ஓட்டுநரிடம் பெறப்பட்ட ரூபாய் 2,000. அரசுக்கு ஒரு லாரிக்கு இழப்பீடு 1,374 ரூபாய். இப்படிக் கணக்கிட்டால், ஒரு நாளைக்கு அந்த மணல் குவாரியில் 500–க்கும் மேற்பட்ட லாரிகளில் மணல் எடுத்துச் செல்லப்படுகிறது. அந்த அடிப்படையில், ஒரு நாளைக்கு நம்முடைய அரசாங்கத்திற்கு வர



வேண்டிய, பொதுப் பணித் துறைக்கு வர வேண்டிய வருவாய், பொதுப் பணித் துறையில் குவாரிகளை நடத்துகின்ற பொதுப் பணித் துறையின் அதிகாரிகள்மூலமாக மோசடி செய்யப்பட்டுள்ள தொகை மட்டும் கிட்டத்தட்ட ஒரு நாளைக்கு ஆறு இலட்சத்து எண்பத்து ஏழாயிரம ரூபாய் ஆகும். ஆக, திருமலைச்சேரியும், குடிமல்லூரும் சேர்ந்து கிட்டத்தட்ட ஏழு மாதங்களாக அந்த மணல் குவாரிகள் நடத்தப்படுகின்றன. அந்த அடிப்படையிலே கணக்கிட்டால், இந்த அரசாங்கத்திற்கு அந்த குவாரியில் மட்டும் சுமார் 14 கோடி ரூபாய்க்கு, நம்முடைய நல்லாட்சிக்கு, பொறுப்பில்லாத பொதுப் பணித் துறை அதிகாரிகள் இந்த மாபெரும் இழப்பை ஏற்படுத்தியுள்ளார்கள் என்பதை மிக வேதனையோடு, வருத்தத்தோடு தெரிவித்துக்கொள்கிறேன்.

இந்த நிகழ்வுகள் பற்றி எல்லாம் நம்முடைய வட்டாட்சியர் முன்பும், கோட்டாட்சியர் முன்பும் அந்த ஓட்டுநர்கள் வாக்குமூலம் கொடுத்துள்ளார்கள். கோட்டாட்சியர் அவர்களே ஒவ்வொரு ஓட்டுநரிடத்திலும் வாக்குமூலம் பெற்றுப் பதிவு செய்துள்ளார்கள என்பதை இந்த நேரத்திலே நம்முடைய பேரவையின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன். எனவே, அரசுக்கு வர வேண்டிய வருவாயை இழக்கச் செய்த, மோசடி செய்த, மணல் குவாரிகள் நடத்துகின்ற பொதுப் பணித் துறை அதிகாரிகளை உடனடியாகப் பணி நீக்கம் செய்ய வேண்டும். அவர்கள்மீது குற்ற நடவடிக்கை வழக்குப் பதிவு செய்யப்பட வேண்டும். அரசாங்கத்திற்கு இழப்பாக ஏற்படுத்திய அந்தப் பணத்தினை அவர்களிடமிருந்து பெற வேண்டும். மேலும், மணல் குவாரிகள் முறைப்படுத்தப்பட வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். ஏனென்று சொன்னால், மணல் குவாரிகள்மூலமாக அரசாங்கத்திற்கு—அதாவது, கொள்கை விளக்கக் குறிப்புப் புத்தகத்திலே சொல்லியிருக்கிறீர்கள்—பக்கம் 112–ல், 2006–2007 ஆம் ஆண்டில் ரூ.128.11 கோடி வருவாய் வந்ததாகச் சொல்லியிருக்கிறீர்கள். நிச்சயமாக நான் சொல்கிறேன். அநத அதிகாரிகளுடைய செயல்பாட்டினைக் கண்காணித்தால், தமிழகத்தில் நடக்கக்கூடிய குவாரிகளை முறைப்படுத்தினால், தமிழகத்தினுடைய வருமானம் பன்மடங்கு உயரும். இப்போது சொல்லப்பட்டுள்ள வருமானம் பத்து மடங்கு உயரும் என்பதை ஆணித்தரமாகச் சொல்கின்றேன். ஏனென்று சொன்னால், என்னுடைய பகுதி குவாரியில் மட்டுமல்ல....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நேரம் ஆகிறது. சீக்கிரம் பேசி முடியுங்கள்.

**திரு. கே.எல். இளவழகன்:** என்னுடைய பகுதியிலுள்ள குவாரியில் மட்டுமல்ல, அருகில் இருக்கின்ற காஞ்சிபுரம் குவாரியில் நடந்திருக்கிறது. நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் சக்தி கமலாம்பாள் பகுதியிலும் நடந்திருக்கிறது. இதையெல்லாம் நான் சொல்வதற்குக் காரணம், தமிழகத்தில் நிலத்தடி நீர் அபாயகரமான அளவிற்குக் குறைந்து வருவதை அரசின் கவனத்திற்கு நான் கொண்டு வருகிறேன். ஏனென்றால், செயற்கைக்கோள் படங்கள் தமிழகத்தைச் சிவப்பு வண்ணமாகக் காட்டுகின்றன. அதிகம் சுரண்டப்பட்டதாகக் காட்டுகின்றன.

நிலத்தடி நீர்ப் பாதுகாப்புப் பற்றிப் பல்வேறு திட்டங்கள் சொல்லப்பட்டாலும், அவை நடைமுறையில் மிகச் சிறிய அளவிலேயே இருக்கின்றன. கட்டடங்கள்தோறும் மழை நீர் சேமிப்புத் தொட்டிகள் கட்டப்பட்டாலும், அவை பெயரளவிற்கு உள்ளனவேயொழிய, பயன்படுத்தப்படவில்லை. நிலத்தடி நீர் அபாயகரமான, ஆபத்தான அளவில் உள்ளது. தமிழகம் பாலைவனம் ஆகும் அபாயமும் உள்ளது. இதைக் கருத்தில்கொண்டு, வருகிற ஆண்டை நிலத்தடி நீர்ப் பாதுகாப்பு ஆண்டாக அரசு அறிவிக்க வேண்டும். நிலத்தடி நீர்ப் பாதுகாப்பிற்காக இந்த ஆண்டு திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டு, நிலத்தடி நீரை ஒரு நுகர்வோர் பொருளாகக் கருதாமல், ஒரு கனிம வளமாகக் கருத வேண்டும். இந்த ஐந்தாண்டு காலத்தில் அனைத்து நீர்நிலைகளிலும் தூர் வாரிச் சீரமைக்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன். மழைக் காலங்களில் உபரி மழை நீர் வீணாகப் போவதைத் தடுக்கும்விதமாகத் தமிழ்நாடு முழுவதும் உள்ள அனைத்து ஆறுகளையும் பாதுகாத்திட 5 கிலோ மீட்டருக்கு ஒரு தடுப்பு அணை என்ற வீதத்தில் கட்டி, நீரினுடைய தேவையைப் பூர்த்தி செய்ய வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-40

பல ஆண்டுகளுக்கு முன்பாக இருந்த குடிமராமத்து முறையைப் பற்றி மக்களிடையே விழிப்புணர்வை ஏற்படுத்தி, ஊக்குவிக்க வேண்டும் என்பதை உணர்த்தும்முகமாக, பசுமைப் போராளி எங்கள் மருத்துவர் அய்யா அவர்களும், மாண்புமிகு மருத்துவர் சின்ன அய்யா அவர்களும், அவர் தலைமையிலே பசுமைத் தாயகத்தின் சார்பாகத் தமிழகம் முழுவதும் 260 ஏரிகளில் தூர் வாரி, அதுவும் பொது மக்களோடு சேர்ந்து தூர் வாரி, பொது மக்கள் மத்தியிலே ஒரு விழிப்புணர்வை உண்டுபண்ணினார்களே, அந்தப் பழைய குடிமராமத்து முறையை



இவ்வரசாங்கம் ஊக்குவிக்க வேண்டும் என்று அன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

தமிழகத்தில் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை நவீனப்படுத்த முயற்சி மேற்கொள்ளப்பட வேண்டும். வாய்ப்புள்ள அனைத்துப் பகுதிகளிலும் ஒருங்கிணைந்த நீர்வடிப் பகுதி மேலாண்மைத் திட்டங்கள் நிறைவேற்றப்பட வேண்டும். இதன்மூலம் தடுப்பணைகளைக் கட்டுதல், குட்டைகள் அமைத்தல், நீர்வழிகளைச் சீரமைத்துப் பாதுகாத்தல் ஆகியவற்றோடு நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் மரங்கள் நட்டு வளர்க்கப்படவும் வேண்டும். மாநிலத்தில் உள்ள அனைத்து ஆறுகளையும் சுத்தப்படுத்தும் திட்டத்தை உருவாக்கி, அதனைச் செயல்படுத்துவதற்கு ஓர் உயர்மட்டத் தொழில்நுட்பக் குழுவை அமைக்க வேண்டும்.

இந்தியாவில் உள்ள நதிகளைத் தேசியமயமாக்குவதுதான் ஒரு நிரந்தரத் தீர்வாக அமையும். எனவே, நதி நீர் இணைப்புத் திட்டத்தினைச் செயல்படுத்த மத்திய அரசை வலியுறுத்த வேண்டும். நீர் வளம் மற்றும் பாசன மேம்பாட்டில் உழவர்களுக்கும், உள்ளாட்சி அமைப்புகளுக்கும் அதிகாரம் அளிக்க வேண்டும். நீர் வள ஆதாரங்களில் உள்ள ஆக்கிரமிப்புகள் கடுமையான சட்டத்தின்மூலம் அகற்றப்பட்டு, அவற்றை நீர் சேமிப்புப் பகுதிகளுக்குக் கொண்டு செல்கின்ற நிலைக்கு மேம்படுத்த வேண்டும். நீர் வள ஆதாரங்களை எந்தக் காரணத்தைக் கொண்டும் அழிக்க அனுமதிக்கக் கூடாது. ஒருங்கிணைந்த நீர் வளப் பாதுகாப்புக்காக, உழவர்களையும், நீர் வள ஆர்வலர்களையும், சமூக அமைப்புகளையும்கொண்ட குழுக்கள் அமைக்கப்பட வேண்டும்.

காவிரிப் பிரச்சினையில் காவிரி நடுவர் மன்றம் அளித்துள்ள தீர்ப்பு தமிழகத்திற்கு இடைக்காலத் தீர்ப்பைவிடப் பாதகமாக அமைந்துள்ளது. தமிழகத்தினுடைய உரிய பங்கினைப் பெறுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை அரசு மேற்கொள்ள வேண்டும்.

முல்லை பெரியாறு பிரச்சினையில் உச்ச நீதிமன்றத்தை நாடித் தீர்ப்பதோடு, தமிழகத்திற்குக் கிடைக்க வேண்டிய உரிய பங்கினைப் பெற அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும் என்பதைக் கேட்டுக்கொண்டு....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். Time ஆகிவிட்டது.

**திரு. கே.எல். இளவழகன்:** ஆந்திர அரசின் நடவடிக்கையால் ஏற்படுகின்ற ஒரு பேராபத்தைப் பற்றிச் சுட்டிக்காட்ட ஆசைப்படுகின்றேன்.

*"காவிரி, தென்பெண்ணை பாலாறு – தமிழ்*
*கண்டதோர் வையை பொருணை நதி – யென*
*மேவிய யாறு பலவோடத் – திரு*
*மேனி செழித்த தமிழ்நாடு"*

என்று மகாகவி பாரதியாரால் பாடப்பெற்ற சிறப்புப் பெற்றது பாலாறு அன்று. இன்று அண்டை மாநிலமான ஆந்திர அரசால், குறிப்பாக குப்பம் அருகே, கணேசபுரம் என்ற இடத்திலே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா.

**திரு. கே.எல். இளவழகன்:** குரங்குமலை இடையே கட்டப்படவுள்ள அணையால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திருமதி லதா. (குறுக்கீடு) லதா, பேசுங்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் லதா, பேசுகிறீர்களா, இல்லையா? (குறுக்கீடு) உட்காருங்கள் நீங்கள். (குறுக்கீடு) உறுப்பினரை உட்காரச் சொல்லுங்கள். திருமதி லதா, பேசுகிறீர்களா அல்லது அடுத்த உறுப்பினரைக் கூப்பிடட்டுமா?

**திரு. கே.எல். இளவழகன்:** என் தொகுதியைப் பற்றி ஓரே ஒரு நிமிடம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, இரண்டு, மூன்று தடவை bell அடித்தாகிவிட்டது. நீங்கள் கேட்கமாட்டேன் என்கிறீர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திருமதி லதா.

**திருமதி ஜி. லதா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறையின் மானியக் கோரிக்கையின்மீது பேசுவதற்கு வாய்ப்பளித்த தங்களுக்கு எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். குடியாத்தம் தொகுதியில் நேற்று மோர்தானா அணையைத் திறந்து, அந்தத் தொகுதி மக்களின் குடிநீர்ப் பிரச்சினையைப் போக்குகின்றவிதத்தில் செயல்பட்ட பொதுப் பணித் துறை அமைச்சருக்கும், கலைஞர் அவர்களுக்கும் தொகுதி மக்களின் சார்பிலும், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பிலும் பணிவான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



மனிதனின் வாழ்க்கைக்கு அத்தியாவசியமாக ஜீவாதாரமாக இருப்பது குடிநீர். தமிழகத்தில் நீர்ப் பற்றாக்குறை இருந்து வரும் காலத்தில், விவசாயிகளின் வாழ்வு மட்டுமல்லாமல், குடிநீர் விநியோகம், தொழிற்சாலைகளுக்கான நீர் உபயோகம், இவற்றை நம்பியுள்ள மக்களின் வாழ்வாதாரங்களும் கேள்விக்குறியாக உள்ளன. தமிழகத்தில் 34 ஆறுகளும், 39,202 ஏரிகளும், 60 பாசன நீர்த்தேக்கங்களும், 18 இலட்சம் கிணற்றுப் பாசனங்களும், அத்துடன் 22,500 மில்லியன் கன மீட்டர் நிலத்தடி நீரும் இருக்கின்றன. இவ்வளவுக்கு இடையில் தமிழகத்தில் பயிர் செய்ய ஏற்ற நிலப் பரப்புகளாக 83,33,583 எக்டேர் பரப்பளவு நிலம். அதில் 28,73,197 எக்டேர் நிலப்பரப்பு மட்டுமே நீரை முழுமையாகப் பயன்படுத்துகின்ற நிலப்பரப்பாக இருக்கிறது. இதில் 64 சதவிகிதமான நிலங்கள் தண்ணீரின்றி வறட்சி நிலை காணப்பட்டிருக்கின்ற நிலங்களாக இருக்கின்றன.

தமிழகத்தில் மட்டும் 39,202 ஏரிகளும் 20 ஆண்டு காலமாகத் தூர் வாரப்படாமல், பழுது பார்க்கப்படாமல் கிடப்பில் போடப்பட்டிருக்கின்றன. அதன் காரணத்தினால், நிலத்தடி நீர் என்பது தமிழகத்தில் கால்வாய்ப் பாசனம், ஏரிப் பாசனம் அற்றுப் போய் இருக்கிறது. இதற்கு மாறாக, நிலத்தடி நீர்ப்பாசனம் என்பது அளவுக்கு அதிகமாகத் தமிழ்நாட்டில் பயன்படுத்தப்படுகிறது. இது குறிப்பிடத்தக்க விஷயமாக இருக்கிறது.

*பிற்பகல் 12–45*

தமிழகத்தில் பட்ஜெட் பற்றாக்குறையையொட்டி விவாதித்துக்கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், தமிழ்நாட்டில் நீர் நெருக்கடி, நீர்ப் பற்றாக்குறை என்பது அதிக அளவில் இருக்கிறது. தமிழகம் முழுமையும் நீர்ப் பற்றாக்குறையின் பாதிப்பு என்பது அதிகமாக இருக்கிறது. இதைப் போக்குகின்றவிதத்தில் இந்த விவாதங்கள் அமையப்பெறும் அதே நேரத்தில், நீர்ப்பாசனத் துறையையொட்டி இங்கு கொடுக்கப்பட்டிருக்கிற விஷயங்களிலும், கொள்கை விளக்கக் குறிப்புகளிலும் இதற்கான நிதி ஒதுக்கீடு என்பது போதுமானதாக இல்லை என்பதனைச் சுட்டிக்காட்ட விரும்புகிறோம்.

தமிழகத்தில் நீர் வளம் குறித்து ஆய்வு செய்த நிபுணர் குழு ஒன்று, தமிழகத்தில் 260 ஆயிரம் மில்லியன் கன அடி நீர் சேமிக்க வாய்ப்பு இல்லாமல் வீணடிக்கப்பட்டிருக்கிறது என்பதனை அரசுக்குத் தெரியப்படுத்தி இருக்கிறது. தண்ணீர் சேமிக்கத் தமிழக அரசு உலக வங்கியிடமிருந்து ரூ. 2,182 கோடி பெற்று, தண்ணீர்ப் பிரச்சினையைப்

போக்கத் திட்டம் உருவாக்கப்பட்டிருப்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்கிறது. அதே நேரத்தில், உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட அந்த நிதிக்கு உலக வங்கியின் நிபந்தனைகள் என்னென்ன என்பதனை இந்தச் சட்டமன்றத்தில் தெளிவுறச் சொல்ல வேண்டுமென்பதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி சார்பாகக் கேட்டுக்கொள்கிறோம். உலக வங்கியிடமிருந்து பெறப்பட்டிருக்கிற இந்த நிதி எந்தெந்தத் திட்டங்களில், எவ்வளவு காலக்கட்டத்திற்குள் ஒதுக்கப்படுகிறது, செய்யப்படுகிறது என்பதனைத் தெளிவாகக் கூறியிருந்தால், அதை மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வரவேற்றிருக்கும். உலக வங்கியின் நிதி முழுமையாகப் பயன்பெறுகின்ற காலம் உட்பட இதில் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும் என்பதனைக் கூறிக்கொள்ள விரும்புகிறோம்.

அதே நேரத்தில், கடந்த காலத்தில் கொண்டு வரப்பட்ட மழை நீர் சேகரிப்புத் திட்டத்தின்படி, வீட்டுக்கு ஒருவர் மழை நீரைச் சேமிக்கக் கட்டாயமாகத் தொட்டி கட்ட வேண்டும், இல்லையென்றால் அவர்களுக்கு மின் இணைப்பு துண்டிக்கப்படும் என்று பல தண்டனைகள் வழங்கப்பட்டன. அதுபோன்று அல்லாமல், அந்த மழை நீர் சேகரிப்புத் தொட்டிகளுக்குக் கொடுத்த அந்தத் திட்டத்தைப் போன்று அல்லாமல், ஒதுக்கப்பட்ட நிதி, உலக வங்கியிடமிருந்து பெறப்பட்ட நிதி, இவை முழுமையானவிதத்தில் பயன்பெறுகின்ற அந்தத் திட்டத்தை, அனைத்துக் கட்சிகளைக்கொண்ட கண்காணிப்புக் குழுக்களை ஏற்படுத்தி, அவர்களின் ஆலோசனையின்படி இந்தத் திட்டத்தை முழுமையாக அமல்படுத்தும் திட்டத்தை அரசு கொண்டு வர வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கேட்டுக்கொள்கிறோம்.

தமிழகத்தில் தண்ணீர் என்பது வியாபாரமாக்கப்பட்டு வருகிறது. குறிப்பாக, சென்னை, திருப்பூர்போன்ற பகுதிகளிலும், நகரப் பகுதிகளிலும் தண்ணீர் என்பது பால் விற்பனையைவிட அதிவேகமாக விற்பனை செய்யப்பட்டு வருகிறது. இவற்றைத் தமிழக அரசு கட்டாயம் தடுத்து நிறுத்த வேண்டிய அவசியம் இருக்கிறது.

தமிழகத்தில் ஆறுகளின் ஆக்கிரமிப்புகள் அதிகமாக இருக்கின்றன. ஆற்று ஆக்கிரமிப்புகளை அகற்றி, மணல் கொள்ளையைத் தடுத்து, ஆறுகளை முழுமையாகப் பாதுகாக்க வேண்டிய அவசியம் இருக்கிறது. வேலூர் மாவட்டத்தில் பாலாறு எங்கு இருக்கிறது என்ற கேள்விக்குறியை எழுப்புகின்றவிதத்தில் ஆக்கிரமிப்புகளும், மணல் கொள்ளையும் சர்வசாதாரணமாக நடந்துகொண்டிருக்கின்றன.



இவற்றைத் தடுக்கின்றவிதத்தில் நல்ல சட்டங்களைக் கொண்டு வந்து, கட்டாயமாக அதைத் தடுத்து நிறுத்த வேண்டுமென்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சி வலியுறுத்திக் கூறிக்கொள்கிறது.

தமிழகத்தில் ஆண்டுதோறும் வறட்சி என்பது ஒவ்வொரு பகுதியாகப் பாதித்துக்கொண்டு வருகிறது. மாறி, மாறி ஏதாவது ஒரு மாவட்டம் இந்தப் பாதிப்பை அடைகிறது. வேலூர் மாவட்டம் கறுப்பு மாவட்டமாக, நிலத்தடி நீரே இல்லாத மாவட்டமாக இருக்கிறது. இவை மிகப் பெரிய ஆபத்தைச் சந்திக்கின்றவிதத்தில் இருக்கின்றன. இருந்தாலும், பெரம்பலூர், வேலூர், கிருஷ்ணகிரி, தருமபுரிபோன்ற மாவட்டங்களில் 20 கோடி ரூபாய் ஒதுக்கீடு செய்த முதல்வருக்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

குமரி மாவட்டம், விளவங்கோடு, திருவட்டாறு ஆகிய தொகுதிகளுக்குட்பட்ட நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீரைத் திறந்துவிட கேரள அரசு இசைவு தெரிவித்தது. தீர்மானம் நிறைவேற்றித் தமிழக அரசுக்குக் கடிதம் எழுதியுள்ளதாகத் தெரிகிறது. அதனடிப்படையில் நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீரைப் பெறுவதற்குத் தமிழக அரசு மேற்கொண்ட நடவடிக்கைகள் குறித்து விளக்கம் அளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12–50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நெய்யாறு இடதுகரைக் கால்வாயில் தண்ணீரை விட வேண்டுமென்று நாங்கள் பேசாத பேச்சே இல்லை. இந்த அரசும் சரி, கடந்த கால ஆட்சியிலும் சரி, கடிதமும் எழுதியிருக்கிறோம்; இரண்டு, மூன்று தினங்களுக்கு முன்னாலேகூடக் கேரளத்தின் நீர்ப்பாசனத் துறை அமைச்சரோடு பேசியிருக்கிறேன். ஆனால், பேச்சுவார்த்தைதான் நடக்கிறதே தவிர, தண்ணீர் வந்தபாடில்லை.

**திருமதி ஜி. லதா:** பேச்சுவார்த்தை நடத்திய அமைச்சருக்கு நன்றி. பேச்சிப்பாறைப் பகுதியில் நூறு ஆண்டு காலம் ஆகிவிட்டது. அதற்குப் பக்கத்தில் சார் அணை ஒன்று கட்ட வேண்டியுள்ளது; பாதுகாப்பு அணையைக் கட்ட வேண்டியுள்ளது. அதைத் தூர் வாருவதற்கான நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

பொதுப் பணித் துறையில் தினக் கூலிகளாகப் பணியாற்றிக்கொண்டிருந்த 1,056 ஊழியர்களைச் சென்ற பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே பணி நிரந்தரம் செய்வதாக முடிவெடுத்தோம். ஆனால், இன்று வரையில் அதற்கான உத்தரவு வழங்கப்படாமல் இருக்கிறது என்பதனைத் தங்களுடைய கனிவான கவனத்திற்கு மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் கொண்டு வருகிறோம்.

தமிழகத்தில் ஏற்பட்டுள்ள நீர் நெருக்கடிகளைச் சீர் செய்ய, பாசனத்திற்கென்று தனியாக நீர் வளத் துறை என்ற தனித் துறை இயங்க வேண்டுமென்று தங்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகிறோம்.

வேலூர் மாவட்டத்தில் ஓகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம் நிறைவேற்றப்படும் என்று மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். மிக்க நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறோம். அதே நேரத்தில், இந்த பட்ஜெட் கூட்டத் தொடரிலேயே அதை அமல்படுத்தும்விதத்தில்அதற்கான அறிவிப்பைச் செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறோம். வேலூர் மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டும். நீர் ஆதாரம் என்பது சுத்தமாக இல்லை. வேலூர் மாவட்டம் வறட்சி மாவட்டமாக இருப்பதால், அந்த மாவட்டத்தை வறட்சி மாவட்டமாக அறிவிக்க வேண்டுமென்று தங்களுடைய கனிவான கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன்.

வேலூர் மாவட்டத்தில் இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்றவிதத்தில் I.T.Park-ஐ ஏற்படுத்த வேண்டும். அரியூர் பகுதியில் முருங்கேரி, குப்பம் ஏரிப் பகுதியில் 500 ஏக்கர் இடம் இருக்கிறது. அந்தப் பகுதியில் I.T.Park-ஐக் கொண்டு வருவதற்கான ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தமிழக அரசின் கட்டடப் பணிகளில் இன்று சிமெண்ட் விலையும், மணல் விலையும், கம்பி விலையும் ஏகப்பட்ட அளவில் ஏறி இருப்பதால், தரமான கட்டடங்களாக அமையக்கூடியவிதத்தில் நிதி ஒதுக்கீட்டையும், அதற்கான ஆதாரத்தையும் அதிகமாக ஏற்படுத்தித் தர வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** சீக்கிரம் சொல்லுங்கள். (குறுக்கீடு) உரையை முடியுங்கள்.

**திருமதி ஜி. லதா:** குடியாத்தம் தொகுதியில் நீண்ட காலமாக மக்களின் எதிர்பார்ப்போடு இருந்து வருகின்ற நீதிமன்ற வளாகம் இந்த ஆண்டே தொடங்கப்படுவதற்கான ஏற்பாட்டைத் தமிழக அரசு செய்ய வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மருத்துவமனை, பொது மருத்துவமனையாக உள்ளது. அதற்கான நிதி ஒதுக்கீட்டை 11 கோடி ரூபாயாக ஒதுக்கீடு செய்து தருமாறு பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

தருமபுரி மாவட்டத்தின் அரூர் தொகுதியில் பழங்குடி மக்கள் வாழும் பகுதியில், கோட்டாறுப் பகுதியில் சல்லாறு அணை கட்ட வேண்டும்...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கையில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். பொதுப் பணித் துறையின் கொள்கை விளக்கக் குறிப்பில் தமிழகத்தினுடைய தட்ப வெப்பச் சூழ்நிலைகளையெல்லாம் படம் பிடித்துக் காட்டி, அறிவியல் தொழில்நுட்பரீதியாகத் தீர்வு காண்பதற்கான பல்வேறு முயற்சிகளை எடுக்கக்கூடிய கொள்கை விளக்கக் குறிப்பாக அதனைத் தந்திருக்கின்ற நமது மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பில் மனதாரப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

பிற்பகல் 12-55

அந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே பல்வேறு அரிய கருத்துகளும், தேவையான தகவல்களைத் தெரிந்துகொள்வதற்குரிய வாய்ப்புகளும் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, இந்தியாவினுடைய மக்கள் தொகையில் தமிழக மக்கள் தொகை 7 சதவீதம் பேர் என்றும், இந்தியாவினுடைய மொத்த நிலப்பரப்பிலே தமிழகம் 4 சதவீதம் என்றும், இந்தியாவினுடைய மொத்த நீர் வளத்தில் தமிழகம் 3 சதவீதம் மட்டுமே என்றும் அதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. ஆகவே, தமிழகத்தில் தண்ணீரின் தேவை எவ்வளவு வேகமாக நமக்குத் தேவைப்படுகிறது என்பதும், தண்ணீர்

வளம் குறைவாக இருக்கிறது என்பதையும் அந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள்.

குறிப்பாக, இந்தியாவினுடைய தனி மனிதனுடைய பாசனத் திறன் என்பது 0.15 எக்டேர் என்றும், அதிலே தமிழகத்தினுடைய தனி மனிதப் பாசனத் திறன் 0.08 எக்டேர் என்று மட்டுமே இதிலே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படியானால், இந்திய அளவிலே பாசனம் பெறுகிற தனி மனிதனுடைய அந்த அளவிலிருந்து பார்க்கிறபோது, சரி பாதிக்குக் குறைவாக நம்முடைய தமிழகம் இருக்கிறது என்பது அதிலே சுட்டிக்காட்டப்பட்டிருக்கிறது. அப்படியானால், மிகப் பெரிய பாதிப்பை நோக்கி நமது தமிழகம் தண்ணீருக்காக ஏங்கித் தவிக்க வேண்டிய ஒரு சூழ்நிலைக்குத் தமிழகம் ஆளாக்கப்பட்டிருக்கிறது என்பதை அந்தப் புள்ளிவிவரங்கள் தெரிவிக்கின்றன. அப்படி நமது தமிழகத்திலே ஆறுகள், ஏரிகள், கிணற்றுப் பாசனம் என்ற முறையிலேதான் பாசன மேலாண்மை. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்ன பேசுகிறார், என்ன வார்த்தைகள் என்று எங்களுடைய காதுகளிலே விழாதவண்ணம் மாண்புமிகு உறுப்பினர்கள் இரண்டு பக்கமுமே பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவையிலே பேசக்கூடியவர்களுடைய கருத்துகள் என்ன என்பதை அமைச்சர்கள் அறிந்துகொள்வதற்கு வாய்ப்பு இல்லாமல் இருக்கின்றது. இதற்கு ஒரு சரியான தீர்ப்பு வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உறுப்பினர்கள், அவர் கருத்தைச் சொல்கிறார். (குறுக்கீடுகள்) பொது மக்களுடைய நலனுக்காகப் பல கருத்துகளை அவர் சொல்கிறார். அதை அமைதியாகக் கேட்டுக்கொண்டிருக்க வேண்டும். அதை விட்டுவிட்டு, நீங்களே ஒருவருக்கொருவர் பேசிக்கொண்டிருந்தால் என்ன அர்த்தம்? அமைதியாக இருங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தினுடைய நீர் இருப்பு மிகவும் குறைந்துகொண்டே வருகிறது என்ற அபாயம் இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது.



நீரின் தேவை அதிகமாகிக்கொண்டிருக்கிறது. ஆகவே, இதனைப் பொதுவாக மிகப் பெரிய கவலை அளிக்கக்கூடிய ஒன்றாக நாங்கள் கருதுகிறோம். இதைச் சரி செய்வதற்குரிய முயற்சிகள், திட்டங்கள் என்ற அடிப்படையிலேதான், அனைத்து வடிநிலங்களிலும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை நவீனப்படுத்தி, கால்வாய்களை, ஏரிகளைப் புனரமைத்து, நீர் மேலாண்மையை மேம்படுத்துவது அவசியம் என்ற அடிப்படையிலேதான் உலக வங்கித் திட்டத்தின்மூலமாக 5,763 ஏரிகளைப் புதுப்பிப்பதற்காக 1,086 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டிருக்கிறது. மத்திய, மாநில அரசுகளின்மூலமான இந்த நிதி ஒதுக்கீட்டின்மூலம் இது நிறைவேற்றப்பட இருக்கிறது. இந்தப் பணிகளைச் செய்வதற்குரிய முயற்சிகள் என்ற முறையில் நமது பொதுப் பணித் துறை தமிழகத்தினுடைய நீர் ஆதாரத்தை வளப்படுத்துவதற்கான ஒரு தொலைநோக்குப் பார்வையோடுகூடிய திட்டத்தைத் தயாரிப்பதாக இங்கே வழங்கப்பட்டிருப்பதை இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் மனதார வரவேற்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே மிக முக்கியமாகச் சொல்லப்பட்டிருப்பது என்பது, நம்முடைய நீரின் தேவைகளை நிறைவு செய்வதற்குரிய வாய்ப்பாக, தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டம் இதிலே வலுவாகக் கூறப்பட்டிருக்கிறது. அதிலே, மகாநதி, கோதாவரி, கிருஷ்ணா, பெண்ணையாறு, காவிரி, வைகை, குண்டாறு ஆகிய நதிகளை இணைக்கக்கூடிய திட்டமாக, தீபகற்ப நதிகளை இணைக்கின்ற திட்டத்திற்கு, அதற்குரிய வாய்ப்புகள் என்னவெல்லாம் இருக்கின்றன என்பதைப் பற்றி ரொம்பவும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது. அப்படி அதன்மூலமாக நமக்குக் கிடைக்கக்கூடிய அந்த நீரைப் பயன்படுத்தி, தமிழகம் மிகப் பெரிய அளவிலே பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பிருக்கிறது. தமிழகத்திற்குக் கிட்டத்தட்ட 214 டி.எம்.சி. நீரும், கிட்டத்தட்ட 8 இலட்சம் எக்டேர் நிலப்பரப்பும் பாசனம் பெறுவதற்குரிய வாய்ப்புகள் இருக்கின்றன என்று இந்த தீபகற்ப நதிகளை இணைக்கும் திட்டத்தின்மூலமாகக் குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது. இதைத்தான் நாம் வலியுறுத்தி வருகிறோம். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இதைப் பற்றி வலியுறுத்திப் பேசி, இந்தத் திட்டத்தை மத்திய அரசாங்கம் நிறைவேற்றச் செய்வதற்குரிய ஒரு தொலைநோக்குப் பார்வைக்குரிய திட்டத்தை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார்கள்.

இவை இணைக்கப்படுமானால்தான் தமிழகம் பாதுகாக்கப்படும் என்ற இக்கட்டான நிலையில் இருக்கின்ற காரணத்தினாலே, இதை அனைவருமே சேர்ந்து வலியுறுத்த வேண்டிய கடமையிலே நாம் இருக்கிறோம் என்பதையும் இந்த அவையின்மூலமாக மத்திய அரசாங்கத்தை நாம் வலியுறுத்தக் கடமைப்பட்டிருப்பது, தீபகற்ப நதிகளை இணைப்பதற்குரிய அந்தத் திட்டத்தை உடனடியாக மத்திய அரசாங்கம் பாராளுமன்றத்திலே அறிவிப்புச் செய்து, அந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்குரிய நிதியொதுக்கீடு செய்வதற்குரிய முயற்சிகளை எடுத்து, மாநிலத்தினுடைய பங்கு என்ன என்பதைப் பற்றியும் குறிப்பிட்டுச் சொல்லி, அதை நிறைவேற்றுவதற்குரிய முயற்சிகளை எடுத்து, இந்தியாவினுடைய நீரின் தேவையைப் பாதுகாப்பதற்கும், தென் மாநிலங்களைப் பாதுகாப்பதற்கும் உரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் சார்பிலே நான் வலியுறுத்திச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். இது ஓர் அவசரப் பொதுமுக்கியத்துவம் வாய்ந்த நிகழ்ச்சியாக இருக்கிறது. இதனைத் தேசியத் தொலைநோக்குத் திட்டம் என்ற அடிப்படையிலே எடுக்க வேண்டும். காரணம், இப்பொழுது நதி நீர்ப் பிரச்சினை என்பது மிகப் பெரிய பிரச்சினையாக, தாவாவாக நமது இந்தியாவிலே வந்துகொண்டிருக்கிறது. ஆகவே, இந்தத் திட்டத்தின்மூலமாக நிறைவேற்றுவதற்குரிய, உபரி நீரைப் பயன்படுத்துவதற்கான வாய்ப்பு என்ற முறையில் இதைச் செய்வதற்குரிய முயற்சியை நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எடுத்து வருகிறார்கள். அதற்கு நாம் அனைவருமே ஒத்துழைப்பாக இருந்து, வலுவாக நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும் என்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–00*

இங்கே காவிரி நடுவர் மன்றத் தீர்ப்பைப் பற்றிப் பல்வேறு கருத்துகளைப் பேசியிருக்கிறோம். இந்தக் கொள்கை விளக்கக் குறிப்பிலே அதைப் பற்றி விரிவாகக் குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறார்கள். என்னுடைய கருத்து என்பதும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியினுடைய கருத்து என்பதும், காவிரி நடுவர் மன்றத்தினுடைய இறுதித் தீர்ப்பை உடனடியாக நிறைவேற்றச் செய்வதற்கான வழிவகைகள் என்ன என்பதை நம்முடைய அரசு ஆராய்ந்து, அதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும்.

இப்பொழுது கர்நாடக மாநிலம் அதற்கு மாற்றாக வேறு ஒரு சிந்தனையிலே அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். கால



அவகாசம் 90 நாட்கள் என இருக்கிறது. நடுவர் மன்றத்திலே நம்முடைய மேல்முறையீட்டையும், நம்முடைய கருத்துகளையும், நம்முடைய சாதக, பாதகச் சூழ்நிலைகளையும் தெரிவிக்கக்கூடிய வாய்ப்பு என்பது இருக்கிறது. அதற்கு இன்னும் கால அவகாசம் இருக்கிறது: அடுத்த மாதம் 5 ஆம் தேதி வரையிலும் இருக்கிறது.

இந்த அவகாசத்தைப் பயன்படுத்தி, நமது தமிழகத்தைப் பாதிக்கக்கூடிய அம்சங்கள் என்ன என்பதைப் பற்றி நாம் தெளிவாகச் சொல்ல வேண்டிய அவசியத்திலே இருக்கிறோம். எனக்குத் தெரிந்த வரையிலும், அந்தத் தீர்ப்பின்மூலமாக நடுவர் மன்றம் சொல்லியிருப்பது என்பது—பல்வேறு கருத்துகளைச் சொல்லியிருந்தாலும், மேலோட்டமாக அல்லது அந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே பார்த்தால், ஓரளவு நமது தமிழகத்திற்குச் சாதகமான சூழ்நிலையிலே அது அமைந்திருக்கிறது. அது மறுக்க முடியாத ஒன்று. ஆனால், அதே நிலைமையில், இந்தத் தீர்ப்பின் அடிப்படையிலே சில செய்திகளைச் சொல்லி இருப்பது நமக்கு விரோதமாக இருக்குமோ என்று நாங்கள் கருதுகிறோம். அதிலும் குறிப்பாக, குறுவைச் சாகுபடிப் பரப்பளவு என்பதைக் குறைத்துக்கொள்ள வேண்டும் என்ற ஒரு சிந்தனையின் அடிப்படையிலே நடுவர் மன்றம் சொல்லியிருப்பதாக நான் செய்திகளை அறிகிறேன். அது எந்த அளவிற்குத் தெளிவாக இருக்கிறது என்று என்னால் சொல்ல முடியாது. யூகத்திலேதான் நான் சொல்லிக்கொண்டிருக்கிறேன். அதனைத் தெளிவாக, சட்டரீதியாக என்னால் சொல்ல இயலவில்லை. காவிரிப் பாசனப் பகுதிகளில் குறுவை அதிகம் சாகுபடி செய்கிறோம். இரு போகச் சாகுபடி என்ற முறையை ஒரு போகச் சாகுபடியாக மாற்றிக்கொள்ள வேண்டும் என்று நடுவர் மன்றம் சொல்லியிருப்பதாக நான் அறிகிறேன். அப்படி இருந்தால்....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1922 ஆம் ஆண்டிற்கு முன்னால் நாம் எவ்வளவு பரப்பளவிலே குறுவைச் சாகுபடி செய்ய அனுமதிக்கப்பட்டோமோ, அதை அவர்கள் மறுக்கவில்லை. 1924 Agreement–லே எதை, எதை நாம் ஏற்றுக்கொண்டிருக்கிறோமோ, என்ன பரப்பளவை அனுமதித்திருக்கிறதோ, அதை அவர்கள் நமக்கு மறுக்கவில்லை. ஆகையினாலே, தஞ்சாவூரைப் பொறுத்தவரையில், டெல்டாவைப் பொறுத்தவரையில், குறுவைக்கு 1 இலட்சத்து 86 ஆயிரம் ஏக்கர்

பாசனத்திற்கு அனுமதித்திருக்கிறார்கள். நீங்கள் தாளடியும் அங்கே போட்டுக்கொள்ளலாம். அதற்குப் பிறகு சம்பா வந்துவிடுகிறது. ஆனால், டெல்டாவைத் தவிர மற்ற ஏரியாக்களில் அந்தப் பாசனம்— இரண்டாவது முறை அவர்களுக்கு, second crops–க்குத் தண்ணீர் கொடுக்க மாட்டேன் என்று சொல்கிறார்கள். அப்போது நீங்கள் புஞ்சைப் பயிராக மாற்றிக்கொள்ளுங்கள், நாங்கள் தண்ணீர் தருகிறோம் என்று சொல்லியிருக்கிறார்கள். அதனால், தஞ்சாவூர் டெல்டாவிற்கு உட்பட்ட பகுதிகளில் இந்தப் பிரச்சினை இல்லை. தஞ்சாவூருக்கு அடுத்து இருக்கிற பகுதிகளில் இது வருகிறது. ஆனால், இதையும் குறித்து நாம் இப்போது அந்த நடுவர் மன்றத்திடம் விளக்கம் கேட்கின்றபோது, அதைப் பற்றிப் பேசவிருக்கிறோம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர், சீக்கிரம் உரையை முடியுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** முடித்துவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்களுடைய விளக்கத்திற்கு நன்றி. ஆகவே, இப்படிப் பாரம்பரியமாக நாம் அனுபவித்து வருகின்ற உரிமைகளிலே விவசாயிகளுக்குப் பாதகம் வந்துவிடாமல் பாதுகாப்பதற்குரிய முயற்சிகளைத்தான் நீங்கள் இந்த அறிக்கையிலே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறீர்கள். சட்ட வல்லுநர்களையும், மற்றவர்களையும், உயர் தொழில்நுட்ப அதிகாரிகளையும் கலந்து பேசி, நம்முடைய மேல்முறையீடு அமைய இருக்கிறது என்பதைப் பற்றி அதிலே குறிப்பிட்டுச் சொல்லி இருக்கிறீர்கள். ஆகவே, அரசு சிறப்பாகச் செய்வதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டும். அனைத்துக் கட்சிக் கூட்டம் என்ற அடிப்படையிலே எடுத்திருக்கிற அந்த முடிவின் அடிப்படையிலே, 5–5–2007–க்குள்ளாக நம்மால் தாக்கல் செய்யப்பட இருக்கிற அந்த மனுவிலே இதையெல்லாம் குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்று நான் பணிவோடு கேட்டுக்கொள்கிறேன்.

கர்நாடகம் என்ன சொல்லப் போகிறது என்பது நமக்குத் தெரியாது. ஆனாலும், நான் விரும்புவதும், இந்திய கம்யூனிஸ்டு கட்சியின் கருத்தாக நான் சொல்வதும், மீண்டும் நடுவர் மன்றம் நம்முடைய மேல்முறையீட்டை அவர்கள் பரிசீலித்து, அதன்மீது ஒரு தீர்ப்பைச் சொல்வதற்கு ஒரு கால அவகாசத்தை எடுத்துவிடக் கூடாது. நடுவர் மன்றத் தீர்ப்பே 16 ஆண்டு காலம் கழித்து நமக்குக் கிடைக்கிறது. இப்படி இரண்டு மாநில அரசுகளும் அங்கு மேல்முறையீடு செய்வதைப்



பயன்படுத்திக்கொண்டு, அதையே சாக்காக்கிக்கொண்டு ஒரு கால அவகாசத்தை நீட்டித்து, அது பல ஆண்டுகள் அல்லது பல மாதங்கள் என்று நீடிக்குமானால், நடுவர் மன்றத்தின்மூலமாக நமக்குக் கிடைத்திருக்கிற தீர்ப்பைப் பெற்ற விவசாயிகள் பலன் அடைவதற்குரிய வாய்ப்புகள் இல்லாமல் போய்விடும். ஆகவே, இதிலே நம்முடைய தமிழ்நாடு அரசு மிக எச்சரிக்கையாக இருந்து, காலத்தில் அதைத் தீர்வு செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டும். நாம், அனைத்து அரசியல் கட்சிகளுமே ஒன்று சேர்ந்து அதை நாடாளுமன்றத்திலே வலியுறுத்தி, மத்திய அரசையும் வலியுறுத்தி, விரைவாக நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–05

அதேபோலத்தான், முல்லைப் பெரியாறு பிரச்சினை குறித்தும் இங்கே பேசப்பட்டது. நம்முடைய உச்ச நீதிமன்றத்தினுடைய தீர்ப்பின் அடிப்படையிலே 142 அடி உயரம் நாம் உயர்த்திக்கொள்வதற்குரிய அந்த அனுமதியைப் பெற்றிருக்கிறோம். அதை நடைமுறைப்படுத்துவதற்கான முயற்சிகளை எடுப்பதற்கு சட்ட நுணுக்க வல்லுநர்களைக் கலந்து பேசி, நம்முடைய மாநில உரிமை பாதிக்காத வகையிலே அதை நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, கோரிக்கைகள் என்ற அடிப்படையிலே, ஸ்ரீவில்லிபுத்தூர், மேற்குத் தொடர்ச்சி மலைப் பகுதியில் அழகர்மலையில் உற்பத்தியாகி வரும் பேயன் ஆற்றில் அணை கட்ட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை இருக்கிறது. இது ஏற்கெனவே பரிசீலனை செய்யப்பட்டு, கேரள அரசாங்கத்தோடு ஒப்புதல் செய்யப்பட்டு, அந்த மலையைக் குடைந்து கேரள மாநிலத்திலிருந்து தண்ணீரைப் பெற்று இதிலே அணையைக் கட்டலாம் என்று ஒரு யோசனை இருந்தது. ஆனால், அது இப்போது சாத்தியம் இல்லாத நிலையில் இருக்கிற காரணத்தினாலேயே, அழகர் அணைத் திட்டம் என்ற பெயராலேயே அந்தப் பேயன் ஆற்றில் வருகிற தண்ணீரைப் பயன்படுத்துவதற்குரிய வாய்ப்பைப் பெறுகின்ற வகையிலே இருக்கிற காரணத்தினாலே, அதிலே அணை கட்டப்படுமானால், ஸ்ரீவில்லிபுத்தூர், சிவகாசிபோன்ற பகுதிகளுக்குப் பாசனமும் பெற முடியும், குடிநீர்த் தேவையையும் நிறைவேற்ற முடியும். அழகர் அணைக்கட்டுத் திட்டம். இதைப் புதிய திட்டமாக அறிவித்து

நிறைவேற்றச் செய்வதற்குரிய முயற்சியை நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்களும், நம்முடைய அரசும் எடுக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டம். அது இங்கே குறிப்பிட்டுச் சொல்லப்பட்டிருக்கிறது என்று சொன்னாலும்கூட, நம்முடைய மாநில அரசு விரைந்து நிறைவேற்றுவதற்கான முயற்சி எடுக்க வேண்டும்.

அதேபோல, திருச்சி உபரித் தண்ணீரைப் புதுக்கோட்டை மாவட்டத்திற்குக் கொண்டு வருவதிலே, வெள்ளாறு, பாம்பாறு, அக்னியாறு, இவை இணைக்கப்பட்டிருக்கின்றன. அதிலே குறிப்பாக, அம்புலியாறு, வில்லுன்னியாறு, இவை இணைக்கப்படவில்லையென்று நமது ஆலங்குடி சட்டமன்ற உறுப்பினர் கூறுகிறார். இவற்றையும் இணைத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

ஓரே ஒரு கோரிக்கை. பொதுப் பணித் துறை தினக் கூலிப் பணியாளர்கள் 1,056 பேர்கள் நிரந்தரப் பணியாளர்களாக ஆக்கப்படுவார்கள் என்று 31–8–2006–ல் சட்டமன்றத்தில் நம்முடைய மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் அறிவித்தார்கள். அதிலே 39 பேருக்கு மட்டும்தான் பணி வழங்கப்பட்டிருக்கிறது. ஆகவே, 1,056 பொதுப் பணித் துறை தினக் கூலிப் பணியாளர்களையும் நிரந்தரம் செய்து, அவர்களுக்கு வாழ்க்கையிலே உத்தரவாதத்தை ஏற்படுத்துவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும்.

தஞ்சாவூர் காவிரி வடிநிலக் கோட்டத்தில் பாசன ஆய்வாளர்களாக D.C.E. –பட்டப் படிப்பு முடித்தவர்கள் 5–லிருந்து 10 ஆண்டு காலம் அவர்கள் தினக் கூலிப் பணியாளர்களாகவே பணியாற்றுகிறார்கள். இவர்களைப் பணி நிரந்தரம் செய்வதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டும். கீழ்க்காவிரி வடிநிலக் கோட்டத்தில் மட்டுமே 128 ஆய்வாளர்கள் பணியிடங்கள் காலியாக இருக்கின்றன. ஆகவே, இதை நிரப்புவதற்கான முயற்சிகளை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

என்னுடைய தொகுதி என்ற முறையிலே, திருமக்கோட்டையிலே மிகப் பெரிய ஏரி இருக்கிறது. அதை இந்த ஆண்டுத் திட்டத்திலே இணைத்து, தூர் வாரித் தர வேண்டும்.

அதேபோல, ஆலங்கோட்டை ஏரி, கூப்பாச்சிக்கோட்டை 'ஏரி, மூவாநல்லூர் ஏரி, பெருகவாழ்ந்தான் ஏரி என்று பல ஏரிகள்



இருக்கின்றன. இவையெல்லாம் 20 ஏக்கர், 15 ஏக்கருக்குள்ளாக இருக்கிற ஏரிகள். இவற்றைத் தூர் வார வேண்டும்.

அதேபோல, வடவாறு பாசன வாய்க்கால்களைச் சீரமைத்து, கரைகளைப் பலப்படுத்துவதற்கு முயற்சிகளை எடுக்க வேண்டும். பாமணி ஆற்றுக்கு இணையாக ஒரு ஆற்றை உருவாக்கினால்தான் வெள்ளக் காலங்களிலே அந்த வெள்ளங்களைத் தடுக்க முடியும். தடுத்து, அந்தத் தண்ணீரைப் பயன்படுத்துவதற்குரிய முயற்சிகளை எடுக்க முடியும். (மணியடிக்கப்பெற்றது)

அதேபோல, மதகுகள்–shutter–களைச் சீர் செய்து தர வேண்டும் என்ற கோரிக்கைகள் இருக்கின்றன. இவற்றையும் நிறைவேற்றுவதற்குரிய முயற்சியை எடுக்க வேண்டுமென்று கேட்டு, முடிக்கிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. நா. இராமகிருஷ்ணன்.

***திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பொதுப் பணித் துறை மானியக் கோரிக்கைகள்மீது பேசுவதற்கு வாய்ப்பு அளித்த தங்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். என்னுடைய தொகுதிப் பிரச்சினை என்னவென்று சொன்னால், 18 ஆம் கால்வாய்த் திட்டம் 10 ஆண்டுகளுக்குமேல் ஆகிவிட்டது. கடந்த ஆண்டும், இந்த ஆண்டுக்குள் முடிப்பதாகத் தெரிவித்திருந்தார்கள். ஆனால், இன்னும் முடியவில்லை. அந்த 18 ஆம் கால்வாய்த் திட்டத்தில் முதல் reach–ல் இன்னும் விவசாயிகளுக்கு ஒரு கோடியே 65 இலட்சம் ரூபாய் தர வேண்டியிருக்கிறது. இரண்டாம் reach–ல் இரண்டு கோடி ரூபாய் தர வேண்டியுள்ளது. மூன்றாம் reach–ல் விவசாயிகளுக்கு இரண்டு கோடி ரூபாய் தர வேண்டியிருக்கின்றது.

அதைப்போல, ஒப்பந்ததாரர்களுக்கு நான்கு கோடி ரூபாய் இந்த அரசு தர வேண்டியுள்ளது. இதையெல்லாம் விரைவில் தந்து, 1,500 ஏக்கருக்குமேல் பாசன வசதி பெறுகின்ற, 2,000 டன் உணவு உற்பத்தியைத் தருகின்ற, 40 கண்மாய்களுக்குத் தண்ணீரைத் தேக்குகின்ற இந்தத் திட்டத்தை விரைவுபடுத்த வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

அடுத்தபடியாக, சண்முகா நதித் திட்டம். திட்டம் முடிந்துவிட்டது. ஆனால், தண்ணீர்தான் வரவில்லை. ராயப்பன்பட்டி கிராமம்,

ஆனைமலைப்பட்டி கிராமம், எர்சக்கநாயக்கனூர், கன்னிசேர்வைபட்டி, அப்பிவெட்டி, ஓடைப்பட்டி, அழகாபுரி, சீப்பாலக்கோட்டை போன்ற கிராமங்களுக்கு இன்னும் தண்ணீர் வரவில்லை. ஆகவே, திட்டம் நிறைவேறிவிட்டது. தண்ணீர் அணையில் இருக்கின்றது. செய்த கால்வாய்களில் குறைபாடு இருக்கின்றது. அந்தக் கால்வாயை மீண்டும் சரி செய்து, சீர்படுத்தி, இந்தக் கிராமங்களுக்கு எல்லாம் தண்ணீர் வழங்க வேண்டும்.

கம்பம் தொகுதியைப் பொறுத்தளவில் இந்த மானியக் கோரிக்கையில் ஒன்றும் தெரிவிக்கவில்லை. எனக்கு வருத்தமாக இருக்கின்றது. 48,000 வாக்குகள் திராவிட முன்னேற்றக் கழகத்திற்குச் சாதகமாக விழுந்திருக்கிறது. அந்த வாக்காளர்களைத் திருப்திப்படுத்துகின்ற வகையிலாவது—கம்பத்திலே 39 குளங்கள் இருக்கின்றன. ஒன்று அல்ல, இரண்டு அல்ல, 39 குளங்கள் இருக்கின்றன. கண்மாய்கள் தூர் வாரப்படவில்லை. அங்கே உள்ள கால்வாய்கள் செப்பனிடப்படவில்லை. முட்டுக்கட்டைகள் ஏராளமாக இருக்கின்றன. மடைகள் பழுதடைந்த நிலையில் இருக்கின்றன. 17 பெரியாறு கால்வாய்கள் இருக்கின்றன. இவற்றையெல்லாம் பழுது பார்க்கின்ற வகையிலே, அரசு விரைந்து நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்கின்றேன். கூடலூரிலுள்ள M.M. கண்மாய், கருங்கட்டான்குளம், இடையன்குளம், புதுக்குளம், தாமரைக்குளம், ஏழரசுகுளம் போன்ற கண்மாய்கள் எல்லாம் சீரமைப்புச் செய்யப்பட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 1–10

அடுத்ததாக, நதி நீர் இணைப்பு என்பது பற்றி எல்லோரும் பேசினார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் அருமை அண்ணன் வைகோ அவர்கள் நாடாளுமன்றத்திலே தனி நபர் மசோதா கொண்டு வந்தார்கள். இந்த நதி நீர் இணைப்பினைக் கொண்டு வருவதற்கு முன்பாக, இப்போது இருக்கின்ற 1956 பன்மாநில நதி நீர்த் தாவாச் சட்டம் பழுதடைந்து உள்ளது; தெளிவற்ற நிலையில் இருக்கின்றது; உறுதியான நிலையில் இல்லை; முதலில் இந்த அரசு மத்திய அரசை வலியுறுத்தி, அந்தப் பன்மாநில நதி நீர்த் தாவாச் சட்டத்திற்கு ஒரு சட்ட ஆவணமாக விளங்குகின்ற வகையிலே ஒரு திருத்தத்தைக் கொண்டு வர வேண்டும் என்று நீங்கள் வலியுறுத்த வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.



இரண்டாவதாக, மாநில சுயாட்சியில் நம்பிக்கை உள்ளவர்கள் நாங்கள். மாநிலத்திலே சுயாட்சி, மத்தியிலே கூட்டாட்சி. மாநிலத்திலே இருக்கின்ற பொருட்கள் எதுவும் மத்திய அரசுப் பட்டியலிலே சேர்க்கப்படக் கூடாது என்று சொல்கின்றவர்கள் நாங்கள். ஆனால், நதி நீரைப் பொறுத்தவரையிலே, மாநிலத்திலே இருக்கின்ற அந்த நதிகள் மத்திய அரசுப் பட்டியலிலே இணைக்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை நீங்கள் வலியுறுத்த வேண்டும். டாக்டர் அம்பேத்கர் அவர்கள் 50 ஆண்டுகளுக்கு முன்பே இதே கருத்தை வலியுறுத்தி இருக்கின்றார்கள். மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் பொதுச் செயலாளர் வைகோ அவர்கள் நாடாளுமன்றத்திலே இந்தக் கருத்தைப் பதிவு செய்து இருக்கின்றார்கள். முன்னாள் அண்ணா பல்கலைக்கழகத் துணை வேந்தர் திரு. வா.செ. குழந்தைசாமி அவர்கள், மாநில அரசுப் பட்டியலில் இருந்து நதிகளை மத்திய அரசுப் பட்டியலிலே சேர்க்க வேண்டும் என்று சொல்லிவிட்டு, உலக அளவிலே 23 நாடுகளில் இதுபோன்ற பிரச்சினைகள் தீர்க்கப்பட்டு, 131 படுகைகளிலே, 29,550 மில்லியன் கன அடித் தண்ணீர் சேமிக்கப்பட்டு உள்ளது என்ற புள்ளிவிவரங்களையெல்லாம் தெரிவித்து இருக்கின்றார்கள். ஆகவே, நீங்கள் நதிகளை இணைப்பதற்கு முன்பாக, முதலில் அந்தச் சட்டத்தைத் திருத்தம் செய்ய வேண்டும். நதிகளை மத்திய அரசுப் பட்டியலிலே இணைக்க வேண்டும். இணைத்த பின்பு, நதிகளை இணைக்கின்றபோது, காவிரிக்கு வருகின்றபோது 9,800 மில்லியன் கன அடித் தண்ணீர் நமக்குக் கிடைக்கின்றது. 1995 ஆம் ஆண்டுத் திட்டத்தின் அடிப்படையிலே, 30,000 கோடி ரூபாய் செலவிட வேண்டும் என்றும், 10 ஆண்டுகளில் நிறைவேற்றப்படகூடிய திட்டம் என்றும் தேசிய நீர் மேலாண்மைக் கழகம் சொல்லி இருக்கின்றது. ஆகவே, அந்தத் திட்டத்தை விரைந்து நிறைவேற்றுவதற்கு உரிய நடவடிக்கையை எடுக்க வேண்டும்.

அதேபோல, கோயம்புத்தூரிலே இருக்கின்ற அத்திக்கடவு–அவினாசித் திட்டம், பரம்பிக்குளம்–ஆழியாறு திட்டம் என்பவை இன்றைக்குத் தீராத நிலையில் இருக்கின்றன. மேட்டுப்பாளையம்–கோவை மாவட்டத்தில் 4,30,000 ஏக்கர் பாசன வசதி பெறாமல் இன்றைக்கு அந்த விவசாயிகள் மிகவும் கஷ்டத்திற்கு, நஷ்டத்திற்கு ஆளாகி இருக்கின்றார்கள். அங்கே இடைமலை ஆறு என்ற இடத்திலே அணையைக் கட்டி முடித்த பிறகுதான், தமிழ்நாடு ஆனைமலையிலே அணை கட்ட வேண்டும் என்று கேரளா நிர்பந்திக்கின்றது. இடைமலை ஆற்றிலே அணை கட்டி முடித்துவிட்டார்கள். இப்போது ஒப்பந்தத்திற்கு மாறாக அங்கே மின்சாரத்தையும் எடுக்கின்றார்கள். ஆகவே, அந்த இடைமலை ஆறு

அணை கட்டி முடித்த இந்த நேரத்தில், ஆனைமலை ஆறு அணை கட்டி முடித்துப் பாசன வசதிக்கு ஏற்பாடு செய்கின்ற வேளையிலே, மேல்நீராறு என்னும் இடத்தில் இருந்து மேல்நீராற்றிலிருந்து நேராகத் திருமூர்த்தி மலைக்குத் தண்ணீர் கொண்டு வருகிற வகையிலேயும் இந்த அரசு வலியுறுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

அதைப்போல முக்கியமான திட்டம், அத்திக்கடவு-அவினாசித் திட்டம். ஈரோடு, பெருந்துறை, நம்பியூர் போன்ற பகுதிகளுக்கு அதிகமாகப் பாசன வசதி தருகின்ற திட்டம். இந்தத் திட்டத்தின் நோக்கம், பவானி ஆற்றிலே மழைக் காலங்களிலே அதிகமான தண்ணீர் வருகின்றபோது, அந்த உபரி நீரைச் சேமித்து வைக்கின்ற வகையிலே அத்திக்கடவுக்குக்கீழ் பில்லூருக்குமேலே ஒரு அணை கட்டினால், அதிலிருந்து கால்வாய்கள்மூலமாக 400 கண்மாய்களுக்குக் கொண்டு சென்று, அங்கிருந்து ஈரோடு மாவட்டம் முழுமையாகப் பயன்படக்கூடிய இந்தத் திட்டத்தை நிறைவேற்றித் தர வேண்டும் என்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். அன்பிற்குரிய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கூர்ந்து கவனிக்கின்றார்கள். சில திட்டங்களை நீங்கள் விரைவுபடுத்த வேண்டும். திரும்பத் திரும்பச் சொல்வதாக நீங்கள் கருதிவிடக் கூடாது.

காவிரி நடுவர் மன்றப் பிரச்சினையிலேகூடப் பல பாதகமான அம்சங்கள் இருக்கின்றன. 419 டி.எம்.சி. தண்ணீரை நமக்கு ஒதுக்கி இருக்கின்றார்கள். பெரிய அளவாகத் தெரிகின்றது. அதில் 217 டி.எம்.சி. பவானி, நொய்யல், அமராவதி, காளிங்கராயன் கால்வாயில் இருந்து நமக்குத் தருகின்றார்கள். இந்த நான்கு ஆறுகளிலுமே இப்போது இருக்கின்ற நிலையைப் பார்த்தால், எல்லாம் bleaching units—சாயப் பட்டறைகள்மூலமாக முழுமையாக மாசு ஏற்பட்டிருக்கின்றது. மாசு ஏற்பட்ட தண்ணீரை, 215 டி.எம்.சி. தண்ணீரை நாம் பயன்படுத்தினால், எதிர்காலத்தில் சிறுநீரகம் திருட்டே போகாது. காரணம், ஈரோடு மாவட்டத்திலும், கோயம்புத்தூர் மாவட்டத்திலும் மாசுபட்ட தண்ணீரைக் குடித்தால் சிறுநீரகமே பழுதடைந்துவிடும். ஆகவே, பவானியிலிருந்து 6 டி.எம்.சி., அமராவதியிலிருந்து 3 டி.எம்.சி. என்று 9 டி.எம்.சி. கொடுத்தால் அங்கே என்ன தண்ணீர் இருக்கும்? 191 டி.எம்.சி. தண்ணீரில் 10 டி.எம்.சி. சுற்றுப்புறச் சூழலுக்குப் போகின்றது, 4 டி.எம்.சி. கடலில் வீணாகக் கலக்கிறது. 7 டி.எம்.சி. தண்ணீரைப் பாண்டிச்சேரிக்குத் தர வேண்டும். ஆக, 171 டி.எம்.சி. தான். நமக்கு இடைக்காலத் தீர்ப்பில் 205 டி.எம்.சி. தண்ணீர் பெற்றோம். இப்போது வெறும் 171 டி.எம்.சி. தண்ணீர்தான் நாம் பெறவிருக்கின்றோம் என்பதையும் அரசு கவனத்தில்கொள்ள வேண்டும்.



*பிற்பகல் 1–15*

அதைப்போல, நீரின் அளவு பில்லிகுண்டுலுவில் அளக்கப்படுகின்றது. இடைக்காலத் தீர்ப்பில் நமக்கு மேட்டூர் அணையில்தான் அளந்தார்கள். அந்தத் தீர்ப்பில் இருக்கின்றது. திரும்பவும் மேட்டூர் அணையிலேதான் அந்த நீரின் அளவை நாம் அளக்க வேண்டும். பில்லிகுண்டுலுவுக்கும், மேட்டூர் அணைக்கும் இடைப்பட்ட இடத்திலே கிடைக்கும் 25 டி.எம்.சி. தண்ணீர் என்பது நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர். மழை பெய்தாலும், பெய்யாவிட்டாலும், யார் தடுத்தாலும், தடுக்காவிட்டாலும் அந்தத் தண்ணீர் நமக்குக் கிடைக்கக்கூடிய தண்ணீர். இப்போது 205 டி.எம்.சி. தண்ணீரிலே கணக்குச் சேர்த்திருக்கின்றார்கள். இடைக்காலத் தீர்ப்பில், 11,05,000 ஏக்கர்தான் காவிரி டெல்டா பகுதியில் பாசனம் செய்ய வேண்டும். ஆனால், நடுவர் மன்றத் தீர்ப்பில் 18.8.5 இலட்சம் ஏக்கர் நிலங்கள் பாசன வசதி பெறலாம் எனத் தெரிவித்திருப்பது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பில்லிகுண்டுலுவுக்கும், மேட்டூருக்கும் இடைப்பட்ட பகுதியில் கிடைப்பது நமக்குக் கிடைக்க வேண்டிய தண்ணீர்தான். அதைத்தான் ஒத்துக்கொண்டு நமக்குக் கொடுத்திருக்கிறார்கள் அந்தத் தண்ணீரை. நமக்கு அதைத் தருவதாக ஒத்துக்கொண்டு 25 டி.எம்.சி. தண்ணீர் நமக்குச் சேர வேண்டியது என்று கொடுத்திருக்கிறார்கள். ஆகையால், நம்முடைய பங்குக்கு அது வந்திருக்கிறது. அது ஒன்றும் தவறில்லையே!

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** காவிரி நடுவர் மன்றம் பில்லிகுண்டுலு என்ற இடத்தில் தண்ணீர் அளிக்க வேண்டுவது நமக்குப் பாதகமான அம்சம். அதை மேட்டூர் அணையில் அளந்தால், 171 டி.எம்.சி.யுடன் இந்த 25 டி.எம்.சி.ஐச் சேர்த்தால், நமக்கு 196 டி.எம்.சி. வரும் அல்லவா? ஆகவே, இருக்கின்ற சூழ்நிலையைப் பார்த்து, நமக்குப் பாதகமான அம்சங்களை எல்லாம் ஆராய வேண்டும்.

அதேபோல, நீலகிரியில் பாண்டியாறு உற்பத்தியாகிறது. அது கேரளாவிற்குப் போகிறது. கேரளாவிற்கு இதன்மூலம் 28 டி.எம்.சி. தண்ணீர் கிடைக்கின்றது. அந்தப் பாண்டியாற்றிலிருந்து நமக்குக்

கிடைக்க வேண்டிய தண்ணீர் கிடைக்கவில்லை. ஆனால், பவானியிலிருந்து 6 டி.எம்.சி. கொடுக்கச் சொல்கிறார்கள். சோற்றுக்கே வழியில்லை, பக்கத்து வீட்டுப் பார்வதிக்கு எப்படிப் பருப்பும், நெய்யும் கொடுக்க முடியும்?

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மற்றவர்கள் சொல்வதற்கும், இராமகிருஷ்ணன் சொல்வதற்கும் வித்தியாசம் இருக்க வேண்டும். இராமகிருஷ்ணன் கொஞ்சம் விஷயம் புரிந்தவர் என்று நினைக்கிறேன். ஏனென்றால், Pachaiappas College-ல் படித்தவர். ஆகையால் விஷயம் நிச்சயமாகப் புரிய வேண்டும். ஏனென்றால், அந்த College-னுடைய tradition அப்படி. காவிரிப் பிரச்சினை வேறு, பாண்டியாறு—புன்னம்புழா வேறு. காவிரி basin-ல் இருப்பதுதான் அமராவதி, பவானி. ஆகையினால், அது yield கொடுக்கிறது என்பதால், அதை எடுத்தார்கள். பாண்டியாறு-புன்னம்புழா என்பது separate. அது மேலே அப்படியே போய்விடுகிறது. ஆகையினால், அதற்கும், இதற்கும்—நேற்றுக்கூட யாரோ ஒருவர் பேசியிருக்கிறார்—வெளியிலே பேசலாம், இராமகிருஷ்ணன் பேசக் கூடாது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. இராமகிருஷ்ணன், உரையை முடியுங்கள்.

**திரு. நா. இராமகிருஷ்ணன்:** உற்பத்தியாகின்ற இடம் தமிழ்நாடு நீலகிரி மலையிலே. அது கேரளாவிற்குச் செல்வதால் சொல்ல வருகிறேன். சபாநாயகர் அவர்களே, குறுக்கீடுகள் நிறைய இருக்கின்றன, நேரமும் அதிகமாகிவிட்டது. என்னுடைய உரையை முடித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** புரிகிறது இல்லையா? உட்காருங்கள். (முடித்துவிடலாமா? (குறுக்கீடு) மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் பதிலுரை.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, நான் இந்த அவைக்கு வருவதற்கும், வந்தபின் இப்படி ஒரு பதிலுரை பேசுவதற்கும், ஏன், இன்று நான் பேசிக்கொண்டிருப்பதற்கும், என் உடலில் மூச்சு இழையோடிக்கொண்டிருப்பதற்கும் யார் காரணமாக இருந்தாரோ, அந்தத் தலைவருக்கு, எனக்கு உயிர் தந்த என் உயிரான தலைவருக்கு, முதல்வருக்கு, கலைஞருக்கு நன்றி, வணக்கத்தைத் தெரிவித்து, என் உரையை ஆற்றுகிறேன். உரையாற்றுவதற்கு அனுமதி அளித்த தங்களுக்கும் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



இந்த அரசுக்கு ஒரு தமிழ்த் தாய் வாழ்த்துப் பாடலைத் தேர்ந்தெடுத்துத் தந்தவர் கலைஞர் அவர்கள்—தமிழக அரசுக்கு; 'நீராறும் கடலுடுத்த' என்று. அதேபோன்று, பழமையும், புதுமையும் வாய்ந்த இந்த நீரியல் துறைக்கு ஒரு வாழ்த்துப் பாடலை அவரே எழுதித் தந்திருக்கிறார். இந்த ஆண்டு நீர் வள, நில வள விழாவிற்காக அவர் வாழ்த்தி எழுதிய அந்தப் பாடலை இங்கே படித்து, என்னுடைய உரையை நான் துவக்க விரும்புகிறேன். இனிமேல் இந்தப் பாடல்தான் பொதுப் பணித் துறையைப் பொறுத்தவரையில் 'நீராறும் கடலுடுத்த' பாடலாகும் என்று நான் பெருமையோடு தெரிவிக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பாடல் இதுதான்:

*"நீர்இன்று அமையாது உலகு,*
*நிச்சயம்; அப்படியே அமையட்டும்-ஆனால்*
*செருக்களத்து நீராம் செந்நீரும்*
*உருக்குலைந்த ஏழையின் கண்ணீரும்-அல்லாத*
*நீர் இன்று அமையாது உலகு-என*
*அப்பாடல் அமையட்டும்"*

என்று தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் எழுதித் தந்த பாடலைப் பாடி, இங்கே என்னுடைய உரையை நான் துவக்கக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 1-20

இந்த உரையில் முதலாவதாகத் துவக்குகிறபொழுதே, மாண்புமிகு உறுப்பினர்கள் பல கருத்துகளைத் தெரிவித்திருக்கிறார்கள்; அவர்களுக்கெல்லாம் என்னுடைய நன்றியையும், வணக்கத்தையும் நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதிகமான நண்பர்கள், மாண்புமிகு உறுப்பினர்கள் வெட்டுத் தீர்மானங்களைத் தந்திருக்கிறார்கள். அவரவருடைய தொகுதியிலே என்னென்ன திட்டங்கள் தேவை என்பதைத் தொகுத்துக் கொடுத்திருக்கிறார்கள். எனவே, கட்டடப் பிரிவானாலும், பாசனப் பிரிவானாலும், அந்த வெட்டுத் தீர்மானங்களை, இது வெட்டித் தீர்மானம் என்று நான் விட்டுவிடமாட்டேன். அவற்றையெல்லாம் அரசுக்கு அனுப்பி, அது குறித்து ஆய்வு நடத்தி, அடுத்தடுத்து எந்தத் திட்டங்களை நிதி ஆதாரத்துக்கேற்ற வகையில் எடுத்துக்கொள்வது என்றுதான் அதிலே கவனம் செலுத்துவேனே தவிர, ஏதோ வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்தார்கள்; நாமும் அதற்கெல்லாம் பதில் அளிக்க வேண்டிய நேரம் இல்லை; தலைவர் அவர்களும் வெட்டுத்

தீர்மானத்தை வாபஸ் வாங்குகிறீர்களா என்று வாங்கிக்கொண்ட பிறகு விட்டுவிடுவார்கள் என்று விடமாட்டேன். காரணம், நானும் ஒரு காலத்தில் சட்டமன்ற உறுப்பினராக இருந்து, இப்படி வெட்டுத் தீர்மானங்கள் கொடுத்து, அதிலே வந்த திட்டங்கள் நிறைவேறாதா என்றுதான் இருந்திருக்கிறேன். எனவே, அந்த உணர்வை நான் புரிந்துகொண்டிருக்கிறேன். எனவே, இங்கே ஆற்றிய உரைகள் அனைத்தும் இந்தத் துறைக்கும், அரசுக்கும் பலம் ஏற்படுத்துகின்ற, ஆலோசனை சொல்கின்ற உரைகளாக இருந்தன. அவற்றுக்கெல்லாம் என்னுடைய நன்றியை இங்கே பேசிய எல்லாக் கட்சி மாண்புமிகு உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

*பிற்பகல் 1–25*

என்னுடைய பேச்சைத் துவக்குவதற்கு முன்னால் இந்த முறை கொஞ்சம் மங்களகரமாகத் துவக்கலாம் என்று நான் கருதுகிறேன். காரணம், பொதுப் பணித் துறை வரலாற்றிலேயே ஒரு மிகப் பெரிய திட்டம்—கிட்டத்தட்ட ரூ.1,500 கோடிக்கு மேற்பட்ட ஒரு திட்டத்தை இந்தப் பொதுப் பணித் துறை ஏற்றுச் செய்யப் போகிறது. பொதுப் பணித் துறையோடு, வேளாண்மைத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, மீன்வளத் துறை, இவையெல்லாம் ஒருங்கிணைந்து ஒரு திட்டத்தை நாம் நடத்தப் போகிறோம். இந்தியாவிலேயே முதன்முதலாகத் தமிழ்நாட்டிலேதான் அந்தத் திட்டம் செயல்படப் போகிறது. இந்தத் திட்டம் தமிழ்நாட்டிலே செயல்பட்டதற்குப் பிறகுதான் மற்ற மாநிலங்களுக்கு—எல்லாத் துறைகளிலும் தமிழ்நாட்டுக்கே வழிகாட்டுகிற இந்தக் கலைஞர் அவர்களுடைய அரசு இந்தத் துறையிலும், இதிலேயும் இந்தியாவிற்கு வழிகாட்டும் என்ற நம்பிக்கையை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) எனவே, அந்தத் திட்டத்தை நான் முதலிலேயே உங்களுக்குத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். அந்தத் திட்டத்திற்குப் பெயர்; 'Irrigated Agriculture Modernisation and Water Bodies Restoration and Management Project' என்பது நீளமான பெயர். அதை ஆங்கிலத்தில், இலாகாவைச் சேர்ந்தவர்களும், உலக வங்கிக்காரர்களும் 'I AM WARM' என்று, அதற்கு ஒவ்வொரு வார்த்தைக்கு ஓர் எழுத்தை எடுத்துப் போட்டார்கள். அது கடைசியிலே 'I AM WARM' என்றே வந்திருக்கிறது. அந்தத் திட்டத்தை நாம் எப்போதும் உணர்ச்சிபூர்வமாக, சூடாகப் பார்க்க வேண்டுமென்று. இதற்கு இவ்வளவு பெரிய நீளமாக, 'I AM WARM' என்று தமிழிலே வைக்க முடியாது என்பதற்காக, என்ன பெயர் வைக்கலாம்



என்பதற்காக இலாகா என்னைக் கேட்டு, கோப்பு அனுப்பினார்கள். நான் இதை முதல்வர் முடிவுக்கு அனுப்புகிறேன் என்று கோப்பை அனுப்பினேன். மாண்புமிகு முதல்வர் அவர்கள் இந்தத் திட்டத்திற்கு 'நீர் வள நில வளத் திட்டம்' என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். (மேசையைத் தட்டும் ஒலி).

இந்த மகத்தான திட்டத்திற்கு அவர்கள் சூட்டிய பெயர் பொருத்தமான ஒன்றாகும். காரணம், நிலம், நீர், தீ, வளி, வெளி—இவற்றை ஐந்து பூதம் என்பார்கள். இவற்றில் இரு பூதத்தின் பெயரை இந்தத் திட்டத்திற்குப் பெயராக வைத்து இருக்கிறார் கலைஞர் அவர்கள். நீர் வள, நில வள என்று பெயர் சூட்டியிருக்கிறார்கள். ஆக, நீர் வள, நில வளத் திட்டம் என்று இப்படிப் பெயர் சூட்டி, இரண்டு பூதத்தினுடைய பெயரை (குறுக்கீடுகள்) பஞ்ச பூதம் என்பார்கள்; அதைத்தான் சொல்கிறோம், அந்த பூதம் இல்லை. ஆகையால், இந்த நீரையும், நிலத்தையும் சேர்த்து இரண்டு பூதத்தினுடைய பெயரை வைத்திருக்கிற காரணத்தால், நான் கலைஞரையே ஐம்பூதம் என்பேன். ஒரு வகையில் அவர் நிலம்தான். இல்லையென்றால் இத்தனை பேர் குழி பறிப்பார்களா? அவர் சந்திக்காத மேடு, பள்ளம் உண்டா? நான் கலைஞரை நன்னிலம் என்பேன். அதனால்தான் அவரை வெட்டியவனுக்கும், திட்டியவனுக்கும் குறைந்தபட்சம் மன்னிப்பைத் தருகிறார், அதிகபட்சம் பதவி தருகிறார். (மேசையைத் தட்டும் ஒலி) நீர் என்பேன் கலைஞரை, அவர் ஒரு வித்தியாசமான நீர், திருக்குவளைக் குளத்து நீர். அவர் கடலில் கலப்பதானாலும் உப்பாவது இல்லை. அடுத்து, கலைஞரைத் தீ என்பேன். அதனால்தான் எப்பொழுதுமே அவர் மேல் நோக்கியே வளர்கிறார். அவர் காற்று. அதனால்தான், அவர் உள்ளபோதே சிலரால் தூற்றப்படுகிறார். சிலர் தூற்றிக்கொள்கிறார்கள். கலைஞர் ஒரு வானம். அங்கே கூட்டணி மேகங்கள் சேரலாம், மாறலாம்; ஆனால், அவர் என்றும் நிரந்தரமானவர் என்று, பஞ்சபூதத்தை நான் விளக்கிக் காட்டியிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (சிரிப்பு)

பேரவைத் தலைவர் அவர்களே, இங்கே இந்த விவாதத்தை முதலிலே துவக்கி வைத்தவர் மாண்புமிகு முன்னாள் முதல்வர், மாண்புமிகு முன்னாள் பொதுப் பணித் துறை அமைச்சர், இந்நாள் இந்த மன்றத்தில் எதிர்க்கட்சித் துணைத் தலைவர், மதிப்பிற்குரிய மாண்புமிகு திரு. ஓ. பன்னீர்செல்வம் அவர்கள் ஆவார்கள். அவர் ஐந்து ஆண்டு காலம் இந்தத் துறையைப் பார்த்தவர். எனவே, இந்தத் துறையினுடைய நீள, அகலம், அதனுடைய ஆழம், பிரச்சினைகள்,

இவை அத்தனையும் தெரிந்தவர். ஆனால், அவர் இங்கே உரையாற்றுகிறபோது, சென்ற ஆண்டு திட்டங்களை அறிவித்தீர்களே, அவையெல்லாம் என்னவாயிற்று என்று கேட்டார். இதே கேள்வியை நிதிநிலை அறிக்கையிலேயும் அவர் கேட்டார். இந்தக் கேள்வியைப் புதியதாக இந்த மன்றத்திற்கு வந்த உறுப்பினர்கள் யாராவது கேட்டிருந்தால் சரி, இன்னும் அவர்களுக்கு நிதியினுடைய செலவுகள் பற்றி, Revenue Expenditure, Capital Expenditure, Loan, அதற்கப்புறம் Deficit, அதற்கப்புறம் மானியம்—Demand, இதெல்லாம் கொஞ்சம் தெரியாமல் இருந்திருக்கலாம் என்று சொல்லலாம். ஆனால், முன்னாள் முதலமைச்சர் அவர்கள், பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் கேட்டதாலேதான் நான் சில விஷயங்களைச் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன்.

*பிற்பகல் 1–30*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் முன்னனுமதியோடு அவையின் அலுவல் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பொதுவாகத் திட்டங்கள் எப்படித் தயாரிக்கப்படுகின்றன என்றால், அவற்றை மூன்று வகைகளிலே தயாரிக்கிறோம். துறையே திட்டங்களைத் தயாரிப்பது ஒரு வகை. அதுவே ஆய்வு செய்யும்; பிறகு investigate செய்த பிறகு, அந்தத் திட்டங்களைக் கொண்டு வரும். அதை shelves of schemes என்பார்கள். இரண்டாவது, உங்களைப்போல மாண்புமிகு உறுப்பினர்கள் சபையிலே சொல்கிறபோது, அந்தத் திட்டங்களையெல்லாம் ஆய்வு செய்து, அதற்கு நிதியொதுக்கம் செய்வார்கள். மூன்றாவது, இயற்கைச் சீற்றத்தால் ஏற்படும் வெள்ளம், புயல், வறட்சி, சுனாமி ஆகிய சந்தர்ப்பங்களில், நிலைமைகளின் அவசர, அவசியம் கருதி அரசே பல திட்டங்களை அறிவித்து, அவற்றையெல்லாம் நிறைவேற்றக் கடமைப்படும். ஆகையினாலே, இந்தத் திட்டங்களையெல்லாம் எப்படி எடுக்கிறோம் என்றால்—ஆரம்பத்திலேயிருந்து பார்த்தால், முதலிலே ஒரு திட்டத்தை எடுக்கிறபொழுதே, Hydrological study என்பார்கள். Water இருக்கிறதா அந்த இடத்திலே என்பார்கள். பிறகு design selection பண்ணுவார்கள். பிறகு site selection பண்ணுவார்கள். இடம் எங்கே என்று பார்ப்பார்கள். பிறகு estimate போட வேண்டும். அதற்கப்புறம் Government approval வர வேண்டும். அதற்கப்புறம் funds allotment வர வேண்டும். அதற்குப் பிறகு administrative sanction வர வேண்டும். அப்புறம் technical sanction வர வேண்டும். அதற்கப்புறம் tender விட வேண்டும். அதற்கப்புறம்



agreement வர வேண்டும். அதற்குப் பிறகுதான் முக்கியமான பிரச்சினை, land acquisition வர வேண்டும். அந்தப் பிரச்சினை வந்தாலே பாதித் திட்டங்கள் குந்திவிடும். அடுத்து execution. Time of execution. அதற்கப்புறம்தான், இவ்வளவு பிரச்சினைகளைத் தாண்டித்தான், இந்தப் பிரச்சினைகள் வரும். ஆனால், இங்கே மாண்புமிகு நம்முடைய எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள் கேட்டார்கள். இங்கேகூடப் படித்துக் காட்டினார்கள்.

2005–2006–ல் திட்டங்களையெல்லாம் நாங்கள், எங்களுடைய தலைவி அம்மா அவர்கள் அறிவித்ததைத்தானே இங்கே போட்டிருக்கிறீர்கள் என்று கேட்டார்கள். 2005–2006–லே நீங்கள் அறிவித்த திட்டம். அதை நீங்கள் நிறைவேற்றாமல் போய்விட்டீர்கள். இப்பொழுது நிறைவேற்றுவதற்காக நாங்கள் போட்டிருக்கிறோம். வேண்டாம் என்றால் விட்டுவிடுகிறோம். நாங்கள் என்ன செய்வது? அதேபோன்றுதான் அவர்கள் கேட்டார்கள். இந்த N.W.D.A. திட்டம். போன முறை Part II Schemes என்னவாயிற்று என்று கேட்டார்கள். போன முறை நாங்கள் 19 திட்டங்களை அறிவித்தோம். ஒன்று முடிந்து போய்விட்டது. 5 பாதிப் பாதி நிலைகளிலே இருக்கின்றன. இன்னும் 13–க்கு tender விட்டிருக்கிறோம்.

பொதுப் பணி—கட்டடப் பிரிவைப் பொறுத்தவரையில், 14 பணிகள். 2 முடிந்து விட்டன. 12 இன்றைக்கு நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. அடுத்து அவர்கள் சொன்னார்கள், 2007–2008–லே. இந்தத் திட்டங்களையெல்லாம் நீங்கள் போட்டிருக்கிறீர்களே என்று. ஒன்று, Part II Schemes பற்றி அவருக்கே தெரியும். இந்த வருடம் Part II Schemes–லே ஒரு திட்டத்தை எடுத்து, ஒரு குட்டையோ அல்லது ஒரு அணையோ கட்டுகிறோம், என்றால், அதற்கு 1½ கோடி ரூபாய் என்றால், 1½ கோடி ரூபாய் அப்படியே கொடுக்க மாட்டார்கள்; எப்பொழுதுமே அதிலே ரூ. 10 இலட்சம், ரூ. 15 இலட்சம் ஒதுக்கிவிட்டு, மீதியை அடுத்த வருடம்தான் சேர்ப்பார்கள். ஆகையினாலே, திட்டங்கள் ஒரே ஆண்டிலே அறிவித்தால், அந்தத் திட்டங்கள் ஒரே ஆண்டிலே முடிவதில்லை. அது மாதங்களாகப் போய்க்கொண்டுதான் இருக்கும். எனவே, பல திட்டங்களை அறிவித்திருக்கிறோம். அந்தத் திட்டங்கள் சில நேரங்களிலே உடன், உடனே முடிந்துவிடும் என்று சொல்ல முடியாது. நான் அவருக்குத் தெரிவிக்கிறேன். இப்படிப் பல திட்டங்களை நீங்கள் அறிவித்துவிட்டுப் போயிருக்கிறீர்களே, அந்தத்

திட்டங்களையெல்லாம்—பல திட்டங்களை நீங்கள் அறிவித்துவிட்டுப் போயிருக்கிறீர்கள்—நாங்கள் தொடர்ந்து செய்கிறோம். அதே மாதிரி, நாங்கள் தொடர்ந்து செய்கிறபோது—மாறி, மாறிச் செய்யலாம்.

ஒரே ஆண்டிலே எந்தக் கட்சியும்—சில திட்டங்கள் முடியும், சில திட்டங்கள் முடியாது. சொல்லட்டுமா? முதன்முதலில் அ.தி.மு.க. ஆட்சி இந்த அவைக்கு வந்தபோது, 1991–ல் அப்பொழுது நாவலர்தான் இங்கே நிதி அமைச்சர். அப்பொழுது அறிவித்தார், மலட்டாறு திட்டம் என்ற ஒன்று, முதுகுளத்தூர் பக்கத்திலே. அதற்கப்புறம் வந்த ஐந்து ஆண்டுகளில் 1 ரூபாய்கூட ஒதுக்கவில்லை. கேட்டால், அதற்குப் பெயர் அதுதான் பொருந்திப் போயிற்றே காரணப் பெயர், இல்லை என்று. அதற்கப்புறம் எங்கள் தலைவர் வந்து அதை ஆரம்பித்தார். அதற்கு 24 கோடி ரூபாய் கொடுத்தார். அது இன்னும் தொடர்ந்து, உங்கள் ஆட்சியிலும் தொடர்ந்து, அதுவும் இப்பொழுது முடியாமல், இப்பொழுது இந்த வருடம் நாங்கள் பணம் கொடுத்திருக்கிறோம். சில திட்டங்கள் கிடக்கும்.

பிற்பகல் 1–35

சோத்துப்பாறைத் திட்டம், இங்கே எம்.ஜி.ஆர். அவர்கள் இருந்தபோது ஆரம்பிக்கப்பட்டது. (குறுக்கீடு) அவருக்குத்தான் தெரியும், அவர்கள் ஊர் அது. அந்தத் திட்டம் என்னவாயிற்று? கடைசியிலே நாங்கள்தான் முடித்து வைத்துவிட்டு வந்தோம்.

இங்கே சொன்னாரே இராமகிருஷ்ணன், சண்முகா நதித் திட்டம். அந்தத் திட்டம் ஆரம்பித்து ஏன் நின்றது? தாடிக்கொம்பு வரையிலும் நீட்ட வேண்டும் என்று சொன்னார்கள் அந்தக் காலத்திலே. அந்தக் கால்வாயை எடுத்துக்கொண்டு போக முடியாது என்று சொன்னார்கள். கால்வாயை நிறுத்திவிட்டார்கள், நின்று போய்விட்டது. கடைசியில் நாங்கள் போன முறை ஆட்சியிலிருந்து இறங்கும்போது 14 கோடி ரூபாய் ஒதுக்கிவிட்டுப் போனோம்; இன்றைக்கு முடிந்துவிட்டது என்று சொல்கிறார். ஆகையினாலே திட்டங்கள் ஒரே ஆண்டிலே, ஒரே ஆட்சியிலே முடித்துவிடக்கூடிய திட்டங்கள் என்று சொல்ல முடியாது. சில நேரங்களில் இன்னும் சில திட்டங்கள் மாறிப் போகின்றன. திட்டங்களில் மட்டுமல்ல. நல்ல எண்ணத்தோடு சொன்னார், திட்டங்களை வேகமாக நடத்த வேண்டும் என்று. ஆகையினாலே அதிலே எங்களுக்கு மாறுபட்ட கருத்து இல்லை. ஆனால், சில நேரங்களில் போய்விடுகிறது. சில நேரங்களில் திட்டங்களும் லேட் ஆகிப் போகின்றன. சில நேரங்களில் டெண்டர் விடுகிறோம்; அதிலும் லேட் ஆகிப் போகிறது.



உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன், கேளுங்கள். குப்பநத்தம் என்று ஓர் அணை திருவண்ணாமலை மாவட்டத்தில் இருக்கிறது. அந்த அணைக்கு ஒரு டெண்டர் விடுகிறோம். ஒரேயொரு example சொல்கிறேன், அதற்கு யாருமே இல்லை. அப்படி department–ல் சில நேரங்களில் வரும். (குறுக்கீடு) சொல்கிறேன், என்ன காரணம் என்று. நீங்களே புரிந்துகொள்வீர்கள். அதற்கு டெண்டர் விடுகிறார்கள். அது அப்போது டெண்டரில் இரண்டு qualifications கேட்பார்கள். pre-qualification டெண்டர், price tender என்று வைப்பார்கள். இந்த pre-qualification டெண்டரில், இவ்வளவு amount உள்ள இந்த வேலையைச் செய்வதற்கு இவருக்கு அந்தத் தகுதி இருக்கிறதா? அதற்கப்புறம், அது இருந்தது என்று பார்த்தால்தான், அதற்கான schedule form கொடுப்பார்கள். அதற்கப்புறம் டெண்டரில் அவன் கலந்துகொள்வான். அப்படி ஒரு டெண்டரை வைத்தார்கள். வைத்து ஒருவருக்கு pre-qualification கொடுத்தார்கள். கொடுத்துவிட்டு, அவரைத் தேர்ந்தெடுத்துவிட்டார்கள். என்றைக்கு pre-qualification கொடுத்தார்கள் என்றால் 25–10–2002–ல் கொடுக்கிறார்கள். Pre-qualification டெண்டர் முடிந்தது.

உடனே price tender கொடுக்க வேண்டியதுதானே? இல்லை; 8 மாதம் கழித்து, 18–6–2003–ல் price tender கொடுக்கிறார்கள். அந்த price tender–ல் ஒருவர் போடுகிறார். ஜெயிக்கிறார்; அவன் low ஆக வருகிறான். Low ஆக வந்தவன் என்ன செய்கிறான் என்றால், 6.96 per cent low ஆகப் போட்டிருக்கிறான். அவரிடம், இவ்வளவு அதிகமாக இருக்கிறது, கொஞ்சம் குறைத்துக்கொள்ளுங்கள் என்று சொல்கிறார்கள். 6.96–ஐ 6.34 அப்படி என்று percentage, above போடுவோம் இல்லையா, அதைக் குறைத்துக் கொண்டார். உடனே என்ன சொல்கிறார்கள் என்றால், டெண்டர் process ஆகிறது. டெண்டர் process ஆகி T.A.C.–க்குப் போகிறது, T.A.C.–க்கு போனவுடனே சொல்கிறார்கள், இந்த டெண்டரை cancel பண்ண வேண்டும் என்று சொல்கிறார்கள்.

இதுவே 8 மாதம் கழித்து price tender; அதற்கப்புறம் இவ்வளவு நாள் ஆகிறது. இதற்கப்புறம் மறுபடியும் நீங்கள் ஒரு டெண்டரை ஏன் cancel பண்ண வேண்டும் என்று கேட்டால், Revised Estimate இப்போதுதான் வந்திருக்கிறது; Revised Estimate வைக்காமல் வைத்த டெண்டர் இது. ஆகையினாலே இதைப் பண்ணினோம் என்று சொல்கிறார்கள். உடனே அவன் என்ன பண்ணுகிறான்? T.A.C.–ல் cancel பண்ணிவிட்டார்கள். Return பண்ணியவுடனே, மறுபடியும் என்ன பண்ண வேண்டும்? அந்தத் திட்டத்திற்கு Revised Estimate வாங்கி,

டெண்டர் வைத்திருக்க வேண்டும். இல்லை. மறுபடியும் Revised Estimate இல்லாமலேயே, 22-10-2003-ல் டெண்டர் வைத்திருக்கிறார்கள். Revised Estimate இல்லை என்றுதானே டெண்டரை cancel பண்ணினார்கள்? அடுத்த டெண்டர் கூப்பிடும்போது, Revised Estimate போட வேண்டுமா, இல்லையா? மறுபடியும் Revised Estimate இல்லாமல் போட்டுவிட்டு, அதற்கப்புறம் மறுபடியும் Revised Estimate late ஆக வருகிறது. அது வந்த பின்னர், அப்போது டெண்டர் போட்டு வந்திருக்கலாம் இல்லையா? இவ்வளவு ரகளை எல்லாம் நடந்து முடிந்து—நான் short ஆகச் சொல்கிறேன், நேரம் இல்லாத காரணத்தினால். அந்த டெண்டரில் (குறுக்கீடு) இல்லை, இல்லை; நிர்வாகத்தைச் சொல்கிறேன்; உங்களைச் சொல்லவில்லை. 25-10-2002-ல் ஆரம்பித்த டெண்டர் பிரச்சினை 23-2-2005-ல்தான் முடிந்தது. ஒரு டெண்டர், 25-10-2002-ல் ஆரம்பித்த டெண்டர் எப்போது முடிவடைந்தது என்றால், 23-2-2005; ஆக 2 வருடம், இரண்டு மாதம். நான் வேகமாக வேலை செய்யுங்கள் என்று சொன்ன அறிவுரைக்கு, இப்படி ஒரு நிலைமை இருந்திருக்கிறதே என்பதற்காகத்தான் சொல்லுகிறேன், நான் யாரைச் சொல்வது? ஆகையினாலே, இப்படிப் பல திட்டங்கள்கூட நடந்திருக்கின்றன. ஆகையினாலே, சில நேரங்களில் நிர்வாகத்திலே ஏற்படுகிற தாக்கீதுகளைச் சொல்லலாம்.

*பிற்பகல் 1-40*

அடுத்து இன்னொன்றும் சொன்னார்கள். இங்கே பேசிய மற்ற பிரச்சினைகளுக்கு எல்லாம் நான் போகவில்லை. இங்கே பேசிய உறுப்பினர்கள் பொதுவாகக் காவிரிப் பிரச்சினை பற்றிச் சொன்னார்கள். காவிரிப் பிரச்சினையில் முழுக்க நமக்குச் சாதகம் இருக்கிறது என்று நான் வாதாட வரவில்லை. முழுக்க நமக்குப் பாதகம் என்றும் சொல்லவில்லை; சாதகம் என்றும் சொல்லவில்லை. சில பாதகங்கள் இருக்கின்றன; சில சாதகங்கள் இருக்கின்றன. ஆகையினால், ஏன் உடனடியாக நீங்கள் Tribunal-க்குப் போகவில்லை என்று கேட்கிறார்கள். தீர்ப்பு வந்தவுடனே, Tribunal-க்குப் போய், இந்த explanation, guidelines-ஐ ஏன் கேட்கவில்லை என்றும் கேட்கிறார்கள். எனக்கு அந்த ஆர்வம் புரிகிறது. நான் அந்த ஆர்வத்தைப் பாராட்டுகிறேன். சில பேர் சொல்கிறார்கள். இங்கேயும் ஒன்று கொடுத்துவிடுவோம், Tribunal-ல் நமக்கு என்னென்ன explanation வேண்டுமோ, அதற்கு petition ஒன்றும் கொடுத்துவிடுவோம்; இன்னொன்று, Central Government-ஐப் பார்த்து, இதை notify செய்யச் சொல்லலாம் என்று சொல்கிறார்கள். அவர்கள் அதைக் கொஞ்சம் சிக்கலான, பெரிய வழிகளாகச் சொல்கிறார்கள் என்று அர்த்தம். ஏனென்று கேட்டால், இங்கே நாம் கொடுத்துவிட்டு, அங்கே போய் இதை notification செய்யுங்கள் என்று சொன்னாலே—Inter State Water Disputes Act, 1956-ன் பிரகாரம் என்னவென்று கேட்டால், notification செய்துவிட்டார்கள் என்றாலே, அது Supreme Court Order-க்கு இணை; Order of the Supreme Court and this Decree are equal. அப்படி என்றால் என்னவாகும்? Supreme Court Order-க்கு இணையான ஆணையை மறுபடியும் இவர் review பண்ண முடியாது. ஆகையினால், இவ்வளவு பிரச்சினைகள் இருக்கின்றன. அந்தப் பிரச்சினைகளையெல்லாம் மிகக் கவனமாக இந்த அரசு ஆழ்ந்து சிந்தித்து, முடிவெடுத்துக்கொண்டு வருகிறது. நிச்சயமாக இந்த மண்ணுக்கு, நமக்கு எந்தவிதமான உரிமை இழப்பும் இல்லாமல் இந்த அரசு பார்த்துக்கொள்ளும் என்பதை மட்டும் நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)



அதேபோன்றுதான் முல்லை பெரியாறு பிரச்சினை. அந்தப் பிரச்சினையில் என்ன? Supreme Court-னுடைய அதிகாரத்தையே, நாங்கள் கேட்கமாட்டோம் என்ற நிலையில் ஒரு மாநில அரசு இருக்கிறது. அந்த மாநில அரசு Supreme Court-னுடைய order-ஐ நடைமுறைப்படுத்தாமல் இருப்பதற்கு ஒரு சின்னச் சட்டத் திருத்தத்தைக் கொண்டு வந்து அங்கே வேலை செய்துகொண்டிருக்கின்றார்கள். இதை எதிர்த்து நாம் Supreme Court-க்குப் போயிருக்கிறோம். நாளையதினம் அந்த வழக்கு வருகிறது. எனவே, நிச்சயம் அங்கேயும் உரிமையைப் பாதுகாக்கிற வகையில் காரியங்கள் நடத்தப்படும் என்கிற உறுதியை நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இன்னும் சில பேர் பேசினார்கள். மணல் எடுப்பதைப் பற்றியெல்லாம் சொன்னார்கள். 2005-2006-ல் இந்த அரசு மணல்மூலம் அன்றைக்கு ரூ.75 கோடி வருமானத்தை ஈட்டியிருந்தால், இன்றைக்குக் கிட்டத்தட்ட 130 கோடி ரூபாய்க்கு இந்த 10 மாத காலத்திற்குள்ளாக எங்களுடைய ஆட்சி ஈட்டியிருக்கிறபோது, அதிலே யாரும் எங்கள்மீது குறை சொல்ல முடியாது. (மேசையைத் தட்டும் ஒலி) சில நேரங்களில் எங்கேயாவது சில தவறுகள் நடக்கலாம். அதை யாராலும் தடுக்க முடியாது. அவர்களுடைய ஆட்சி இருந்தாலும் ஏதாவது நடக்கலாம். ஆனால், அந்தத் தவறே பிரதானம் என்று சொல்வது—இருந்தால், அதை என்னுடைய கவனத்திற்குக் கொண்டு வந்திருக்கலாம். தவறு

நடக்காது என்று சொல்ல முடியாது. நடந்திருந்தால், 'Sir, இந்த இடத்திலே இந்தத் தவறு நடக்கிறது; நான் உங்களிடத்திலே petition கொடுக்கிறேன்; நடவடிக்கை எடுங்கள்' என்று சொல்லியிருக்கலாம். என்னிடம் கொடுத்தால் நடவடிக்கை எடுத்துவிடுவேன். விளம்பரம் வேண்டும் இல்லையா? அதற்காகத்தான் வரவில்லை. அது பற்றி ஒன்றும் இல்லை. பரவாயில்லை, அது ஒன்றும் பிரச்சினை இல்லை.

அதேபோன்றுதான், மற்ற கோரிக்கைகளையெல்லாம் எடுத்து வைத்திருக்கிறார்கள். அந்தப் பிரச்சினைகளையெல்லாம் இந்த அரசு கவனத்தோடு, கனிவாகப் பரிசீலித்து நடவடிக்கை எடுக்க முயற்சி எடுக்கும் என்பதை நான் எடுத்துக் கூறி, வெட்டுத் தீர்மானங்களை உறுப்பினர்கள் வாபஸ் பெற்று, இந்த மானியக் கோரிக்கையை நிறைவேற்றித் தர வேண்டுமென்று கேட்பதற்கு முன்னால், சில அறிவிப்புகளை நான் உங்களுக்குத் தரக் கடமைப்பட்டிருக்கிறேன். புத்தகத்தை அச்சடித்துக் கொடுத்திருக்கிறோம். அவற்றை @ இந்தப் பேரவையில் நான் படித்ததாகக் கருதி சட்டமன்றப் பதிவேட்டில் பதிந்துகொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். அந்தப் புத்தகத்திலே உள்ள அறிவிப்புகளில் முக்கியமான அறிவிப்பாக நான் சொல்ல விரும்புவது என்னவென்று கேட்டால், பொதுப் பணித் துறை இடங்களை எல்லோரும் ஆக்கிரமித்து இருப்பதாகச் சொல்கிறார்கள். அதைத் தடுப்பதற்கு ஒரேயொரு வழி, Forest Land–ல் யாராவது தவறு இழைத்தால், அவர்களை Department எப்படி prosecution செய்வதற்கு அந்தச் சட்டத்தில் இடமிருக்கிறதோ, அப்படிப் பொதுப் பணித் துறையினுடைய நீர்நிலைகளை அபகரித்தால், அவர்களைத் தண்டிப்பதற்கு வேண்டிய சட்டத் திருத்தத்தைக் கொண்டு வருவோம் என்று அறிவித்திருக்கிறோம். அந்தத் திட்டம் நிச்சயமாகக் கொண்டு வரப்பட்டு, நிறைவேற்றப்படும் என்ற உறுதியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ஒரு மகிழ்ச்சிகரமான செய்தி; சென்ற முறை நாங்கள் ஆட்சியில் இருக்கும்போது சொன்னோம். இந்த முறையும் சொல்கிறேன். ஏரி இருக்கிற சட்டமன்ற உறுப்பினர்களுக்கு—சென்னையில் இருக்கிறவர்களுக்கு அவர்கள் தொகுதியில் ஏரிகள் வராது—ஆகவே, எல்லாச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களுடைய தொகுதியிலே ஏரி இருக்குமானால், எந்த ஏரியை முன்னுரிமை கொடுத்து, அதைச் சீர் செய்வதற்கு எடுத்துக்கொள்ள

@ 279 முதல் 289 வரையிலான பக்கங்களில் இணைப்பு III ஆக அச்சிடப்பெற்றுள்ளது.



வேண்டுமென்று சொல்கிறீர்களோ, அது பற்றி நீங்கள் எனக்கு list-ஐக் கொடுத்தால், குறைந்தது ரூ.10 இலட்சத்திற்குக் குறையாத அளவிற்கு இரண்டு ஏரிகள் உங்களுக்குச் சீர் செய்து தரப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியை நான் உங்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அந்தத் திட்டத்திற்கு நமக்கு அனுமதியளித்திருக்கிறார்கள். எனவே, எந்தெந்த ஏரி தங்களுக்குத் தேவை என்பதை இந்தச் சட்டமன்றம் முடிவதற்குள் எழுதிக் கொடுத்துவிட்டால், அதற்குத் தனிக் கவனம் செலுத்தி அந்த ஏரிகளை எடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கை எடுக்கப்படும் என்ற மகிழ்ச்சியையும் உங்களுக்குத் தெரிவித்து, இந்த வெட்டுத் தீர்மானங்களை நீங்கள் வாபஸ் பெற்று, இந்த மானியக் கோரிக்கைகளை நிறைவேற்றிக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். நன்றி, வணக்கம். *(குறுக்கீடுகள்)*

*பிற்பகல் 1–45*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இப்போது மணி என்ன ஆகிறது? *(குறுக்கீடுகள்)* சொல்லுங்கள்.

**திரு. சி. ஞானசேகரன்:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் காவிரிப் பிரச்சினையைப் பற்றிப் பேசுகிறபோது, அவர்கள் ஏற்கெனவே நடுவர் மன்றத்திலே விளக்கம் இப்போது கேட்க இருப்பதற்காக மனுப் போடுவதாகச் சொன்னார்கள். நாம் ஏற்கெனவே அங்கே explanation கேட்டு, பிறகு அது கெஜட்டிலே publication–க்குப் போகிற வரை, ஏற்கெனவே இடைக்காலத் தீர்ப்பு 205 டி.எம்.சி. தண்ணீர் வருவதை அமைச்சர் அவர்கள் உறுதி செய்து, அதைப் பெற்றுத் தருவதற்கு ஆவன செய்வாரா? அது பற்றி அறிவிக்க வேண்டும்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ரொம்ப நன்றி, திரு. ஞானசேகரன் கேட்டதற்கு. அந்த இறுதித் தீர்ப்பிலேயே சொல்லியிருக்கிறார்கள், இறுதித் தீர்ப்பு முழுமைபெற்று நடைமுறைக்கு வருகிற வரையில் இடைக்காலத் தீர்ப்பு அமலில் இருக்கும் என்று நீதிபதிகள் மூன்று பேரும் ஒன்றாகவே தீர்ப்பளித்திருக்கிறார்கள். எனவே, நமக்கு 205–டி.எம்.சி.க்குக் குறையாது. குறுவைக்கு வராது என்று கவலைப்படத் தேவையில்லை. நிச்சயம் குறுவைக்குத் தண்ணீர் வரும். *(குறுக்கீடு)*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. வேல்முருகன், மணி 1-46.

**திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் பேசி அமர்ந்தவுடனேயே கேட்டேன். முல்லை பெரியாறு பிரச்சினை சம்பந்தமாக அங்கிருக்கிற விவசாயிகள் உயர் நீதிமன்றத்தில் ஒரு வழக்குத் தொடர்ந்திருக்கிறார்கள். அந்த வழக்கை, அவர்களுடைய நிதியாதாரத்திற்கு ஏற்றவாறு ஒரு ஜூனியர் வழக்கறிஞரை வைத்து வாதாடியிருக்கிறார்கள். அந்த வாதத்தை எடுத்துக்கொண்டு ஒரு நியாயமான தீர்ப்பு வழங்கக்கூடிய நீதிபதிகள் எல்லாம் பல்வேறு மாநிலங்களைச் சார்ந்தவர்களாக இருக்கிறார்கள். ஆதலால், நம்முடைய பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்கள் தமிழகத்தில் இருக்கின்ற மூத்த வழக்கறிஞர்களை அதற்கு ஆஜராகச் சொல்லி, நம்முடைய கருத்துகளை நீதிமன்றத்தினுடைய கவனத்திற்கு எடுத்துச் சொல்வதற்கு ஆவன செய்ய வேண்டும் என்கிற இந்த நேரத்தில் நான் சொல்ல விரும்புவது, உச்ச நீதிமன்றத்தில்கூட இட ஒதுக்கீட்டுப் பிரச்சினைக்கு அட்வகேட் ஜெனரல்போன்ற மூத்த வழக்கறிஞர்களை நம்முடைய இந்திய அரசு எடுத்து வைக்காத காரணத்தால்தான், நம்முடைய நியாயங்களை எடுத்துரைக்காத காரணத்தால்தான் நீதிபதிகள் அவர்கள் போக்குக்குத் தீர்ப்பு வழங்குகிற நிலைமை இருக்கிறது. ஆனால், மிக முக்கியமான பிரச்சினையாக இருக்கின்ற இந்தப் பிரச்சினையில் நம்முடைய தமிழக அரசு தகுந்த மூத்த வழக்கறிஞர்களை அந்த வழக்கில் இணைத்துக்கொண்டு நம்முடைய நியாயங்களை எடுத்துரைப்பதற்கு ஆவன செய்யுமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, எனக்கு, இப்போது யாரோ ஒருவர் வழக்குத் தொடுத்திருக்கிறார் என்று சொன்னார்கள். அது குறித்து அரசுக்கு எந்தத் தகவலும் வரவில்லை. வந்தால், அது குறித்து அரசு, (குறுக்கீடு) எங்களுக்கு வரவில்லை. அங்கே கொடுத்திருக்கலாம். எங்களுக்கு வரவில்லை. வந்தால், அது குறித்து அரசு யோசிக்கும், என்ன செய்ய வேண்டும் என்பதை. (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன? செல்வி பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு பொதுப் பணித் துறை அமைச்சர் அவர்களுடைய புதிய திட்டங்களுக்கான அறிவிப்புகளை வரவேற்று, நன்றி தெரிவிப்பதோடு, இந்தத் துறை ஒரு மிகப் பெரிய துறை. இதில் ஊழியர்கள் பற்றாக்குறை என்பது தொடர்ந்துகொண்டிருக்கின்றது. ஏற்கெனவே



10 ஆண்டுகளுக்குமேல் பணி செய்துகொண்டிருக்கக்கூடிய அந்த ஊழியர்களை நிரந்தரப்படுத்துவதற்கு ஏற்கெனவே நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சென்ற கூட்டத் தொடரிலே அறிவித்தார்கள். அது குறித்த நிலைப்பாடு பற்றி மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மீண்டும் தெளிவுபடுத்துவதற்கும், அவர்களை நிரந்தரப்படுத்துவதற்குமான கோரிக்கையை நிறைவேற்ற முன்வருவார்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற முறை அறிவித்த, N.M.R. களையெல்லாம் நிரந்தரப்படுத்துவதற்கு வேண்டிய கோப்புகள் எல்லாம் நகர்ந்துகொண்டிருக்கின்றன. அதிலேதான் பாசனப் பணியாளர்களையும் அதிலிருந்து எடுக்க வேண்டுமென்று முன்பே சொன்னதைப்போல அவர்களையும் எடுக்கப்படும். எனவே, சென்ற முறை அறிவித்தது விரைவில் நிறைவேற்றப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 39–கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 39–கட்டடங்கள்–(பொதுப் பணித் துறை) வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய 39 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.131,42,49,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.303,61,37,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

பிற்பகல் *1–50*

## (ஆ) கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 40–பாசனம் (பொதுப் பணித் துறை), வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்படுகின்றனவா என்று அறிய விரும்புகிறேன்.

*(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)*

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப்பெறப்படுகின்றன.

"பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய 40 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.646,06,41,000/– மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.549,17,06,000/– ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க. *(இல்லை)*

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

# 7. அரசினர் தீர்மானம்

## விதி 32–ஐத் தளர்த்துதல்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நாளை *(5–4–2007)* வினாக்கள்–விடைகள் நேரத்தை ஒத்திவைப்பது குறித்த தீர்மானம். மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"சட்டமன்றப் பேரவையின் முதல் ஒரு மணி நேரம் வினாக்கள்–விடைகள் என்று உள்ள சட்டமன்றப் பேரவை விதி 32–ஐ, 5–4–2007 வியாழக்கிழமை அன்று தளர்த்தி, அந்நேரம் அரசினர் அலுவல்களுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்"

என்னும் தீர்மானத்தை மொழிகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. *(ஆம்)*

மறுப்போர் 'இல்லை' என்க.

மறுப்போரே இல்லை என்று கருதுகிறேன்.

மறுப்போரே இல்லை, தீர்மானம் ஒருமனதாக நிறைவேறியது.

நாளை *(5–4–2007)* வினாக்கள்–விடைகள் நேரம் இல்லை.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளை *(5–4–2007)* வியாழக்கிழமை காலை *9–30* மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் *1–51* மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 8. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## அ. சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

40. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு உப்பு நிறுவனத்தின் முப்பத்திரண்டாவது ஆண்டறிக்கை. [1956 ஆம் ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619–ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

41. 2005–2006 ஆம் ஆண்டிற்கான தமிழ்நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் ஐம்பத்தேழாவது ஆண்டறிக்கை. [1956 ஆம்

ஆண்டு நிறுவனங்கள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 1/1956) 619-ஏ பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது] (தமிழ், ஆங்கிலம்)

## ஆ. அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

34. வேளாண்மைத் துறை பற்றிய செயல் முறைத் திட்டம், 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

35. வேளாண்மைத் துறை பற்றிய மக்கள் சாசனம், 2007. (தமிழ், ஆங்கிலம்)

36. "உழுவோர் உபயோகிப்போர் கையேடு" என்கிற சிறு நூல். (தமிழ்)

37. மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

38. மானியக் கோரிக்கை எண் 40-பாசனம் (பொதுப் பணித் துறை) பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

39. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து மூன்றாவது அறிக்கை. (2006-2007)

40. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்து நான்காவது அறிக்கை. (2006-2007)

41. பொதுக் கணக்குக் குழுவின் முப்பத்தைந்தாவது அறிக்கை. (2006-2007)



## இணைப்பு-I

*(104 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 39-கட்டடங்கள் (பொதுப் பணித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

"நீர்இன்று அமையாது உலகு
நிச்சயம்; அப்படியே அமையட்டும்-ஆனால்
செருக்களத்து நீராம் செந்நீரும்
உருக்குலைந்த ஏழையின் கண்ணீரும்-அல்லாத
நீர் இன்று அமையாது உலகு-என
அப்பாடல் அமையட்டும்."

-மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி

### முகவுரை

மக்களின் மூன்று அடிப்படைத் தேவைகளுள் ஒன்றாக 'இருப்பிடம்' கருதப்படுவதைக் கவனத்தில்கொண்டு பொதுக் கட்டடங்களை வடிவமைத்துத் திட்டமிட்டுக் கட்டித் தரும் பொறுப்பில் பொதுப் பணித் துறையின் கட்டட அமைப்பு செயல்பட்டு வருகிறது. இம்முயற்சியில், சுற்றுப்புறம், கட்டடங்களைப் பயன்படுத்துவதன் நோக்கம் மற்றும் மக்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு சிறந்த பொருத்தமான கட்டங்களைக் கட்டட அமைப்பு கட்டி வருகிறது.

அரசு கட்டடங்களைக் கட்டும்போது, பயன்படுத்துவோரின் தேவைக்கேற்பத் திட்டமிட்டு, கட்டடத்தின் பாதுகாப்புக்கு வேண்டிய உறுதியுடன் வடிவமைத்து, இயற்கைச் சீற்றங்களைத் தாங்கும் திறனுடன் கட்டி முடிப்பதில் திருக்குறளில் கூறப்பட்டுள்ள கருத்தினை வழிகாட்டு நெறியாகக் கட்டட அமைப்பு பின்பற்றுகிறது.

**"உயர்வகலம் திண்மை அருமையிந் நான்கின்**
**அமைவரண் என்றுரைக்கும் நூல்"** .. 743

"Science declares that a Building Fort must possess
Prescribed Height Breadth Strength and Greatness" .. 743

[2007 ஏப்ரல் 4

## 1.1. கட்டட அமைப்பின் செயல்பாடுகள்

தற்போது இக்கட்டட அமைப்பில் கட்டடப் பணிகளுக்காக ஒரு தலைமைப் பொறியாளர் தலைமையின்கீழ் 12 வட்டங்களும், 43 கோட்டங்களும் செயல்படுகின்றன; மற்றும் மின் பணிகளுக்காக 3 வட்டங்களும், 7 கோட்டங்களும் தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களின்கீழ் செயல்படுகின்றன.

(அ) மாநிலத்தின் பல்வேறு துறைகளுக்கான பொதுக் கட்டடங்களைத் திட்டமிடுதல், வடிவமைத்தல் மற்றும் கட்டுதல் போன்ற செயல்களை இவ்வமைப்பு மேற்கொண்டு வருகிறது.

(ஆ) மேலும், மாநில மற்றும் மத்திய அரசுகளின் கட்டுப்பாட்டிலுள்ள நிறுவனங்கள், வாரியங்கள், பல்கலைக்கழகங்கள் போன்றவை தங்கள் கட்டடங்களுக்காக இவ்வமைப்பின் சிறந்த அனுபவத்தைப் பயன்படுத்துகின்றன.

(இ) அரசு அலுவலகக் கட்டடங்கள், நினைவகங்கள், நினைவுத் தூண்கள் ஆகிய அரசு சொத்துக்களைப் பராமரிக்கும் பணிகளையும் இவ்வமைப்பு செயற்படுத்தி வருகின்றது. பாரம்பரியக் கட்டடங்களைப் புதுப்பித்து மறுசீரமைக்கும் பணியையும் இவ்வமைப்பு செயற்படுத்துகிறது.

(ஈ) ஆய்வு மாளிகைகள், சுற்றுலா மாளிகைகள், சென்னை மற்றும் உதகமண்டலம் ஆகிய இடங்களில் உள்ள ஆளுநர் மாளிகைகள், தலைமைச் செயலகம், அரசினர் தோட்டம், சட்டமன்ற உறுப்பினர்களுக்கான விடுதிகள் மற்றும் குடியிருப்புகள், நீதிபதிகள், அமைச்சர்கள் மற்றும் மிக மிக முக்கிய நபர்களுக்கான மாளிகைகள் ஆகியவற்றைப் பராமரிக்கும் பணியினையும் இவ்வமைப்பு செய்து வருகின்றது.

(உ) சுனாமி மறுசீரமைப்புப் பணிகளிலும் இவ்வமைப்பு பங்கெடுத்து வருகிறது.

(ஊ) இவை தவிர, பாராளுமன்ற உறுப்பினர் மற்றும் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளும், ஊழல் தடுப்புத் துறை மற்றும் நீதித் துறை ஆகியவற்றால் அனுப்பப்படும் சொத்து மதிப்பீட்டுப் பணிகளும் இவ்வமைப்பினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. மேலும் திரையரங்குகளுக்குத் தர உறுதிச் சான்றிதழ்களும், அரசு அலுவலகங்களுக்கு எடுக்கப்படும் தனியார் கட்டடங்களுக்கு வாடகை நிர்ணயச் சான்றிதழ்களும் இவ்வமைப்பினால் வழங்கப்பட்டு



2007 ஏப்ரல் 4]

வருகின்றது. இவ்வமைப்பு மிக முக்கியமானவர்கள் மற்றும் மிக மிக முக்கியமானவர்கள் வருகையின்போது செய்யப்பட வேண்டிய அனைத்துப் பணிகளையும் திட்டமிட்டுச் செய்து வருகின்றது.

## 1.2. கட்டடக் கலைப் பணிகள்

(அ) சிறந்த கட்டடக் கலையுடன்கூடிய கட்டடங்களை உருவாக்குவதற்காகத் தலைமைப் பொறியாளர் நிலையிலான தலைமைக் கட்டடக் கலைஞரின் தலைமையில், கட்டட வரைகலைப் பிரிவு தனியாக இயங்கி வருகின்றது. அனுபவம் வாய்ந்த கட்டடக் கலைஞர்களால் எழிலார்ந்த மற்றும் அறிவியல்பூர்வமான தோற்றங்களையும் உள் அமைப்புகளையும்கொண்ட கட்டடங்கள் உருவாக்கப்படுகின்றன. தலைமைக் கட்டடக் கலைஞரின்கீழ் ஒரு இணைத் தலைமைக் கட்டடக் கலைஞர், ஒரு முதுநிலைக் கட்டடக் கலைஞர், 8 கட்டடக் கலைஞர்கள், 9 உதவிக் கட்டடக் கலைஞர்கள் மற்றும் 13 இளநிலைக் கட்டடக் கலைஞர்கள் பணியாற்றுகின்றனர்.

(ஆ) மேலும், ஆரம்ப சுகாதார நிலையங்கள், துணை சுகாதார நிலையங்கள், பள்ளிக்கூடங்களுக்கான வகுப்பறைகள், ஆய்வுக் கூடங்கள், பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோருக்கான விடுதிக் கட்டடங்கள் ஆகியவற்றுக்கான மாதிரி வரைபடங்களை இப்பிரிவு தயாரிக்கின்றது.

## 1.3. கட்டட ஆராய்ச்சி மையம்

### அ. இம்மையத்தின் தற்போதைய பணிகள்

நவீன தொழில் நுட்பங்களைப் பயன்படுத்துவதற்கும், கட்டுமான நடவடிக்கைகளில் ஏற்படும் பிரச்சினைகளுக்குத் தீர்வுகளை உருவாக்கும் நோக்கத்துடன், சென்னை தரமணியில் உள்ள கட்டட ஆராய்ச்சி மையம் செயல்படுகிறது. இக்கோட்டத்தின் சேவைகள் பின்வருமாறு:-

(அ) கட்டுமானக் கைவினைஞர்களுக்குப் பொதுப் பணித் துறைக் கட்டட மையம்மூலம் பயிற்சி வழங்குதல்.

(ஆ) பொதுத் துறை நிறுவனங்கள், வாரியங்கள் மற்றும் தன்னாட்சி அமைப்புகளுக்குக் கோரிக்கை அடிப்படையில் ஆலோசனைகளைத் தருதல்.

[2007 ஏப்ரல் 4

(இ) கட்டுமானப் பொருட்கள் தரப் பரிசோதனை செய்தல் மற்றும் அடிப்படை ஆய்வுப் பணிகளைத் தேவைப்படும் நிறுவனங்களுக்கு வழங்குதல்.

(ஈ) பழுதடைந்த கட்டடங்களுக்குத் தேவையான புனரமைப்புப் பரிந்துரைகளை வழங்குதல்.

(உ) கட்டடக் கட்டுமானப் பணிகளில் மாற்றுக் கட்டுமானப் பொருளாக நிலக்கரி/பழுப்பு நிலக்கரி சாம்பல் மற்றும் கல் துகள் ஆகியவற்றைப் பயன்படுத்துதல்.

**ஆ. தரமணி கட்டட ஆராய்ச்சி மையம்—மேம்படுத்துவதற்கான கருத்துகள்**

கட்டுமானங்களின் திட்டம், வடிவமைப்பு மற்றும் கட்டுமானப் பொருட்கள் பயன்பாட்டில் விரைவான வளர்ச்சியால் கட்டுமானத் தொழில் உலக அளவில் வளர்ந்து வருகிறது. வளரும் தேவைக்கேற்ப சென்னை தரமணி கட்டட ஆராய்ச்சி மையத்தின் வசதிகளைப் பெருக்க பின்வருமாறு திட்டமிடப்பட்டுள்ளது :

(அ) திட்டம், வடிவமைப்பு ஆகிய கட்டுமானப் பிரிவில் புதிதாக உருவாக்கப்பட்டுள்ள மென்பொருள், வன்பொருள்போன்றவற்றை வாங்குதல்.

(ஆ) புதிய கருவிகளைப் பயன்படுத்தும் பொறியாளர்களுக்கும் பயிற்சி அளித்தல்.

(இ) பொறியாளர்களுக்கு உலக அளவில் தற்சமயம் ஏற்பட்டுள்ள புதிய மாற்றங்களை அறிவித்தல்.

(ஈ) கட்டுமானக் கல்வி நிலையங்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தி ஒருங்கிணைத்தல்.

(உ) பல்வேறு நிலைகளில் உள்ள இத்தொழில் துறை வல்லுநர்களுக்கு நுட்பங்களைப் பகிர்ந்தளித்தல்.

**1.4. தமிழ்நாடு கட்டுமானப் பயிற்சி நிலையம் அமைத்தல்**

கட்டுமானத் துறையின் விரிவடைந்துள்ள பன்முக நடவடிக்கைகளை மாநிலத்தின் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்குப் பயன்படுத்தும் நோக்கத்தில் மாநிலத்துக்குக் கட்டுமானப் பயிற்சி நிலையம் அமைக்க முடிவு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 4]

இந்த நிலையம் எதிர்காலத்தில் மாநிலத்திலுள்ள கட்டுமானப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளிக்கவும் தொழில் வல்லுநர்களுக்குத் திறன் மேம்பாடு அளிக்கவும் செயல்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**1.5. 2007-2008 வரவு-செலவுத் திட்டக் கருத்துருக்கள்**

கட்டட அமைப்பு 2007-2008 ஆம் நிதி ஆண்டில் ரூ. 435.04 கோடி மதிப்பில் செயல்படுத்தும் கட்டடப் பணிகள் கீழ்வருமாறு:—

| | |
|---|---|
| மூலதனக் கணக்கு (திட்டம் சார்ந்த மற்றும் திட்டம் சாராத பணிகள்) | ரூ. 303.61 கோடி |
| வருவாய்க் கணக்கு (பராமரிப்பு மற்றும் நிர்வாகம்) | ரூ.131.43 கோடி |
| **மொத்தம்** | **ரூ.435.04 கோடி** |

மேலும், மற்ற துறைகளுக்காகச் செலுத்துதல் தலைப்பின்கீழும், பொதுப் பணித் துறை மற்றும் பிற துறைகளின் கட்டடங்களைப் பராமரித்தல் தலைப்பின்கீழும் மற்றும் வைப்புத் தொகைப் பணித் தலைப்பின்கீழும் பணியினை இத்துறை மேற்கொண்டு வருகிறது.

**மூலதனக் கணக்கு-பணிகள் விவரம்**

**(ரூபாய் கோடியில்)**

| வ.எண் | துறைகளின் பெயர்கள் | வரவு-செலவு 2007-2008 | விழுக்காடு |
|---|---|---|---|
| 1. | மக்கள் நல்வாழ்வுத் துறை | 120.76 | 40% |
| 2. | வருவாய்த் துறை | 81.40 | 27% |
| 3. | உள் துறை | 42.11 | 14% |
| 4. | ஆழிப் பேரலை | 21.56 | 7% |
| 5. | கல்வித் துறை | 17.48 | 6% |
| 6. | மற்றவை | 15.88 | 5% |
| 7. | பொதுத் துறை | 4.42 | 1% |
| | மொத்தம் | 303.61 | 100% |

[2007 ஏப்ரல் 4

## 2. துறைவாரியாக நடைபெற்றுக்கொண்டிருக்கும் பணிகளின் விவரம் பின்வருமாறு :—

### 2.1. சுகாதாரம் மற்றும் குடும்ப நலத் துறை

அ. மருத்துவக் கல்லூரிகள்

2007-2008 ஆம் நிதி ஆண்டில் பின்வரும் புதிய கட்டுமானப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன :

(அ) திருவாரூரில் ரூ. 100 கோடி மதிப்பில் புதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடம்.

(ஆ) தருமபுரியில் ரூ. 100 கோடி மதிப்பில் புதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடம்.

(இ) சென்னையிலுள்ள குழந்தைகள் நல நிலையம் மற்றும் மகளிர் மற்றும் குழந்தைகளுக்கான மருத்துவமனையில் ரூ. 12.00 கோடி மதிப்பில் கூடுதல் கட்டடம்.

(ஈ) சென்னை, இராயப்பேட்டை மருத்துவமனையில் ரூ. 8.50 கோடி செலவில் கூடுதல் கட்டடம்.

(உ) செங்கல்பட்டு, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மருத்துவமனைகள் மற்றும் சென்னை அரசு பல் மருத்துவக் கல்லூரி மருத்துவமனையிலும் ஒவ்வொன்றும் ரூ. 5.00 கோடி செலவில் கூடுதல் கட்டடங்கள்.

(ஊ) தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சென்னையில் உள்ள கீழ்ப்பாக்கம் மற்றும் ஸ்டான்லி மருத்துவக் கல்லூரிகளில் மொத்தம் ரூ.6.00 கோடி செலவில் விடுதிக் கட்டடங்கள்.

(எ) தமிழ்நாட்டில் ஐந்து வெவ்வேறு இடங்களில் மொத்தம் ரூ.5.00 கோடி செலவில் செவிலியர் பள்ளிகள்.

ஆ. நிதி ஆண்டு 2006–2007–ல் ஒப்பளிக்கப்பட்ட பின்வரும் பணிகளுக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்தல், ஒப்பந்தப்புள்ளி கோருதல்போன்ற முதல் நிலைப் பணிகள் நடைபெற்று வருகின்றன :

(அ) விழுப்புரத்தில் ரூ. 12.00 கோடி மதிப்பில் புதிய மருத்துவக் கல்லூரி அமைத்தல்.



2007 ஏப்ரல் 4]

(ஆ) செங்கல்பட்டு செவிலியர் கல்லூரியில் உள்ள செவிலியர் பள்ளியை ரூ.90.00 இலட்சம் மதிப்பில் மேம்படுத்துதல்.

(இ) சென்னை, அரசு ஸ்டான்லி மருத்துவக் கல்லூரியில் ரூ. 5.00 கோடி மதிப்பில் பிரிவுக் கட்டடத் தொகுதி, நிர்வாக கட்டட தொகுதி விரிவுரைக்கூடம் மற்றும் நூலகம் ஆகிய கட்டடங்கள் கட்டுதல்.

**மைய அரசு நிதி உதவிபெறும் மருத்துவப் பணிகள்**

காஞ்சிபுரம், கன்னியாகுமரி, வேலூர், கடலூர், திருநெல்வேலி, மதுரை மற்றும் நாமக்கல் ஆகிய மாவட்டங்களில் உள்ள அரசு மருத்துவமனைகளில் விபத்து மற்றும் அவசர சிகிச்சைப் பிரிவுகளை மேம்படுத்தி வலுவூட்டும் பணிகள் ரூ. 4.33 கோடியில் 2006-2007 ஆம் ஆண்டு ஒப்பளிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் விரைவில் தொடங்க உள்ளன.

**முன்னேற்றத்திலுள்ள பணிகள் பின்வருமாறு:—**

(அ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்காக ரூ. 22.75 கோடி மதிப்பில் 8 கட்டடங்கள் கட்டுதல்.

(ஆ) சென்னை மருத்துவக் கல்லூரி, ஸ்டான்லி, கீழ்ப்பாக்கம், செங்கல்பட்டு, திருநெல்வேலி மற்றும் மதுரை ஆகிய ஆறு கல்லூரிகளில் ரூ. 2.93 கோடி மதிப்பில் 8 மனநலப் பிரிவுக் கட்டடங்கள் கட்டுதல்.

(இ) தஞ்சாவூர் மருத்துவக் கல்லூரிக்கு ரூ. 2.04 கோடி மதிப்பில் கூடுதல் அறுவை சிகிச்சைக் கட்டடம் கட்டுதல்.

(ஈ) அரும்பாக்கம், மாநில சித்த மருத்துவக் கல்லூரியில் ரூ. 1.63 கோடி மதிப்பில் 50 படுக்கை வசதியுடன்கூடிய மருத்துவப் பிரிவு மற்றும் பெண்கள் விடுதி, கூடுதல் அறைகள் கட்டுதல்.

(உ) மதுரை, திருமங்கலத்தில் ரூ. 1.50 கோடி மதிப்பில் மாநில மாதிரி ஓமியோபதி கல்லூரி கட்டுதல்.

(ஊ) தூத்துக்குடி, திருநெல்வேலி ஆகிய இடங்களில் ஏற்கெனவே அமைந்துள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குக் கூடுதல் கட்டடங்கள், மற்றும் தேனி, வேலூர் மற்றும் ஆசாரிப்பள்ளம் ஆகிய இடங்களில் புதியதாக அமைக்கப்பட்டுள்ள மருத்துவக் கல்லூரி மற்றும் மருத்துவமனைக்குப் புதிய கட்டடங்கள் ரூ. 184.51 கோடி மதிப்பில் கட்டுதல்.

[2007 ஏப்ரல் 4

மொத்தமுள்ள 174 பணிகளில், தூத்துக்குடியில் 13 பணிகளும், திருநெல்வேலியில் 17 பணிகளும், தேனியில் 31 பணிகளும், வேலூரில் 34 பணிகளும், ஆசாரிப்பள்ளத்தில் 24 பணிகளும், ஆக மொத்தம் 119 பணிகள் முடிவுற்றுள்ளன. ஏனைய பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**தமிழ்நாடு நலவாழ்வுத் திட்டம்**

தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் அமைந்துள்ள 35 அரசு மருத்துவமனைகளுக்கு 2005-2006-ல் கூடுதல், விரிவாக்கம், பழுதுபார்த்தல் மற்றும் புதுப்பித்தல் ஆகிய பணிகள் செய்வதற்கு ரூ. 45.82 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ரூ. 5.50 கோடி மதிப்பில் 2006-2007-ல் சென்னை மருத்துவப் பணிகள் இயக்கக வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டும் பணிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்கு உலக வங்கியிடமிருந்து ஒப்பந்தப்புள்ளி ஆவணங்கள் ஒப்புதல்பெற நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

**2.2. உள் துறை**

**அ. நீதித் துறை**

**(அ) தாம்பரம் நீதிமன்றக் கட்டடங்கள்**

தாம்பரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு 2006-2007-ல் ரூ. 2.82 கோடி ஒப்பளிக்கப்பட்டு முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஆ) பெரம்பலூர் நீதிமன்றக் கட்டடங்கள் :—**

பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்கள் கட்டும் பணிக்கு 2006-2007-ல் ரூ. 8.75 கோடி ஒப்பளிக்கப்பட்டு முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(இ) பாளையங்கோட்டை நீதிமன்றக் கட்டடங்கள் :—**

பாளையங்கோட்டை ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டட வளாகத்தில் ரூ. 58.35 இலட்சம் மதிப்பில் வழக்கறிஞர்கள் மன்றத்திற்கான தனிக் கட்டடம் மற்றும் வக்கீல் எழுத்தர் சங்கத்திற்குக்



2007 ஏப்ரல் 4]

கட்டடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டு முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**(ஈ) திருப்பத்தூர் நீதிமன்றக் கட்டடங்கள் :—**

வேலூர் மாவட்டம், திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றங்கள் கட்டுவதற்காக ரூபாய் 4.97 கோடி மதிப்பில் கட்டடங்கள் கட்ட ஒப்புதல் அளிக்கப்பட்டது. பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**(உ) கொடைக்கானல் நீதிமன்றக் கட்டடங்கள்**

கொடைக்கானலில் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டுவதற்கு முதற்கட்டமாக ரூ. 2.50 கோடி அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அரசு ரூ. 3.61 கோடி மதிப்பில் நிலம் வாங்க ஒப்புதல் அளித்துள்ளது. நிலம் கையகப்படுத்தப்பட்டுப் பணி துவக்கப்பட உள்ளது.

**(ஊ) தேனி நீதிமன்றக் கட்டடங்கள்**

தேனி மாவட்டம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடங்களுக்கான துணைக் கட்டடங்கள் கட்டுவதற்கும், நீதித் துறை அலுவலர்கள் குடியிருப்புக் கட்டடங்கள் கட்டுவதற்கும். வண்டிகள் நிறுத்துமிடம், பொது மக்களுக்கான கழிப்பறை, மிதிவண்டி மற்றும் இரு சக்கர மோட்டார் வாகனம் நிறுத்துமிடம், புல்வெளித் தோட்டம் முதலியன அமைப்பதற்கு அரசு ரூ. 3.57 கோடி ஒப்பளிப்பு வழங்கியது. பணி முன்னேற்றத்தில் உள்ளது.

**ஆ. சிறைத் துறை**

**(அ)** சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் இராமநாதபுரம மாவட்டம் மற்றும் விருதுநகர் மாவட்டங்களில் துணைச் சிறைச் சாலைகளை மாவட்ட சிறைச்சாலைகளாக மாற்றவும், திருச்சியில் பெண்களுக்கான புதிய சிறைக் கட்டடங்கள் கட்டவும், துணைச் சிறைக் கட்டடங்களில் சமையல் அறையை நவீனப் படுத்தவும், துணைச் சிறை மற்றும் மத்திய சிறைக் கட்டடம் பழுதுபார்த்தல் மற்றும புதுப்பிக்கவும், கோயம்புத்தூர், சேலம், பாளையங்கோட்டை, கடலூர், திருச்சி, புதுக்கோட்டை மற்றும் வேலூர் ஆகிய இடங்களில் உள்ள மத்திய சிறைச்சாலையில் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் செய்யவும் அரசு ரூ. 11.23 கோடி ஒப்பளிப்பு

வழங்கியுள்ளது. 67 பணிகளில் 6 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஏனைய பணிகளுக்கு முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(ஆ) சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் 10 பணிகளுக்குப் பழுதுபார்த்தல், புதுப்பித்தல், சிறை ஊழியர்களுக்குக் குடியிருப்பு வசதிகள், சுகாதார மற்றும் குடிநீர் வசதிகள் செய்ய ரூ. 1.63 கோடிக்கு ஒப்பளிக்கப்பட்டு, 4 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஏனைய பணிகளுக்கு முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

(இ) சிறைகளை நவீனப்படுத்தும் திட்டத்தில் வருடாந்திர நிர்வாகச் செயல் திட்டத்தில் ரூ. 5.521 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. இதில் ஆத்தூர், கோபி மற்றும் நாகப்பட்டினம் துணைச் சிறைகளை மாவட்டச் சிறைகளாக மாற்றும் பணியும், பாளையங்கோட்டை மற்றும் திருச்சி சிறைகளில் பழுதுபார்ப்பு, புதுப்பிப்புப் பணிகளும் அடங்கும். முதனிலைப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**இ. தீயணைப்புத் துறை**

விருதுநகரில் ரூ. 24.20 இலட்சம் மதிப்பில் மாவட்டத் தீயணைப்பு அலுவலகம் கட்டும் பணிக்குத் தொழில்நுட்ப ஒப்புதல் அளித்தல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்வதற்கான முதனிலைப் பணிகள் நடைபெறுகின்றன.

**2.3. பொதுத் துறை**

சென்னை ராஜ் பவனில் ரூ. 3.00 கோடி செலவில் குடியரசுத் தலைவர் தங்கும் மாளிகை கட்டும் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

**2.4. தேர்வாணையக் குழுக் கட்டடம்**

சென்னையில் உள்ள தமிழ்நாடு தேர்வாணையக் குழுக் கட்டடத்தில் ரூ. 2.81 கோடி செலவில் முதலாவது மற்றும் இரண்டாவது தளம் கட்டும் பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

**2.5. வருவாய்த் துறை**

(அ) விருதுநகர் மாவட்டம், காரியாப்பட்டி, நீலகிரி மாவட்டம் குந்தா, புதுக்கோட்டை மாவட்டம், இலுப்பூர், சேலம் மாவட்டம்,



வாழப்பாடி மற்றும் கெங்கவள்ளி, திருச்சி மாவட்டம், தொட்டியம், திருநெல்வேலி மாவட்டம், வீரகேரளம்புதூர், கன்னியாகுமரி மாவட்டம், பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் ரூ. 11.30 கோடி மதிப்பில் வட்டாட்சியர் அலுவலகங்கள் 2007-2008-ல் கட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

(ஆ) வட்டாட்சியர் அலுவலகங்கள் 8 இடங்களில் ரூ. 1.27 கோடி மதிப்பில் கட்ட 2006-2007-ல் ஒப்பளிக்கப்பட்டது. திருக்கழுக்குன்றம், கீழ்வேளூர், ஆலங்குளம், ஸ்ரீரங்கம், மண்ணச்சநல்லூர் ஆகிய இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. காட்டுமன்னார் கோயில், திருக்குவளை, காட்பாடி ஆகிய இடங்களில் முதனிலைப் பணிகள் நடைபெறுகின்றன.

(இ) பதினோராவது நிதிக் குழுவின் நிதி உதவியுடன் எடுத்துக் கொள்ளப்பட்ட பெரும்பாலான பணிகள் முடிவுற்றன. கிருஷ்ணகிரி பெருந்திட்ட வளாகத்தில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு அரசால் ரூ. 10.00 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஈ) சத்தியமங்கலம், எடப்பாடி, மணமேல்குடி மற்றும் எட்டயபுரம் ஆகிய இடங்களில் ஒவ்வொன்றும் ரூ. 1.15 கோடி செலவில் வட்டாட்சியர் அலுவலகக்கட்டடம் கட்டும் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(உ) திருநெல்வேலியில் மாவட்ட ஆட்சியர் அலுவலகம் கட்டுவதற்கு ரூ. 6.60 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.6. கல்வித் துறை**

தற்போது உள்ள உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் உரிய வசதிகளைப் பெருக்கி, மாநிலத்தில் தரமான கல்வி வளர்வதற்கு உதவியாக பல முக்கியக் கட்டடப் பணிகளைப் பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பு மேற்கொண்டு வருகிறது.

(அ) 2006-2007 ஆம் ஆண்டில் ஆறாம் கட்டமாக, நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்துவதற்காக 13 மாவட்டங்களில் உள்ள 234 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 161.32 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 2 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 203 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 27 இடங்களில் பணிகள்

ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன, மற்றும் 2 இடங்களில் திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரப்பட்டுள்ளது.

(ஆ) 2006-2007 ஆம் ஆண்டில் ஏழாம் கட்டமாக நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்துவதற்காக 16 மாவட்டங்களில் உள்ள 195 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 131.69 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 131 பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 60 இடங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன. மற்றும் 4 இடங்களில் திருத்திய நிர்வாக ஒப்புதல் தேவைப்படுகிறது.

(இ) நபார்டு நிதி உதவியுடன் கட்டம் III, IV & V ஆகியவற்றில் மேற்கொள்ளப்பட்டு நடைபெறும் பணிகளின் நிலவரம் பின்வருமாறு:—

மூன்றாம் கட்டமாக கடலூர், வேலூர், திருவள்ளூர், தருமபுரி, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, மற்றும் விழுப்புரம் ஆகிய 7 வட மாவட்டங்களில் உள்ள 259 பள்ளிகளுக்குக் கட்டடங்கள் கட்டுவதற்காக மொத்தத் தொகை ரூ. 83.74 கோடி மதிப்பில் நபார்டு நிதி உதவியுடன் செயல்படுத்துவதற்காக அரசு ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. 248 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 9 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. மற்றும் 2 இடங்களில் பணி இரத்து செய்யப்பட்டுள்ளது.

நான்காம் கட்டமாக, 27 மாவட்டங்களில் உள்ள 351 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 130.11 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 293 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 53 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 3 இடங்களில் பணிகள் ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளன. மற்றும் 2 இடங்களில் பணி இரத்து செய்யப்பட்டுள்ளது.

ஐந்தாம் கட்டமாக, 17 மாவட்டங்களில் உள்ள 198 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்வதற்கு ரூ. 102.03 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. 154 இடங்களில் பணிகள் முடிந்துள்ளன. 39 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. ஒரு பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது. மற்றும் 3 இடங்களில் பணி இரத்து செய்யப்பட்டுள்ளது. ஒரு பணி இடப் பிரச்சினை காரணமாக நிலுவையில் உள்ளது.





**(ஈ) ஏனைய பணிகள்**

திருச்சி மற்றும் திருநெல்வேலி அரசு சட்டக் கல்லூரியில் ஒவ்வொன்றும் ரூ. 84.00 இலட்சம் மதிப்பில் ஆண்களுக்கான விடுதிக் கட்டடம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. (2007-2008, பகுதி II திட்டம்)

கோயம்புத்தூர் சட்டக் கல்லூரியில பெண்களுக்கான விடுதிக் கட்டடம் ரூ. 124 கோடி மதிப்பில் கட்டும் பணி (2006-2007, பகுதி II திட்டம்); முதனிலைப் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

திருநெல்வேலி சட்டக் கல்லூரியில் பெண்களுக்கான விடுதிக் கட்டடம் ரூ. 1.10 கோடி செலவில் கட்டும் பணி (2005-2006, பகுதி II திட்டம்) முடியும் தருவாயில் உள்ளது.

திருச்சி சட்டக் கல்லூரியில் கூடுதல் வகுப்பறைகள் ரூ. 1.05 கோடி செலவில் கட்டும் பணி (2004-2005, பகுதி II திட்டம்) முடியும் தருவாயில் உள்ளது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் சட்டக் கல்லூரியில் நூலகக் கட்டடம் ரூ. 1.00 கோடி மதிப்பில் கட்டும் பணி முடியும் தருவாயில் உள்ளது.

சென்னை, டாக்டர் அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தில் பெண்களுக்கான விடுதிக் கட்டடம் ரூ. 74.50 இலட்சம் செலவில் கட்டும் பணி எடுத்துக்கொள்ளப்பட உள்ளது.

**2.7. தமிழ் வளர்ச்சி மற்றும் பண்பாட்டுத் துறை**

கலை மற்றும் பண்பாட்டு இயக்ககத்துக்காக, சென்னை, தமிழ் வளர்ச்சி வளாகத்தில் உள்ள கட்டடத்தில் ரூ. 50.00 இலட்சம் மதிப்பில் இரண்டாவது தளம் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2.8. வேளாண்மைத் துறை**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விளை பொருள் பேரங்காடி கட்டுவதற்கு ரூ. 3.08 கோடி மதிப்பீட்டில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

[2007 ஏப்ரல் 4

**2.9. வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

(அ) கிண்டி, வேலூர், மதுரை மற்றும் திருநெல்வேலியில் உள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த ரூ. 15.72 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் தொடங்கப்பட உள்ளன.

(ஆ) திண்டுக்கல்லில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ. 61.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் நிறைவடைய உள்ளன.

(இ) ஆண்டிப்பட்டியில் மகளிர் தொழிற்பயிற்சி நிலையம் அமைக்கும் பணிக்கு ரூ. 70.00 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஈ) அம்பத்தூர், ஓசூர், கோயம்புத்தூர் மற்றும் திருச்சியிலுள்ள தொழிற்பயிற்சி நிலையங்களை மேம்படுத்த ரூ. 1.475 கோடி ஒப்பளிக்கப்பட்டு, பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.10. சட்டமன்ற உறுப்பினர்களுக்கான தொகுதி அலுவலகங்கள்**

தொகுதி ஒன்றுக்கு ரூ. 4.85 இலட்சம் செலவில் 234 சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், அவர்களது தொகுதிகளில் அலுவலகக் கட்டடங்கள் அமைக்கும் பணிக்கான திட்டத்தின்கீழ் 226 தொகுதிகளுக்கான கட்டடப் பணிகள் முடிக்கப்பட்டு ஒப்படைக்கப்பட்டுவிட்டன. தியாகராய நகர், மைலாப்பூர் மற்றும் இராயபுரம் ஆகிய 3 இடங்களுக்கு நில வாடகைக்கான கருத்துரு அரசின் பரிசீலனையில் உள்ளது. மற்றும் திருவல்லிக்கேணி, புரசைவாக்கம், துறைமுகம் மற்றும் எழும்பூர் ஆகிய நான்கு தொகுதிகளுக்கான இடங்கள் முடிவு செய்யப்படவுள்ளன. அண்ணா நகரில் பணிகள் தொடங்க உள்ளன.

**2.11. பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை**

(அ) 2006-2007, பகுதி II திட்டத்தின்கீழ் நான்கு விடுதிகளில் சுற்றுச் சுவர் கட்ட ரூ. 12.48 இலட்சம் ஒப்பளிக்கப்பட்டன. இரண்டு இடங்களில் பணிகள் முடிவுற்றன. இரண்டு இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(ஆ) 2005-2006, பகுதி II திட்டத்தில் 436 பிற்படுத்தப்பட்டோர் மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்டோர் விடுதிகளில் அடிப்படை வசதிகள் செய்ய ரூ. 11.32 கோடி ஒப்பளிக்கப்பட்டது. இதில்



2007 ஏப்ரல் 4]

363 இடங்களில் பணிகள் முடிவுற்றன. 73 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

(இ) பிற்படுத்தப்பட்ட, மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு நான்காம் கட்டமாக 416 விடுதிகள் கட்டும் பணிக்கு ரூ. 131.04 கோடி ஒப்பளிப்பு வழங்கப்பட்டது. இதில் 95 இடங்களில் பணிகள் முடிவுற்றன. 278 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 43 இடங்களில் பணிகள் விரைவில் மேற்கொள்ளப்பட உள்ளன.

(ஈ) 79 சட்டமன்றத் தொகுதிகளில் பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கு 100 தங்கும் விடுதிகள் கட்ட அரசு ரூ. 31.50 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இதில் 86 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 14 பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்தில் உள்ளன.

(உ) மிகவும் பிற்படுத்தப்பட்ட மற்றும் சீர்மரபினர் மாணவர்களுக்கு 358 இடங்களில் விடுதிகள் கட்டுதல் மற்றும் குடிநீர் வசதிகள், சுகாதார மேம்பாடு பணிக்காக, ரூ. 2.76 கோடி ஒப்புதல் வழங்கியதில், 355 இடங்களில் பணிகள் முடிக்கப்பட்டு, மீதமுள்ள 3 இடங்களில் பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.12. செய்தி மற்றும் சுற்றுலாத் துறை**

மாமல்லபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் வளர்ச்சிப் பணிகளுக்காக (இரண்டாம் கட்டப் பணிகள்) அரசு ரூ. 432 கோடி இந்திய அரசு நிதி உதவியுடன் ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

**2.13. கால்நடை பராமரிப்புத் துறை**

பல்வேறு இடங்களில் 377 பராமரிப்பு மையங்கள் கட்டுவதற்கு அரசு ரூ. 40.17 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. அவற்றில் 270 மையங்களில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 100 மையங்களில் பணிகள் நடைபெற்று வருகின்றன. ஒரு பணி ஒப்பந்தப்புள்ளி நிலையில் உள்ளது. 6 இடங்களில் இடப் பிரச்சினை காரணமாகப் பணிகள் கைவிடப்பட்டன.

**2.14. பதிவுத் துறை**

சென்னை, திருவல்லிக்கேணியில் ஏற்கெனவே அமைந்துள்ள துணைப் பதிவாளர் அலுவலகக் கட்டடத்தைப் புதுப்பித்துக் கட்டும்

பணிக்கு அரசு ரூ. 84.50 இலட்சங்கள் ஒப்பளிப்பு வழங்கியதில் பணி முடிவடையும் நிலையில் உள்ளது.

மீமிசல், மன்னார்குடி, அனந்தபுரம், விக்கிரவாண்டி, இடைக்கால், வீரசிகாமணி, செங்கல்பட்டு, கங்கைகொண்டான், உடையார்பாளையம், ஒட்டன்சத்திரம், வந்தவாசி, வடலூர், இராமகிருஷ்ணராஜிபேட்டை, கலசப்பாக்கம் மற்றும் கே.வி. குப்பம் ஆகிய 15 இடங்களில் துணைப் பதிவாளர் கட்டடங்கள் கட்ட ரூ. 2.25 கோடி ஒப்பளிக்கப்பட்டுள்ளது. கலசப்பாக்கத்தில் பணி தொடங்கப்பட்டுள்ளது. ஏனைய இடங்களில் பணிகள் விரைவில் தொடங்கப்பட உள்ளன.

ஆரணி, காயல்பட்டினம், கடலூர், சத்தியமங்கலம், வேர்க்கிளம்பி, மேட்டுப்பாளையம், செய்யூர், இராமேஸ்வரம், திருப்போரூர் மற்றும் திருவள்ளூர் ஆகிய இடங்களில் துணைப் பதிவாளர் அலுவலகம் கட்டும் பணிக்கு ரூ. 1.50 கோடி ஒப்பளிக்கப்பட்டது. திருவள்ளூர், கடலூர், வேர்க்கிளம்பி ஆகிய இடங்களில் பணிகள் தொடங்கப்பட்டுள்ளன. ஏனைய இடங்களில் விரைவில் பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன.

### 2.15. வணிக வரித் துறை

(அ) ஓசூரில் வணிக வரித் துறைக் கட்டடம் ரூ. 1.54 கோடி செலவில் கட்டும் பணி மேற்கொள்ளப்படவுள்ளது.

(ஆ) சென்னை, கிரீம்ஸ் சாலையில் வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கு அரசு ரூ. 5.50 கோடி ஒப்பளிப்பு வழங்கியுள்ளது. இப்பணி முன்னேற்றத்தில் உள்ளது.

(இ) சில்காசியில் ரூ. 1.30 கோடி செலவில் வணிக வரித் துறைக் கட்டடம் கட்டுவதற்கான பணிகள் முடியும் நிலையில் உள்ளன.

### 2.16. போக்குவரத்துத் துறை

(அ) திருச்சியில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணிக்கு 2006-2007-ல் அரசு ரூ. 1.45 கோடி ஒப்புதல் அளித்துள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

(ஆ) ஈரோட்டில் வட்டாரப் போக்குவரத்து அலுவலகம் கட்டும் பணிக்கு 2006-2007-ல் அரசு ரூ. 1.25 கோடி ஒப்புதல் அளித்துள்ளது.



இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி முடிவு செய்யப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

### 2.17. சமூக நலத் துறை

(அ) தஞ்சாவூரில் உள்ள அரசு சேவை இல்லத்தில் ரூ. 92.00 இலட்சம் மதிப்பில் கட்டடம் கட்டும் பணி முன்னேற்றத்தில் உள்ளது. (2006-2007, பகுதி II திட்டம்.)

(ஆ) தாம்பரத்தில் உள்ள அரசு மனநலம் குன்றியோர்க்கான பள்ளிக்கு ரூ. 60.00 இலட்சம் செலவில் கூடுதல் கட்டடம் கட்டும் பணி முடியும் நிலையில் உள்ளது. (2005-2006, பகுதி II திட்டம்.)

### 2.18. ஊரக வளர்ச்சித் துறை

ஊராட்சி ஒன்றிய அலுவலகக் கட்டடங்கள் ரூ. 33 இலட்சம் மதிப்பில் கட்டுவதற்கான பணிகளில், கிருஷ்ணகிரியில் பணி முடிவடைந்துள்ளது. தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மற்றும் நல்லம்பட்டி, விழுப்புரம் மாவட்டம், திருநாவலூர் ஆகிய இடங்களில் பணிகள் முடியும் தருவாயில் உள்ளது.

### 2.19. ஆழிப் பேரலை

ஆழிப் பேரலையினால் பொதுப் பணித் துறை, வருவாய்த் துறை, சுகாதாரத் துறை, கால்நடை பராமரிப்புத் துறை மற்றும் கல்வித் துறை ஆகியவற்றினை சார்ந்த அலுவலகக் கட்டடங்கள் மிகவும் பாதிப்புக்குட்பட்டன. இவற்றைச் சீரமைத்துக் கட்டுவதற்கு அரசு ரூ. 36.54 கோடி ஒதுக்கியுள்ளது. அதில் பொதுப் பணித் துறை மற்றும் வருவாய்த் துறை சார்ந்த பணிகள் முடிவடைந்துள்ளன. சுகாதாரம், கால்நடை பராமரிப்பு மற்றும் கல்வித் துறையைச் சார்ந்த பணிகள் பல்வேறு நிலைகளில் முன்னேற்றத்திலும், ஒப்பந்தப்புள்ளி நிலையிலும் உள்ளன.

### 2.20. பாரம்பரியக் கட்டடங்கள்

பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் பராமரிப்புப் பணிகளுக்காக மத்திய அரசின் கூடுதல் மானியத் தொகையான ரூ. 60.63 கோடி, தேவையான அனைத்துத் துறைகளுக்குப் பகிர்ந்து அளிக்கப்பட்டு 2007-2008-ல் பராமரிப்புப் பணிகள் செய்யத் திட்டமிடப்பட்டுள்ளது. பாரம்பரியமிக்க தொன்மை வாய்ந்த

கட்டடங்களைப் பன்னிரண்டாவது நிதிக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 2006-2007 ஆம் ஆண்டில் ரூ. 10.00 கோடி செலவில் பராமரிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இதில் சென்னை இசைக் கல்லூரி கட்டடத்தைப் புதுப்பிக்க ரூ. 33.00 இலட்சம், சேப்பாக்கம் அரண்மனையைப் புனரமைக்க ரூ. 3.50 கோடி, உயர் நீதிமன்றக் கட்டடம் ஒளியூட்ட ரூ. 50.00 இலட்சம், சென்னை இலக்கியக் கழகக் கட்டடம் புனரமைக்க ரூ. 40.00 இலட்சம், சென்னை அரசு கண் மருத்துவமனைக் கட்டடம் புதுப்பிக்க ரூ. 25.00 இலட்சம், திருச்சி மாவட்ட நீதிமன்றக் கட்டடம் மேம்பாட்டிற்காக ரூ. 65.00 இலட்சம் சென்னை மாநகர மாஜிஸ்திரேட் நீதிமன்றக் கட்டடம் ரூ. 50.00 இலட்சம், சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டை ஒளியூட்ட ரூ. 30.00 இலட்சம், சென்னை அருங்காட்சியகம் புனரமைக்க ரூ. 2.20 கோடி மற்றும் இராஜாஜி சாலையில் உள்ள துணைக் கண்காணிப்புப் பதிவாளர் அலுவலகத்தைப் புதுப்பிக்க ரூ. 50.00 இலட்சம் செலவிலான பணிகள் மேற்கொள்ளப்பட உள்ளன. இராஜாஜி கூடம் புதுப்பிக்க ரூ. 66.00 இலட்சம் செலவிலான பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன.

### 3. பகுதி II திட்டங்கள்

#### அ. 2006-2007 ஆம் ஆண்டில் பகுதி-II திட்டத்தின்கீழ் நடைபெற்றுக் கொண்டிருக்கும் பணிகள்:—

(அ) திருவாரூர் கோட்ட அலுவலகம் மற்றும் உப கோட்ட அலுவலகம் கட்டுதல், மதிப்பீடு ரூ. 39.00 இலட்சம்.

(ஆ) கும்பகோணம், விருத்தாசலம், சத்தியமங்கலம், மணப்பாறை மற்றும் குழித்துறை ஆகிய 5 இடங்களில் ஒரு உப கோட்டம் மற்றும் ஒரு பிரிவு அலுவலகம் கட்டுதல், மதிப்பீடு தலா ரூ. 8.70 இலட்சம்.

(இ) தஞ்சாவூர் மாவட்டம், பாபநாசத்தில் ஒரு பிரிவு அலுவலகம் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 4.20 இலட்சம்.

(ஈ) சேலத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 1.16 கோடி.

(உ) கோயம்புத்தூரில் மிக, மிக முக்கியப் பிரமுகர்களுக்குக் கூடுதலாக இரண்டு அறைகள் சுற்றுலா மாளிகை வளாகத்தில் கட்டுவதற்கு மதிப்பீடு ரூ. 44.00 இலட்சம்.



(ஊ) சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' வகை அரசு ஊழியர் குடியிருப்பு (4 பிளாக்) மூன்று தளக் கட்டடம் (24 எண்ணிக்கை) கட்டும் பணிக்கு மதிப்பீடு ரூ. 1.183 கோடி.

(எ) சென்னை, திருச்சி மற்றும் ஈரோடு ஆகிய இடங்களில் கண்காணிப்புப் பொறியாளர்களுக்கு அரசுக் குடியிருப்புகள் கட்டும் பணிக்கு மதிப்பீடு தலா ரூ. 20.00 இலட்சம்.

#### ஆ. 2007-2008 ஆம் ஆண்டில் பகுதி II திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படவுள்ள புதிய பணிகள்:—

1. தஞ்சாவூர் மாவட்டத்தில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டுதல் : ரூ. 1.00 கோடி.
2. திருவாரூரில் உள்ள சுற்றுலா மாளிகைக்குக் கூடுதல் வசதிகளாக சாலை வசதி. சுற்றுச் சுவர் வசதி மற்றும் பிற வசதிகள் செய்தல் : ரூ. 15.00 இலட்சம்
3. சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' வகை அரசு ஊழியர் குடியிருப்பு (12 எண்கள்) மூன்று தளத்துடன்கூடிய 2 பிளாக் கட்டும் பணி : ரூ. 65.00 இலட்சம்
4. பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பில் உள்ள 12 கோட்டங்களுக்குப் புதிய வாகனங்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்தல் : ரூ. 51.00 இலட்சம்
5. பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பில் உள்ள 2 வட்டங்களுக்குப் புதிய கார்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்தல் : ரூ. 8.00 இலட்சம்

### 4. தற்போது முன்னேற்றத்தில் உள்ள பெரும் பணிகள் மற்றும் எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும் பணிகளின் விவரங்கள்:

இணைப்பு 1 மற்றும் இணைப்பு 2-ல் குறிப்பிடப்பட்டுள்ளன.

[2007 ஏப்ரல் 4

## இணைப்பு 1

## முன்னேற்றத்தில் உள்ள பெரும்பணிகள்

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 1. | தஞ்சாவூரில் மருத்துவக் கல்லூரிக்கான கட்டடங்கள் கட்டுதல் | 2275 |
| 2. | சென்னை ஸ்டான்லி மருத்துவக் கல்லூரி, செங்கல்பட்டு மருத்துவக் கல்லூரி, திருநெல்வேலி மருத்துவக் கல்லூரி மற்றும் மதுரை மருத்துவக் கல்லூரி ஆகிய இடங்களில் மனநல மருத்துவ சிகிச்சைப் பகுதிகளை மேம்படுத்துதல் மற்றும் கட்டுமானப் பணிகள் | 193 |
| 3. | தருமபுரி, கிருஷ்ணகிரி, தேனி, புதுக்கோட்டை மற்றும் கன்னியாகுமரி ஆகிய ஐந்து மாவட்டங்களில் உள்ள 35 அரசு மருத்துவமனைகளுக்குக் கூடுதல், விரிவாக்கம், பழுதுபார்ப்பு மற்றும் புதுப்பித்தல் பணிகள் செய்தல் | 4582 |
| 4. | திருப்பத்தூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல். | 497 |
| 5. | கொடைக்கானலில் கட்டம் 1-ன்கீழ் மாவட்ட நீதிமன்றக் கட்டடங்கள் மற்றும் நீதிபதி குடியிருப்புகள் கட்டுதல் | 250 |
| 6. | தேனி மாவட்டம், தேனியில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடத்திற்கு துணைக் கட்டடங்கள், நீதித் துறை அலுவலர் குடியிருப்பு, வாகனம் நிறுத்துமிடம், பொதுக் கழிப்பிடங்கள், இரு சக்கர வாகனம் நிறுத்துமிடம், புல்வெளியுடன்கூடிய தோட்டம் ஆகியவை அமைத்தல் | 357 |
| 7. | கிருஷ்ணகிரி மாவட்டத்தில் பெருந்திட்ட வளாகம் மற்றும் மாவட்ட ஆட்சியர் மாளிகை கட்டுதல் | 1000 |
| 8. | திருநெல்வேலியில் புதியதாக மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 660 |
| 9. | ஆறாம் கட்டமாக, நபார்டு நிதி உதவியுடன் 13 மாவட்டங்களில் உள்ள 234 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 16132 |
| 10. | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரத்தில் வேளாண் விளைபொருள் பேரங்காடிக் கட்டடம் கட்டுதல் | 308 |
| 11. | 383 இடங்களில் கால்நடை மருத்துவ மையங்கள் அமைத்தல் | 4074 |
| 12. | அம்பத்தூர், ஒசூர், கோயம்புத்தூர், திருச்சி தொழிற்பயிற்சிக் கூடங்களை மேம்படுத்துதல் | 148 |
| 13. | பிற்படுத்தப்பட்ட மற்றும் மிகவும் பிற்படுத்தப்பட்ட மாணவர்களுக்கான 436 விடுதிகள் கட்டுதல் | 1132 |
| 14. | தருமபுரி மாவட்டம், அதியமான் கிராமத்தில் வள்ளல் அதியமான் அவர்களுக்கு நினைவகம், மணிமண்டபம் மற்றும் கலையரங்கம் அமைத்தல் | 115 |
| 15. | மாமல்லபுரத்தில் உள்கட்டமைப்பு மற்றும் பயணியர் வருகை வளர்ச்சிப் பணிகள் செய்தல் (கட்டம்-2 பணிகள்) | 432 |
| 16. | சென்னை கிரீம்ஸ் சாலையில் வணிக வரி ஆணையர் அலுவலகக் கட்டடம் கட்டுதல் | 550 |
| 17. | பேரலைப் பணிகள் | 3654 |
| | **மொத்தம்** | **36359** |



2007 ஏப்ரல் 4]

## இணைப்பு 2

## எடுத்துக்கொள்ளப்படவுள்ள பெரும்பணிகள்

*(ரூபாய் இலட்சத்தில்)*

| வ. எண் | பணியின் பெயர் | மதிப்பு |
|---|---|---|
| 1. | திருவாரூர் மற்றும் தருமபுரியில் புதிய அரசு மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுதல் | 20000 |
| 2. | சென்னை குழந்தைகள் மற்றும் பெண்கள் மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 1200 |
| 3. | சென்னை இராயப்பேட்டை மருத்துவமனையில் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 850 |

| | | |
|---|---|---|
| 4. | தஞ்சாவூர், திருச்சி, மதுரை, சென்னை கீழ்ப்பாக்கம், ஸ்டான்லி மருத்துவமனையில் விடுதிக் கட்டடங்கள் கட்டுதல் | 600 |
| 5. | தமிழ்நாட்டில் ஐந்து இடங்களில் புதிய செவிலியர் பயிற்சிப் பள்ளிக் கட்டடங்கள் கட்டுதல் | 500 |
| 6. | விழுப்புரத்தில் புதிய மருத்துவக் கல்லூரிக் கட்டடங்கள் கட்டுதல் | 1200 |
| 7. | செங்கல்பட்டில் செவிலியர் கல்லூரியில் உள்ள செவிலியர் பள்ளியை மேம்படுத்துதல் | 90 |
| 8. | சென்னை டி.எம்.எஸ். வளாகத்தில் கூடுதல் கட்டடம் கட்டுதல் | 550 |
| 9. | தாம்பரத்தில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் | 282 |
| 10. | பெரம்பலூரில் ஒருங்கிணைந்த நீதிமன்றக் கட்டடம் கட்டுதல் | 875 |
| 11. | காரியாப்பட்டி, குந்தா, இலுப்பூர், வாழப்பாடி, கெங்கவள்ளி, தொட்டியம், வீரகேரளம்புதூர் மற்றும் பத்மநாபபுரம் ஆகிய இடங்களில் புதிய வட்டாட்சியர் அலுவலகம் கட்டுதல் | 1130 |
| 12. | ஏழாவது கட்டமாக, நபார்டு நிதி உதவியுடன், 16 மாவட்டங்களில் உள்ள 195 உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளுக்கு வகுப்பறை, ஆய்வகம், கழிவறை மற்றும் தண்ணீர் வசதி செய்தல் | 13169 |
| | **மொத்தம்** | **40446** |





## இணைப்பு II

*(104 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## மானியக் கோரிக்கை எண்40—பாசனம் (பொதுப் பணித் துறை)

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

*"நீர்இன்று அமையாது உலகு*
*நிச்சயம்; அப்படியே அமையட்டும்-ஆனால்*
*செருக்களத்து நீராம் செந்நீரும்*
*உருக்குலைந்த ஏழையின் கண்ணீரும்-அல்லாத*
*நீர் இன்று அமையாது உலகு-என*
*அப்பாடல் அமையட்டும்."*

*—மாண்புமிகு முதலமைச்சர் கலைஞர் மு. கருணாநிதி*

### முகவுரை

இந்திய தீபகற்பத்தின் தென்கோடியில் உள்ள மாநிலமான தமிழகம் 1,30,058 சதுர கி.மீ. பரப்பளவில் அமைந்துள்ளது. இம்மாநிலம், வடக்கு தெற்காக அட்சரேகை 08° 05' வ முதல் 13° 35' முடிய மற்றும் கிழக்கு மேற்காக தீர்க்க ரேகை 76° 15' கி முதல் 80° 20' முடிய அமைந்துள்ளது. தமிழ்நாடு வடக்கே ஆந்திர மாநிலம், மேற்கே கேரள மாநிலம், வடமேற்கே கர்நாடக மாநிலம், தெற்கே இந்தியப் பெருங்கடல் மற்றும் கிழக்கே வங்காள விரிகுடா ஆகியவற்றால் சூழப்பட்டுள்ளது. 2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்தின் மக்கள் தொகை 6,21,10,839 ஆகும்.

தமிழகத்தின் புவியமைப்பு பெரும்பாலும் பாதிக்கு மேற்பட்ட பகுதிகள் சமவெளிகளாகவே அமைந்துள்ளன. கிழக்குப் பகுதி கடற்கரைச் சமவெளியாகவும், மேற்குப் பகுதி மலைகள் மற்றும் உயர்நிலங்களாகவும் (பீடபூமி) காணப்படுகிறது.

புவியிலுள்ள அனைத்து உயிரினங்களும் நீரைச் சார்ந்தே உள்ளன. நீரின்றி உலகில் உயிரினங்கள் வாழ இயலாது. அண்டத்திலுள்ள கோள்களில் பூமி மட்டுமே நீரினைப் பெற்றுள்ளதால் தனித்து விளங்குகிறது. இதனைக் கருத்தில்கொண்டே வான் புகழ் வள்ளுவர் தனது உலகப் பொதுமறையாம் திருக்குறளில் "மழை" என்ற

அதிகாரத்திற்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளார். மனித வாழ்வின் அடிப்படைத் தேவையான இந்த நீர் இயற்கை தந்த அருட் கொடையாகும். கால ஓட்டத்தினால் ஏற்படும் அறிவியல் மற்றும் தொழில்நுட்ப முன்னேற்றத்திற்கும் நீரே முக்கியப் பங்கு வகிக்கின்றது.

## 1. நீர் வள ஆதார அமைப்பு

1856 ஆம் ஆண்டு முதல் இயங்கி வரும் மிகத் தொன்மையான பொதுப் பணித் துறையானது காலத்திற்கேற்ப, நாடு தழுவிய மற்றும் உலகளாவிய முன்னேற்றத்துக்கு நிகராகப் பன்முறை சீரமைக்கப்பட்டுள்ளது. இத்துறை, இருபதாம் நூற்றாண்டின் இறுதியில் கட்டட அமைப்பு மற்றும் நீர் வள ஆதார அமைப்பு என இரு வேறு பிரிவுகளாக மாற்றி அமைக்கப்பட்டது. இத்துறையின் நீர் சார்ந்த பிரிவுகள், கட்டடக் கட்டுமானம், வடிவமைப்பு மற்றும் கட்டட எழிற்கலையியல் எனப் பல்வேறு பிரிவுகளிலும் முன்னேற்றத்தைக் கொண்டு வருவதற்கு ஏற்ற வகையில் இத்துறை மாற்றியமைக்கப்பட்டுள்ளது. நீர் ஆதார அமைப்பு மற்றும் கட்டடப் பிரிவு ஆகியவற்றில் பணிகளைச் செவ்வனே செய்ய ஏதுவாகத் தொழில் முறை வல்லுநர்களைக்கொண்டு இயங்கும்வண்ணம், துறையின் தொழில்நுட்ப அலுவலர்கள் இரு பிரிவாகச் செயல்பட ஆணை பிறப்பிக்கப்பட்டுள்ளது.

1994 முதல் பொதுப் பணித் துறையின் நீர் வள ஆதார அமைப்பு வடிநிலம் என்ற கோட்பாட்டை மையமாகக்கொண்டு செயல்பட்டு வருகிறது. நீர்வரத்துப் பகுதியின் அடிப்படையில் நீர் வள இருப்பினை மதிப்பிடுதல், பல்வேறு துறைகளின் நீர்த்தேவைக் கணக்கீடு ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

2002 ஆம் ஆண்டு தேசிய நீர்க் கொள்கைக்கு ஏற்ப, மாநில நீர்க் கொள்கை திருத்தியமைக்கப்பட்டு வருகிறது. தற்பொழுது தொழில்நுட்ப வல்லுநர்களைக்கொண்ட நீர் வள ஆதார அமைப்பு முழுவதும் முதன்மைத் தலைமைப் பொறியாளர் ஒருவர், நடைமுறை சார்ந்த தலைமைப் பொறியாளர்கள் நால்வர் மற்றும் சென்னை, திருச்சிராப்பள்ளி, மதுரை மற்றும் கோயம்புத்தூரில் உள்ள பல்வேறு ஆற்று வடிநிலங்களுக்குப் பொறுப்பு வகிக்கும் மண்டலத் தலைமைப் பொறியாளர்கள் நால்வர் மற்றும் சென்னையில் நீர் ஆய்வு நிறுவனத்திற்கான தலைமைப் பொறியாளர் ஒருவர் ஆகியோரைக் கொண்டு இயங்கி வருகின்றது. இது தவிர, திருச்சிராப்பள்ளியில் தலைமைப் பொறியாளர் ஒருவர் தலைமையில் பாசன மேலாண்மைப்



பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகின்றது. பொதுப் பணித் துறையின் நீர் வள ஆதார அமைப்பில் 45 கண்காணிப்புப் பொறியாளர்களும், 151 செயற்பொறியாளர்களும் உள்ளனர்.

### 1.1. தமிழகத்தின் நீர் ஆதார மற்றும் பாசன உள்கட்டமைப்பு

தமிழகத்தில் ஆறுகள் மேற்குத் தொடர்ச்சி மலை மற்றும் தக்காண பீடபூமியிலிருந்து கிழக்கு நோக்கிப் பாய்கின்றன. தமிழகத்தின் பாசன அமைப்பிலுள்ள 34 ஆற்று வடிநிலங்கள் 17 ஆற்று வடிநிலங்களாகத் தொகுக்கப்பட்டு செயல்பட்டு வருகின்றன. இவற்றில் சில வடிநிலங்கள் முழுவதுமாகத் தமிழகத்திற்குள் அமைந்துள்ளன. மற்ற வடிநிலங்கள் பிற மாநிலங்களில் பரந்து தொடங்கி தமிழகத்தில் முடிவடைகின்றன. இந்த 17 வடிநிலங்களில், பெரும்பாலான வடிநிலங்களில் நீர்ப்பற்றாக்குறை உள்ளது; ஒரு சில வடிநிலங்களில் உபரி நீர் உள்ளது. தமிழகத்தின் மக்கள் தொகை மற்றும் பரப்பளவு இந்திய நாட்டின் மொத்த மக்கள் தொகை மற்றும் பரப்பளவில் முறையே 7 சதவிகிதம் மற்றும் 4 சதவிகிதம் ஆகும். ஆனால் தற்போதுள்ள நீர் ஆதாரம் 3 சதவிகிதம் மட்டுமே. தமிழகத்தின் சராசரி மழையளவு 925 மி.மீ. ஆக இருந்த போதிலும்கூட, மழை மறைவு மண்டலங்கள் 400 மி.மீ அல்லது அதற்கும் குறைவான மழை பெறுவதால் வறண்ட பகுதிகளாகவே உள்ளன. சில ஆண்டுகளில் 2005 ஆம் ஆண்டு நிகழ்ந்தது போல், திடீர் வெள்ளப் பெருக்கினால் பெரும் சேதங்கள் ஏற்படுகின்றன. தமிழகத்தின் மொத்த மேற்பரப்பு நீர் இருப்பு 853 டி.எம்.சி. ஆகும். இது அண்டை மாநிலங்களிலிருந்து கிடைக்கும் 261 டி.எம்.சி.யை உள்ளடக்கியுள்ளது. நிலத்தடி நீர் இருப்பு 790 டி.எம்.சி எனக் கணக்கிடப்பட்டுள்ளது.

நீர் வள இருப்பு அதிகரிக்க இயலாத சூழலில், பெருகி வரும் மக்கள்தொகை, தொழிற்சாலை மற்றும் வேளாண்மைக்காக நீரின் தேவை மட்டும் நாள்தோறும் அதிகரித்தவண்ணம் உள்ளது. கிடைக்கப்பெறும் மேற்பரப்பு நீர் வளம் முழுவதும் 62 பெரிய நீர்த்தேக்கங்கள், 8 சிறிய நீர்த்தேக்கங்கள், 5 குடிநீர்த் தேவைக்கான நீர்த்தேக்கங்கள் மற்றும் 39,202 ஏரிகள் மற்றும் ஊரணி ஆகியவற்றில் தேக்கி வைக்கப்படுகிறது.

### 1.2. நிலத்தடி நீர் வளம்

ஒரு மாநிலத்தின் மேற்பரப்பு நீர் வளம் முழுவதும் ஏறக்குறையப் பயன்படுத்தப்பட்டுள்ள நிலையில், சொந்தமாக நிலம் வைத்துள்ள

[2007 ஏப்ரல் 4

ஒவ்வொரு மனிதனின் காலடியிலும் நிலத்தடி நீர் உள்ளதால் அது நீர் மேலாண்மையில் முக்கியத்துவம் வகிக்கிறது.

இந்திய அரசின் நீர் வள ஆதார அமைச்சகத்தால் ஏற்படுத்தப்பட்ட குழுவால் பரிந்துரைக்கப்பட்ட முறையின்படி, நிலத்தடி நீர் மதிப்பீடு செய்யப்பட்டு வருகிறது. தற்போதைய மதிப்பீட்டின்படி, தமிழகத்தின் மொத்த நிலத்தடி நீர் வள அளவில் 85 சதவிகிதம் (671 டி.எம்.சி.) பயன்படுத்தப்பட்டு வருகிறது. நிலத்தடி நீர்ப் பயன்பாடு சீராக இல்லாததால், மொத்தமுள்ள 385 வருவாய் வட்டாரங்களில் 175 வட்டாரங்கள் நீரை அதிக அளவில் பயன்படுத்தி அதிக நுகர்வு வட்டாரங்களாகவும், 8 உவர்ப்பு வட்டாரங்களாகவும் உள்ளன.

மீதமுள்ள 15 சதவிகித நிலத்தடி நீர் வளமானது 105 பாதுகாக்கப்பட வேண்டிய வட்டாரங்களாகவும், 97 பாதுகாப்பான வட்டாரங்களாகவும் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது.

### 1.3. பாசனப் பரப்பு

1950 ஆம் ஆண்டு நிகர பாசனப் பரப்பு 21.11 இலட்சம் எக்டேராக இருந்தது. பின்னர் 1990 ஆம் ஆண்டில் இப்பாசனப் பரப்பு 27.75 இலட்சம் எக்டேராக உயர்ந்து, 2004-2005-ல் 21.48 இலட்சம் எக்டேராகச் சரிந்துள்ளது. 2005-2006-ல் 29.20 இலட்சம் எக்டேர் ஆக உயர்ந்துள்ளது. இந்தியாவின் சராசரி தனி மனிதப் பாசனத் திறன் 0.15 எக்டேர் ஆக இருக்க, தமிழகத்தில் இது 0.08 எக்டேராகவே உள்ளது. இம்மாநிலம் பாசனப் பரப்பளவை அதிகரிக்கவும், நிலையான பாசனம் பெறும் பரப்பளவை மேம்படுத்தவும் நிலத்தடி நீர்வளத்தையே சார்ந்துள்ளது.

இம்மாநிலத்தில் ஆறுகள், ஏரிகள் மற்றும் கிணறுகள் ஆகிய மூன்றும் மேற்பரப்புப் பாசனத்தின் முக்கிய நீர் ஆதாரங்கள் ஆகும். இம்மாநிலத்தில், 39,202 ஏரிகள், 2,295 பாசன முதன்மைக் கால்வாய்கள் மற்றும் 20,26,276 பாசனக் கிணறுகள் உள்ளன.

### 1.4. நீர் வள மேலாண்மை

பெருகி வரும் நீரின் தேவையாலும், பல துறைகளின் மாறுபட்ட பயன்பாட்டுத் தன்மைகளாலும் தமிழகம், நீர் வள மேலாண்மைக்கு அதிக முக்கியத்துவம் அளித்துள்ளது. தொடர்ந்து அதிகரிக்கும் தேவை, நீர்வரத்துக் குறைவு ஆகிய காரணங்களால் பல ஆற்று வடிநிலங்களில் நீர்ப் பற்றாக்குறை காணப்படுகின்றது. வேளாண் தேவை தவிர,



2007 ஏப்ரல் 4]

நகரமயமாக்குதல் மற்றும் தொழில் பெருக்கம் ஆகியவற்றுக்கும் வீட்டுப் பயன் மற்றும் குடிநீர்த் தேவைக்கும் பெருமளவில் நீர் வழங்க வேண்டியுள்ளது. இவை தவிர, தொழிற்சாலைகள், மீன் வளர்ப்பு, சுற்றுச் சூழல் மேம்பாடு, சமுதாயத் தேவைகள் ஆகியனவும் பூர்த்தி செய்யப்பட வேண்டியுள்ளன.

## 2. நீர்ப்பாசனத் திட்டங்கள்

### 2.1. நீர் வள நில வளத் திட்டம் (IAMWARM)

தமிழ்நாட்டில் நீர் இருப்புக் குறைந்து வருவதையும், நீரின் தேவை அதிகரித்து வருவதையும் கவனத்தில்கொண்டு அனைத்து வடிநிலங்களிலும் நீர்ப்பாசனக் கட்டமைப்புகளை நவீனப்படுத்தி, கால்வாய்கள், ஏரிகள் ஆகியவற்றைப் புனரமைத்து, நீர் மேலாண்மையை மேம்படுத்துவது அவசியமாகிறது. அதற்கேற்றவாறு தொழில்நுட்ப உத்திகளை இணைத்து பாசன நீர் விநியோகத்தை மேம்படுத்தவும், அதற்கான பொறுப்புகளை நிர்ணயிக்கவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது. நவீன முனைப்பு வேளாண்மை வளர்ச்சியினை ஏற்படுத்துவதன்மூலம் வேளாண் பெருமக்களின் பொருளாதார நிலையை மேம்படுத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

வேளாண் வருவாயை அதிகப்படுத்தி, ஊரக மக்களின் வறுமை ஒழிப்பை நோக்கமாகக்கொண்டு பாசன மேலாண்மையில் நீர்த் திறனை அதிகரிக்க நீர் மற்றும் வேளாண்மைச் சார்ந்த அனைத்துத் துறைகளும் ஒருங்கிணைந்து செயல்படும்வண்ணம் நீர் வள நில வளத் திட்டம் வடிவமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தமிழ்நாடு பொதுப் பணித் துறையின் பல்துறைகள் அடங்கிய திட்டப் பிரிவினரால் உலக வங்கியின் திட்டத் தயாரிப்பு குழுக்களின் வழிகாட்டுதலோடு 63 உபவடிநிலங்களுக்காக உருவாக்கப்பட்டு இந்திய அரசின்மூலமாக உலக வங்கிக்கு அனுப்பப்பட்டது. 2006 டிசம்பர் திங்களில் உலக வங்கியுடன் இதற்கான பேச்சுவார்த்தை முடிவுற்றது. புது டில்லியில் 12-2-2007 அன்று முத்தரப்பு ஒப்பந்தம் கையொப்பமிடப்பட்டது. இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீடு ரூ. 2547 கோடி (566 மி. டாலர்கள்) ஆகும். இதனை ஆறு ஆண்டுகளில் செயற்படுத்தி முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

இந்தத் திட்டத்தின்கீழ் 63 உபவடிநிலங்களில் உள்ள பாசன அமைப்புகளான அணைக்கட்டுகள், கால்வாய்கள்,

[2007 ஏப்ரல் 4

கிளைக் கால்வாய்கள் ஆகியவற்றின் கட்டுமானங்கள் ஆகியவைகள் சீரமைத்து மேம்படுத்தப்படும். இந்த வடிநிலங்களில் உள்ள ஏரிகளை பொறுத்தமட்டில், ஏற்கெனவே மைய அரசின் நிதி உதவியுடன் மரபு சார்ந்த நீர் நிலைகளைச் சீரமைத்தல், புனரமைத்தல் மற்றும் புதுப்பித்தல் என்ற முன்னோடித் திட்டம் ஒன்றை மாநில அரசு செயல்படுத்தியுள்ளது. இந்த முன்னோடித் திட்டத்தின்கீழ் ரூ. 10.594 கோடி அளவில், இரண்டு மாவட்டங்களில் 46 ஏரிகளை (சிவகங்கை 8, விழுப்புரம் 38) சீரமைத்துப் புனரமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதே நோக்கங்களை உள்ளடக்கி உலக வங்கியின் நிதி உதவி பெறும் நீர் வள நில வளத் திட்டத்தின்மூலம் சுமார் 5,763 ஏரிகளைப் புதுப்பித்து, புனரமைத்து, சீர்படுத்த மட்டும் ரூ. 1,086 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இந்தச் செலவில் 75 விழுக்காடு தமிழக அரசும், 25 விழுக்காடு மத்திய அரசும் பங்கேற்கும்.

ஒருங்கிணைந்த நீர் வள, நில வளத் திட்டத்தின்கீழ் முதலாம் ஆண்டு 12 உபவடிநிலங்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளில் 9 உப வடிநிலங்களுக்கு விரிவான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் ரூ. 399.95 கோடியில் 71 ஒப்பந்த ஆவணங்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. இதில், 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 160 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதர 3 உபவடிநிலங்களுக்கான (கௌன்டின்ய நதி, பொய்னி மற்றும் உவம்) விரிவான திட்ட மதிப்பீடு, தொடர்புடைய துறைகளுடன் இணைந்து தயாரிக்கப்பட்டு வருகிறது. மீதமுள்ள 51 உபவடிநிலங்களுக்குத் திட்ட மதிப்பீடுகள் தயாரிக்கும் நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

இத்திட்டத்தின்கீழ் நீர் வளத்தைப் பயன்படுத்தும் துறைகளுக்கு தனித்தனி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அந்தந்தத் துறைகளின்மூலம் திட்டங்கள் செயல்படுத்தப்படும். அதற்கான செயல் திட்டம், செயலாக்கம் மற்றும் நிதிச் செலவு ஆகிய முன்னேற்றங்கள் பல்துறைகள் அடங்கிட திட்டப் பிரிவினரால் கண்காணிப்புடன் முழு வடிவு பெறும். அக்குழு நீர் வள ஆதார அமைப்பின் முதன்மைத் தலைமைப் பொறியாளரின்கீழ் செயல்படும் மூன்று பிரிவுகள் இத்திட்டச் செயல்பாட்டினைக் கண்காணித்து வரும். (அவைகள் கொள்முதல் பிரிவு, விவசாயிகள் பாசன மேலாண்மையில் பங்கேற்பு, தகவல் மேலாண்மைப் பிரிவு மற்றும் பயிற்சிப் பிரிவு ஆகியவையாகும்).

2004-ல் முடிவடைந்த நீர் வள ஆதாரத் தொகுப்புத் திட்டம்-1-ன் மூலம் ஆறு இலட்சம் எக்டேர் நிலங்கள் பயன்பெற்று தமிழ்நாடு



2007 ஏப்ரல் 4]

பாசனதாரர்களே பாசன மேலாண்மை செய்ய வழிவகை செய்யப்பட்டுள்ள சட்டத்தின் மூலம் 1,566 பாசன நீர் உபயோகிப்போர் சங்கங்கள் அமைக்கப்பட்டன. இச்சங்கங்களின் தலைவர்கள் மற்றும் பிரதிநிதிகள் ஜனநாயக முறையில் தேர்ந்தெடுக்கப்படத் தேர்தல்கள் நடத்தப்பட்டு அவர்களுக்குப் பாசனப் பங்கேற்பு மேலாண்மையில் பயிற்சி அளிக்கப்பட்டன. பாசன அமைப்புகளைப் பராமரிக்க சங்கம் ஒவ்வொன்றுக்கும் எக்டேருக்கு ரூ. 100 வீதம் ஒரு முறை மானியமாக, நிதி உதவி அளிக்கப்பட்டது.

தற்பொழுது நீர் வள நில வளத் திட்டத்தின்கீழ் 6.17 லட்சம் எக்டேர் நிலங்களுக்கு சுமார் 2,600 புதிய நீர்ப்பாசன நீர் உபயோகிப்போர் சங்கங்கள் அமைக்கப்பெற்று பாசன மேலாண்மையில் பாசனதாரர்களே பங்கேற்க வழிவகை செய்யப்படும்.

## 2.2. நீரியல் திட்டம் II

நீரியல் திட்டமானது, நிறுவன மற்றும் நிர்வாகம், தொழில்நுட்ப பகுதிகள், புள்ளிவிவரங்களைச் சேகரிப்பதற்கான அடிப்படை வசதிகள் ஆகியவற்றை மேம்படுத்தி நீரை உபயோகப் படுத்துபவர்களுக்கு நீரியல், நீர்நிலையியல், நீர்ப்புவியியல் மற்றும் நீரின் தன்மை ஆகியவற்றிற்குப் புள்ளிவிவரங்களை வழங்குவதற்குத் தேவையான திட்டம் உலக வங்கி உதவியுடன் நீரியல் திட்டம்-I என்ற திட்டம் நிறைவேற்றப்பட்டது. இந்த நீரியல் திட்டம் தொகுப்பு-I திட்டம் 31-12-2003-உடன் திறம்படச் செயல்படுத்தப்பட்டதன் தொடர்ச்சியாக இந்தத் துறை மேற்குறிப்பிட்டுள்ள விவரங்களைத் தொடர்ந்து சேகரித்து வருகிறது. எனவே, இத்திட்டத்தின் தொடர் திட்டமாக நீரியல் திட்டம்-II ரூ.25.72 கோடி செலவில் ஏப்ரல் 2006 முதல் ஆறு ஆண்டுகளுக்குச் செயல்படுத்த எடுத்துக்கொள்ளப்பட்டது.

பின்வரும் பணிகள் இத்திட்டத்தின்கீழ் மேற்கொள்ளப்படும்:—

(1) நீரியல் திட்டம்-I-ன் செயல்பாட்டினைத் தொடருதல்.

(2) நீர் வளம் குறித்து விழிப்புணர்ச்சி ஏற்படுத்துதல், அடிப்படை விவரங்களைப் பயன்படுத்துவோருக்குப் பரப்பிடுதல் மற்றும் நீர் வளம் குறித்து நீரினைப் பயன்படுத்துவோரிடமிருந்து தேவைகளைப் பகிர்ந்து கொள்ளுதல்.

(3) மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீர் வளர்ச்சித் திட்டங்களுக்கான நீரியல் வடிவமைப்புகளை உருவாக்குதல்.

(4) தீர்மானங்கள் எடுக்க உதவிடும் அமைப்புகள் (Decision Support Systems) மூன்று வடிநிலங்களில் கீழ்க்கண்ட மூன்றுவிதமான பிரச்சினைகளுக்காக உருவாக்குதல்:—

(i) வைப்பாறு வடிநிலத்தில் வறட்சியைக் கண்காணித்து கண்டறிந்து மேலாண்மை செய்தல்

(ii) தாமிரபரணி வடிநிலத்தில் வெள்ள நீர் மேலாண்மை செய்தல்

(iii) அக்கினியாறு வடிநிலத்தில் மேற்பரப்பு மற்றும் நிலத்தடி நீரின் ஒருங்கிணைந்த பயன்பாட்டினை வடிவமைத்தல்.

**திட்ட நோக்கத்திற்கான ஆய்வு**

இரண்டாவது நீரியல் திட்டம் முடிவுறும் சமயத்தில் மேலே குறிப்பிடப்பட்டுள்ள மூன்று வடிநிலங்களில் மேற்கொள்ள வேண்டிய முடிவுகள் குறித்து தேவையான விவரங்கள் பல்வேறு முகமைகளுக்கு அளிக்கக்கூடிய வகையில் மேம்பட்டிருக்கும்.

### 3. அண்டை மாநிலங்களில் இருந்து மிகை நீரினைத் தமிழகத்திற்குக் கொண்டு வருதல்

தமிழ்நாடு நீர் வள ஆதாரத்தில் பற்றாக்குறை உள்ள மாநிலமாகும். தமிழ்நாட்டின் மேற்பரப்பு நீர் அனைத்தும் கிட்டத்தட்டப் பயன்படுத்தப்பட்டு விட்டது.

அண்டை மாநிலங்களாகிய கர்நாடகா, கேரளா மற்றும் ஆந்திரப் பிரதேசம் மிகையான நீர் வள ஆதாரங்களோடு அமைந்துள்ளன. நீர் வள ஆதாரங்களைப் பெற தமிழ்நாடு அண்டை மாநிலப் படுகைகளில் உள்ள நீரைப் பகிர்ந்துகொள்ள வேண்டிய நிலையிலும் அல்லது தொலை தூரத்திலிருந்து நீர் கொண்டு வருவதை நம்பியும் உள்ளது. தேசிய நீர் வள மேம்பாட்டு முகமை தீபகற்பப் பகுதியில் உபரி மற்றும் பற்றாக்குறைப் படுகைகளைத் தெரிந்தெடுத்து மகாநதி மற்றும் கோதாவரி நதிகளிலிருந்து கிடைக்கக்கூடிய உபரி நீரை கிருஷ்ணா, பெண்ணாறு, காவிரி, வைகை மற்றும் குண்டாறு ஆகிய படுகைகளுக்குத் திருப்பி விடலாம் என்று தெரிவித்துள்ளது.

இத்திட்டத்தின்படி மகாநதி மற்றும் கோதாவரி நதிகளின் உபரி நீர் ஆந்திரப்பிரதேசத்திலுள்ள கிருஷ்ணா மற்றும் பெண்ணாற்றுக்குத்





திருப்பி விடப்படும். பெண்ணாற்றிலிருந்து காவிரிக்குத் திருப்பி விடப்படும் நீர் சோமசீலா அணைக்கட்டிலிருந்து 538 கி.மீ. நீளமுள்ள இணைப்புக் கால்வாய் வழியாக சுமார் 8,565 மி.க.மீ. (303 டி.எம்.சி.) நீர் காவிரி நதியின் குறுக்கே அமைந்துள்ள கல்லணை வரை திருப்பப்படும். இணைப்புக் கால்வாய் சோமசீலா அணை முதல் தமிழகத்தில் கல்லணை வரை இடைப்பட்ட ஆந்திரம் மற்றும் தமிழ்நாடு பகுதிகளின் பாசனம், குடிநீர்போன்ற தேவைகளைப் பூர்த்தி செய்யும். மேலும், சுமார் 3,855 மி.க.மீ. (136.21 டி.எம்.சி.) அளவு நீர் கல்லணைப் பகுதியில் விடப்படும். அது காவரி வடிநிலப் பகுதி மற்றும் காவிரிப் படுகைக்குத் தெற்கே அமைந்துள்ள பகுதிகளின் பாசனத் தேவைக்குப் பயன்படுத்தப்படும்.

காவிரி-வைகை-குண்டாறு இணைப்பானது இணைப்புத் திட்டத்தின் கடைசி அங்கமாகும். இந்த இணைப்பின் நோக்கம் காவிரியில் நதிகள் இணைப்பின்மூலம் கிடைக்கப்பெறும் 3,855 மி.க.மீ. (136.21 டி.எம்.சி.) அளவு நீரில் 2,252 மி.க.மீ. (79.5 டி.எம்.சி.) அளவு நீரைக் காவிரியின் தெற்கில் குண்டாறு வரையில் உள்ள பகுதிகளின் பாசனம் மற்றும் குடிநீர் வசதிகளுக்காகத் திருப்புவதே ஆகும்.

இந்த அரசு பன்மாநில நீர்ப் பிரச்சினைகளில் தீர்வு காண அண்டை மாநிலங்களுடன் சுமுகமான உறவு வைத்துக்கொள்ள விரும்புகின்றது. ஒரு படுகையில் உள்ள விவசாயிகள் பாதிக்காத வகையில் அந்தப் படுகையில் உள்ள மிகை நீரை வேறொரு படுகைக்குக் கொண்டு சென்று பயன்படுத்த வழிவகைகளை இரு மாநில நீர் வளத் துறை அமைச்சர்கள் முதற்கட்டமாகப் பேச்சுவார்த்தை நடத்தலாமென்ற கருத்தினை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவர்களுக்குத் தெரிவித்துள்ளார்கள்.

மேலும் மத்திய அரசிற்கு இது குறித்துக் கடிதம் எழுதப்பட்டுள்ளது. மேற்படுகையில் உள்ள மாநிலங்களின் ஒத்துழைப்பைப் பெற தமிழக அரசு அனைத்து நடவடிக்கைகளையும் எடுக்கும்.

### 4. பாசனத் திட்டப் பணிகளின் தற்போதைய நிலை

**1. நங்காஞ்சியாறு நீர்த்தேக்கம் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், இடையன்கோட்டை கிராமத்தின் அருகில் அமராவதி ஆற்றின் கிளை ஆறான நங்காஞ்சியாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கப்பட்டு வருகிறது. 1990 ஆம் ஆண்டு ரூ. 20.70 கோடிக்கு ஒப்புதல் அளிக்கப்பட்ட

[2007 ஏப்ரல் 4

இத்திட்டத்தினால் திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம் மற்றும் கரூர் வட்டத்திலுள்ள அரவக்குறிச்சி ஆகிய இடங்களில் 24 எக்டேர் பழைய பாசன நிலம் பாசன உறுதியும், 2,530 எக்டேர் புதிய நிலம் பாசன வசதியும் பெறும். இத்திட்டம் ரூ.41.68 கோடி திருத்திய மதிப்பில் செய்து முடிக்கப்படும் நிலையில் உள்ளது.

இத்திட்டத்திற்கான அனைத்துப் பணிகளும் முடிந்துவிட்ட நிலையில், நவம்பர் 2005-ல் ஏற்பட்ட பெரும் மழையால் அணையில் தலைமதகு மற்றும் மண்கரையில் பாதிப்பு ஏற்பட்டது. இதைச் சரி செய்யும் பணி ரூ.40.00 இலட்சம் செலவில் நடைபெற்று வருகின்றது.

இப்பணி செப்டம்பர் 2007-க்குள் செய்து முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**2. இருக்கன்குடி நீர்த்தேக்கம் (விருதுநகர் மாவட்டம்)**

விருதுநகர் மாவட்டம், சாத்தூர் வட்டம், இருக்கன்குடி கிராமத்தினருகே வைப்பாற்றின் குறுக்கே ரூ.28.70 கோடி மதிப்பீட்டில் நீர்த்தேக்கம் அமைக்க 1992-ல் அரசு அனுமதியளித்தது. தற்பொழுது, ரூ.62.20 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டம் தூத்துக்குடி மாவட்டம், விளாத்திகுளம் வட்டத்தில் மொத்தம் 3,705 எக்டேர் புன்செய் நிலத்திற்குப் புதிய பாசன வசதியும், 254 எக்டேர் நிலத்திற்குப் பாசன உறுதியும், 255 எக்டேர் விடுபட்ட நிலத்திற்குப் பாசன வசதியும் கிடைக்க வழிவகை செய்கிறது.

மொத்தத்தில் 94 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளான நீர்த்தேக்கத்தின் குறுக்கே சாலைப் பாலம் அமைக்கும் பணியும், கால்வாயில் சில கட்டுமானங்கள் அமைக்கும் பணியும் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் செப்டம்பர் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**3. மலட்டாறு அணைக்கட்டுத் திட்டம் (இராமநாதபுரம் மாவட்டம்)**

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், செங்கப்படை கிராமம் அருகில், கமுதி நீர்க் கட்டுப்பாட்டு மதகிற்குக் கீழ்ப்புறமாகக் கிருதமால் மற்றும் பரளையாறு, மலட்டாற்றுடன் கலக்கும் இடத்திற்குக் கீழ் மலட்டாற்றின் குறுக்கே ரூ.15.40 கோடி மதிப்பீட்டுச் செலவில் அணை கட்ட 1994-ல் அரசு அனுமதி அளித்தது. மேலும் ரூ.42 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது.



2007 ஏப்ரல் 4]

இத்திட்டத்தின்மூலம் கடலாடி மற்றும் கமுதி வட்டங்களிலுள்ள சுமார் 1,758 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசனமும், மேலும் இந்த வட்டங்களில் 54 கண்மாய்களின்கீழ் உள்ள 156 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்க வகை செய்யப்பட்டுள்ளது.

அணைக்கட்டுப் பகுதி கட்டி முடிக்கப்பட்டுள்ளது. இடது மற்றும் வலது முதன்மைக் கால்வாய்கள் மற்றும் பகிர்வு வாய்க்கால் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்தினை செப்டம்பர் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.50 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**4. உசிலம்பட்டி வட்டத்தில் 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளித்தல் (மதுரை மாவட்டம்)**

வைகை அணையின் உபரி வெள்ள நீரைப் பயன்படுத்தி, உசிலம்பட்டி வட்டத்தில் உள்ள 58 கிராமங்களுக்குப் பாசன வசதி அளிப்பதற்காக வைகை அணையின் உபரி நீர் வழிந்தோடியிலிருந்து 2,425 மீட்டர் தொலைவில் வைகை அணையின் வலது கரையில் 27.26 கி.மீ. நீளத்திற்கு ஓர் உயர்மட்டக் கால்வாய் அமைக்க 1996 ஆம் ஆண்டு அரசு அனுமதி அளித்தது. இத்திட்டத்தின்கீழ் 3 புதிய கண்மாய்கள் அமைத்து அதற்கு உயர்மட்டக் கால்வாய்மூலம் நீர் பெறுவதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்கு முதலில் ரூ.33.81 கோடி மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டது. பின்னர் ரூ.74.60 கோடிக்கான திருத்திய மதிப்பீட்டிற்கும் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டச் செயலாக்கத்தினால் 570 எக்டேர் நன்செய் நிலத்திற்கு நிலையான பாசன வசதி கிடைப்பதுடன், உசிலம்பட்டி வட்டத்தில் தற்போதுள்ள 29 கண்மாய்கள் மற்றும் மூன்று குட்டைகளின்கீழ் உள்ள 128 எக்டேர் விடுபட்ட நன்செய் நிலங்கள் பயனடையும். மேலும் புதிதாக உருவாக்கப்படவுள்ள 3 கண்மாய்கள் மூலமாக 227 எக்டேர் ஆயக்கட்டுப் புன்செய் நிலமும் பாசன வசதி பெறும்.

குறுக்கு வடிகால்கள் அமைக்கும் பணிகள் நடைபெற்று வருகின்றன. கால்வாய் அமைக்கும் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. 63 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

மார்ச் 2008-க்குள் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

2007-2008 ஆம் ஆண்டில் ரூ.18.41 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 4

**5. செண்பகத்தோப்பு நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், போளூர் வட்டம், செண்பகத்தோப்பு கிராமத்தில் கமண்டலாற்றின் குறுக்கே ரூ.21.33 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைக்க 1996 ஆம் ஆண்டு ஒப்புதல் அளிக்கப்பட்டது. தற்பொழுது இத்திட்டத்திற்காக ரூ.34.00 கோடிக்குத் திருத்திய நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் போளூர், ஆரணி, ஆற்காடு, செய்யாறு மற்றும் வந்தவாசி ஆகிய வட்டங்களிலுள்ள மொத்தம் 2,067 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 642 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும்.

இப்பணி நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் முடிக்கப்பட்டுள்ளது. இந்நீர்த்தேக்கம் 2007 ஆம் ஆண்டில் பாசனத்திற்காகத் திறக்கப்படும்.

**6. பத்தலப்பள்ளி-மலட்டாறு நீர்த்தேக்கம் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், பத்தலப்பள்ளி கிராமத்தின் அருகே மலட்டாற்றின் குறுக்கே ரூ.29.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைப்பதற்கு 1997-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.

குடியாத்தம் வட்டத்தில் மொத்தம் 1,064 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் நிலையான பாசன வசதி பெறுவதுடன், 61 எக்டேர் விடுபட்ட நிலங்களும் பாசன வசதி பெறும். மேலும், இத்திட்டத்தில் பேரணாம்பட்டு நகரம் மற்றும் வழியில் அமைந்துள்ள கிராமங்களுக்குக் குடிநீர் வசதி அளிக்கவும் தொழிற்சாலைகளுக்கு நீர் வழங்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது. இத்திட்டம் தோல் பதனிடும் தொழிற்சாலைகளினால் தற்போது பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள கிணறுகளில் மீண்டும் நல்ல நீர் கிடைக்க உதவி செய்யும். கட்டுமானப் பணிகள் 2007 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்படும். 2007-2008ஆம் ஆண்டில் ரூ.17.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**7. குப்பநத்தம் நீர்த்தேக்கம் (திருவண்ணாமலை மாவட்டம்)**

திருவண்ணாமலை மாவட்டம், செங்கம் வட்டம்; குப்பநத்தம் கிராமம் அருகே செய்யாற்றின் குறுக்கே ரூ.35.46 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டத்திற்கு 1996-ல் ஒப்புதல் அளிக்கப்பட்டது.



2007 ஏப்ரல் 4]

இத்திட்டத்தினால் செய்யாற்றின் குறுக்கே உள்ள ஐந்து அணைகளின்கீழுள்ள 22 ஏரிகள் மற்றும் செய்யாற்றின் குறுக்கே உள்ள இரண்டு நேரடிக் கால்வாய்களின்மூலம் திருவண்ணாமலை மற்றும் போளூர் வட்டங்களில் மொத்தம் 2,528 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 580 எக்டேர் விடுபட்ட பாசன நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கப்பெறும். ரூ.43.50 கோடி திருத்திய மதிப்பீட்டுச் செலவில் இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

சுமார் 65 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சிய பணிகள் அக்டோபர் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.5.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**8. நாயோடையின் குறுக்கே ஒரு புதிய குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டத்தில் உள்ள கன்னிவாடி கிராமத்தில் மங்கறியாற்றின் உபநதியான நாயோடையின் குறுக்கே ரூ.3.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் ஒரு புதிய குளம் அமைக்க 1998-ல் அனுமதி வழங்கப்பட்டது. மேலும் ரூ.7.20 கோடி திருத்திய நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் திண்டுக்கல் வட்டத்தில் 148 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

குளம் அமைக்கும் பணி முடிக்கப்பட்ட நிலையில் மீதமுள்ள பணிகள் அக்டோபர் 2007-க்குள் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. கால்வாய் அமைக்கும் பணிகளில் ஒரு பகுதி நடைபெற்று வருகிறது.

மீதமுள்ள பணிகள் ரூ.15.48 இலட்சம் செலவில் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்படும்.

**9. இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டத்திலுள்ள எ.வெள்ளோடு மற்றும் கீழக்கோட்டை கிராமங்களில் குடகனாற்றின் உபநதிகளான இராமக்கால் ஓடை மற்றும் ஆனைவிழுந்தான் ஓடைகளின் குறுக்கே 1998-ல் ரூ.3.55 கோடி மதிப்பீட்டுச் செலவில் குளம் அமைக்க அனுமதி வழங்கப்பட்டது. பின்னர் ரூ.5.65 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினால் திண்டுக்கல் வட்டத்தில்

107.65 எக்டேர் புன்செய் நிலங்கள் பாசன வசதி பெறும். இதுவரை 85 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. 2007 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழைக் காலத்தில் இத்திட்டம் பாசனத்திற்காகத் திறப்பதற்கு முயற்சி மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பணிகளை முடிப்பதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.14.84 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**10. நல்லதங்காள் ஓடையின் குறுக்கே நீர்த்தேக்கம் (ஈரோடு மாவட்டம்)**

தாராபுரம் வட்டம், பொன்னிவாடி கிராமத்தில் ஈஸ்வரன் கோயில் அருகே நல்லதங்காள் ஓடையின் குறுக்கே ரூ.31.01 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைக்க 1998-ல் அனுமதி வழங்கப்பட்டது. ரூ.42.70 கோடிக்குத் திருத்திய நிருவாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் தாராபுரம் வட்டத்தில் 1919.87 எக்டேர் புன்செய் நிலங்களுக்குப் பாசன வசதி அளிக்கும்.

கால்வாய் அமைக்கும் எஞ்சிய பணிகளை 2007 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழைக் காலத்திற்கு முன் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இப்பணிகளை முடிக்க 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1.27 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**11. வெள்ளக்கால் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைத்தல் (வேலூர் மாவட்டம்)**

வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், விண்ணமங்கலம் கிராமத்தினருகே வெள்ளக்கால் கானாற்றின் குறுக்கே ரூ.7.70 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைக்கும் பணிக்கு 1998-ல் அரசு ஒப்புதல் வழங்கியது.

இத்திட்டம் வாணியம்பாடி வட்டத்திலுள்ள 431 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 57 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.

வன நிலத்தைக் கையகப்படுத்துவதற்கு மத்திய அரசின் அனுமதி பெறப்பட்டுள்ளது.

நபார்டு வங்கியின் கடனுதவியுடன் பணிகள் செயலாக்கத்திற்கு எடுக்கப்படவுள்ளன. இதற்கென ரூ.5.76 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.





**12. சிறுமலையாற்றின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

நிலக்கோட்டை வட்டம், இராஜதானிக்கோட்டை கிராமம் அருகில் சிறுமலையாற்றின் குறுக்கே ரூ.4.91 கோடி மதிப்பீட்டுச் செலவில் குளம் அமைக்க 1998-ல் அரசு ஒப்புதல் அளித்தது. ரூ.8.87 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது.

இதனால் நிலக்கோட்டை வட்டத்திலுள்ள ஒருதட்டு கிராமத்தில் 128 எக்டேர் புன்செய் நிலங்கள் பயனடையும்.

சுமார் 75 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. 2008-க்குள் பணிகளை முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகளை முடிப்பதற்காக, 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**13. உத்தமபாளையம் வட்டத்தில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டம் (தேனி மாவட்டம்)**

உத்தமபாளையம் வட்டத்தில் ரூ.26.52 கோடி மதிப்பீட்டுச் செலவில் 18 ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு 1999-ல் அரசு ஒப்புதல் அளித்தது. பின்னர் ரூ.28.60 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினால் உத்தமபாளையம் வட்டத்தில் 511.16 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 73.90 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் மற்றும் 22.81 எக்டேர் நிலங்களுக்குப் புதிய பாசன வசதியும் கிடைக்கும்.

சுமார் 71 சதவிகிதப் பணிகள் முடிவுபெற்றுள்ளன. கால்வாயின் அணைக்கட்டுப் பகுதிக்காக வனத் துறையின் இசைவுபெறும் பணிகள் முடியும் தருவாயில் உள்ளதால், 2008 செப்டம்பரில் இத்திட்டப் செயல்படத் தொடங்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. இத்திட்டப் பணிகளை முடிக்க 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.10.83 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**14. மாம்பழத்துறையாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் (கன்னியாகுமரி மாவட்டம்)**

கல்குளம் வட்டத்தில் வில்லுக்குறி கிராமத்தின் அருகே மாம்பழத் துறையாற்றின் குறுக்கே ரூ.9.50 கோடி மதிப்பீட்டுச் செலவில் நீர்த்தேக்கம் அமைக்க 1999-ல் அரசு ஒப்புதல் அளித்தது. மேலும் கல்குளம் வட்டத்தில் 3.57 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன

வசதியும், 25.82 எக்டேர் ஒரு போகப் பயிர் மற்றும் 18.14 எக்டேர் இரு போகப் பயிர்ச் சாகுபடிக்காக விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும், 308.98 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதியும் ஏற்படும் வகையில் ரூ.14.80 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டது.

இத்திட்டப் பணிகள் ஏப்ரல் 2007-ல் தொடங்கத் திட்டமிடப்பட்டுள்ளது. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.7.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 15. நிலையூர்க் கால்வாய் நீட்டித்தல் (மதுரை மாவட்டம்)

மதுரை, விருதுநகர் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் உள்ள வலையன்குளம், கம்பிக்குடிக் கண்மாய் தொடர் குளங்களுக்கு நீர் வழங்க, பெருங்குடி மேல்ஓடையிலிருந்து நிலையூர்க் கால்வாயை நீட்டிக்கும் திட்டத்திற்கு ரூ.8.94 கோடி மதிப்பீட்டுச் செலவில் 1999-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தினால், மதுரை மாவட்டத்தில் மதுரை தெற்கு மற்றும் திருமங்கலம் வட்டம், விருதுநகர் மாவட்டத்தில் காரியாப்பட்டி வட்டம் மற்றும் சிவகங்கை மாவட்டத்தில் மானாமதுரை வட்டம் ஆகிய பகுதிகளில் சுமார் 2,686.53 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 1,126.03 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும் கிடைக்கும். ரூ.19.49 கோடி திருத்திய மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டப் பணிகளில் பெரும் பகுதி முடிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் நிறைவு செய்யப்படும்.

### 16. ராஜகம்பீரம் ஏரி மற்றும் 15 இதர ஏரிகளும் நீர் வசதிபெற வைகை வெள்ள நீரைத் திருப்பிவிடும் திட்டம் (சிவகங்கை மாவட்டம்)

1999 ஆம் ஆண்டில் வைகை ஆற்றின் வெள்ள நீரை மானாமதுரை வட்டத்திலுள்ள ராஜகம்பீரம் ஏரி மற்றும் 15 இதர ஏரிகளுக்குத் திருப்பி விடும் திட்டத்திற்காக ரூ.3.09 கோடி மதிப்பீட்டுச் செலவிற்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இத்திட்டம் மானாமதுரை மற்றும் பரமக்குடி வட்டத்திலுள்ள 1,039.61 எக்டேர் நிலங்களுக்கு நிலையான பாசன வசதியும், 198.99 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்கு மற்றும் 8.25 எக்டேர் புதிய நிலங்களுக்குப் பாசன வசதியும் அளிக்கும்.



ஆற்றின் குறுக்கே இரயில் பாலம் கட்டும் பணியைத் தவிர அனைத்துப் பணிகளும் முடிவுற்றுள்ளன.

### 17. மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் (தருமபுரி மாவட்டம்)

2001 ஆம் ஆண்டில் பெண்ணாகரம் வட்டம், இராமகொண்டஹள்ளி கிராமத்தில் மத்தளப்பள்ளம் ஆற்றின் குறுக்கே புதிய ஏரி அமைக்க ரூ.14.15 கோடி மதிப்பீட்டுச் செலவில் அரசு ஒப்புதல் வழங்கியது. இத்திட்டத்தின்மூலம் 445 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி பெறும். நிலம் கையகப்படுத்தும் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சுமார் 60 சதவிகிதப் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. இப்பணிகள் 2007 செப்டம்பரில் முடிக்கப்படும். மீதமுள்ள பணிகளை முடிப்பதற்காக 2007-08 ஆம் ஆண்டில் ரூ.2.75 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### 18. கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம், படதலேவ் கண்மாய் முதல் வெண்ணம்பள்ளி கண்மாய் மற்றும் கீழே உள்ள காசிம்பூர் கண்மாய் வரை 10 கண்மாய்களுக்கு நீர் கொண்டு செல்லப் புதிய வழங்கு கால்வாய் அமைத்தல்

இத்திட்டத்திற்காக 2001 ஆம் ஆண்டில் ரூ.7.00 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கி உள்ளது.

படதலேவ் ஏரியிலிருந்து வெளியேறும் உபரி நீரைக் கால்வாய் வெட்டி வெண்ணம்பள்ளி மற்றும் அதன்கீழ் காசிம்பூர் ஏரி வரை உள்ள 10 ஏரிகளுக்குக் கொண்டு சென்று 542 எக்டேர் நிலங்கள் நேரடிப் பாசன வசதியும், 607 எக்டேர் நிலங்கள் மறைமுகப் பாசன வசதியும் பெறும் வகையில் இத்திட்டம் அமைக்கப்பட்டுள்ளது.

இத்திட்டம் நபார்டு வங்கி உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மொத்தத்தில் 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007 செப்டம்பரில் முடிக்கப்படும். இத்திட்டத்தை முடிக்க 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.6.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**19. சேலம் மாவட்டம், மேட்டூர் வட்டம், ஆனைமரத்துப்பட்டி கிராமத்தில் நில அளவை எண் 18–ல் சாம்பார் பள்ளம் ஓடையின் குறுக்கே குட்டை அமைத்து, பழுதான சொரக்காப்பட்டி ஏரியைக் குட்டையாக மாற்றியமைத்து சாம்பார் பள்ளம் குட்டையின் உபரி நீரை சொரக்காப்பட்டி குட்டைக்கு வழங்க ஒரு இணைப்பு ஏற்படுத்திப் பாசன வசதி செய்தல்**

இத்திட்டத்திற்கு 2003-ல் ரூ.1.25 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 185 எக்டேர் புன்செய் நிலங்கள் நன்செய் நிலங்களாக மாற்ற வகை செய்யப்பட்டுள்ளது. மேலும் அருகிலுள்ள அனைத்துக் கிணறுகளிலும் நீர் மட்டம் உயர வாய்ப்புள்ளது.

வன நிலங்களில் உள்ள பணிகளைத் தவிர மீதமுள்ள அனைத்துப் பணிகளும் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் வன நிலங்கள் கையகப்படுத்தப்பட்டவுடன் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**20. பெரியஊத்து ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் (தேனி மாவட்டம்)**

உத்தமபாளையம் வட்டம், சின்ன ஓவலாபுரம் கிராமத்தில் பெரியஊத்து ஓடையின் குறுக்கே ரூ.2.02 கோடி மதிப்பீட்டுச் செலவில் புதிய கண்மாய் அமைக்கும் பணிக்கு 2003 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 47.55 எக்டேர் புஞ்சை நிலங்கள் பாசன வசதி பெறும். தற்பொழுது 80 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2007-08-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**21. அய்யனார் கோயில் ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல் (மதுரை மாவட்டம்)**

பேரையூர் வட்டம், மல்லாபுரம் கிராமத்தில் அய்யனார் கோயில் ஓடையின் குறுக்கே ரூ.3.54 கோடி மதிப்பீட்டில் புதிய கண்மாய் அமைக்க 2004-ல் அரசு ஒப்புதல் அளித்துள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 294 எக்டேர் நிலங்களுக்குப் பாசன வசதி அளிப்பதுடன் வெள்ள நீரினால் ஏற்படும் சேதமும் தடுக்கப்படும்.





தற்போது, 63 சதிவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் நடைபெற்று வருகின்றன. அப்பணி 2007-2008-ல் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**22. தூத்துக்குடி மாவட்டம், மருதூர் அணைக்கட்டிலிருந்து கல்வாய் ஏரி வரையில் உள்ள மருதூர் மேலக்காலின் கொள்ளளவை அதிகப்படுத்துதல்**

2004 ஆம் ஆண்டில் இத்திட்டத்திற்காக ரூ.9.527 கோடி மதிப்பீட்டிற்கு அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. மருதூர் மேலக்கால் வாய்க்காலின் கொள்ளளவை அதிகப்படுத்தி அதன்கீழ் உள்ள நிலங்களுக்குப் பாசன உறுதியும், விடுபட்ட நிலங்களுக்கு பாசன வசதியும் அளிக்கப்படும். மேலும், மருதூர் அணைக்கட்டிலிருந்து கால்வாய் சடையநேரி வாய்க்கால்மூலம் வினாடிக்கு 500 கன அடித் தண்ணீர் கொண்டு செல்வதையும் இத்திட்டம் உறுதி செய்யும்

இத்திட்டம் நிறைவேற்றப்பட்டவுடன் ஏற்கெனவே உள்ள மருதூர் மேலக்கால் ஆயக்கட்டில் 280 எக்டேர் விடுபட்ட நிலங்களுக்குப் பாசன வசதியும், 534 எக்டேர் நிலங்களுக்குப் பாசன உறுதியும் அளிக்கப்படும். மேலும், கடைமடைப் பகுதியில் உள்ள கண்மாய்களுக்கும் தண்ணீர் வழங்குவது உறுதி செய்யப்படும்.

பாசனக் காலம் அல்லாத நாட்களில் மட்டுமே பணிகள் மேற்கொண்டதால் தற்போது சுமார் 30 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. 2007-08-ல் எஞ்சிய பணிகள் முடிக்கப்படும். இந்த எஞ்சிய பணிகளை முடிப்பதற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 2.37 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**23. திருக்குறுங்குடி பெரிய குளத்தை நவீனப்படுத்துதல் (திருநெல்வேலி மாவட்டம்)**

திருநெல்வேலி மாவட்டம், நாங்குநேரி வட்டம், திருக்குறுங்குடி கிராமத்தில் உள்ள பெரிய குளத்தை நவீனப்படுத்த ரூ. 1.0277 கோடிக்கு 2004 ஆம் ஆண்டில் அரசு நிருவாக ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினைச் செயல்படுத்துவதன்மூலம் 335 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும்.

மொத்தத்தில் 30 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2007-2008-இல் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 4

**24. பாசிமுத்தான் ஓடையின் மதகு எண் 2-ஐ மறு கட்டுமானம் செய்தல் (கடலூர் மாவட்டம்)**

சிதம்பரம் வட்டம், பாசிமுத்தான் ஓடையில் எல்.எஸ். 10.27 கிமீ.-ல் மதகு எண் 2-ஐப் புதுப்பிக்கவும், கிளைக் கால்வாய்களை மேம்படுத்தும் பணிக்கும், 2004 ஆம் ஆண்டு அரசு ரூ. 2.64 கோடிக்கு நிருவாக ஒப்புதல் வழங்கியுள்ளது. கிளைக் கால்வாய்களை மேம்படுத்துவதன்மூலம் 13 கிராமங்களிலுள்ள 1,582 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். நபார்டு வங்கியின் கடன் உதவியுடன் பணிகள் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

இதுவரை 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2007-08 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**25. பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (சேலம் மாவட்டம்)**

2004 ஆம் ஆண்டில் ஓமலூர் வட்டம், கனவாய்ப்புதூர் கிராமம் கே.மோரூர் அருகே பெரும்பள்ளம் ஓடையின் குறுக்கே குளம் அமைக்க ரூ. 4.95 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இத்திட்டத்தின் மூலம் 85 எக்டேர் விடுபட்ட நிலங்கள் பாசன வசதி, 75 எக்டேர் நிலங்கள் உறுதிபடுத்தப்பட்ட பாசன வசதி பெறும். 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன.

எஞ்சிய பணிகள் 2007-2008-இல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**26. விருமானூத்து ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (தேனி மாவட்டம்)**

ஆண்டிப்பட்டி வட்டம், கோனவாய்ப்பட்டி (கணேசபுரம்) கிராமத்தில் விருமானூத்து ஓடையின் குறுக்கே குளம் அமைக்கும் திட்டத்திற்கு 2005-ல் அரசு ரூ.2.05 கோடிக்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தின்மூலம் 35 எக்டேர் நன்செய் நிலங்கள் பயன்பெறும்.

50 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-08 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**27. சங்கிலியான்கோயில் ஓடையின் குறுக்கே குளம் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

திண்டுக்கல் வட்டம் அஞ்சுகுளிப்பட்டி கிராமத்தில் சங்கிலியான்கோயில் ஓடை/சின்னாத்து ஓடையின் குறுக்கே குளம் அமைக்க ரூ. 1.90 கோடிக்கு 2005 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.



2007 ஏப்ரல் 4]

இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் 140 எக்டேர் நன்செய் நிலங்கள் பயன்பெறும். இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 1.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**28. காவிரி வடிநில மற்றும் காவிரி ஆறு பாயும் மாவட்டங்களில் உள்ள 400 பாசனக் கட்டமைப்புகளைச் சீரமைத்தல்**

அரசு ரூ. 20.00 கோடிக்கு, காவிரி வடிநில மற்றும் காவிரி ஆறு பாயும் மாவட்டங்களில் உள்ள 400 பாசனக் கட்டமைப்புகளைச் சீரமைக்க 2006 ஆம் ஆண்டில் ஒப்புதல் வழங்கியுள்ளது. மேற்கண்ட வேலைகள் நடைபெற்று வருகின்றன. இத்திட்டத்திற்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ. 8.77 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**29. முறைசாரா மானாவாரி ஏரிகளைச் சீரமைத்தல்**

25 மாவட்டங்களில், 34,194 எக்டேர் பாசன நிலங்கள் பயன் பெறுவதற்காக 2005-2006-ன் பகுதி II திட்டத்தில் 290 மானாவாரி ஏரிகளைச் சீரமைக்க ரூ. 62.50 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதில் 59 ஏரிகளில் பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. எஞ்சியுள்ள பணிகள் 2007-08-ல் முடிக்கப்படும். 2007-08 ஆம் ஆண்டில் ரூ. 18.61 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

**30. மூனாண்டிப்பட்டி ஓடையின் அருகே குட்டை அமைத்தல் (தேனி மாவட்டம்)**

2005 ஆம் ஆண்டில் ஆண்டிப்பட்டி வட்டம், மூனாண்டிப்பட்டி கிராமத்தின் அருகில் உள்ள ஓடையில் 35 எக்டேர் நிலம் பயனடையும் வகையில் குட்டை அமைப்பதற்காக அரசு ரூ. 70.00 இலட்சத்திற்கு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இதில் 40 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மற்ற பணிகள் 2007-08-ல் நிறைவு செய்யப்படும்.

**31. தருமத்துப்பட்டி அருகில் ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் (தேனி மாவட்டம்)**

ஆண்டிப்பட்டி வட்டம், தருமத்துப்பட்டி கிராமத்தின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே 29.93 எக்டேர் பயனடையும் வகையில் குட்டை அமைப்பதற்காக 2003 ஆம் ஆண்டில் அரசு ரூ. 34.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது. 25 சதவிகிதப் பணிகள்

[2007 ஏப்ரல் 4

முடிவடைந்து உள்ளன. 2007-08 ஆம் ஆண்டில் எஞ்சியுள்ள பணிகள் நிறைவு செய்யப்படும்.

**32. கொட்டோடைப்பட்டி அருகில் புலிமான்கோம்பை கிராமத்தில், ஓடையின் குறுக்கே குட்டை அமைத்தல் (தேனி மாவட்டம்)**

ஆண்டிப்பட்டி வட்டம், புலிமான்கோம்பை கிராமத்தில் கொட்டோடைப்பட்டியின் அருகில் உள்ள ஓடையின் குறுக்கே 72.11 எக்டேர் பயனடையும் வகையில் புதிய குட்டை அமைப்பதற்காக அரசு 2004 ஆம் ஆண்டில் ரூ. 74.00 இலட்சத்திற்கு அனுமதி வழங்கியுள்ளது.

சுமார் 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-2008-ல் நிறைவு செய்யப்படும்.

**33. உசிலம்பட்டி வட்டம், தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் அசுவமா நதி ஆற்றின் குறுக்கே புதிய கண்மாய் அமைத்தல் (மதுரை மாவட்டம்)**

உசிலம்பட்டி வட்டம், தொட்டப்பநாயக்கனூர் கிராமத்தில் அசுவமா நதி ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைப்பதற்காக 2002-ஆம் ஆண்டில் ரூ. 3.44 கோடிக்கு அரசு அனுமதி வழங்கியுள்ள இத்திட்டத்தின்மூலம் 153.44 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

சுமார் 48 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் செப்டம்பர் 2007-2008-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**34. பெரியகுளம் வட்டத்தில் வராக நதியின் குறுக்கே தடுப்பணைகள் கட்டுதல் (தேனி மாவட்டம்)**

பெரியகுளம் வட்டத்தில் வராக நதியின் குறுக்கே தடுப்பணைகள் அமைப்பதற்காக ரூ.27.90 இலட்சத்திற்கு அரசு அனுமதி வழங்கியுள்ளது.

சுமார் 65 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளை செப்டம்பர் 2007-2008-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**35. குறுங்கூர் ஆற்றின் குறுக்கே கண்மாய் அமைத்தல் (திண்டுக்கல் மாவட்டம்)**

கொடைக்கானல் வட்டம், பூண்டி கிராமம், குறுங்கூர் (அருங்காட்டுக் கண்மாய்) ஆற்றின் குறுக்கே ரூ. 90.00 இலட்சம் மதிப்பீட்டில் ஒரு புதிய குளம் அமைப்பதற்கு 2005 ஆம் ஆண்டில் அரசு ஒப்புதல் அளித்தது.



2007 ஏப்ரல் 4]

இத்திட்டத்தின்மூலம் 68 எக்டேர் நிலம் பயனடையும்.

சுமார் 95 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகளை 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**36. தாளமலைவாரியின் குறுக்கே ஒரு புதிய ஏரி அமைத்தல் (திருச்சி மாவட்டம்)**

முசிறி வட்டம், தோளூர்பட்டி கிராமத்தில் தாளமலைவாரியின் குறுக்கே ரூ. 53.00 இலட்சம் மதிப்பீட்டில் ஏரி அமைப்பதற்கு 2005 ஆம் ஆண்டில் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தின்மூலம் 52 எக்டேர் நிலங்கள் பயனடையும்.

சுமார் 95 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-08-ல் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**37. லால்குடி வட்டம், ஊட்டாத்தூர் கிராமத்தின் அருகில் நந்தியாறு ஓடையின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல் (திருச்சி மாவட்டம்)**

திருச்சி மாவட்டம், இலால்குடி வட்டம், ஊட்டாத்தூர் கிராமத்தின் அருகில் நந்தியாறு ஓடையின் குறுக்கே ரூ. 36.50 இலட்சத்தில் அணைக்கட்டு கட்டுவதற்கு 1998 ஆம் ஆண்டில் அரசு அனுமதி வழங்கியுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 194.75 எக்டேர் நிலங்களுக்கு பாசனம் உறுதி செய்யப்படும்.

சுமார் 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கத் திட்டமிடப்பட்டுள்ளது.

**38. இலுப்பூர் வட்டம், பாப்பாக்குடி கிராமம், பெரியகுளம் ஏரிக்கு நீர் கொண்டு செல்ல இருண்டராப்பட்டி வாரியிலிருந்து கால்வாய் அமைத்தல் (புதுக்கோட்டை மாவட்டம்)**

இலுப்பூர் வட்டம், பாப்பாக்குடி கிராமம், பெரியகுளம் ஏரிக்கு நீர் கொண்டு செல்ல இருண்டராப்பட்டி வாரியிலிருந்து கால்வாய் அமைக்க ரூ. 25.50 இலட்சத்திற்கு 2005 ஆம் ஆண்டில் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்மூலம் 112.40 எக்டேர் நிலங்கள் பயன்பெறும்.

சுமார் 40 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-08 ஆம் ஆண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

[2007 ஏப்ரல் 4

## 39. 2005–2006 ஆம் ஆண்டு நபார்டு நிதி உதவியில் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்ட திட்டங்கள்

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (3) | தற்போதைய நிலை (4) |
|---|---|---|---|
| 1. | கிருஷ்ணகிரி மாவட்டம், பாலக்கோடு வட்டத்தில் உள்ள கிருஷ்ணகிரி நீர்த்தேக்கத்தின் வலதுபுறக் கால்வாயினை நீட்டித்து பொம்மசமுத்திரம், கரியாமங்கலம், திண்டல் ஏரிகளுக்கு நீர் வழங்கும் திட்டம். | 706.32 | 85 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 2. | கிருஷ்ணகிரி மாவட்டம், கிருஷ்ணகிரி வட்டம் சிக்கரப்பள்ளி கிராமத்தில் மார்கண்டா நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல். | 232.80 | 45 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 3. | தூத்துக்குடி மாவட்டம், கோவில்பட்டி வட்டம், கட்டாரங்குளம் கிராமத்தில் ஒரு புதிய ஏரி அமைத்தல். | 19.31 | 35 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 4. | தூத்துக்குடி மாவட்டம், எட்டயபுரம் வட்டம், நம்பிபுரம் ஏரிக்கு நீர் வழங்க நல்லி உப்போடையின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல். | 113.85 | 70 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 5. | கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை வட்டம், தளி கால்வாய் மற்றும் வளையபாளையம் திட்டத்தை நவீனப்படுத்துதல். | 440.92 | 82 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 6. | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழுள்ள பழைய ஆழியாறு பாசன அமைப்பிலுள்ள பல்லி விலங்கல் அணைக்கட்டுக் கால்வாய் மற்றும் மதகுகளைச் சீரமைத்தல். | 138.68 | 62 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 7. | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழுள்ள பழைய ஆழியாறு பாசன அமைப்பிலுள்ள பெரியணை அணைக்கட்டு, வாய்க்கால்கள் மற்றும் மதகுகளில் சீரமைப்புப் பணிகள். | 180.86 | 47 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 8. | கோயம்புத்தூர் மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தின்கீழுள்ள பழைய ஆழியாறு பாசன அமைப்பிலுள்ள கரியாப்பட்டி அணைக்கட்டு மற்றும் வாய்க்கால் சீரமைத்தல். | 210.53 | 69 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 9. | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், பர்கூர் நீர்வரத்துக் கால்வாயை நவீனப்படுத்துதல் மற்றும் அதன் தரத்தை உயர்த்துதல். | 514.70 | 60 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 10. | தருமபுரி மாவட்டம், போச்சம்பள்ளி வட்டம், சோனஹள்ளி கிராமத்தில் பெணுகொண்டாபுரம் நீர்வரத்துக் கால்வாயை நவீனப்படுத்துதல் மற்றும் அதன் தரத்தை உயர்த்துதல். | 426.88 | 48 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |

[2007 ஏப்ரல் 4

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 11. | திருவண்ணாமலை மாவட்டம், ஆலத்தூர் கால்வாயிலிருந்து ஹரிதாரி மங்கலம் ஏரிக்கு ஒரு வாத்துக் வாய்க்கால் அமைத்தல். | 26.06 | 35 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. |
| 12. | தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் உள்ள காவிரி தலைப்பு மதகினைப் புனரமைத்தல். | | |
| 13. | தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் உள்ள வெண்ணாறு தலைப்பு மதகினைப் புனரமைத்தல். | | |
| 14. | தஞ்சாவூர் மாவட்டம், கல்லணையில் உள்ள கல்லணைக் கால்வாய் தலைப்பு மதகினைப் புனரமைத்தல். | 1,738.83 | மொத்தத்தில் 90 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மொத்தமுள்ள ஐந்து தொகுப்புகளில் மூன்று தொகுப்புகளின் பணி முடிவடைந்துள்ளது. எஞ்சிய இரண்டு தொகுப்புகளில் பணி முன்னேற்றத்தில் உள்ளது. |
| 15. | தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-ல் உள்ள காவிரி மதகினைப் புனரமைத்தல். | | |
| 16. | தஞ்சாவூர் மாவட்டம், திருக்காட்டுப்பள்ளி அருகில் மைல் 26/6-ல் உள்ள குடமுருட்டி மதகினைப் புனரமைத்தல். | | |
| 17. | பொம்பலூர் மாவட்டம், தொண்டமான்துறை கிராமத்தில் விஸ்வக்குடி கல்லார் ஓடையின் குறுக்கே புதிய ஏரி அமைத்தல். | 723.36 | வடிவமைப்பு இறுதி செய்யப்பட வேண்டும். |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 18. | புதுக்கோட்டை மாவட்டம், மும்பாலை மற்றும் வடக்கு மணல்மேல்குடி ஏரிகளுக்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே மண் கொரம்பிற்குப் (தற்காலிக அணைக்கட்டு) பதிலாக புதிய கல் அணைக்கட்டு அமைத்தல். | 157.40 | திருத்திய நிர்வா ஒப்புத பரிசீலனையில் உள்ளது. |
| 19. | தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், அய்யப்பபுரம் கிராமத்தின் அருகில் புதிய ஏரி அமைத்தல். | 23.39 | 65 சதவிகிதம் முடிவடைந்து உள்ளது. |
| 20. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கானூர் கண்மாய்க்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 76.97 | 40 சதவிகிதம் முடிவடைந்து உள்ளது. |
| 21. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், மிளகனூர் கால்வாய்க்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 74.86 | 80 சதவிகிதம் முடிவடைந்து உள்ளது. |
| 22. | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், கீழப்பெருங்கரை கிராமத்தில் கூத்தன் கால்வாய்க்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 92.84 | 85 சதவிகிதம் முடிவடைந்து உள்ளது. |
| 23. | இராமநாதபுரம் மாவட்டம், பரமக்குடி வட்டம், அரசடி வண்டல் கிராமத்தில் கீழ நாட்டார்கால் கால்வாய்க்கு நீர் வழங்க வைகையாற்றின் குறுக்கே படுகை அணை கட்டுதல். | 67.89 | 65 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. |

[2007 ஏப்ரல் 4

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 24. | இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டத்தில் திருப்பாலைக்குடி கண்மாய்க்கு நீர் வழங்க பீயாற்றின் குறுக்கே அணைக்கட்டு கட்டுதல். | 52.68 | 90 சதவிகிதம் முடிவடைந்துள்ளது. |

**40. நபார்டு ஆர்.ஐ.டி.எப். XI–ன்கீழ் 2006–2007ல் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட்ட திட்டங்கள்**

தேசிய விவசாய மற்றும் ஊரக வளர்ச்சி வங்கி (நபார்டு) நிதியுதவியுடன் 2006-2007 ஆம் ஆண்டு முதல் கீழ்க்காணும் திட்டங்கள் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | திட்ட மதிப்பீடு (3) | தற்போதைய நிலை (4) |
|---|---|---|---|
| 1. | கோயம்புத்தூர் மாவட்டத்திலுள்ள சோலையாறு அணையினைப் புனரமைத்தல். | 6.4793 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 2. | ஈரோடு மாவட்டம், பவானிசாகரில் உள்ள கீழ்பவானி அணையினை புனரமைத்துச் சீராக்குதல். | 7.2941 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 3. | கிருஷ்ணகிரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டம், ஜி.டி. குப்பம் ஏரிக்கு நீர் வழங்க பர்கூர் ஆற்றின் குறுக்கே குட்டூர் கிராமத்தின் அருகே அணை கட்டும் திட்டம். | 0.3056 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 4. | மதுரை மாவட்டம், பேரையூர் வட்டம், சீலநாயக்கன்பட்டி கிராமத்தில் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல். | 1.6968 | வேலை துவங்கப்படவுள்ளது. |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 5. | நாமக்கல் மாவட்டம், ராசிபுரம் வட்டம், மொடக்காடு கிராமத்தில் புல எண் 44-ல் வாட்சுக்கல் ஓடையின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டுதல். | 0.2378 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 6. | பெரம்பலூர் மாவட்டம், அரியலூர் வட்டம், தெள்ளூர் பெரிய ஏரி மற்றும் விளாங்குடி ஏரித் தொகுப்புகளுக்கு நீர் வழங்க ஆத்தூர் கிராமத்தில் விளாங்குடி ஓடையின் குறுக்கே அணைகட்டும் திட்டம். | 0.3503 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 7. | புதுக்கோட்டை மாவட்டம், ஆலங்குடி வட்டம், செங்கமேடு கிராமத்தில் செங்கமேடு பெரிய குளம் மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்க, மகாராஜா சமுத்திரம் ஆற்றின் குறுக்கே மண் கொரம்பிற்குப் பதிலாக கல் அணை கட்டும் திட்டம் | 0.9265 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 8. | புதுக்கோட்டை மாவட்டம், அறந்தாங்கி வட்டத்திலுள்ள குளங்களுக்கு நீர் வழங்கும் அயங்குடி பிரதான மற்றும் கிளை வாய்க்கால்களைப் புனரமைத்தல் | 0.7325 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |

[2007 ஏப்ரல் 4

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 9. | புதுக்கோட்டை மாவட்டம், களக்கமங்கலம் பிரதான வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 9.386 கி.மீ. வரை, கலக்கமங்கலம் எண் I கிளை வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 2.068 கி.மீ. வரை, கலக்கமங்கலம் எண். II கிளை வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 4.749 கி.மீ. வரை கம்பர் கோவில் வழங்கு வாய்க்கால், நாமருங்கூர் வழங்கு வாய்க்கால், ஆதம்பூர் வழங்கு வாய்க்கால் மற்றும் இதன்மூலம் பயன்பெறும் கூத்தனூர் ஏரி, வேதியான்குடி ஏரி, நீர்விளங்குளம் ஏரி, கோபாலபுரம் ஏரி நாமருங்கூர் ஏரி மற்றும் இதர 23 ஏரிகள் புனரமைத்தல். | 4.2867 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம், சிறுமருதூர் பிரதான வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 4.136 கி.மீ. வரை, சிறுமருதூர் எண் I வாய்க்கால் எல்.எஸ். 0 கி.மீ. முதல் 2.587 கி.மீ. வரை, மற்றும் அதனால் பயன்பெறும் சிறுமருதூர் ஏரி, வட்டத்தூர் ஏரி, கண்டியக்கோட்டை ஏரி, வேதிவயல் ஏரி, முத்துவளக்குடி ஏரி, செல்வநந்தல் ஏரி, வெளிவயல் ஏரி, கீழ்குடி ஏரி, மற்றும் புதுவயல் ஏரிகளைப் புனரமைத்தல். | 1.3333 | வேலை துவங்கப்படவுள்ளது. |
| 11. | சேலம் மாவட்டம், மேட்டூர் அணையில் உள்ள நீர்க்கசிவு துவாரங்களை எல்.எஸ் 300 அடி முதல் 4,540 வரை அடைப்பு நீக்கிப் புனரமைத்தல். | 0.8366 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) | (4) |
|---|---|---|---|
| 12. | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், பொம்பராஜுபேட்டை கிராமத்தின் அருகில் புதிய ஏரி அமைத்தல் | 0.3301 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 13. | திருவள்ளூர் மாவட்டம், கும்மிடிப்பூண்டி வட்டம்; தேர்வாய் கண்டிகை கிராமத்தில் உள்ள கண்ணன் கோட்டை இஸ்லா ராஜநேரி ஏரியின் உபரி நீர் வெளியேறும் மற்றும் தேர்வாய் பெரிய ஏரி உபரி நீர் கலக்கும் இடத்திலும் ஒரு அணை கட்டுதல் | 1.0082 | வேலை துவங்கப்படவுள்ளது. |
| 14. | திருச்சி மாவட்டம், முசிறி வட்டம், கரைபோட்டனார் ஏரியின் குறுக்கே உள்ள அணைக்கட்டுகளைப் புனரமைத்தல் | 1.0158 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 15. | திருநெல்வேலி மாவட்டம், தாமிரபரணி திட்டத்தின்கீழ் உள்ள மணிமுத்தாறு பிரதான கால்வாயில் எல்எஸ் 0 முதல் 26.845 கி.மீ. வரை சிமென்ட் காரை பூசுதல் | 15.3768 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 16. | திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்திலுள்ள கன்னடியன் கால்வாயின் மதகுகளைச் சீரமைத்து கால்வாய்க்கு சிமென்ட் காரை பூசுதல் | 17.7874 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| 17. | மேட்டூர் கால்வாயினைப் புனரமைத்தல் | 11.3509 | பணிகள் நடைபெற்று வருகின்றன. |
| | **மொத்தம்** | **71.3487** | |

[2007 ஏப்ரல் 4

## 41. சிறு பாசன ஏரிகளை நவீனப்படுத்தி மேம்படுத்துதல்

### (அ) ஆர்.ஐ.டி.எப்.-IX (ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி–IX)

நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 17 மாவட்டங்களிலுள்ள 157 மானாவாரி சிறு பாசனக் குளங்களை ஆர்.ஐ.டி.எப்.-IX திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ. 48.43 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. இதுவரை 141 ஏரிகளின் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள 14 ஏரிகளில் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன. 2 ஏரிகளில் பணிகள் கைவிடப்பட்டுள்ளன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 11.50 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (ஆ) ஆர்.ஐ.டி.எப்.—X (ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி–X)

நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 23 மாவட்டங்களிலுள்ள 250 மானாவாரி சிறு பாசனக் குளங்களை 26,900 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஆர்.ஐ.டி.எப்.—X திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ. 68.02 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. 22 ஏரிகளில் பணிகள் முடிவடைந்துள்ளன. 207 ஏரிகளில் பணிகள் நடைபெற்று வருகின்றன. மீதமுள்ள 21 ஏரிகளில் பணிகள் துவங்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 21.08 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

### (இ) ஆர்.ஐ.டி.எப்.—XI (ஊரகக் கட்டமைப்பு மேம்பாட்டு நிதி–XI)

நபார்டு வங்கியின் கடனுதவியின்மூலம் 16 மாவட்டங்களிலுள்ள 96 மானாவாரி சிறு பாசனக் குளங்களை 7,909 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும் வகையில் ஆர்.ஐ.டி.எப்.—XI திட்டத்தின்கீழ் நவீனப்படுத்த ரூ. 20.59 கோடிக்கு அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது. பணிகள் முன்னேற்றத்தில் உள்ளன. 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 9.71 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 42. இராமநாதபுரம் மாவட்டத்தில் ஒருங்கிணைந்த நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம் நிலை– II

2005 ஆம் ஆண்டில் ஒருங்கிணைந்த நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டம் நிலை II-ன்கீழ் இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள 97 ஏரிகளைப் புனரமைக்கும் பணிகளுக்கு ரூ. 22.56 கோடி வழங்க



2007 ஏப்ரல் 4]

அரசு அனுமதி அளித்துள்ளது. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதன்மூலம் இராமநாதபுரம் மாவட்டத்தில் 11 ஊராட்சி ஒன்றியங்களில் 12,249.73 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறும். இத்திட்டப் பணிகள் நடைபெற்று வருகின்றன. இப்பணிகள் 2007-2008 ஆம் ஆண்டில் முடிக்கப்படும். 2007-2008 ஆம் ஆண்டிற்கு ரூ. 70.00 இலட்சம் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## 43. பகுதி II திட்டங்கள்–2006–2007

2006-2007 ஆம் ஆண்டில் சுமார் ரூ. 36.62 கோடி மதிப்பீட்டுச் செலவில் கீழ்க்காணும் புதிய திட்டங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டன:-

**சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்**

(ரூபாய் இலட்சத்தில்)

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | திட்ட மதிப்பீடு (3) |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், மோட்டூர் கிராமத்தின் அருகே ஓட்டுப்பள்ளம் ஓடையின் குறுக்கே புதிய குட்டையமைத்தல் | 20.00 |
| 2. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், வாணியம்பாடி கிராமத்தில் பாலாற்றின் குறுக்கே தடுப்பணை அமைத்து, உதயேந்திரம் ஏரிக்கு நீர் வழங்கும் திட்டம் | 60.95 |
| 3. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், மேல் மிட்டாலம் கிராமத்தில் உள்ள தடுப்பணையினை மேம்படுத்துதல் | 15.00 |
| 4. | வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டம், கோத்தகோட்டை கிராமத்தில் போரைகானாறிலிருந்து இறா குட்டை மற்றும் இதர குளங்களுக்கு நீர் வழங்குவதற்காக புதிய வாய்க்கால் அமைக்கும் திட்டம் | 49.00 |

**சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்**

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 5. | திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு வட்டம், தூசிமாமண்டூர் ஏரியின் உபரி நீர் ஓடையின் குறுக்கே மண்கொண்டத்திற்குப் பதிலாக கல்கொண்டம் அமைத்தல் | 47.23 |
| 6. | ஈரோடு மாவட்டம், தாராபுரம் வட்டம், தொட்டியன்துறை கிராமம் அருகில் காசிலிங்கம் பாளையம் கிராமம் நில அளவை புல எண் 894 இல் புதிய குளம் அமைக்கும் திட்டம் | 27.16 |
| 7. | கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம், பாலேகுலி கிராமத்தில் காட்டோடையின் குறுக்கே ஒரு குளம் அமைத்தல் | 18.50 |
| 8. | கிருஷ்ணகிரி மாவட்டம் மற்றும் வட்டம் பெல்லம்பள்ளி கிராமத்தின் அருகில் பவிகானூரில் கரிமலை பள்ளம் குறுக்கே நில அளவை புல எண் 266 இல் தடுப்பணை அமைத்தல் | 12.30 |
| 9. | சேலம் மாவட்டம் மற்றும் வட்டம், டி. பெரும்பாளையம் கிராமத்தில் நில அளவை புல எண் 44 இல் புதிதாக ஒரு குளம் அமைத்தல் | 15.70 |
| 10. | புதுக்கோட்டை மாவட்டம் இலுப்பூர் வட்டம், மீனவேலி கிராமத்தில், நல்லாம்பிள்ளை குளத்திற்கு நீர் வழங்க வெள்ளாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 25.20 |
| 11. | திண்டுக்கல் மாவட்டம், பழனி வட்டம், ஆண்டிபட்டி கிராமத்தில், நில அளவை புல எண் 677 இல் கரடி ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | 16.55 |
| 12. | திண்டுக்கல் மாவட்டம், ஒட்டன்சத்திரம் வட்டம், சத்திரப்பட்டி கிராமம் நில அளவை புல எண் 378, 379 இல் கசிவு நீர்க் குட்டை அமைத்தல் | 15.30 |
| 13. | திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பழவூர் கிராமத்தில் கட்டைபுலி ஓடையின் குறுக்கே உள்ள முதல் தடுப்பணையினை கசிவு நீர்க் குட்டையாக மாற்றியமைத்தல் | 8.00 |
| | **மொத்தம்** | **330.89** |



**சிறு பாசனத் திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | வேலூர் மாவட்டம் மற்றும் வட்டம், கவசம்பட்டு கிராமத்தின் அருகே பாலாற்றின் குறுக்கே படுகை அணை மற்றும் பிரிக்கும் சுவர் அமைத்தல் மற்றும் கொட்டார் ஆற்றின் படுகை மட்டத்தைச் சீராக்குதல் | 650.00 |
| 2. | வேலூர் மாவட்டம், குடியாத்தம் வட்டம், சித்தாத்தூர் கிராமத்தின் அருகே கவுண்டின்ய நதியின் குறுக்கே ஏற்கெனவே அமைந்துள்ள வடிகுழாய்க்குக் கீழே பிரிவுச் சுவர் அமைப்பதோடு நீர் சக்தியைப் போக்கும் அமைப்பு அமைத்தல் மற்றும் கவுண்டின்ய நதியின் குறுக்கே அணைக்கட்டு அமைக்கும் திட்டம் | 450.00 |
| 3. | தருமபுரி மாவட்டம், பெண்ணாகரம் மற்றும் பாலக்கோடு வட்டத்தில் உள்ள ஜெர்தலாவ் வாய்க்காலின் 5,690. மீட்டரிலிருந்து புதிய கால்வாய் அமைத்து, தொட்லாம்பட்டி ஏரி, பாப்பாரப்பட்டி ஏரி மற்றும் கீழ்ப்புறம் அமைந்துள்ள 15 ஏரிகளுக்கு நீர் வழங்க புதிய வாய்க்கால் அமைக்கும் திட்டம் | 629.00 |
| 4. | திண்டுக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், கோணப்பட்டி கிராமத்தில் கருப்பகோவில் ஓடையின் குறுக்கே புதிய கண்மாய் அமைக்கும் திட்டம் | 272.00 |
| | **மொத்தம்** | **2,001.00** |

**கடலரிப்புத் தடுப்புத் திட்டங்கள்**

| | | |
|---|---|---|
| 1. | தூத்துக்குடி மாவட்டம், திரேஸாபுரத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் | 710.00 |
| 2. | திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் தொகுதி, இடிந்தகரை கிராமத்தில் கடல் அரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவு அமைத்தல் | 620.00 |
| | **மொத்தம்** | **1,330.00** |
| | ***2006-2007, பகுதி II-ன் பெருமொத்தம்*** | ***3,661.89*** |

## 5. சென்னை, திருச்சிராப்பள்ளி மற்றும் மதுரையில் வெள்ளப் பாதுகாப்புப் பணிகள்

நகர்ப் பகுதிகளில் ஏற்படும் வெள்ளப் பெருக்கின் அபாயத்தை உணர்ந்து, சென்னை, மதுரை மற்றும் திருச்சி ஆகிய மூன்று மாநகரங்களில் பெரிய அளவிலான வெள்ளப் பாதுகாப்புப் பணிகள் குறித்து மாநில அரசு 2006-2007 ஆம் ஆண்டு நிதி நிலை அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ள திட்டங்களின் நிலை:—

**(1) சென்னை**

சென்னை நகரத்தின் தாழ்வான குடியிருப்புப் பகுதிகள் வெள்ள நீரில் மூழ்குவதைத் தடுப்பதற்கு கூவம், அடையாறு, கொசஸ்தலையாறு, ஓட்டேரி நல்லா, விருகம்பாக்கம் மற்றும் அரும்பாக்கம் கால்வாய்கள் மற்றும் பள்ளிக்கரணை சதுப்பு நிலம் ஆகியவற்றில் வெள்ளப் பெருக்குக் காலங்களில் ஏற்படும் நீரைக் கடலில் கொண்டு செல்வதற்கான வெள்ளத் தடுப்புப் பணிகளுக்கான செயற்குறிப்புகள் தயாரிக்கப்பட்டுள்ளன. இவை ஜவகர்லால் நேரு தேசிய நகர்ப் பகுதி புனரமைப்புக் குழுமம் (JNNURM) மற்றும் தேசிய புயல் இடர்த் தணிப்புத் திட்டம் (NCRMP) ஆகியவற்றின்கீழ் மேற்கொள்ளப்படும்.

**(2) திருச்சிராப்பள்ளி–புதுக்கோட்டை**

புதுக்கோட்டை மாவட்டத்தில் உள்ள வறட்சிப் பகுதிகள் பயன்பெறுகின்ற வகையில் கோரையாறு, குடமுருட்டி ஆறு, அரியாறு மற்றும் உய்யக்கொண்டான் வாய்க்காலில் வரும் வெள்ள நீரை வாய்க்கால் மற்றும் குளங்கள் மூலம் அக்னியாற்றில் திருப்பிவிடும் திட்டம் ரூ. 295.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்தின் முதல் கட்டமாக ரூ. 77.20 கோடி மதிப்பீட்டுச் செலவில் திருச்சி நகரம் வெள்ள நீரில் மூழ்குவதைத் தவிர்க்க உய்யக்கொண்டான், குடமுருட்டி, அரியாறு மற்றும் கோரையாறுகளின் கரைகளைப் பலப்படுத்தவும், நிவாரண நடவடிக்கை எடுக்கவும் திட்டமிடப்பட்டு நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது. இதற்கிடையே 2006 ஆம் ஆண்டு வடகிழக்குப் பருவ மழையின் உடனடி வெள்ளத் தடுப்புப் பணிகளுக்காக ரூ. 5.00 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இரண்டாவது கட்டமாக தேசிய நீர் மேம்பாட்டு முகவரமைப்பு (NWDA) அளித்துள்ள செயற்குறிப்புகளை கவனத்தில்கொண்டு அரியாறு, கோரையாறு ஆகியவற்றின் வெள்ள நீரை, புதுக்கோட்டை மாவட்டத்தில் அக்னியாற்றிற்குத் திருப்பிவிடும் திட்டம் உருவாக்கப்படுகிறது. இதற்கான விரிவான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.





**(3) மதுரை**

மதுரை மாவட்டத்தில் செல்லூர் ஏரி, திருப்பாளை ஏரியிலிருந்து வண்டியூர் ஏரி வரை சாத்தியார் ஓடைக்கு வெள்ளப் பாதுகாப்பு அளிக்கும்பொருட்டு, ரூ. 12.00 கோடி மதிப்பீட்டுச் செலவில் நிரந்தரச் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும். இத்திட்டத்திற்கு ஒப்புதல் அளிக்கும் திட்ட அறிக்கை நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ளது.

## 6. 2007–2008 ஆம் ஆண்டிற்கான புதிய திட்டங்கள்:

**(அ) பகுதி II திட்டங்கள்**

2007-2008 ஆம் ஆண்டில் கீழ்க்காணும் புதிய திட்டங்கள் ரூ. 8.49 கோடி மதிப்பீட்டுச் செலவில் செயல்படுத்தப்பட உள்ளன:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | தொகை (3) |
|---|---|---|
| | **சிறு பாசனத் திட்டங்கள்** | |
| 1. | தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு தொலைகல் 42/1 இல் மட்டச் சுவர் அமைத்து ஏ47 ரகுநாத காவிரி வாய்க்கால் பாசன நிலங்களுக்குத் தடையின்றித் தண்ணீர் வழங்குதல் | 1.75 |
| | **சிறப்பு சிறு பாசனத் திட்டங்கள்** | |
| 2. | காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம் கீழ்வளம் கிராமத்தின் அருகில் புக்கத்துறை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் | 0.45 |
| 3. | விழுப்புரம் மாவட்டம், கரடிசித்தூர் கிராமத்தில் உள்ள குமாரபாளையம் வரத்துக் கால்வாய்க்கு நீர் வழங்க முக்தா நதியின் குறுக்கே தடுப்பணை கட்டும் பணி | 0.26 |

[2007 ஏப்ரல் 4

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 4. | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள முதலை முத்து வாரியின் குறுக்கே தொலைகல் 7,800 மீட்டர் தொலைவில் தடுப்பணை அமைத்தல் | 0.14 |
| 5. | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், சோழகம்பட்டிவாரி குறுக்கே தொலைகல் 4,000 மீட்டரில் தடுப்பணை அமைப்பது குறித்து திட்டம் | 0.20 |
| 6. | நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் கிராமத்தில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே 118 கி.மீ. தொலைவிற்கு தரைமட்டச் சுவர் கட்டும் பணி | 0.40 |
| 7. | திருச்சி மாவட்டம், துறையூர் வட்டம், களரான் குளத்திற்கு நீர் வழங்க வடக்குவெளி கிராமத்தின் குக்கிராமமான கொத்தம்பட்டி கிராமத்தில் மட்டான் குளம்வாரியின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டுதல் | 0.15 |
| 8. | கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தெக்கம்பட்டி கிராமத்தில் பெரும்பள்ளம் குறுக்கே புல எண் 54–ல் தடுப்பணை அமைத்தல் | 0.22 |
| 9. | சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கிருதுமால் ஆற்றின் குறுக்கே சமரணை அமைத்து அம்பலத்தாடி, மாங்குடி முதலிய ஏரிகளுக்குப் பாசனம் அளிக்கும் திட்டம் | 0.41 |
| 10. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், இரணியல் கிராமம், வள்ளியாறு குறுக்கே அணைக்கட்டுடன்கூடிய தடுப்பணை அமைத்தல் | 0.60 |
| 11. | கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தாளகுளம் கல்பாடி ஏலா அருகில் வள்ளியாற்றின் நீர் கரை மீறாமல் இருக்க தடுப்புச் சுவர் அமைத்தல் | 0.22 |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 12. | சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அம்மாம்பாளையம் கிராமத்தில் தடுப்பணை/நீர்ச் செறிவுத் துளைகள் கட்டுவது தொடர்பாக | 0.17 |
| 13. | திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மேலநீலிதநல்லூர் வட்டாரம் வள்ளிக்கோனேந்தல் கிராமத்தில் தடுப்பணை/நீர்ச் செறிவுத் துளைகள் கட்டுவது | 0.03 |
| 14 | தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், குலசேகரநல்லூர் கிராமத்தில் தடுப்பணை/நீர்ச் செறிவுத் துளைகள் கட்டுதல் | 0.04 |
| | **இதர திட்டங்கள்** | |
| 15. | தமிழ்நாட்டின் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் சிறிய நீர்ப் பிரிவு முகடு அடிப்படையில் நிலத்தடி நீர் மதிப்பீட்டு ஆய்வு | 0.60 |
| 16. | காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்கும் திட்டம் | 0.10 |
| 17. | காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், பாலுசெட்டிச் சத்திரத்தில் உள்ள ஆய்வு மாளிகையில் கூடுதல் அறை கட்டும் திட்டம் | 0.15 |
| 18. | கோவை மாவட்டம், வால்பாறை வட்டம், மேல் நீராறு அணையின் திட்ட இல்லத்தைப் புதுப்பிக்கும் திட்டம் | 0.20 |
| 19. | சாத்தனூர், கிருஷ்ணகிரி, பவானிசாகர், மேட்டூர் மற்றும் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காவினை மேம்படுத்தி, அழகுப்படுத்திப் புதுப்பித்தல் | 1.70 |
| 20. | காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெல்வாய் மடுவு அணைக்கட்டிலிருந்து மதுராந்தகம் ஏரி வரையிலான நெல்வாய் மடுவினை மேம்படுத்தும் திட்டம் | 0.70 |
| | **மொத்தம்** | **8.49** |

[2007 ஏப்ரல் 4

**(ஆ) நபார்டு வங்கியால் ஒப்புதல் அளிக்கப்பட்ட திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| வ. எண் (1) | திட்டத்தின் பெயர் (2) | மதிப்பீட்டுத் தொகை (3) |
|---|---|---|
| 1. | தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை தாலுகாவில் ஜவ்வாது மலையிலிருந்து அங்குத்தி சுனை வழியாக நீர் வழங்கும் கால்வாயை மேம்படுத்துதல் | 0.68 |
| 2. | தருமபுரி மாவட்டம், அரூர் தாலுகா, வேதாரம்பட்டி கிராமத்தில் உள்ள வேதாரம்பட்டி குளத்தை விரிவாக்கி மேம்படுத்தி நவீனப்படுத்துதல் | 0.15 |
| 3. | திண்டுக்கல் மாவட்டம், கூவனூத்து கிராமத்தில் கன்னிமார் ஓடையின் குறுக்கே (நொச்சி ஓடை) புதிய குட்டை அமைத்தல் | 0.10 |
| 4. | திண்டுக்கல் மாவட்டம், நத்தம் தாலுகா, செந்துறை கிராமத்தில்—நி.அ. பு.எண் 602—ல் பஞ்சன் தாங்கி ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | 0.39 |
| 5. | கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி தாலுகா, நாகம்பள்ளி கிராமத்தில் குடகனாறு ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையினைப் புனரமைத்தல் | 0.78 |
| 6. | தேனி மாவட்டம், ஆண்டிப்பட்டி தாலுகா, வல்லநதி கிராமத்தில் லாவலுத்து ஓடையின் குறுக்கே புதிய குட்டை அமைத்தல் | 0.20 |
| 7. | திருச்சி மாவட்டம், முசிறி தாலுகாவில் உள்ள ரெட்டியாபட்டியிலிருந்து கரிகாலி உத்தானதம்பட்டி வரையில் உள்ள வழங்கு கால்வாய் மற்றும் ருத்திராக்ஷ கோம்பையாற்றில் உள்ள அணைக்கட்டுகளைப் புனரமைத்தல் | 1.98 |
| 8. | செயற்கை முறையில் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் 21 திட்டங்கள் | 3.06 |



2007 ஏப்ரல் 4]

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 9. | இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை தாலுகாவில் உள்ள ஆர்.எஸ். மங்கலம் பெரிய குளத்தை மேம்படுத்துதல் | 5.28 |
| 10. | திருவள்ளூர் மாவட்டம் மற்றும் வட்டம், போலிவாக்கம் கிராமத்தில் சுண்ணாம்புக்கல் ஓடையின் குறுக்கே புதிய குளம் அமைத்தல் | 0.68 |
| 11. | திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு தாலுகா, கிருஷ்ணகுப்பம், மயிலாவாடா கிராமத்தின் அருகே புதிய குளம் அமைத்தல் | 0.16 |
| | **மொத்தம்** | **13.46** |

**(இ) நபார்டு வங்கியின் பரிசீலனையில் உள்ள திட்டங்கள்**

(ரூபாய் கோடியில்)

| | | |
|---|---|---|
| 1. | சிவகங்கை மாவட்டம், தேவகோட்டை தாலுகாவில் கப்பலூர் குளத்திற்கு நீர் வழங்க தேனாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 0.22 |
| 2. | தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டம், சித்திரகுடி வாரி புனரமைத்தல் மற்றும் அருகில் உள்ள நிலங்கள் மூழ்குவதைத் தவிர்க்க தள உள்வாங்கிகள் அமைத்தல் | 0.31 |
| 3. | தேனி மாவட்டம், பெரியகுளம் தாலுகா, லட்சுமிபுரம் கிராமத்தில் புல எண் 1678—ல் வட வீரப்பநாயக்கன் பட்டி வரட்டாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுதல் | 0.12 |
| 4. | திருச்சி மாவட்டம், முசிறி தாலுகா, சித்தாம்பூரில் உள்ள சித்தாம்பூர் ஏரிக்கு நீர் வழங்க அய்யாற்றின் குறுக்கே அணைக்கட்டு அமைத்தல் | 0.94 |

| | | |
|---|---|---|
| 5 | கரூர், திருச்சி மற்றும் பெரம்பலூர் மாவட்டங்களில் காவிரி, கொள்ளிடம் கரைகளில் 2005 ஆம் ஆண்டு வெள்ளத்தினால் பாதிப்பு ஏற்பட்ட இடங்களில் நிரந்தரப் பாதுகாப்புப் பணிகள் | 207.64 |
| 6 | தஞ்சாவூர் மாவட்டம், ஒரத்தநாடு மற்றும் பட்டுக்கோட்டை வட்டம், கல்லணைக் கால்வாய் எல்.எஸ். 58.680 கி.மீ. முதல் 92.200 கி.மீ. வரை புனரமைத்தல் | 26.00 |
| 7 | இராமா நதி நீர்த்தேக்கத்தின் உபரி நீரைத் திருப்பி திருநெல்வேலி மாவட்டம், தென்காசி மற்றும் அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள ஜம்பு நதி ஆயக்கட்டுப் பகுதிகளுக்கு நீர்ப்பாசனம் அளிக்கும் திட்டம் | 3.60 |
| 8 | ஈரோடு மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள காளிங்கராயன் வாய்க்கால் மைல் 0/0 முதல் 56/5.5 வரை சீரமைக்கும் திட்டம் | 12.00 |
| | மொத்தம் | 250.83 |

புதிய ஆயக்கட்டுகளுக்குப் பயனளிப்பதற்கும், வெள்ளத்தால் மூழ்கிவிடுவதிலிருந்து காப்பாற்றும் வகையிலும் இப்பணிகளை விரைவில் நிறைவேற்ற ஏதுவாக இப்பணிகளுக்கான ஒப்பளிப்பை அரசு உன்னிப்பாகக் கண்காணித்து வருகின்றது.

**ஈ. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள புத்தன் அணை சீரமைப்பு**

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் உள்ள புத்தன் அணை, 2006 அக்டோபரில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் சேதமடைந்துள்ளது. புத்தன் அணையை உடனடியாகச் சீரமைப்பதற்கு ரூ.1.50 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டு பணிகள் உடனடியாக மேற்கொள்ளப்படவுள்ளன. இப்பணிகளை மேற்கொள்வதன்மூலம் கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம், தோவாளை, கல்குளம் ஆகிய வட்டங்களில் உள்ள 79,000 ஏக்கர் பரப்பின் ஆயக்கட்டுதாரர்களின் நலன் பாதுகாக்கப்படும்.



**உ. திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ளக் காலத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை ஆகிய வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்ல வெள்ள நீர்க் கால்வாய் அமைத்தல்**

திருநெல்வேலி மாவட்டம், அம்பாசமுத்திரம் வட்டத்தில் உள்ள கன்னடியன் கால்வாயிலிருந்து வெள்ளக் காலத்தில் தாமிரபரணி ஆற்றின் உபரி நீரை தூத்துக்குடி மாவட்டம், சாத்தான்குளம் மற்றும் திருநெல்வேலி மாவட்டம், திசையன்விளை ஆகிய வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்ல வினாடிக்கு 3,200 கன அடி நீரைக் கொண்டு செல்லும் திறனுடன் வெள்ள நீர்க் கால்வாய் ஒன்றை அமைப்பதற்காக ரூ.198 கோடிக்கு திட்ட மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தினை நிறைவேற்றுவதன்மூலம் பச்சையாறு, மணிமுத்தாறு, கருமேணியாறு, நம்பியாறு ஆகிய வடிநிலப்பகுதிகளில் 19,710 எக்டேர் நிலங்கள் பயனடையும். மேலும், நிலத்தடி நீர்மட்டம் உயர்வினால் திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்களில் உள்ள 36 கிராமங்களும் பயனடையும். இத்திட்டத்தை நிறைவேற்ற 47.98 எக்டேர் நன்செய் நிலம் மற்றும் 494.66 எக்டேர் புன்செய் நிலம், 79.95 எக்டேர் புறம்போக்கு நிலம் கையகப்படுத்தப்பட வேண்டியுள்ளது. நில எடுப்புப் பணிகள் முடிந்த பிறகு இத்திட்டம் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படும். இதன் மூலம், தாமிரபரணி ஆற்றிலிருந்து வெள்ள உபரி நீர் கடலில் கலப்பதையும் தவிர்க்கலாம்.

**ஊ. வெலிங்டன் நீர்த்தேக்க சீரமைப்புப் பணிகள்**

சென்னைக்கு தென்மேற்கே 240 கி.மீ. தூரத்தில் கடலூர் மாவட்டத்தின் திட்டக்குடி வட்டத்தில் உள்ள கீழச்செருவை என்ற கிராமத்தில் வெலிங்டன் நீர்த்தேக்கம் அமைந்துள்ளது. இந்த நீர்த்தேக்கம் வெள்ளாறு வடிநிலத்தில் வெள்ளாறு ஆற்றின் கிளை ஓடையான பெரிய ஓடையின் குறுக்கே அமைந்துள்ளது. இதன் நீர்ப்பிடிப்புப் பகுதியான 129.5 சதுர கி.மீ. பரப்பளவிலிருந்து நீரைப்பெறுவதோடு வெள்ளாறு ஆற்றின் குறுக்கே உள்ள தொழுதூர் ரெகுலேட்டரிலிருந்து திருப்பிவிடப்பட்ட நீரையும் பெறுகிறது. 1913 ஆம் ஆண்டு முதல் 1923 ஆம் ஆண்டு வரை கட்டப்பட்ட இந்த அணையின்மூலம் 11,198 எக்டேர் ஆயக்கட்டு நிலங்கள் பாசன வசதி

பெறுகின்றன. இந்த அணையின் மொத்தக் கொள்ளளவு 70.40 மில்லியன் கன மீட்டர் (2,486 மில்லியன் கன அடி) ஆகும். வெலிங்டன் அணையைப் புனரமைக்க தமிழக அரசு 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.20.00 கோடி நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதற்கென தொழில் நுட்பக் குழு ஒன்றை அமைத்து அதன் பரிந்துரையின் அடிப்படையில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 7. "நீர் வள நில வளத் திட்டம்" (IAMWARM)

வேளாண்மையைப் பிரதானமாகக்கொண்ட தமிழ்நாட்டில் வேளாண் உற்பத்தித் திறன் மற்றும் தரத்தை மேம்படுத்தி ஊரக மக்களின் வருவாயை உயர்த்த முயற்சிகள் மேற்கொள்வது அவசியம் ஆகும். வேளாண்மையில் நீண்ட கால வளர்ச்சி, நீர்ப்பாசனத்தை விரிவுப்படுத்தி நீர் உபயோகிக்கும் திறனை சிறந்த முறையில் அதிகப்படுத்துவதையே பொறுத்துள்ளது. உடனடியாக நீர் வள அமைப்புகளை வலுப்படுத்தி ஒருங்கிணைத்தால் சிறு மற்றும் குறு விவசாயிகள் பெருமளவில் பயனடைவர். தமிழ்நாடு அரசு, ஜூலை 2000-ல் அமைத்த நீர் வள ஆதாரங்களை மேம்படுத்துதல் மற்றும் மேலாண்மைக்கான வல்லுநர் குழு, பாசனப் பரப்பை அதிகரிக்கும் சாத்தியம் மிகக் குறைவே என்றும், ஆனால், திறமையான நீர் வள மேலாண்மை மற்றும் நவீன வேளாண்மை உத்திகளை (நுண்பாசனம்) கடைப்பிடித்தல்மூலம் பாசன நீருக்கான தேவை குறைக்கப்பட்டு, பயிரிடும் பரப்பிலுள்ள குறைபாடுகள் நீக்கப்படும் என்றும் தெரிவித்தது. நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டத்தினை பல்வேறு துறைகளையும் உள்ளடக்கி நீர் வள ஆதார மேம்பாடு மற்றும் மேலாண்மைத் திட்டம் மூலம் நிறைவேற்றுவதுதான் ஒரே வழி என்றும் இக்குழு பரிந்துரைத்தது. இப்பின்னணியில், 63 உபவடிநிலங்களை மேம்படுத்துவதற்காக ரூ. 2,547 கோடி திட்ட மதிப்பீட்டிலான ஒருங்கிணைந்த நீர் வள நில வளத் திட்டத்தினை உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது.

### திட்டத்தின் நோக்கம்

தமிழகத்தில் உபவடிநில அமைப்பில் ஒருங்கிணைந்த நீர் வள ஆதார மேலாண்மைமூலம் பாசன நீர் வழங்கும் சேவை மற்றும் பாசனமளிக்கப்பட்ட வேளாண் உற்பத்தித் திறனை மேம்படுத்துவதே இத்திட்டத்தின் நோக்கங்கள் ஆகும்.





### அ. உபவடிநில அமைப்பில் பாசன முறைகளை நவீனப்படுத்துதல் (மதிப்பீடு ரூ.1,273 கோடி)

6.17 இலட்சம் எக்டேர் பாசனப் பரப்பு அடங்கிய 63 தெரிந்தெடுக்கப்பட்ட உபவடிநிலங்களில் பாசன அமைப்புகளை நவீனப்படுத்துவதன்மூலம் நீர்ப் பகிர்ந்தளிப்புச் சேவை மற்றும் மேலாண்மைமூலமாகவும் பாசன அமைப்புகளில் நீர் விநியோகத்தினைப் பெருமளவு மேம்படுத்த இத்திட்டம் விழைகிறது. இது மேலும் இரண்டு உபபகுதிகளாகப் பிரிக்கப்பட்டுள்ளது.

மாநிலத்தில் உள்ள நீர்ஆதாரங்களைப் புனரமைத்து சீர்படுத்துவதன் மூலம் ஏரிப் பாசன முறையை நவீனமாக்குதல் மற்றும் கால்வாய்ப் பாசன அமைப்பை மேன்மைப்படுத்த அணைக்கட்டுகளைச் சீரமைத்து வாய்க்கால்களில் கான்கிரீட் லைனிங் செய்தல்.

### ஆ. வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல் மற்றும் மாற்றுப் பயிரிடுதல் (மதிப்பீடு ரூ.748 கோடி)

தெரிந்தெடுக்கப்பட்ட 63 உபவடிநிலங்களில் மேம்படுத்தப்பட்ட வேளாண்மையைத் தீவிரப்படுத்துதல், மாற்றுப் பயிர் செய்தல், நுண்பாசனம், கால்நடை வளர்ப்பு, மீன்வளம்போன்ற பணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கவும் பெருமளவு நீர்ப் பகிர்ந்தளிப்பு முறையினை மேம்படுத்தவும் இத்திட்டப் பகுதி விழைகிறது. வேளாண்மை மற்றும் அதனைச் சார்ந்த துறைகள்மூலம் இவை செயல்படுத்தப்படும்.

### இ. பாசன வேளாண்மைக்கான அமைப்புகளை நவீனப்படுத்துதல் (மதிப்பீடு ரூ.237 கோடி)

நவீனப்படுத்தப்பட்ட செம்மையான மற்றும் பொறுப்புள்ள பாசனப் பகிர்ந்தளிப்பு சேவையினை அளிக்கும்பொருட்டு, அமைப்புரீதியிலான திறனை மேம்படுத்துவது இப்பகுதியின் நோக்கமாகும். இது மாநிலம் முழுவதற்கும் பொருந்தும். நீர் வள ஆதார அமைப்பு மற்றும் நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள்மூலமாக இப்பணிகள் செயல்படுத்தப்படும். பொருத்தமான அதிநவீன உத்திகள்மூலமும், நீர்ப் பயனீட்டாளர்கள் சங்கங்களுடன் மேலும் கலந்தாலோசித்த பின்பு சுற்றுப்புறச் சூழல் மற்றும் சமூக நிலைக்கு ஏற்ப நீர் வள ஆதார அமைப்புகளை வடிவமைத்தல், கண்காணித்தல், நிர்வகித்தல் மற்றும் அனைத்து நவீன வசதிகளின்மூலம் நவீனப்படுத்துதல் ஆகியவற்றின்

[2007 ஏப்ரல் 4

மூலம் அமைப்புரீதியிலான நீர் வள ஆதார அமைப்பின் நிர்வாகத் திறனைப் பெருமளவு உயர்த்தத் திட்டமிடப்பட்டுள்ளது. நீரினைப் பயன்படுத்துவோர் சங்கங்கள்மூலம் பாசனதாரர்களை ஈடுபடுத்தி நீர்ப்பாசனப் பங்கேற்பு மேலாண்மை செயல்படுத்தப்படும்.

**ஈ. நீர் வள ஆதார மேலாண்மை (மதிப்பீடு ரூ.22.50 கோடி)**

இம்மாநிலத்தில் நிலையான நீர் வள ஆதார மேலாண்மைக்காக, அமைப்புகளின் செயல்பாடுகள் மற்றும் திறனை அதிகரிப்பதே இத்திட்டத்தின் நோக்கமாகும். தற்போதுள்ள நீர் ஆய்வு நிறுவனம் (Institute for Water Studies) மற்றும் மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக் குறிப்பு மையம் (State Ground and Surface Water Resources Data Centre) ஆகியவைகளை ஒருங்கிணைத்து மாநில நீர் வள ஆதார மேலாண்மை முகமை (Swarma) ஏற்படுத்தப்படும். இந்தச் செயல்பாடுகளினால் இந்தியாவிலேயே ஆற்று வடிநில அமைப்பில் நவீன, நிலையான நீர் வள ஆதாரத் திட்டமிடுதல் மற்றும் மேலாண்மைக் கோட்பாட்டைச் செயல்படுத்துவதில் தமிழ்நாடு சிறந்த முன் உதாரணமாகத் திகழும்.

**உ. திட்ட மேலாண்மை ஆதரவு (மதிப்பீடு ரூ.37.50 கோடி)**

இத்திட்டத்துடன் தொடர்புடைய மேலாண்மை மற்றும் ஒருங்கிணைப்பு முயற்சிகளுக்கு இச்செயல்பாடு ஆதரவு அளிக்கும். பல துறைகள் அடங்கிய திட்டப் பிரிவு (Multi Disciplinary Project Unit) மூலமாக இத்திட்டம் செயல்படுத்தப்படும்.

பல துறைகள் அடங்கிய திட்டப் பிரிவின் நிறுவனரீதியிலான ஒருங்கிணைந்த செயல்பாட்டிற்கான உதவி செய்தல், திட்டப் பணிகள் நடவடிக்கைகளை உயரிய நிலைக்குக் கொண்டு செல்லுதல், தேவையான திருத்தங்களை மேற்கொள்ளுதல் போன்றவைமூலம் திட்டப் பணிக்கான நடவடிக்கைகள் செயலாக்கப்படும்.

**திட்டச் செயலாக்கம்:—**

இத்திட்டம் ஆறு ஆண்டு காலத்தில் செயல்படுத்தப்படும். நீர் வள ஆதார அமைப்பு வேளாண் பொறியியல், வேளாண்மை, தோட்டக் கலை, தமிழ்நாடு வேளாண் பல்கலைக்கழகம், வேளாண் விற்பனை, கால்நடை பராமரிப்பு மற்றும் மீன்வளத் துறை ஆகியவை முக்கியமாகச் செயல்படுத்தும் முகமைகளாக இருக்கும். பல துறைகள்



2007 ஏப்ரல் 4]

அடங்கிய திட்டப் பிரிவு அளிக்கும் மேலாண்மை உதவி மற்றும் ஒருங்கிணைப்புடன் 2007-2008 ஆம் நிதியாண்டிலிருந்து இத்திட்டச் செயல்பாட்டினைத் துவக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. செயல்பாடு மற்றும் விலை மாற்றங்களை உள்ளடக்கிய மொத்தத் திட்ட ஒதுக்கீடு ரூ.2547 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது.

## 8. மத்திய அரசு நிதி உதவியுடன் நீர்நிலைகளைச் செப்பனிட்டு, புதுப்பித்துச் சீரமைப்பதற்கான முன்னோடித் திட்டம்

விழுப்புரம் மற்றும் சிவகங்கை மாவட்டங்களில் முறையே ரூ.9.37 கோடி மற்றும் ரூ.1.222 கோடி திட்ட மதிப்பீட்டில் முன்னோடித் திட்டமாக மத்திய அரசின் 75 சதவிகித நிதி உதவியுடன் நீர்நிலைகளைச் செப்பனிட்டு, புதுப்பித்து மற்றும் சீரமைப்பதற்கு மத்திய அரசு ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தைக் கண்காணிப்பதற்காக அந்தந்த மாவட்ட ஆட்சியர்களைத் தலைவராகக்கொண்ட அரசுசாரா தன்னார்வ நிறுவனப் பிரதிநிதிகளை உள்ளடக்கி மாவட்ட அளவில் செயல்படும் குழு (DLIC) அமைக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் விழுப்புரம் மாவட்டத்தில் 38 ஏரிகளால் 4,462.89 எக்டேர் பரப்பளவு நிலங்களும், சிவகங்கை மாவட்டத்தில் 8 ஏரிகளால் 702.42 எக்டேர் பரப்பளவு நிலங்களும் பயனடைகின்றன. மேற்கண்ட ஏரிகளில் நீர் நிறைந்து இருந்ததால், பணிகள் சற்றுத் தாமதமாகத் துவங்கின. எனினும் தற்போது பணிகள் முடியும் தருவாயில் உள்ளன.

இத்திட்டத்திற்கான காலக்கெடுவினை ஜூன் 2007 வரை நீட்டிக்க மைய அரசிடம் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

## 9. கடலரிப்புத் தடுப்புத் திட்டம்

கடலரிப்பைத் தடுத்து கடற்கரைப் பகுதிகளைப் பாதுகாப்பதற்காக, வல்லுநர்களின் பரிந்துரைகளின் அடிப்படையில், தமிழ்நாடு அரசு திட்டங்களுக்கு ஒப்புதல் அளித்துள்ளது. அதிகமாகப் பாதிக்கப்பட்டுள்ள சென்னையிலுள்ள இராயபுரம், இராமநாதபுரம், தூத்துக்குடி, திருநெல்வேலி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில் உள்ள 34 இடங்களில், கருங்கற்சுவர்கள் மற்றும் தூண்டில் வளைவுகள் கட்டப்பட்டுள்ளன. கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள இனையம் (கிழக்கு) என்ற இடம் தவிர ஏனைய இடங்களில் தூண்டில் வளைவு கட்டும் பணிகள் முடிவுற்றன. இவற்றில் தூத்துக்குடி மாவட்டம்,

[2007 ஏப்ரல் 4

பெரியதாழையில் கல் சுவர் அமைக்கும் பணி, தூத்துக்குடி மாவட்டம் ஆழந்தாழையில் கல் சுவர் அமைக்கும் பணி ஆகிய இரண்டும் எதிர்ப்புகளின் காரணமாகக் கைவிடப்பட்டுள்ளன.

அதனைத் தொடர்ந்து தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழை கிராமத்தில் தேசிய கடற்கரைப் பாதுகாப்புத் திட்டத்தின்கீழ் உத்தேசிக்கப்பட்ட தூண்டில் வளைவு அமைக்கும் பணி, மத்திய அரசின் பங்கேற்புத் தொகையான ரூ.2.32 கோடி மற்றும் மாநில அரசின் பங்கேற்புத் தொகையான ரூ.3.68 கோடி என்று மத்திய அரசின் நிதி உதவிபெறும் திட்டமாக ரூ.6.00 கோடியில் அனுமதிக்கப்பட்டு பணிகள் முடிக்கப்பட்டுள்ளன.

கன்னியாகுமரி மாவட்டம், கடற்கரைப் பகுதியில் வசிக்கும் மக்கள், கடலரிப்பைத் தடுக்கும் வகையில் கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளைச் செயல்படுத்த ஏராளமான கோரிக்கைகளை வைத்து வருகின்றனர். அவர்களுடைய கோரிக்கைகளை ஏற்று, கன்னியாகுமரி கடற்கரைப் பகுதிகளில் வாழும் மக்களின் உயிரையும், உடமைகளையும் காக்கும் வகையில் சீரமைப்பு நடவடிக்கைகளைப் பரிந்துரைப்பதற்கும் கடற்கரைப் பகுதிகளை ஆய்வு செய்வதற்கும் தமிழக அரசு ஒரு குழுவை அமைத்துள்ளது. இக்குழுவின் அறிக்கையைப் பெற்றபின், இப்பகுதிகளில் கடலரிப்புத் தடுப்புப் பணிகள் செயல்படுத்தப்படும்.

## 10. சென்னைப் பெருநகர நீர் வழிகள்

சென்னைப் பெருநகர நீர் வழிகளைத் தூய்மையாகவும், மாசு இன்றியும் பராமரிக்க பல்நோக்கு திட்டம் அவசியமாகிறது. பல ஆண்டுகளாக பல்வேறு நிறுவனங்களும், முகவரமைப்புகளும், நீர் வழிகளின் தரத்தை உயர்த்த ஆய்வுகளையும், மேம்பாட்டுப் பணிகளையும் மேற்கொண்டு வந்துள்ளன. சென்னைப் பெருநகர் நீர் வழிப் பாதுகாப்புத் திட்டத்திற்கு ரூ.1,700 கோடி மதிப்பீட்டில் மத்திய அரசின் சுற்றுச்சூழல் மற்றும் வன அமைச்சகம் ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டம் 2000 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. 1998 ஆம் ஆண்டில், இதனுடன் இணைந்து சென்னைப் பெருநகர்ப் பகுதியில் உள்ள நீர் வழி மற்றும் வடிகால்களை மேம்படுத்துவதற்கான ஒருங்கிணைந்த திட்டத்திற்கு, மொத்தம் ரூ.300.00 கோடி மதிப்பீட்டினை தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டத்தினை வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சிக் கழகத்தின் (Hudco) நிதியுதவி பெற்று பொதுப் பணித் துறை, தமிழ்நாடு குடிசை மாற்று வாரியம் மற்றும் சென்னை மாநகராட்சி ஆகிய துறைகளின்மூலம் செயல்படுத்துவதற்காக சென்னைப் பெருநகர வளர்ச்சிக் குழுமம், மைய அமைப்பாக (Nodal Agency) நியமிக்கப்பட்டது.



2007 ஏப்ரல் 4]

மேற்கண்ட ஒருங்கிணைந்த மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையால் முடிக்கப்பட்ட பணிகளின் விவரம் கீழே தொகுப்பு வாரியாக வகைப்படுத்தப்பட்டுள்ளது:

(ரூபாய் கோடியில்)

| தொகுப்பு எண் | பணித் திட்டத்தின் பெயர் | திருத்திய மதிப்பீடு | தற்போதைய நிலை |
|---|---|---|---|
| II | பக்கிங்காம் கால்வாய் மேம்படுத்துதல் | 30.81 | முடிவடைந்தது |
| III | அடையாறு ஆற்றை மேம்படுத்துதல் | 46.06 | 58 சதவீதம் முடிவடைந்துள்ளது |
| IV | சென்னைப் பெருநகரப் பகுதிகளில் வெள்ளத்தடுப்பு மற்றும் பெரிய வடிகால்களின் கரை மறுசீரமைப்புப் பணி (அம்பத்தூர், கொரட்டூர், மாதவரம், செங்குன்றம் மற்றும் செம்பரம்பாக்கம் ஏரி உபரி நீர் வடிகால் மற்றும் நிலம் கையகப்படுத்தல் கட்டணங்கள்) | 56.21 | 60 சதவீதம் முடிவடைந்துள்ளது |
| V | விருகம்பாக்கம்—அரும்பாக்கம், வடிகால்களை மேம்படுத்துதல் | 10.46 | முடிவடைந்தது |
| | ஓட்டேரி நல்லா | 0.85 | முடிவடைந்தது |
| | வேளச்சேரி பகுதிக்கு வடிகால் வசதி செய்தல் | 6.30 | 85 சதவீதம் முடிவடைந்துள்ளது |
| V(அ) | கூவம் ஆறு மேம்படுத்துதல்— பெரியார் பாலத்திலிருந்து கடல் முகத்துவாரம் வரை | 2.20 | முடிவடைந்தது |
| (ஆ) | பெரியார் பாலத்திலிருந்து கோயம்பேடு பாலம் வரை | 17.45 | பணி துவங்கப்பட உள்ளது |
| | மொத்தம் | 170.34 | |

இந்தப் பணிகள், சென்னைப் பெருநகர நீர் வழிகளை ஓரளவு மேம்படுத்தியிருந்தாலும் மாநகரம் முழுவதுமாக 88 கி.மீ. நீளத்திற்கு ஓடும் நீர் வழிகளை மாசு இன்றியும், ஆக்கிரமிப்பு இன்றியும் பாதுகாக்க, உறுதியான மற்றும் ஒருங்கிணைந்த முயற்சிகள் தேவைப்படுகின்றன. உலக வங்கி மற்றும் இதர நிதி நிறுவனங்களின் உதவியுடன் பல்துறை சார்ந்த முனைப்புடன் பெருநகர நீர் வழிகளை மேம்படுத்தும் வகையில் பெரும் வளர்ச்சித் திட்டத்தை இந்த அரசு செயல்படுத்தும்.

## 11. கிருஷ்ணா குடிநீர் வழங்கும் திட்டம்

சென்னை நகரக் குடிநீர்த் தேவைக்காக கிருஷ்ணா ஆற்றின் குறுக்கே கட்டப்பட்டுள்ள ஸ்ரீசைலம் நீர்த்தேக்கத்திலிருந்து ஆண்டுதோறும் 15 டி.எம்.சி. தண்ணீர் வழங்கும் நோக்கத்துடன் ஆந்திரப் பிரதேசம் கிருஷ்ணா நீர் வழங்கும் திட்டத்தை வகுத்தது.

இத்திட்டம் உருவாக்கப்பட்டு தமிழகம் மற்றும் ஆந்திர மாநிலங்களிடையே 1983 ஆம் ஆண்டு ஒப்பந்தம் மேற்கொள்ளப்பட்டது. போதுமான அளவிற்கு கால்வாய்ப் பணிகள் முடிவடைந்தவுடன் 1996 ஆம் ஆண்டில் சென்னை நகருக்குக் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தண்ணீர் திறந்துவிடப்பட்டது. இத்திட்டத்திற்காக 1996 ஆம் ஆண்டு வரை தமிழ்நாடு அரசு தனது பங்காக ரூ.512.00 கோடியை ஆந்திரப்பிரதேச அரசுக்கு வழங்கியுள்ளது.

1996 ஆம் ஆண்டு முதல் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து தமிழ் நாடு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு வருமாறு:

| ஆண்டு (1) | தமிழ்நாட்டு எல்லையில் பெறப்பட்ட நீரின் அளவு (டி.எம்.சி.) (2) |
|---|---|
| 1996–1997 | 0.076 |
| 1997–1998 | 2.292 |
| 1998–1999 | 2.812 |
| 1999–2000 | 1.830 |
| 2000–2001 | 6.688 |





| (1) | (2) |
|---|---|
| 2001-2002 | 3.861 |
| 2002-2003 | - |
| 2003-2004 | 0.210 |
| 2004-2005 | 2.717 |
| 2005-2006 | 2.090 |
| 2006-2007 | 5.183 |

கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து சத்தியசாயி கால்வாயில் 80 கி.மீ. அளவிற்கு சிமெண்ட் லைனிங் அமைக்கும் பணி 2005 ஆம் ஆண்டில் முடிக்கப்பட்டுள்ளது. நடப்பு ஆண்டில் 23 கிலோ மீட்டர் நீளத்திற்கு சத்தியசாயி கால்வாயில் கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணி தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது. ஆந்திரப் பிரதேச அரசு மேலும் 49 கிலோ மீட்டர் தொலைவிற்கு கான்கிரீட் லைனிங் அமைக்கும் பணியை ஆகஸ்டு 2007 ஆம் ஆண்டுக்குள் முடித்து விடுவதாக இவ்வரசிற்கு உறுதி அளித்துள்ளது.

தமிழ்நாடு எல்லைக்குட்பட்ட பகுதியில் மண்ணின் மோசமான தன்மை காரணமாக கால்வாயில் சில இடங்களில் சரிவு ஏற்பட்டுள்ளது. இவ்வாறு மண் சரிவு ஏற்படும்போதெல்லாம் அதனைச் சீரமைப்பதற்கு தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. 2007-2008 ஆம் ஆண்டில் தமிழக எல்லையிலிருந்து பூண்டி நீர்த்தேக்கம் வரை, பூண்டி-கண்டலேறு கால்வாயை முழுமையாக சீரமைக்க அரசு முடிவு செய்துள்ளது.

## 12. பக்கிங்காம் கால்வாயை உள்நாட்டு நீர் வழிப் போக்குவரத்துத் தடமாக அறிவித்தல்

ஆந்திரப் பிரதேசம், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரியின் வழி செல்லும் 1,095 கி.மீ. காகிநாடா கால்வாய், ஏலூறு கால்வாய், கம்மமூரூ கால்வாய், பக்கிங்காம் கால்வாய் மற்றும் கலுவேலி ஏரி, கோதாவரி ஆற்றின பத்ராசலம்-இராஜமுந்திரி பகுதி, கிருஷ்ணா நதியின் வஸீராபாத்

விஜயவாடா பகுதி ஆகியவற்றை தேசிய நீர் வழித் தடமாக அறிவிப்பதற்கும் இப்பகுதியில் உள்ள ஆறுகளையும் கால்வாய்களையும் கப்பல் போக்குவரத்து மற்றும் நீர் வழிப் பயணம் மேற்கொள்ள ஏதுவாக மேம்படுத்தவும், நாடாளுமன்றத்தில் ஒரு சட்டமுன்வடிவு (93/2006) அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. பக்கிங்காம் கால்வாயை உள் நாட்டு நீர் வழியாக உயர்த்துவதற்கு மத்திய அரசு உரிய நிதியாதாரங்களை அளிக்கும்.

செயலாக்கப்படவுள்ள உத்தேச தேசிய நீர் வழித் தடமானது ஆந்திரப் பிரதேசம் (907 கி.மீ.) தமிழ்நாடு (186 கி.மீ.) மற்றும் புதுச்சேரி (2 கி.மீ.) ஆகிய மாநிலங்களின் வழியாகச் செல்லும். இதனிடையே பக்கிங்காம் கால்வாயில் 170 கி.மீ. நீளத்திற்கு நீர் வழிப் பாதையின் அகலத்தை 100 மீட்டர் அகலத்திற்கு அதிகரிப்பதற்கான பணிகள் மேற்கொள்ள, கால்வாய் ஓரமுள்ள அரசு நிலத்தின் எல்லைகள் ஆகியன அளவீடு செய்யப்பட்டு தயாராக வைக்கப்பட்டுள்ளன.

## 13. சென்னை மாநகரத்திற்குக் கூடுதலாகக் குடிநீர் வழங்கும் திட்டம்-II

சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்கும் திட்டத்தின்கீழ் வடவாறு வாய்க்காலை மேம்படுத்துதல், கீழ் அணைக்கட்டிலிருந்து வீராணம் ஏரிக்கு நீர் கொண்டு வருதல், வீராணம் ஏரியில் உள்ள மண்திட்டை அகற்றுதல் மற்றும் வீராணம் ஏரியின் முழு நீர் மட்டத்தை 2 அடி உயர்த்தி, தற்போதுள்ள கொள்ளளவு 935 மில்லியன் கன அடியிலிருந்து 1,485 மில்லியன் கன அடியாக அதிகரித்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய பணிகளுக்காக ரூ. 60.00 கோடிக்கு அரசு ஒப்புதல் அளித்தது.

இப்பணிகள் முடிவடைந்த பின்னர் சென்னை மாநகரத்திற்குக் குடிநீர் வழங்குவதோடு மட்டுமல்லாமல் 18,045 எக்டேர் நிலங்கள் நிலையான பாசன வசதி பெறும். ரூ. 130.00 கோடி திருத்த மதிப்பீட்டிற்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இந்தப் பணிகள் முடிவடையும் தருவாயில் உள்ளன.

அடையாற்றின் குறுக்கே நந்தம்பாக்கம், மணப்பாக்கம், கவுல்பஜார் மற்றும் காஞ்சிபுரம் மாவட்டத்தில் அனகாபுத்தூர் ஆகிய இடங்களில் தடுப்பு அணைகள் கட்டும் பணிக்காக, 2004 ஆம் ஆண்டு பிப்ரவரியில் ரூ. 12.37 கோடிக்கு அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது.

இத்திட்டத்தை நிறைவேற்றுவதன்மூலம் அடையாற்றில் மழை நீர் முழுமையாகச் சேகரிக்கப்படுவதால் அருகிலுள்ள இடங்களில் நிலத்தடி





நீர் கணிசமாக உயரும். இத்திட்டம் செயல்படுத்தப்படும் இடங்கள், நிலத்தடி நீர் கணிசமாக உயர்வதற்கான சாத்தியக்கூறுகளை உறுதி செய்து தெரிவு செய்யப்பட்டன.

நந்தம்பாக்கம் அருகில் அடையாறுக்கு குறுக்கே ஒரு தடுப்பணை கட்டும் பணி ரூ. 3.25 கோடி மதிப்பில் முதற்கட்டமாக (Phase I) எடுத்துக் கொள்ளப்பட்டு, தற்போது பணி நடைபெற்று வருகிறது. 85 சதவிகிதப் பணிகள் முடிவடைந்துள்ளன. மீதமுள்ள பணிகள் 2007-08 ஆம் ஆண்டில் நிறைவுபெறும்.

மணப்பாக்கம் அருகே தடுப்பணை அமைக்கும் பணி ரூ. 3.47 கோடி மதிப்பீட்டில் மேற்கொள்ளப்பட்டு, பணிகள் தற்போது முன்னேற்றத்தில் உள்ளன. 2007-08ஆம் ஆண்டில் இப்பணிகள் முடிவுபெறும். நந்தம்பாக்கம் மற்றும் மணப்பாக்கம் பகுதிகளில் அமைக்கப்படும் தடுப்பணைகளின் செயல்பாட்டினைப் பொறுத்து, கவுல் பஜார் மற்றும் அனகாபுத்தூர் பகுதிகளில் தடுப்பணை கட்டும் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 14. ஆழிப் பேரலை (சுனாமி)

ஆழிப் பேரலையால் ஏற்பட்ட கடுமையான பாதிப்புகளுக்குப் பின், தமிழக அரசு, கடற்கரை மற்றும் அதனைச் சார்ந்து வாழும் மக்களை பாதுக்காக்கும்பொருட்டு பாதுகாப்புத் திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது.

சென்னையில் உள்ள இந்தியத் தொழில்நுட்பக் கழகம் பொதுப் பணி மற்றும் வருவாய்த் துறைகளுடன் இணைந்து கடலோரப் பகுதிகளில் விரிவான ஆய்வு செய்து, அதிகமாக பாதிப்புக்குள்ளாகும் பகுதிகளைக் கண்டறிந்து அந்தப் பகுதிகளைக் கடலரிப்பிலிருந்து பாதுகாக்கத் தேவையான நடவடிக்கைகளை பரிந்துரை செய்துள்ளது.

இதனடிப்படையில், ரூ. 695.99 கோடிக்கு கடலரிப்புத் தடுப்புத் திட்டப் பணிகளுக்கான திட்ட அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு, நிதியுதவிக்காக மைய அரசு மற்றும் மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்பப்பட்டுள்ளது. கடற்கரைப் பாதுகாப்புப் பணிகளை மேற்கொள்ள பன்னிரண்டாவது நிதிக் குழு தமிழகத்திற்கு உதவி மானியமாக ரூ. 50.00 கோடியினை ஒதுக்கியுள்ளது.

தமிழக அரசின் உயர்மட்டக் குழு, இந்தியத் தொழில்நுட்பக் கழகம் அளித்த அறிக்கையின் அடிப்படையில் கீழ்க்காணும் 30 பணிகளைத் தெரிந்தெடுத்து அரசு முன்னுரிமை அளித்துள்ளது:

(ரூபாய் கோடியில்)

| வ. எண் (1) | பணி விவரங்கள் (2) | மதிப்பீடு (3) |
|---|---|---|
| 1. | கன்னியாகுமரி மாவட்டம் இரட்சகர் தெருவில் கடலரிப்பைத் தடுக்க தூண்டில் வளைவு அமைக்கும் பணி | 4.80 |
| 2. | கன்னியாகுமரி மாவட்டம் நீரோடித் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 1.50 |
| 3. | கன்னியாகுமரி மாவட்டம் மார்த்தாண்டம் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.80 |
| 4. | கன்னியாகுமரி மாவட்டம் வள்ளவிளைத் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.80 |
| 5. | கன்னியாகுமரி மாவட்டம் சின்னத்துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.30 |
| 6. | கன்னியாகுமரி மாவட்டம் இரவிபுத்தன்துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.30 |
| 7. | கன்னியாகுமரி மாவட்டம் தூத்தூரில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.23 |
| 8. | கன்னியாகுமரி மாவட்டம் பூத்துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.33 |
| 9. | கன்னியாகுமரி மாவட்டம் இரயுமன்துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.22 |
| 10. | கன்னியாகுமரி மாவட்டம் தேங்காபட்டணம் மற்றும் முள்ளூர் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.60 |
| 11. | கன்னியாகுமரி மாவட்டம் கோடிமுனையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.33 |



| (1) | (2) | (3) |
|---|---|---|
| 12. | கன்னியாகுமரி மாவட்டம் பெரியவிளைத் துறையில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.27 |
| 13. | கன்னியாகுமரி மாவட்டம் பெரியகாடு பகுதியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.32 |
| 14. | கன்னியாகுமரி மாவட்டம் கோவளத்தில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.20 |
| 15. | தாழங்குப்பம் முதல் நெட்டுக்குப்பம் வரை கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 2.30 |
| 16. | தந்திரியான் குப்பம், வானூர் வட்டம், விழுப்புரம் மாவட்டத்தில் தூண்டில் வளைவு அமைத்தல் | 2.62 |
| 17. | விழுப்புரம் மாவட்டம், வானூர் வட்டம், கோட்டக்குப்பம் கிராமத்தில் வளைவுப் பாதை எல்.எஸ். 126 முதல் 946 வரை கட்டும் பணி | 0.99 |
| 18. | வடசென்னையில் கடல் நீர் புகுவதைத் தடுக்க அன்னை சிவகாமி நகர் குப்பம் முதல் இந்திரா காந்தி நகர் குப்பம் வரை கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.99 |
| 19. | கடலூர் மாவட்டத்தில் கடலோரப் பகுதிகளைப் பாதுகாக்க தாழன்குடா முதல் தேவனாம்பட்டினம் வரை கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 3.00 |
| 20. | பெரியகாடு பகுதியில் தூண்டில் வளைவு நீட்டிப்பு (155 மீ.) கட்டுதல் | 4.75 |
| 21. | மணக்குடியில் தூண்டில் வளைவு (2 x 200=400 மீ.) கட்டுதல் | 6.00 |
| 22. | இணையம்புத்தன் துறையில் தூண்டில் வளைவு 240 மீ. கட்டுதல் | 3.50 |
| 23. | அரியநாட்டூர் தெரு கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 1.44 |

[2007 ஏப்ரல் 4

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 24. | வேளாங்கண்ணியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 0.53 |
| 25. | பூம்புகாரில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 1.78 |
| 26. | தரங்கம்பாடியில் கடலரிப்புத் தடுப்புச் சுவர் கட்டுதல் | 3.05 |
| 27. | கடுவையாறு மற்றும் கல்லாறு பகுதியில் தாங்கு சுவர் அமைத்தல் | 3.20 |
| 28. | கூவம் ஆற்றில் நிலையான முகத்துவாரம் (+) 4.200 மீ வரை அமைய வடக்குப் பக்கத்தில் தற்போது உள்ள மண் தோணித்துறை வரை தூண்டில் வளைவு அமைத்தல் | 1.32 |
| 29. | கூவம் ஆற்று முகத்துவாரத்தில் மண் செல்வதைத் தடுக்க தெற்குப் புறத்தில் உள்ள தடுப்புச் சுவரை (+) 2.50 மீ. இருந்து 4.20 மீ. வரை உயர்த்துதல் | 0.90 |
| 30. | எளிதாக வெள்ள நீர் செல்லவும் மற்றும் கடல் நீர் அலைகள் பரிமாற்றம் ஏற்படவும் கூவம் ஆற்று முகத்துவாரம் மற்றும் பாலங்கள் உள்ள இடங்களில் உள்ள மண்மேடுகளை மன்றோ பாலம் வரை அகற்றுதல் | 0.60 |
| | **மொத்தம்** ... | **47.97** |

மேற்கண்ட 30 பணிகளில் 9 பணிகள் முடிக்கப்பட்டுள்ளன. மீதமுள்ள 21 பணிகள் நடைபெற்று வருகின்றன.

## அவசர கால சுனாமி புனரமைப்புத் திட்டம்

நாகப்பட்டினம் மாவட்டத்தின் பல்வேறு கால்வாய்களில் தூர் வாருதல் மற்றும் கரைகளை வலுப்படுத்தும் பணிகளை உலக வங்கியின் உதவியுடன் செயல்படுத்துவதற்காக, அக்டோபர் 2005-ல் கீழ்க்காணும் பணிகளுக்காக அரசு ரூ. 19.271 கோடிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது:



2007 ஏப்ரல் 4]

(ரூபாய் கோடியில்)

| வ. எண் (1) | பணி விவரம் (2) | மதிப்பீடு (3) |
|---|---|---|
| 1. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வேதாரண்யம் கால்வாயில் L.S. O. கி.மீ. முதல் 14.8 கி.மீ. வரை தூர் வாருதல், அகலப்படுத்துதல் மற்றும் கரைகளை வலுப்படுத்துதல் | 1.822 |
| 2. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் L.S. 14.8 கி.மீ. முதல் 31.2 கி.மீ. வரை | 2.019 |
| 3. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் L.S. 31.2 கி.மீ. முதல் 56.8 கி.மீ. வரை | 3.151 |
| 4. | தெற்கு பக்கிங்காம் கால்வாயின் கரைகளைத் தூர் வாருதல் மற்றும் வலுப்படுத்துதல் (2.3 கி.மீ.), மஞ்சளாறு வடிகாலிலிருந்து கடல் வரை 3.6 கி.மீ. (3 கி.மீ.) வீரசோழன் வடிகாலின் கரையை வலுப்படுத்துதல் (0.8 கி.மீ.) மற்றும் நண்டலாறு வடிகாலின் வலது கரை 0 முதல் 1.8 கி.மீ. வரை, இடது கரை 0 முதல் 4.45 கி.மீ. வரை மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள மகிமலையாற்றிலிருந்து நேரடிப் பிளவு (2.2 கி.மீ.) | 2.440 |
| 5. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் சுனாமியால் பாதிக்கப்பட்ட கொள்ளிடப் பிரிப்பு கரைகளான கோரைத்திட்டு, பாண்டியன் திட்டு மற்றும் காட்டூரை வலுப்படுத்துதல் (6 கி.மீ.) | 1.230 |
| 6. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் நாட்டுகன்னி மன்னியார் வடிகாலை தூர் வாருதல், வலுப்படுத்துதல் (12 கி.மீ.) மற்றும் வெள்ளப்பள்ளம் உப்பனாறு வடிகாலில் L.S. 19 கி. மீட்டரிலிருந்து கடல் வரை (5 கி.மீ.) வலுப்படுத்துதல் | 1.808 |

| (1) | (2) | (3) |
|---|---|---|
| 7. | நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள வெள்ளையாறு நேரடிப் பிளவு I.S. 3.5 கி.மீட்டரிலிருந்து கடல் வரை (1 K.m.) தூர் வாருதல் மற்றும் வலுப்படுத்துதல், சாக்கிலியான் வாய்க்காலின் நேரடிப் பிளவு L.S. 5.5. கி. மீட்டரில் இருந்து கடல் வரை லாஃபோர்டு நேரடிப் பிளவு L.S. 5.5 கி.மீட்டரில் இருந்து கடல் வரை (1 கி.மீ.) நல்லாறு நேரடிப் பிளவு L.S. 8.2. கி. மீட்டரிலிருந்து கடல் வரை (1 கி.மீ.) அடப்பாறு நேரடிப் பிளவு L.S. 1.5 கி. மீட்டரிலிருந்து கடல் வரை (1 கி.மீ.) முல்லையாறு நேரடிப் பிளவு L.S. 0 கி.மீட்டரிலிருந்து 1.5 கி.மீ. கடல் வரை (1 கி.மீ.) மற்றும் வளவனாறு நேரடிப் பிளவு L.S. 0 கி.மீட்டரிலிருந்து 1.5 கி.மீ. வரை (1.5 கி.மீ.) | 2.445 |
| 8. | நாகப்பட்டினம் மாவட்டத்தின் கடுவையாறு வடிகாலின் L.S. 5.30 கி.மீட்டரிலிருந்து கடல் வரை அகலப்படுத்துதல் மற்றும் வலுப்படுத்துதல் (6 கி.மீ.) | 1.726 |
| 9. | வடக்கு பக்கிங்காம் கால்வாயை வலுப்படுத்துதல் மற்றும் அகலப்படுத்துதல் (13.கி.மீ.) மற்றும் நாகப்பட்டினம் மாவட்டத்தில் முடவனாறு வடிகால் ஒழுங்கு இயக்கியினை புனரமைத்தல் | 2.630 |
| | **மொத்தம்** | **19.271** |

*பாசனக் காலத்திற்குபின் பணிகள் துவங்கப்பட்டு செம்மையாக நடைபெற்று வருகின்றன. இப்பணிகளை செப்டம்பர் 2007-ல் முடிக்க திட்டமிடப்பட்டுள்ளது.*

## 15. காவிரி நதி நீர்த் தாவா

*காவிரிப் படுகை மாநிலங்கள் தாக்கல் செய்த மனுக்கள், எதிர் மனுக்கள், அதற்கான பதில்கள், கணக்கில் அடங்கா தொழிநுட்பப் புள்ளி விவரங்கள், வல்லுநர்களின் சாட்சிகள்மீது நடைபெற்ற குறுக்கு விசாரணை ஆகியவற்றை கடந்த 16 ஆண்டுகளுக்கு மேலாக காவிரி நடுவர் மன்றம் விசாரித்து இவற்றின்மீதான வாதப் பிரதிவாதங்கள் ஏப்ரல் 2006-ல் முடிவுற்றன.*





*2007 பிப்ரவரி மாதம் 5 நாள் காவிரி நடுவர் மன்றம் தனது இறுதி ஆணையை அளித்தது. இதில் காவிரிப் படுகையில் கிடைக்கக்கூடிய மொத்த நீர்வரத்தை 1972 ஆம் ஆண்டு காவிரி உண்மை அறியும் குழு 740 டி.எம்.சி. என்று கணக்கிட்டதையே ஏற்றுக்கொண்டு அதன் அடிப்படையில் தமிழ்நாட்டிற்கு 419 டி.எம்.சி. என்று ஒதுக்கீடு செய்துள்ளது. மேலும், இந்த ஆணையில் கர்நாடகம் 192 டி.எம்.சி. தண்ணீரை கர்நாடக-தமிழ்நாடு எல்லையில் பில்லிகுண்டுலு என்னும் இடத்திலோ அல்லது எல்லைப் பகுதியில் அமையப்பெற்ற ஏதாவது ஒரு இடத்திலோ அளவிட்டு அளிக்க வேண்டும் எனவும், இதில், சுற்றுப்புறச்சூழல் பாதுகாக்கப்படும் வகையில் 10 டி.எம்.சி. நீரும் அடங்கும் என்றும் குறிப்பிட்டுள்ளது. இதைத் தவிர கேரளாவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட 30 டி.எம்.சி. நீரில் அவ்வரசால் உபயோகப்படுத்தப்படாத நீரை அவ்வரசு உபயோகப்படுத்தும் வரை தமிழ்நாடு பயன்படுத்திக்கொள்ளலாம் என்று அந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலும், நிலத்தடி நீர் உபயோகம் காவிரி ஆற்றில் கிடைக்கும் தண்ணீராக எக்காரணம்கொண்டும் கணக்கில் எடுத்துக்கொள்ளக் கூடாது என்று தெள்ளத் தெளிவாகக் கூறப்பட்டுள்ளது.*

*காவிரி நடுவர் மன்றம், இத்திட்டத்தை நிறைவேற்றுவதற்கான செயல் முறை, அதாவது, காவிரி நிர்வாக வாரியம் மற்றும் அதனுடைய பணிகளைச் செயல்படுத்த காவிரி நீர்ப் பங்கீடு ஒழுங்குமுறைக் குழு ஒன்றும் நிறுவுமாறு மத்திய அரசுக்குப் பரிந்துரை செய்து ஆணையிட்டுள்ளது. மேலும், அந்த அமைப்பிற்கான வழிமுறையையும், குழுவின் பணிகள் குறித்தும் இந்த ஆணையில் குறிப்பிடப்பட்டுள்ளன.*

*மேலும், நடுவர் மன்றம், படுகையின்கீழ் அமைந்துள்ள மாநிலங்களைப் பாதுகாக்கும்பொருட்டு, அதன் ஆணையில் "எந்தவொரு படுகையின் மேற்பரப்பில் அமைந்துள்ள உரிமம் பெற்ற பாசனப் பரப்பைக்கொண்ட மாநிலம், தண்ணீரைக் குறிப்பிடப்பட்ட அளவு விநியோகிக்கும்பொழுது படுகையின் கீழ்ப்பரப்பில் அமைந்துள்ள உரிமம் பெற்ற பாசனப் பரப்புகொண்ட மாநிலங்களுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்" என்றும் குறிப்பிட்டுள்ளது.*

*19-02-2007 அன்று நடைபெற்ற அனைத்துக் கட்சிக் கூட்டத்தில் எடுத்த முடிவின்படி, 1956 ஆம் ஆண்டைய பன்மாநில நதி நீர்த் தாவா சட்டத்தின் பிரிவு 5(3)-ன்படி விளக்கம் கேட்டும் அல்லது தேவைப்படும் இனங்களுக்கு விளக்கங்களோ அல்லது வழிகாட்டு முறையோ*

வழக்குரைஞர்கள் மற்றும் தொழில்நுட்ப அதிகாரிகளுடன் கலந்தாலோசித்து தமிழ்நாடு நடுவர் மன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்யலாம் என்றும் தீர்மானம் இயற்றப்பட்டது.

தமிழக அரசு வழக்கறிஞர்களையும், பொறியியல் வல்லுநர்களையும் கலந்தாலோசித்து மற்றும் காவிரி நீர்ப்பாசன விவசாயிகள் சங்க அமைப்புகளின் கருத்துகளையும் கருத்தில்கொண்டு நடுவர் மன்றத்திடமிருந்து விளக்கம் அல்லது வழிமுறைகளைக் கோரி மனுவை முடிவு செய்ய உடனடியாக நடவடிக்கை எடுத்துள்ளது. விளக்கம் கோரும் மனு வரையறுக்கப்பட்ட மூன்று மாத கால அளவுக்குள், அதாவது, 05-05-2007க்கு முன்பாக காவிரி நடுவர் மன்றத்திடம் தாக்கல் செய்யப்படும்.

நடுவர் மன்றம் மீண்டும் அதன் அறிக்கையை மத்திய அரசுக்கு அளித்து நடுவர் மன்றம் பிறப்பித்த இறுதி ஆணையை மத்திய அரசு அதன் அரசிதழில் பிரசுரம் செய்யும் வரையில், 25-6-1991 அன்று நடுவர் மன்றம் பிறப்பித்த இடைக்கால ஆணையும், அதனைச் செயல்படுத்துவதற்காக ஏற்படுத்தப்பட்ட காவிரி நதி நீர் ஆணையம் மற்றும் காவிரி கண்காணிப்புக் குழு ஆகியன நடைமுறையில் இருக்கும்.

காவிரி நீரையே நம்பி வாழ்கின்ற விவசாயிகளின் நலனைப் பாதுகாக்கும்பொருட்டு தழிழக அரசு தேவையான அனைத்து நடவடிக்கைகளையும் மேற்கொள்ளும்.

## 16. பாலாறு

ஆந்திர அரசு, சித்தூர் மாவட்டம், குப்பம் வட்டத்தில் கணேசபுரம் அருகே பாலாற்றின் குறுக்கே ஒரு தடுப்பணை கட்டி அதன்மூலம் தண்ணீரைத் தங்கள் மாநிலத்திற்கு திருப்பிவிடச் செய்த முடிவு தமிழகத்தில் கடுமையான பாதிப்பினை ஏற்படுத்தியது. பாலாற்றின் நீரைப் பயன்படுத்துவது 1892 ஆம் ஆண்டைய மைசூர்—சென்னை ஒப்பந்தத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே தடுப்பணை கட்டுமானால் அம்மாநிலத்தின் கீழ்ப் பகுதிக்கு நீர் செல்வது தடைப்படும் என்பதால், மத்திய அரசு தலையிட்டு தடுப்பணை கட்டுவதைத் தடுக்க வேண்டும் என்று தமிழ்நாடு 1-2-2006 அன்று கேட்டுக்கொண்டுள்ளது.

பாலாறு மற்றும் அதன் உபநதிகளின் குறுக்கே தடுப்பணை கட்டுவதைத் தொடரக் கூடாது என்ற ஒரு உத்தரவினை ஆந்திர அரசிற்குப் பிறப்பிக்கக் கோரி ஒரு சிவில் வழக்கினை உச்ச



நீதிமன்றத்தில் தமிழ்நாடு அரசு 10-2-2006 அன்று தொடர்ந்துள்ளது. உள்ளாட்சித் துறை மற்றும் உயர் கல்வித் துறை அமைச்சர்களும் மற்றும் அதிகாரிகள் அடங்கிய குழு கடந்த 5-8-2006 அன்று ஹைதராபாத்தில், ஆந்திர மாநில முதல்வரிடம் கண்டலேறு நீர்த்தேக்கத்திலிருந்து சென்னை மாநகருக்குக் குடிநீர் வழங்குவதற்காக நீரை அளிக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டபொழுது, ஆந்திர அரசு பாலாற்றின் குறுக்கே அணைகட்டுவது குறித்து தமிழக மக்களின் அச்சத்தை எடுத்துரைத்தது. பேச்சுவார்த்தையின்பொழுது மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர், தமிழக மக்களின் நலனுக்குக் கேடு விளைவிக்கும்படியும், சட்டத்திற்குப் புறம்பாகவும் எந்தவொரு நடவடிக்கையையும் ஆந்திர அரசு மேற்கொள்ளாது என்று உறுதியளித்துள்ளார்.

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் 1-2-2007 அன்று மாண்புமிகு ஆந்திர முதல்வருக்கு இப்பொருள் குறித்துக் கடிதம் அனுப்பியுள்ளார். இதற்கு மாண்புமிகு ஆந்திர முதலமைச்சர் அவரது மறுமொழியாக 5-2-2007ஆம் நாளிட்ட கடிதத்தில் இத்திட்டத்தின் விவரங்கள் தமிழ்நாடு அரசுக்கு அனுப்பி வைக்கப்பட்டு, தமிழ்நாடு அரசின் கருத்தினை கேட்டறிந்த பிறகே திட்டத்திற்கான மேல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்துள்ளார்.

## 17. பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தம் மறு ஆய்வு

தமிழ்நாடு மற்றும் கேரளா ஆகிய இரு மாநிலங்களும் ஆனைமலையாறு, நீராறு, சோலையாறு, பரம்பிக்குளம், பாலாறு, ஆழியாறு மற்றும் இவற்றில் இணையும் ஆறுகளின் நீரை மின்சாரம் தயாரிக்கவும், பாசனத்திற்கும், குடிநீர் விநியோகத்திற்கும், தொழிற்சாலைகளுக்கும் இரு மாநிலங்களும் பயன்படுத்த இவ்விரு அரசுகளுக்கிடையே 9-11-1958 முதல் செயல்படுத்தக்கூடிய ஓர் ஒப்பந்தம் 29-5-1970-ல் கையெழுத்தானது. ஒப்பந்த விதிகளின்படி 9-11-1958 முதல் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகு அக்கால அனுபவத்தின் அடிப்படையில் இருசாரார் ஒப்புதலின் பேரில் ஒப்பந்தம் ஒவ்வொரு 30 ஆண்டுகளுக்குப் பிறகு பரிசீலனைக்குட்பட்டது. இந்த ஒப்பந்தம் 9-11-1988-ல் மறு ஆய்வு செய்யப்படவேண்டும்.

இதன்படி இரு அரசுகளும் 21-9-1989 அன்று தங்களது ஆவணங்களைப் பரிமாற்றிக்கொண்டு மாநிலங்களுக்கிடையே பல முறை பேச்சுவார்த்தைகள் நடத்தின. பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தத்தை ஆய்வு செய்து ஒரு விவரமான அறிக்கை தயாரிக்க இரு

மாநில அரசு அலுவலர்களைக்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டது. இக்குழு திருவனந்தபுரம் மற்றும் அட்டகட்டி ஆகிய இடங்களில் கூடிப் பேசியபோதிலும் எந்த முடிவுக்கும் வர இயலவில்லை.

சென்னையில் 10-6-2002 அன்று நடந்த இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் பரம்பிக்குளம்-ஆழியாறு ஒப்பந்தத்தினை ஆய்வு செய்து, எங்கெல்லாம் திருத்தங்கள் செய்ய வேண்டும் என்பதை கண்டறிய இரு மாநிலப் பொறியாளர்கள் அடங்கிய குழுவினை அமைப்பது என்று முடிவெடுக்கப்பட்டது. அவ்வாறே குழு அமைக்கப்பட்டு, ஆய்வு அறிக்கையினை அவரவர் மாநில அரசுக்கு அனுப்பியது.

தொழில்நுட்பக் குழுவின் அறிக்கை 10-11-2003-ல் சென்னையிலும் 4-1-2004 அன்று திருவனந்தபுரத்திலும் இரு மாநில அமைச்சர்கள் அளவிலான கூட்டத்தில் விவாதிக்கப்பட்டது. மேலும், ஒப்பந்தத்தில் மாற்றம் செய்யப்பட வேண்டிய இனங்களில் மாநிலங்களுக்கிடையே இருந்த கருத்து வேற்றுமைகளின் இடைவெளி பெருமளவில் குறைக்கப்பட்டது.

தமிழக அரசு பரம்பிக்குளம்-ஆழியாறு திட்ட ஒப்பந்தத்தின் முதல் ஆய்வினை முடிக்கத் தொடர்ந்து கேரள அரசை வலியுறுத்தும்.

## 18. முல்லை பெரியாறு அணையின் நீர்மட்டத்தை உயர்த்துதல்

உச்ச நீதிமன்றம் 27-2-2006 தேதியிட்ட ஆணையில், தமிழக அரசு முல்லை பெரியாறு அணையில் முதற்கட்டமாக தற்காலிகமாகக் குறைக்கப்பட்ட 136 அடி நீர்மட்டத்திலிருந்து 142 அடி வரை உயர்த்த அனுமதி அளித்துள்ளது. மேலும், தமிழக அரசு பலப்படுத்தும் பணிகளை மேற்கொள்ளவும் அனுமதி அளித்துள்ளது. பலப்படுத்தும் பணிகளை நிறைவேற்றுவதற்கு கேரள அரசு மற்றும் அதன் அலுவலர்கள் தமிழக அரசிற்கு ஒத்துழைக்குமாறும், தமிழக அரசு மேற்கொள்ள இருக்கும் பலப்படுத்தும் பணிகளை நிறைவேற்றுவதற்கு கேரள அரசு மற்றும் அதன் அலுவலர்கள் தடுத்து நிறுத்துவதற்குக் காரணமாக இருக்கக் கூடாது என்றும் ஆணையிட்டுள்ளது. மேலும் பலப்படுத்தும் பணிகள் மத்திய நீர்க் குழுமம் திருப்திப்படும் நிலையில் முடிவுற்றபின் அணையின் பாதுகாப்பினைக் கருத்தில்கொண்டு அணையில் உச்சமட்ட நீர் அளவான 152 அடி வரை நீரைத் தேக்குவதற்குத் தனிப்பட்ட வல்லுநர்கள் ஆய்வு செய்வார்கள் எனவும் அந்தத் தீர்ப்பில் குறிப்பிடப்பட்டுள்ளது.



உச்ச நீதிமன்றம் தீர்ப்பு வழங்கியவுடன், கேரள அரசு 15-3-2006 அன்று அதன் கேரள பாசன மற்றும் நீர்ப் பாதுகாப்புச் சட்டம் 2003-க்குத் திருத்தங்களை மேற்கொண்டது. அதன்படி ஏனைய இனங்களுடன் முல்லை பெரியாறு அணையில் முழு நீர்மட்டம் 136 அடி என நிர்ணயம் செய்யப்பட்டுள்ளது. உச்ச நீதிமன்ற ஆணையை நிறைவேற்றுவதைத் தடுக்க வேண்டி, மேற்குறிப்பிட்டுள்ள திருத்திய சட்டத்தைக் கேரள அரசு இயற்றியது. கேரளச் சட்டமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட கேரள பாசனம் மற்றும் நீர்ப் பாதுகாப்புச் சட்டத் திருத்தம், 2006 அரசியல் சாசன சட்டப்படி செல்லத்தக்கதல்ல எனவும், இந்தத் திருத்திய சட்டம் பெரியாறு அணையினைக் கட்டுப்படுத்தாது எனவும் உத்தரவு பிறப்பிக்க தமிழ்நாடு அரசு உச்ச நீதிமன்றத்தைக் கோரியுள்ளது.

உரிமையியல் வழக்குடன் தொடரப்பட்ட இடைக்கால மனுவில் மேற்படி சட்டத்தைச் செயல்படுத்துவதை முல்லைப் பெரியாறு அணையைப் பொறுத்தமட்டில் நிறுத்தி வைப்பு ஆணை வழங்கவும், தமிழக அரசு நீர்மட்டத்தை 142 அடி வரை உயர்த்துவதற்கும் 27-2-2006 தேதியிட்ட உச்ச நீதிமன்ற ஆணைப்படி பலப்படுத்தும் பணிகளை நிறைவேற்றுவதற்குக் கேரள அரசு குறுக்கீடு மற்றும் தடை செய்வதைத் தடுத்து நிறுத்துமாறும் உத்தரவு வழங்கக் கோரியுள்ளது.

உச்ச நீதிமன்றம் 25-9-2006 அன்று இரு மாநிலங்களும் பிரச்சினையை முடியுமானால் பேச்சுவார்த்தைமூலம் தீர்த்துக்கொள்ள முயற்சியினைத் தனியாகவோ அல்லது மத்திய அரசின் தலையீட்டுடனோ மேற்கொள்ளுமாறு தெரிவித்தது. 23-11-2006 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரால் கூட்டப்பட்ட அனைத்துக் கட்சியினர் கூட்டத்தில், நல்லெண்ண நடவடிக்கையின் அடிப்படையில் தமிழக அரசு, கேரள அரசுடன், மத்திய அரசின் முன்னிலையில் பேச்சு வார்த்தை மேற்கொள்வது எனத் தீர்மானிக்கப்பட்டது.

உச்ச நீதிமன்றம் விரும்பியபடி, 29-11-2006 அன்று புது டில்லியில் மத்திய நீர் வள அமைச்சர் முன்னிலையில் தமிழக மற்றும் கேரள முதலமைச்சர்கள் மட்டத்திலும், அதன் தொடர்ச்சியாக 18-12-2006 அன்று இரு மாநிலப் பாசன அமைச்சர்கள் மட்டத்திலும் கூட்டங்கள் நடைபெற்றன.

நடைபெற்ற பேச்சுவார்த்தைகளில் பிரச்சினைக்குத் தீர்வு ஏற்படவில்லை. எனவே, தமிழக அரசு 25-9-2006-ல் உச்ச நீதிமன்றம் கருத்துத் தெரிவித்தபின் ஏற்பட்ட நிகழ்வுகளை விவரித்து தமிழகத்திற்கு

[2007 ஏப்ரல் 4

நியாயம் கிடைக்க வேண்டி துணை மனுவினை (Supplementary Affidavit) தமிழக அரசு தாக்கல் செய்துள்ளது. இந்த வழக்கு உச்ச நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது.

## 19. பாண்டியாறு–புன்னம்புழா திட்டம்

இரு மாநிலங்களுக்கிடையே ஓடும் நதியான பாண்டியாறு-புன்னம்புழா, தமிழ்நாட்டில் தோன்றி கேரள மாநிலத்தில் உள்ள சாளியாற்றில் கலக்கிறது. மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளான பாண்டியாறு-புன்னம்புழா நீலகிரி மலையிலுள்ள உயர்ந்த சிகரங்களில் தோன்றி கூடலூர் நகரத்திற்கு 5 கி.மீ. மேற்கே இணைகின்றது. இந்த இணைப்புக்குக்கீழ் இந்த ஆறு புன்னம்புழா என்று அழைக்கப்படுகிறது. இந்த ஆறு கேரள மாநிலத்தில் நீலாம்பூர் அருகே சாளியாற்றுடன் கூடுகிறது. கடைசியாக இந்த ஆறு பேபூர் என்ற இடத்தில் அரபிக் கடலில் கலக்கிறது. இந்தத் திட்டத்திற்கான தளம் ஊட்டி-மைசூர் நெடுஞ்சாலையில் அமைக்கப்பட உள்ளது.

தமிழ்நாடு மற்றும் கேரள மாநிலங்கள் 1965 ஆம் ஆண்டு இணைந்து சம்மதித்தபடி பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டம் மேற்கு நோக்கிப் பாயும் பாண்டியாறு-புன்னம்புழா ஆறுகளின் 171.38 சதுர கிலோ மீட்டர் (66.20 ச.மைல்) பரப்புடைய நீர்ப்பிடிப்பிலிருந்து கிடைக்கப்பெறும் சராசரி 14 டி.எம்.சி. தண்ணீரை 500.50 மீ. (1642 அடி) உயரத்திலிருந்து கிடைக்கும் நீர் விசையைப் பயன்படுத்தி முதல் கட்டமாக 100 மெகாவாட் (2 x 50 மெ.வா.) மின்சாரம் தயாரிக்கவும், அடுத்த கட்டமாக 150 மெகாவாட் மின்சாரம் தயாரிக்கவும் திட்டமிடப்பட்டது. இதனால் ஆண்டுக்கு 409 மில்லியன் யூனிட் சராசரி அளவில் மின்சாரம் கிடைக்கும். திட்டக் குழுமம் இத்திட்டத்திற்கு 1968 ஒப்புதல் அளித்தது.

அதன் பிறகு கோவை மாவட்ட விவசாயிகள், பாண்டியாறு-புன்னம்புழா திட்டத்தினால் கிடைக்கும் தண்ணீரை தமிழ்நாடு பயன்பெறும் வகையில் பவானி ஆற்றின் கிளையாறான மோயாற்றில் இணைக்கும் திட்டத்தைச் செயல்படுத்துவதற்கான சாத்தியக்கூறுகளை ஆராயக் கேட்டுக்கொண்டதன் பேரில், பரிசீலனை செய்ததில், இந்தத் திட்டமும் செயல்படுத்த முடியும் என்று கண்டறியப்பட்டது. குறைந்தபட்சம் 7 டி.எம்.சி. தண்ணீரையாவது தமிழ்நாட்டிற்கு கிழக்கு முகமாகத் திருப்பிவிட விரும்பியது.



2007 ஏப்ரல் 4]

தமிழ்நாடு மின்சார வாரியம் 29-11-2006 அன்று பாண்டியாறு-புன்னம்புழா நீர் மின் திட்டத்திற்கான திருத்திய திட்ட அறிக்கையை கேரள மின்சார வாரியத்தின் இசைவுபெற அனுப்பி வைத்துள்ளது. பாண்டியாறு-புன்னம்புழாத் திட்டத்தை நிறைவேற்ற இவ்வரசு, கேரள அரசினைத் தொடர்ந்து வலியுறுத்தி வரும்.

## 20. தீபகற்ப நதிகள் இணைப்பு

1980 ஆம் ஆண்டு மத்திய அரசு, நீர் வள ஆதார அமைச்சகம் நீர் வள ஆதாரங்களை மேம்படுத்தும் நோக்கில் ஒரு தேசிய தொலைநோக்குத் திட்டத்தை தயாரித்தது. 1982 ஆம் ஆண்டு தேசிய நீர் மேம்பாட்டு முகமை என்ற அமைப்பு உருவாக்கப்பட்டது. இம்முகமை மிகை நீர் உள்ள படுகைகளிலிருந்து நீர்ப் பற்றாக்குறை உள்ள படுகைகளுக்கு மாற்றவும் மற்றும் நதிகளை இணைக்கவும் தேவையான சாத்தியக்கூறு அறிக்கைகள் தயாரித்து அதன்மேல் விரிவான ஆய்வு மேற்கொண்டு வருகின்றது.

தீபகற்ப நதிகள் இணைப்புத் திட்டத்தின்கீழ் மகாநதி மற்றும் கோதாவரிமூலம் எதிர்பார்க்கப்படுகின்ற மொத்த மிகை நீரான 925 டி.எம்.சி. நீரைப் பாசனம், குடிநீர் மற்றும் தொழிற்சாலை உபயோகம் போன்ற பல்வேறு நோக்கங்களுக்குப் பயன்படுத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. சுமார் 3 மில்லியன் எக்டேர் கூடுதலான பாசனம் மற்றும் கணிசமான கூடுதல் மின் உற்பத்தி மற்றும் பல மறைமுகமான பயன்கள் கிடைக்கும் என இம்முகமை மதிப்பீடு செய்துள்ளது.

மேற்படி திட்டத்தினால் தமிழகத்திற்கு 214 டி.எம்.சி. நீர்வரத்தும் சுமார் 7.90 லட்சம் எக்டேர் நிலங்கள் கூடுதல் பாசன வசதியும் பெறும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசு இத்திட்டத்தைப் பொதுவான குறைந்தபட்சத் திட்டத்தில் (Common Minimum Programme) சேர்த்து, தொடர்ந்து நடவடிக்கை மேற்கொண்டு வருகிறது. இத்திட்டம் இந்த நாட்டின் ஒருங்கிணைக்கப்பட்ட நீர் வள மேலாண்மைக்கு இன்றியமையாததால், இத்திட்டம் தேசியத் திட்டமாகக் கருதப்பட வேண்டும்.

தமிழ்நாட்டிற்குக் கிடைக்கக்கூடிய நீர்வரத்தை அதிகரிப்பது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்துள்ளது. மேலும், நதிகள் இணைப்புத் திட்டத்தில் அணைகள் உருவாக்குவது ஒரு பகுதியாக இருப்பதால் மகாநதி ஆற்றின் மணிபத்ரா அணை மற்றும் கோதாவரி ஆற்றில்

போலவரம் அணை கட்டுதல்போன்றவற்றிற்கு உச்ச முன்னுரிமை அளித்து அவற்றைச் செயற்படுத்தலாம் என்ற கருத்தையும் தமிழ்நாடு தெரிவித்துள்ளது.

தேசிய தொலைநோக்குத் திட்டத்தின்கீழ் தீபகற்ப நதிகள் இணைக்கும் திட்டத்தை அதன் முக்கியத்துவம் மற்றும் அவசரம் கருதி பாரதப் பிரதமர் தலைமையில் சம்பந்தப்பட்ட அனைத்து மாநில முதலமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்தி திட்டத்தைச் செயல்படுத்தலாம் என்ற உறுதியான நோக்கத்துடன் தமிழ்நாடு உள்ளது. அதன்படி சம்பந்தப்பட்ட முதலமைச்சர்களுடன் பேச்சுவார்த்தை நடத்த கூட்டத்தைக் கூட்டுமாறு தமிழ்நாடு வேண்டுகோள் விடுத்துள்ளது.

மாண்புமிகு தமிழக முதல்வர் புது டில்லியில் 9-12-2006 அன்று நடைபெற்ற 52-வது தேசிய நீர் மேம்பாட்டு மன்றக் கூட்டத்திலும், துணைத் தலைவர், மத்திய திட்டக் குழுவிடம் புது டில்லியில் 5-2-2007 அன்று கலந்துரையாடும்போதும் நீர் வள ஆதாரத்தைப் பெருக்குவதற்குத் தீபகற்ப நதிகளை இணைப்பது குறித்தும், அதன் அவசரத்தை வலியுறுத்தியும், வேளாண்மைத் துறைக்குப் புத்துயிர் அளிக்கவும் நடப்பு 2007-2008 ஆம் ஆண்டில் தொடங்கும் XI-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் நதிகள் இணைப்புத் திட்டத்திற்கு நிதி ஒதுக்கீடு செய்யுமாறு கேட்டுக்கொண்டுள்ளார்.

மத்திய அரசின் நீர் வள அமைச்சகத்திற்குத் தமிழக அரசு 28-02-2007 ஆம் நாளிட்ட கடிதத்தில், இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு XI-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தேவையான நிதி ஒதுக்கீடு செய்யவும் மத்திய திட்டக் குழுவிற்கு எடுத்துச் செல்லுமாறு கேட்டுக்கொண்டுள்ளது.

## 21. பம்பா—அச்சன் கோயில்—வைப்பாறு இணைப்பு

மத்திய அரசினால் தயாரிக்கப்பட்ட தேசிய தொலை நோக்குத் திட்டத்தின் ஒரு பகுதியான தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டுத் திட்டத்தில் தீபகற்ப ஆறுகள் இணைப்பிற்கான ஆய்வு மற்றும் திட்ட அறிக்கைகள் தயாரிக்கும் பணி தேசிய நீர் மேம்பாட்டு முகமையிடம் ஒப்படைக்கப்பட்டது. கேரளாவில் மேற்கு நோக்கிப் பாயும் ஆறுகளின் நீரைத் தமிழ்நாட்டிற்கு திருப்புவது என்பது தீபகற்ப ஆறுகள் மேம்பாட்டின் ஒரு பகுதியாகும்.

தேசிய நீர் மேம்பாட்டு முகமை, பம்பா-அச்சன் கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்தை, கேரளாவின் பம்பா-அச்சன்கோயில் ஆறுகளின் மிகை நீரைத் தமிழ்நாட்டிற்கு திருப்புவதற்கு ஏதுவாக உருவாக்கியுள்ளது. இத்திட்டத்தில் தமிழ்நாட்டின் சங்கரன்கோயில், கோவில்பட்டி, சிவகிரி, ஸ்ரீவில்லிபுத்தூர், இராசபாளையம், சாத்தூர் மற்றும் தென்காசி வட்டங்களில் சுமார் 91,400 எக்டேர் நிலங்கள் பாசன வசதி பெறவும், அதற்காக 22 டி.எம்.சி. நீரைத் திருப்பவும் வகை செய்யப்பட்டுள்ளது. தமிழ்நாட்டிற்குப் பாசன வசதி தருவது தவிர அதிகபட்சமாக 500 மெகாவாட் மின் உற்பத்தி செய்யவும் இத்திட்டம் வகை செய்கிறது. தேசிய நீர் மேம்பாட்டு முகமையின் ஆய்வுப்படி இந்த 22 டி.எம்.சி. நீரானது பம்பா-அச்சன் கோயில் ஆறுகளில் கிடைக்கும் மிகை நீரில் சுமார் 20 விழுக்காடு மட்டுமே ஆகும்.





தமிழக அரசு இத்திட்டத்திற்கு ஒப்புதலை வழங்கியுள்ளது. கேரள அரசு, பம்பா-அச்சன் கோயில்-வைப்பாறு இணைப்புத் திட்டத்திற்கு ஆதரவாக இல்லை. தமிழக முதல்வர் 5-9-2006 தேதியிட்ட கடிதத்தில் பம்பா-அச்சன் கோயில்-வைப்பாறு திட்டத்தினால் இரு மாநிலங்களும் பயன்பெறும் என்பதால் கேரள அரசு இசைவு தெரிவிக்க இணங்கச் செய்யுமாறு பிரதமர் அவர்களை கேட்டுக்கொண்டுள்ளார். தமிழக அரசு, இத்திட்டத்தினைச் செயல்படுத்திட மத்திய அரசிடம் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறது.

### நீர் வள ஆதாரத் துறையின் பன்மாநிலப் பிரிவை விரிவுபடுத்துதல்

காவிரி தவிர முல்லைப் பெரியாறு, பாலாறு, பரம்பிக்குளம்-ஆழியாறு போன்ற பல்வேறு பன்மாநிலப் பிரச்சினைகள் தொடர்ந்து எழுவதால், இந்த அரசு நீர் வள ஆதாரத் துறையில் பன்மாநில நதி நீர்ப் பிரிவை மேம்படுத்தத் திட்டமிட்டுள்ளது. மேலும் புது டெல்லியில் இயங்கி வரும் தொடர்பு அலுவலகம், பன்மாநிலப் பிரச்சினைகள்மீது நடவடிக்கை மேற்கொள்ளவும், அரசு மற்றும் சட்ட வல்லுநர்களுக்குத் தகுந்த உதவிகள் வழங்கவும், அரசு மற்றும் சட்ட அமைப்புகள் முன்பும் பிரச்சினைகளை வகைப்படுத்த தொடர்ந்து செயல்படுத்தலாம் என்றும் திட்டமிட்டுள்ளது.

## 22. அணைப் பாதுகாப்பு

உலக வங்கி நிதி உதவியுடன், அணை புனரமைத்தல் மற்றும் மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் 22 அணைகளில் புனரமைப்புப் பணிகள் மேற்கொள்ளக் கருதப்பட்டுள்ளது. அதற்காக ரூ.70.90 கோடி செலவிலான திட்ட அறிக்கை ஒன்று மத்திய நீர் ஆணையத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. உலக வங்கியின் தொழில்நுட்ப வல்லுநர்கள்

[2007 ஏப்ரல் 4

கீழ்க்கண்ட ஆறு அணைகளை இந்திட்டத்தின் முதலாம் ஆண்டில் புனரமைக்கத் தெரிவு செய்துள்ளனர்:

1. கோமுகி 2. மணிமுத்தாறு 3. பேச்சிப்பாறை 4. அமராவதி 5. பரம்பிக்குளம் 6. வைகை

**பங்கேற்பு பாசன மேலாண்மைத் திட்டம்**

பங்கேற்பு பாசன மேலாண்மைத் திட்டம், அரசினால் பராமரிக்கப்பட்டு வரும் பாசன அமைப்புகளில் நீர்ப் பகிர்வு அமைப்புகளின் இயக்கம் மற்றும் பராமரிப்புப் பணிகளில் விவசாயிகளின் பங்கேற்பை ஊக்குவிப்பதை நோக்கமாகக் கொண்டிருக்கிறது. விவசாயிகளுக்கு சட்டரீதியாக அதிகாரம் வழங்கும் பொருட்டு தமிழக அரசு 2000 ஆம் ஆண்டு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டத்தை இயற்றியுள்ளது. இச்சட்டம் 20 மாவட்டங்களில் அமலுக்குக் கொண்டு வரப்பட்டு சுமார் 6.00 இலட்சம் எக்டேர் பாசனப் பகுதிகளில் 1,566 நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்கள் அமைக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டுள்ளது.

நீர் வள நில வளத் திட்டத்தின் (IAMWARM) மூலம் மேலும் 6.17 இலட்சம் எக்டேர் பாசனப் பகுதிகளுக்கு விவசாயிகள் பங்கேற்பு பாசன மேலாண்மை முறையைச் செயல்படுத்தக் கருதப்பட்டுள்ளது. மேலும், விவசாயிகள் மத்தியில் இச்சட்டம் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும் 63 துணை-வடிநிலப் பகுதிகளில் சுமார் 2,500 நீரைப் பயன்படுத்துவோர் சங்கங்களுக்குத் தேர்தல் நடத்தி அடிப்படைக் கட்டமைப்பு வசதிகள் செய்து கொடுக்கவும் கருதப்பட்டுள்ளது. பங்கேற்பு பாசன மேலாண்மை தொடர்பான நடவடிக்கைகள் குறித்து அடிப்படைத் தகவல் தொகுப்பு மென்பொருள் உருவாக்குதல், தனியாக ஓர் இணையதளம் உருவாக்குதல் மற்றும் கால முறை பங்கேற்பு பாசன மேலாண்மை நடவடிக்கைகள் குறித்த செய்திக் கடிதங்கள் வெளியிடுதல் ஆகியவை உட்பட்ட தேவையான ஆவணங்களைத் தயாரிக்கும் பணியை மேற்கொள்ளவும் கருதப்பட்டுள்ளது.

**விவசாயிகள் அமைப்பு மற்றும் பாசன அமைப்பின் இயக்கம் மற்றும் பராமரிப்பை ஒப்படைத்தல்**

விவசாயிகளின் சங்கங்களை அமைப்பதிலும், பாசன மேலாண்மையில் பங்கேற்கவும் விவசாயிகளுக்கு உதவி செய்வதற்காக அவர்களின் பயனுக்காக கீழ்க்காணும் பயிற்சிகள் அளிக்கப்படுகின்றன:



2007 ஏப்ரல் 4]

(1) விவசாயிகள் அமைப்பை ஏற்படுத்துதல் மற்றும் செயல்பாடுகள்.

(2) தமிழ்நாடு விவசாயிகள் நீர்ப்பாசன அமைப்பு முறை மேலாண்மைச் சட்டம் பற்றிய விழிப்புணர்வுத் திட்டம்.

(3) பாசன மேலாண்மை குறித்த பயிற்சி.

**23. மாநில நிலத்தடி மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக் குறிப்பு மையம்**

குடிநீர்த் தேவைகள், தொழிற்சாலைத் தேவைகள் மற்றும் வேளாண் வளர்ச்சிக்கு நிலத்தடி நீர் வளம் ஒரு முக்கியமான ஆதாரமாகும். பெரும்பாலான மேற்பரப்பு நீர் வள ஆதாரங்களைப் பயன்படுத்திவிட்ட நிலையில், தமிழ்நாடு, தற்பொழுது உள்ள ஒரே மாற்று ஆதாரமான நிலத்தடி நீரைத் தனது தேவைக்குப் பயன்படுத்தும் நிலையிலுள்ளது.

நிலத்தடி நீர் புதுப்பிக்கக்கூடிய ஓர் இயற்கை வளமாக இருந்த போதிலும், நீரின் இருப்பும், அவற்றை எடுத்துச் செல்வதும், வானிலை மற்றும் நிலவியல் சூழ்நிலைகளைப் பொறுத்தே அமையும். மேலும், இந்தச் சூழல் தமிழ்நாடு முழுதும் ஒரே சீராக இருக்காது. இதன் காரணமாக தமிழ்நாட்டில் நிலத்தடி நீர், அளவிலும், தரத்திலும் சீரான பகிர்வுடன் இருக்க சாத்தியமில்லை. எனவே, நிலத்தடி நீர் அளவு தொடர்ந்து கண்காணிக்கப்பட வேண்டியுள்ளது.

மாநில நில மற்றும் மேற்பரப்பு நீர் வள ஆதார விவரக் குறிப்பு மையம், நீரியல் சார்ந்த நில வள ஆதாரங்களைத் தனது விரிவான ஆய்வுகள்மூலம் ஒரு வளமான அறிவியல்பூர்வமான நிலத்தடி நீர் விவரங்களை பலதரப்பட்ட பயனீட்டாளர்களின் பயனுக்காக உருவாக்கி வருகிறது.

இதைத் தவிர, 2006-2007 ஆம் ஆண்டில் நிலத்தடி நீர் வளத்தை மதிப்பீடு செய்யும் வகையில் ரூ.68.85 இலட்சம் செலவில் சிறிய நீர்ப் பிரிவு முகடுகள் அடிப்படையில் கண்டறிய வேலூர், விழுப்புரம் மற்றும் திண்டுக்கல் மாவட்டங்களில் உள்ள ஒன்றியங்களில் பணிகளை மேற்கொண்டுள்ளது.

**தமிழ்நாடு 2003 ஆம் ஆண்டு நிலத்தடி நீர் (வளர்ச்சி மற்றும் மேலாண்மை) சட்டம்**

மிகவும் முக்கியமானதும், அரிதாகக் கிடைப்பதுமான நிலத்தடி நீர் வளத்தைப் பாதுகாக்கவும், தகுந்த முறையில் நிர்வகிக்கவும் தமிழ்நாடு

[2007 ஏப்ரல் 4

2003 ஆம் ஆண்டு நிலத்தடி நீர் (மேம்பாடு மற்றும் மேலாண்மை) சட்டம் இயற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தை நிருவகிப்பதற்காக நிலத்தடி நீர் ஆணையம் ஏற்படுத்தப்படும். இச்சட்டத்தைத் திறம்படச் செயல்படுத்துவதற்குத் தேவையான விதிகளை வகுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

## 24. பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையம் (Irrigation Management Training Institute)

அமெரிக்க நாட்டு நிதியுதவியுடன் இந்தியாவில் ஏற்படுத்தப்பட்ட 11 பயிற்சி நிலையங்களில் திருச்சி, துவாக்குடியில் அமைந்துள்ள பாசன மேலாண்மைப்பயிற்சி நிலையமும் ஒன்றாகும். இந்நிலையம் 1984 ஆம் ஆண்டு தொடங்கப்பட்டது. தற்போது மாநில அரசு மானியமாக வழங்கும் நிதியைக்கொண்டு இப்பயிற்சி மையம் செயல்படுகிறது. இந்நிலையத்தில் விவசாயிகள், நீர் வள ஆதார அமைப்பு, வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் துறையில் உள்ள களப் பணியாளர்கள் மற்றும் அலுவலர்களுக்குப் பாசன மேலாண்மை அறிவை மேம்படுத்தும் வகையிலும், அவர்களின் திறமையை நன்றாகப் பயன்படுத்திக்கொள்ளும் வகையிலும் கீழ்க்காணும் துறைகளில் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

**பயிற்சிகள்**

(1) பாசன மேலாண்மை, பாசன வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல் ஆகியவற்றைக் கணினிமூலம் மேற்கொள்ளுதல்.

(2) பாசனத்தில் உள்ள மேலாண்மை அம்சங்கள்.

(3) பாசனப் பகுதி மேம்பாடு.

(4) மழை நீர் சேகரிப்பு.

(5) வேளாண்மை குறித்த விரிவான கண்ணோட்டம்.

(6) பாசனக் கட்டுமான அமைப்புகளில் தரத்தை நிலைநிறுத்தல்.

(7) நீர் அளவு முறைகள்.

(8) மேலாண்மைத் திறன் வளர்ப்புக் குழு பயிற்சி.

(9) நீர்ப்பாசன ஏற்பாட்டு முறைக்கு அடிப்படை முன் மாதிரிப் பயிற்சி.



2007 ஏப்ரல் 4]

**பாசன வடிவமைப்பு மற்றும் திட்டமிடுதல் ஆகியவற்றைக் கணினிமூலம் செயல்படுத்துதல்**

பாசன மேலாண்மைப் பயிற்சி நிலையத்தில் முழுமையான கணினிப் பயிற்சி மையம் செயல்பட்டு வருகிறது. இதன்மூலம் நீர் வள ஆதார அமைப்பு, பொதுப் பணித் துறை, வேளாண் பொறியியல் துறை மற்றும் வேளாண் துறை ஆகியவற்றின் அலுவலர்களுக்குப் பின்வரும் கணினிப் பயிற்சிகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

(1) எம்.எஸ்.ஆபிஸ்.

(2) எம்.எஸ்.அக்ஸஸ் மற்றும் விசுவல் பேசிக்.

(3) புவியியல் அமைப்பு சார்ந்த தகவல்கள்.

(4) ஆட்டோ கேட் (AUTO CAD).

**பாசனப் பணியில் மேலாண்மை நுட்பங்கள்**

துறை அலுவலர்களின் அன்றாடச் செயல்பாடுகளை மேம்படுத்தும் வகையில் "கூட்டு முயற்சி மற்றும் தகவல் பரிமாற்றத் திறனை மேம்படுத்தல்" குறித்து பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

## 25. நீர் ஆய்வு நிறுவனம்

**நீர் வளத் திட்டமிடுதல்**

நீர் ஆய்வு நிறுவனமானது 1974-ல் நிறுவப்பட்டது. இது தொலையுணர்வு, நிலவியில் அமைப்பு விவரங்களைக்கொண்டு நீர் வள ஆதார மேலாண்மைக்கான ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது.

பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டப் படுகை, பாம்பாறு-கோட்டக்கரையாறு, அக்கினியாறு மற்றும் பரவனாறு ஆற்றுப் படுகைகளுக்கான நுண்ணிய ஆய்வுப் பணி மேற்கொள்ளப்பட்டு இவ்வாண்டில் முடிக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு மாநில நீர்க் கொள்கை**

1987 ஆம் ஆண்டு தேசிய நீர்க் கொள்கையின் அடிப்படையில் தமிழ்நாடு மாநில நீர்க் கொள்கையானது 1994 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. தேசிய நீர்க் கொள்கையானது ஏப்ரல் 2002 ஆம் ஆண்டு திருத்தப்பட்டு தேசிய நீர் வள ஆதாரக் குழுவால் ஏற்றுக்கொள்ளப்பட்டது. இதை அடிப்படையாகக்கொண்டு

[2007 ஏப்ரல் 4

தற்பொழுதுள்ள நிலைமைக்குத் தக்கவாறு தமிழ்நாடு நீர்க் கொள்கையானது 2002 ஆம் ஆண்டு தேசிய நீர்க் கொள்கைக்கேற்ப திருத்தியமைக்கப்பட்டு வருகிறது.

**நீர் வள ஆதார ஆராய்ச்சி நிதி மற்றும் ஆய்வுகள்**

உலக வங்கி நிதி உதவியுடன் செயல்படுத்தப்பட்ட நீர் வள ஆதார ஒருங்கிணைப்புத் திட்டத்தின்கீழ் 38 ஆராய்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டன. இந்த ஆய்வுப் பணிக்கு ஏற்பட்ட செலவுத் தொகையில் தமிழ்நாட்டின் பங்கான மூன்றில் ஒரு பங்குத் தொகை வங்கியில் வைப்பீடு செய்யப்பட்டது. இதன்மூலம் கிடைக்கும் வட்டித் தொகை ஆய்வுப் பணிகளை தொடர்ந்து நடத்த பயன்படுத்தப்படுகிறது.

**சிறப்பு ஆய்வுகள்**

நீர் ஆய்வு நிறுவனம், மாநிலத் திட்டக் குழுவின் நிதி உதவியுடன் கீழ்க்காணும் ஆய்வினை மேற்கொண்டு வருகின்றது.

(i) தமிழ்நாடு ஆற்றுப் படுகையில் மேற்பரப்பு நீரோட்டத்தைத் தடுத்து நிலத்தடி நீரைச் செறிவூட்டுதல்

(ii) ஒரு படுகையிலிருந்து நீரை மற்றொரு படுகைக்கு மாற்றம் செய்தல்மூலமாக ஆற்றுப் படுகையில் வெள்ளப் பெருக்கைச் சமாளித்தல்

(iii) பாசன வேளாண்மையை நவீனப்படுத்துதல்

(iv) நீர் வள ஆதார மேலாண்மைத் திட்டத்திற்காக (IAMWARM) மீதமுள்ள துணை-வடிநிலப் பகுதிகளுக்கான வரைபடங்கள் தயாரித்தல்.

**நீர் வள நில வளத் திட்டத்திற்காகக் கருத்துரு வரைபடங்கள் தயாரிக்கும் பணி.**

மேற்கூறிய திட்டத்திற்காகக் குறியீடு, ஆட்சி எல்லை, வடிகால் அமைப்பு, நிலவியல், நிலமேற்பரப்பியல், நிலப் பயன்பாடு, மண்வகை, நீர்ப்பாசன அமைப்பு; ஒன்றியங்கள்வாரியாக நில நீர் இறைக்கும் அளவு கிராம எல்லை மற்றும் சாலை வசதிகள் ஆகியவற்றினைத் தனித்தனியாகக் குறிக்கும் வரைபடங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.



2007 ஏப்ரல் 4]

**தொலையுணர்வு மற்றும் நிலவியல் அமைப்பின் செயல்பாடுகள்**

நீர் ஆய்வு நிறுவனத்திலுள்ள தொலையுணர்வுப் பிரிவானது, நீர் வள மேலாண்மைக்கான மாநிலத் தொலையுணர்வுப் பயன்பாட்டு மையமாக அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாடு மாநிலத் தொலையுணர்வுப் பயன்பாட்டு மையத்தின் முக்கியமான பணி செயற்கைக்கோள் வண்ணப்படங்கள் மற்றும் வானூர்திமூலமாக எடுக்கப்பட்ட கருப்பு வெள்ளை புகைப்படங்களிலிருந்து கணினிமூலமும், நேரடி ஆய்வுமூலமும் வெவ்வேறு கருத்துரு வரைபடங்களை வெவ்வேறு அளவுகளில் தயாரித்து அவற்றை ஒன்றன்மேல் ஒன்றாகப் பொருத்தி மேற்பரப்பு நீர் மற்றும் நில நீர் இருப்பு அளவீட்டுப் பணி, நில உபயோக ஆய்வு, விவசாய நிலங்களில் விளையும் வெவ்வேறு பயிர் வகைகளைக் கண்டறியும் ஆய்வு, தரிசு நிலத்தைக் கண்டறியும் பணி ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

நீர் ஆய்வு நிறுவனத்தில் ஆற்றுப் படுகைவாரியாக நுண் ஆய்வு மேற்கொள்வதற்கு ஏற்றவாறு இந்தத் தொலையுணர்வு மையம் செயல்பட்டு வருகிறது. அதற்காக நிலவியல், நிலப் பயன்பாடு, நீர் அளவு, நீர்ப்போக்கு, நிலமேற்பரப்பியல், மண்வகை, முறம்பின் பரிமாணம் உயர்வான இடங்களும் நிலைகளும், பெரும்பிளவுப் பாறைகள், நீர்த்தன்மை, நிலநீரியல் மற்றும் நிலமட்டம் மாதிரிபோன்ற கருத்துரு வரைபடங்களைத் தயாரித்து, ஆய்வு செய்து ஆலோசனைகளையும் வழங்குகிறது.

**நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுமம்**

மாண்புமிகு முதலமைச்சர் அவர்களைத் தலைவராகவும், நீரைப் பயன்படுத்தும் துறை/ முகவரமைப்புகளைச் சேர்ந்த 35 உறுப்பினர்களையும்கொண்டு அமைக்கப்பட்டுள்ள நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழு கிடைக்கப்பெற்றுள்ள நீர் வளங்களைப் பயன்படுத்துவது குறித்த கொள்கைகளை வகுக்கும்.

கொள்கை முடிவுகள் எடுப்பதற்காக, நீர் வளக் கட்டுப்பாடு மற்றும் ஆய்வுக் குழுவின் முன் வைக்கப்படவுள்ள செயற்குறிப்புகளைச் சரிபார்ப்பதற்கென தலைமைச் செயலாளரைத் தலைவராகக்கொண்டு, துணைக் குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளது.

## ஆற்றுப் படுகை மேலாண்மை மற்றும் மேம்பாட்டு வாரியம்

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளில் வாழும் பல இலட்சக்கணக்கான சிறிய விவசாயிகளின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காகவும், நீர் மற்றும் நில வளம் ஒருங்கிணைந்த திட்டம், வளர்ச்சிகளை மேம்படுத்தும்பொருட்டும், அதனைச் சார்ந்த துறைகள் மற்றும் பயனீட்டாளர்களின் ஈடுபாட்டுடன் "ஆற்றுப் படுகை மேம்பாட்டு வளர்ச்சி வாரியமும்" ஒரு பொதுத் தொழில்நுட்பச் செயலகமும் அமைக்கப்பட்டு, செயல்பட்டு வருகின்றன.

பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகைகளின் பல்வேறு பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க இந்த வாரியம் மூன்று முறை கூட்டப்பட்டது. வடிநில மேலாண்மைக் குழு ஒவ்வொரு ஆற்றுப் படுகைக்காகவும் இது பற்றிய பல்வேறு பிரச்சினைகளைக் குறித்து ஆய்வு செய்வதற்காக இரண்டு முறை கூட்டப்பட்டது. அடுத்த கூட்டம் இவ்வாண்டில் நடைபெற உள்ளது.

உலக வங்கியின் பரிந்துரைகளின்படி பொதுத் தொழில்நுட்பச் செயலகமானது அமைக்கப்பட்டது. இதற்கு நீர் ஆய்வு நிறுவனத்தின் தலைமைப் பொறியாளர் மற்றும் இயக்குநர் தலைவராவார். இச்செயலகம் 13 வல்லுநர்களைக்கொண்டு அமைக்கப்பட்டுள்ளது. இந்தச் செயலகம் ஏற்கெனவே அமைக்கப்பட்டுள்ள பாலாறு மற்றும் தாமிரபரணி ஆற்றுப் படுகை மற்றும் எதிர்காலத்தில் அமைக்கப்பட இருக்கும் மற்ற ஆற்றுப் படுகைகளில் ஏற்படும் பிரச்சினைகளை எதிர்கொண்டு தீர்த்து வைக்கும் பணியை மேற்கொள்ளும்.

## 26. கொதிகல ஆய்வு இயக்ககம்

பொதுவான பொருளாக மாநிலத்தால் நிர்வகிக்கப்படும் மத்தியச் சட்டமான 1923 ஆம் ஆண்டு இந்தியத் தொழிலாளர்கள் சட்டம் கொதிகலன்கள் பாதுகாப்பாக இயக்கப்படுவதையும் பொது மக்களின் உயிர், உடைமைகளுக்கும், பொதுச் சொத்துகளுக்கும் இழப்பு நேராத வண்ணம் பாதுகாப்பதற்கும் செயல்படுத்தும் சட்டமாகும். இதன் செயலாக்க அதிகாரம் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககத்தைச் சார்ந்ததாகும்.

தமிழ்நாட்டில் இப்பணியைத் தமிழ்நாடு கொதிகலன்கள் இயக்ககம் செய்து வருகின்றது. தமிழ்நாட்டில் கொதிகலன்கள் மற்றும் அதன் பாகங்களை உற்பத்தி செய்யும் பணியில் இவ்வியக்ககம் முக்கியப் பங்கு வகிக்கின்றது.



தமிழ்நாட்டில் பல்வேறு நிறுவனங்களில் இயங்கி வரும் கொதிகலன்கள் அனைத்தும் தேர்ச்சிபெற்ற பணியாளர்களாலும், தேர்ச்சிபெற்ற பொறியாளர்களாலும் இயக்கப்படுவது தொட ்பாக, 1964 ஆம் ஆண்டு தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் வி ்ள், 1965 ஆம் ஆண்டு கொதிகல இயக்கப் பொறியாளர்கள் விதிகள் ஆகிய விதிகளைச் செயல்முறைப்படுத்தும் பொறுப்பு இவ்வியக்ககத்தின் முக்கியப் பொறுப்புகளில் ஒன்றாக அமைந்துள்ளது.

தமிழ்நாடு கொதிகலப் பணியாளர் முதல் நிலை, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைத் தேர்வுகள் மற்றும் தமிழ்நாடு கொதிகல இயக்ககப் பொறியாளர்கள் தேர்வு ஆகிய தேர்வுகளை நடத்தி, அதில் தேர்ச்சிபெறும் விண்ணப்பதாரர்களுக்குச் சான்றிதழ்கள் வழங்கும் பொறுப்பினையும் இவ்வியக்ககம் மேற்கொண்டு வருகின்றது.

1950 ஆம் ஆண்டைய இந்தியக் கொதிகலன் விதிமுறைகளில் உள்ள விதிமுறைகளின்படி கொதிகலன்கள் மற்றும் அதற்குத் தேவையான பாகங்களை நல்ல தரத்துடன் வடிவமைப்பதையும் உற்பத்தி செய்வதையும் உறுதி செய்வதைத் தமிழ்நாடு கொதிகலன் இயக்ககம் மேற்கொண்டு செயற்படுத்தி வருகின்றது.

பதிவுபெறாமலும், சான்றிதழின்றியும் இயக்கப்படும் கொதிகலன்களைக் கண்டறிந்து அவற்றின் இயக்கத்தை தடை செய்யும் பணியையும் இவ்வியக்ககம் மேற்கொண்டுள்ளது.

## 27. மணல் விற்பனை

பொது மக்களுக்கு மணல் விற்பனை செய்வது தொடர்பாக நடைமுறையில் இருந்த குறைபாடுகளை நீக்கவும், அரசிற்கு ஏற்பட்டிருந்த வருமான இழப்பைத் தவிர்க்கவும், நிலத்தடி நீர் வளம் மற்றும் சுற்றுப்புறச் சூழ்நிலையை பாதுகாக்கவும், பெருகி வரும் மணல் தேவையைப் பூர்த்தி செய்யவும், ஆற்றுப் படுகை பொதுப் பணித் துறையின் பராமரிப்பில் இருப்பதால் இத்துறைமூலம் மணல் எடுக்கும் பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள அரசு முடிவெடுத்துள்ளது. நாளுக்கு நாள் பெருகி வரும் கட்டுமானப் பணிகளால் மணல் தேவை அதிகரித்து வருவதால் பொதுப் பணித் துறையால் தெரிவு செய்யப்பட்ட மணல் எடுக்கும் அமைப்பிற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் மாவட்ட ஆட்சியருக்கு வழங்கப்பட்டுள்ளது.

கட்டுமானப் பணிகளுக்கான மணல் தேவைகளைப் பூர்த்தி செய்யத் தற்சமயம் 89 இடங்களிலிருந்து மணல் எடுக்கப்பட்டு மாதம் ஒன்றுக்கு சராசரியாக சுமார் 1,70,000 லோடுகள் மணல் வழங்கப்பட்டு வருகிறது. இத்துறைமூலமாக ஒரு லோடு மணல் ரூ.626/-க்கு (வரிகள் உட்பட) வழங்கப்படுகிறது. 3-10-2003-ல் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்ட நாளிலிருந்து இதுவரை ரூபாய் 446.31 கோடி மணல் விற்பனைமூலம் வருவாய் கிடைத்துள்ளது. இதன்மூலமாக 2006-07 ஆம் ஆண்டில் அரசுக்கு ரூ.128.11 கோடி வருவாய் கிடைத்துள்ளது.

உயிரின வாழ்க்கைச் சூழலுக்கும், இயற்கைச் சூழலுக்கும் ஏற்பட்டு வரும் இழப்புகளைக் கருத்தில்கொண்டும் மணலைக் கள்ளத்தனமாக தோண்டி எடுத்தல், அதனைக் கடத்துதல், பதுக்கி வைத்தல்போன்ற செயல்களைச் செய்யும் நபர்களைப் பிடிக்கச் செல்லும்பொழுது அதிகாரிகளுக்கு ஏற்படும் உயிரிழப்புகளையும் மனதில்கொண்டும், அரசுக்கு ஏற்படும் வருவாய் இழப்பினையும் கருத்திற்கொண்டும், முறையற்ற வகையில் மணல் எடுப்பதைத் தடுக்கும் நோக்குடன், தமிழ்நாடு 1982 ஆம் ஆண்டு கள்ளச் சாராயக்காரர்கள், மருந்துச் சரக்குக் குற்றவாளிகள், வனக் குற்றவாளிகள், குண்டர்கள், விபசாரத் தொழில் குற்றவாளிகள், மணல் குற்றவாளிகள், குடிசைப் பகுதி நில ஆக்கிரமிப்பாளர்கள் மற்றும் காணொளித் திருடர்கள் ஆகியோரின் அபாயகரமான நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின்கீழ், மணல் திருட்டும் கொண்டு வரப்பட்டுள்ளது.



## இணைப்பு III

*(174 ஆம் பக்கத்தில் உள்ள அடிக்குறிப்பைக் காண்க.)*

## பொதுப் பணித் துறை

## அறிவிப்புகள்—2007–2008

### 1. தமிழகத்தில் உள்ள நதிகள் இணைப்பு

மத்திய அரசின் தேசிய நீர் மேம்பாட்டு முகமை (NWDA), தீபகற்ப நதிகளான மகாநதி-கோதாவரி-கிருஷ்ணா-பெண்ணையாறு-காவிரி-வைகை-குண்டாறு நதிகள் இணைப்புத் திட்டம் பற்றி ஆய்வுகளைத் தொடர்ந்து மேற்கொண்டுள்ளது. இத்திட்டம் செயலாக்கப்படுவதற்குப் பல ஆண்டுகள் ஆகும். எனவே, தமிழகத்தில் ஓடும் ஆறுகளில் உள்ள நீர்ப் பற்றாக்குறை நிலைமையினைக் கருத்தில்கொண்டு இங்குள்ள சில ஆறுகளை இணைப்பதற்கான சாத்தியக்கூறுகளை ஆராய்ந்து திட்டங்கள் மேற்கொள்ள இவ்வரசு முடிவு செய்துள்ளது. இதன் முதற்கட்டமாக கோரையாற்றில் இருந்து அக்கினியாறு வரை புதிய கால்வாய் அமைக்கும் திட்டம், பெண்ணையாற்றை செய்யாற்றுடன் இணைக்கும் திட்டம், தாமிரபரணி வெள்ள நீரை நம்பியாறு மற்றும் கருமேனியாறு வரை எடுத்துச் செல்லும் திட்டம் ஆகியவை ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டுள்ளன.

இத்திட்டங்கள்மூலம் காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருச்சிராப்பள்ளி, புதுக்கோட்டை, திருநெல்வேலி மற்றும் தூத்துக்குடி மாவட்டங்கள் பயன்பெறும்.

### 2. நபார்டு வங்கியின் ஒப்புதல்பெறப்பட்ட புதிய திட்டங்கள்

1. ரூபாய் 10.30 கோடி மதிப்பீட்டில் வேலூர் மாவட்டம், வாணியம்பாடி வட்டத்தில் உள்ள விண்ணமங்கலம் கிராமத்தில் வெள்ளக்கால் கானாற்றின் குறுக்கே நீர்த்தேக்கம் அமைக்கும் திட்டம்.

2. ரூபாய் 68 இலட்சம் மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டம், ஊத்தங்கரை வட்டத்தில் ஜவ்வாது மலையிலிருந்து அங்குத்தி சுனை வழியாக நீர் வழங்கும் கால்வாயை மேம்படுத்தும் திட்டம்.

3. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் தருமபுரி மாவட்டம், அரூர் வட்டம், வேதாரம்பட்டி கிராமத்தில் உள்ள வேதாரம்பட்டி குளத்தை விரிவாக்கும் திட்டம்.

[2007 ஏப்ரல் 4

4. ரூபாய் 78 இலட்சம் மதிப்பீட்டில், கரூர் மாவட்டம், அரவக்குறிச்சி வட்டம், நாகம்பள்ளி கிராமத்தில் குடகனாறு ஆற்றின் குறுக்கே உள்ள தடுப்பணையினை மேம்படுத்தும் திட்டம்.

5. ரூபாய் 1.98 கோடி மதிப்பீட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், ரெட்டியாபட்டியில் இருந்து கரிகாலி உத்தண்டாம்பட்டி வரையில் உள்ள வழங்கு கால்வாய் மற்றும் உத்திராட்சக் கோம்பையில் உள்ள அணைக்கட்டுகளைச் சீரமைக்கும் திட்டம்.

6. ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் திருவள்ளூர் மாவட்டம், பள்ளிப்பட்டு வட்டம், கிருஷ்ணகுப்பம் கிராமத்தில் புதிய குட்டை அமைக்கும் திட்டம்.

7. ரூபாய் 5.54 கோடி மதிப்பீட்டில் இராமநாதபுரம் மாவட்டம், திருவாடனை வட்டத்தில், ராசசிங்கமங்கலம் கிராமத்தில் உள்ள ஆர்.எஸ். மங்கலம் ஏரியைப் புனரமைக்கும் திட்டம்.

## 3. செயற்கை முறையில் நிலத்தடி நீர் வளத்தை மேம்படுத்தும் திட்டங்கள்

தமிழ்நாட்டில் பாசன நிலங்கள் சுமார் 20 முதல் 60 விழுக்காடு வரை நிலத்தடி நீரையே பயன்படுத்துகின்றன. இதனால் பல மாவட்டங்களில் நிலத்தடி நீரின் மட்டம் குறைந்து அபாயகரமான நிலையை எட்டி உள்ளது.

எனவே, செயற்கை முறையில் சிறிய குட்டைகளில் நீரைத் தேக்கி நீர் வளத்தை மேம்படுத்த கோயம்புத்தூர் மாவட்டத்தில் 5 குட்டைகள் ரூபாய் 93 இலட்சத்திற்கும், ஈரோடு மாவட்டத்தில் 3 குட்டைகள் ரூபாய் 63 இலட்சத்திற்கும் நாமக்கல் மாவட்டத்தில் ஒரு குட்டை ரூபாய் 12 இலட்சத்திற்கும், வேலூர் மாவட்டத்தில் 11 குட்டைகள் ரூபாய் 1.05 கோடிக்கும், ஆக மொத்தம் 20 குட்டைகள் ரூபாய் 2.72 கோடிக்கு நபார்டு வங்கியின் நிதி உதவியுடன் இந்த நிதியாண்டில் எடுத்துக்கொள்ளப்படவுள்ளன.

## 4. காவிரி தீரத்து மாவட்டங்களில் சிற்றாறுகளையும், வாய்க்கால்களையும் தூர் வாரி, கட்டமைப்புகளைப் புதுப்பித்தல்

காவிரி தீரத்து மாவட்டங்களில் உள்ள சிற்றாறுகளையும், வாய்க்கால்களையும் தூர் வாருவதற்கு இந்த அரசு தொடர்ந்து முன்னுரிமை அளித்து வருகிறது. தூர் வாரவும், கட்டுமானங்களைப் புதுப்பிப்பதற்காகவும் இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கையின்படி மொத்தம் ரூபாய் 40 கோடி மதிப்பீட்டில் பணிகள் செயற்படுத்தப்படும்.



2007 ஏப்ரல் 4]

## 5. 2007–08–ல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள பகுதி II திட்டங்கள்

புதிய பாசனத் திட்டங்கள், நீர்ச் செறிவுத் துளைகளுடன்கூடிய தடுப்பணைத் திட்டங்கள் மற்றும் நீர் நிலைகளை மேம்படுத்தும் நோக்கத்துடன் செயல்படுத்தப்படும்.

1. ரூபாய் 1.75 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டத்தில் உள்ள வெண்ணாறு தொலைகல் 42/1-ல் மட்டச் சுவர் அமைத்து ஏ47 ரகுநாத காவிரி வாய்க்காலின் பாசன நிலங்களுக்குத் தடையின்றித் தண்ணீர் வழங்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

2. ரூபாய் 45 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், கீழ்வளம் கிராமத்தின் அருகில் புக்கத்துறை ஓடையின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

3. ரூபாய் 25 இலட்சம் மதிப்பீட்டில் விழுப்புரம் மாவட்டம், கரடிசித்தூர் கிராமத்தில் உள்ள குமாரபாளையம் வாத்துக் கால்வாய்க்கு நீர் வழங்க முக்தா நதியின் குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

4. ரூபாய் 14 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம் மற்றும் வட்டத்தில் உள்ள முதலைமுத்து வாரியின் குறுக்கே தொலைகல் 7,800 மீட்டரில் தடுப்பணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

5. ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம், மற்றும் வட்டம், சோழகம்பட்டி வாரி குறுக்கே தடுப்பணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

6. ரூபாய் 40 இலட்சம் மதிப்பீட்டில் நாகப்பட்டினம் மாவட்டம், மயிலாடுதுறை வட்டம், கோமல் கிராமத்தில் வீரசோழன் ஆற்றின் குறுக்கே தொலைகல் 118 கி.மீ.-ல் தரைமட்டச் சுவர் கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

7. ரூபாய் 14 இலட்சம் மதிப்பிட்டில் திருச்சிராப்பள்ளி மாவட்டம், துறையூர் வட்டம், களரான் குளத்திற்கு நீர் வழங்க வடக்குவெளி கிராமத்தின் உட்கிராமமான கொத்தம்பட்டி கிராமத்தில் மட்டான்குளம் வாரியின் குறுக்கே ஓர் அணைக்கட்டு கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

8. ரூபாய் 21 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், மேட்டுப்பாளையம் வட்டம், தெக்கம்பட்டி கிராமத்தில் பெரும்பள்ளம் குறுக்கே க.ச.எண் 54-ல் தடுப்பணை கட்டப்படும்.

9. ரூபாய் 41 இலட்சம் மதிப்பீட்டில் சிவகங்கை மாவட்டம், மானாமதுரை வட்டம், கிருதுமால் ஆற்றின் குறுக்கே சமரணை அமைத்து அம்பலத்தடி, மாங்குடி முதலிய ஏரிகளுக்குப் பாசனம் அளிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

10. ரூபாய் 59 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், இரணியல் கிராமம், வள்ளியாறு குறுக்கே அணைக்கட்டுடன்கூடிய தடுப்பணை அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

11. ரூபாய் 22 இலட்சம் மதிப்பீட்டில் கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டம், தாளகுளம் கல்பாடி ஏலா அருகில் வள்ளியாற்றின் நீர் கரை மீறாமல் இருக்கத் தடுப்பச் சுவர் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

12. ரூபாய் 16 இலட்சம் மதிப்பீட்டில் சேலம் மாவட்டம், ஆத்தூர் வட்டம், அம்மாம்பாளையம் கிராமத்தில் தடுப்பணை/நீர்ச் செறிவுத் துளைக் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

13. ரூபாய் 3 இலட்சம் மதிப்பீட்டில் திருநெல்வேலி மாவட்டம், சங்கரன்கோவில் வட்டம், மேலநீலிதநல்லூர் வட்டாரம் வன்னிக்கோனேந்தல் கிராமத்தில் தடுப்பண/நீர்ச் செறிவுத் துளைக் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

14. ரூபாய் 4 இலட்சம் மதிப்பீட்டில் தூத்துக்குடி மாவட்டம், ஒட்டப்பிடாரம் வட்டம், ஒட்டப்பிடாரம் வட்டாரத்திலுள்ள குலசேகரநல்லூர் கிராமத்தில் தடுப்பணை/நீர்ச் செறிவுத் துளைக் குழாய்கள் அமைக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

15. ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் தமிழ்நாட்டின் தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் சிறிய நீர்ப்பிரிவு முகடு அடிப்படையில் நிலத்தடி நீர் இருப்பினைக் கணக்கிடும் திட்டம் செயல்படுத்தப்படும்.

16. ரூபாய் 10 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், ஸ்ரீபெரும்புதூர் வட்டம், ஸ்ரீபெரும்புதூரில் உள்ள ஆய்வு மாளிகையைப் புதுப்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.



17. ரூபாய் 15 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம் மற்றும் வட்டம், பாலுச்செட்டிசத்திரத்தில் உள்ள ஆய்வு மாளிகையில் கூடுதல் அறைத் தொகுதி கட்டும் திட்டம் செயல்படுத்தப்படும்.

18. ரூபாய் 20 இலட்சம் மதிப்பீட்டில் கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை வட்டம், மேல் நீராறு அணையின் திட்ட இல்லத்தைப் புதுப்பிக்கும் திட்டம் செயல்படுத்தப்படும்.

19. ரூபாய் 2.5 கோடி மதிப்பீட்டில் சாத்தனூர், கிருஷ்ணகிரி, பவானிசாகர் மேட்டூர் மற்றும் கெலவரப்பள்ளி நீர்த்தேக்கங்களில் உள்ள பூங்காக்களை மேம்படுத்தி, அழகுபடுத்திப் புதுப்பிக்கப்படும்.

20. ரூபாய் 70 இலட்சம் மதிப்பீட்டில் காஞ்சிபுரம் மாவட்டம், மதுராந்தகம் வட்டம், நெல்வாய் மடுவு அணைக்கட்டிலிருந்து மதுராந்தகம் ஏரி வரையிலான நெல்வாய் மடுவினை மேம்படுத்தும் திட்டம் செயல்படுத்தப்படும்.

## 6. தாமிரபரணி, கோதையாறு பாசன அமைப்புகளைப் பராமரிக்கக் கூடுதல் நிதி உதவி

திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களில் அமைந்துள்ள தாமிரபரணி வடிநிலத்தில் உள்ள பாசனக் கால்வாய்கள் மற்றும் ஆற்றின் சில மதகுகளை ஒட்டிய பகுதிகள் பராமரிப்பின்றி உள்ளதால் பாசன நீர் செலுத்துவதில் விவசாயிகள் பெரும் சிரமத்திற்கு உள்ளாகின்றனர். இதனைக் கருத்தில்கொண்டு இந்த ஆண்டு தாமிரபரணி ஆற்றில் உள்ள 8 அணைக்கட்டுகள், 11 கால்வாய்கள் மற்றும் அவற்றினால் பயன்பெறும் 185 குளங்கள் ஆகியவற்றில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ள முடிவு செய்யப்பட்டுள்ளது. மேலும் கன்னியாகுமரி மாவட்டத்தில் கோதையாறு திட்டத்தில் உள்ள 4 அணைக்கட்டுகள், 8 கால்வாய்கள், 2,355 குளங்கள் உடனடியாகப் பராமரிப்புச் செய்யப்பட வேண்டிய அவசியத்தினையும் கருத்தில் கொண்டு தாமிரபரணி மற்றும் கோதையாறு வடிநிலப் பகுதிகளில் உள்ள பாசன அமைப்புகளுக்கு இரண்டு கோடி ரூபாய் கூடுதல் பராமரிப்பு நிதி ஒதுக்கீடு செய்து இந்த நிதியாண்டில் பராமரிப்புப் பணிகள் மேற்கொள்ளப்படும்.

## 7. புத்தன் அணை சீரமைக்கும் திட்டம்

கன்னியாகுமரி மாவட்டம், கல்குளம் வட்டத்தில் உள்ள புத்தன் அணை, அக்டோபர் 2006-ல் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கினால் பாதிக்கப்பட்டுள்ளது. கோதையாறு பாசன அமைப்பில்

[2007 ஏப்ரல் 4

புத்தன் அணை ஒரு முக்கியப் பங்கு வகிக்கிறது. புத்தன் அணையினை ரூபாய் 1.5 கோடி செலவில் சீரமைப்பதற்கு, வடிவமைப்புகள் மற்றும் மதிப்பீடுகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. விரைவில் பணிகள் மேற்கொள்ளப்படும்.

இப்பணிகளை மேற்கொள்வதன்மூலம், கன்னியாகுமரி மாவட்டம், அகஸ்தீஸ்வரம், தோவாளை மற்றும் கல்குளம் வட்டங்களில் உள்ள 79,000 ஏக்கர் பரப்பின் ஆயக்கட்டுதாரர்களின் உரிமைகள் பாதுகாக்கப்படும்.

**8. காஞ்சிபுரம் மாவட்டம், செங்கல்பட்டு வட்டம், நீஞ்சல்மடுவு அணைக்கட்டு மற்றும் பொன்விளைந்தகளத்தூர் ஏரியை மேம்பாடு செய்யும் திட்டம்**

செங்கல்பட்டு நகரத்தின் அருகே உள்ள நீஞ்சல் மடுவு அணைக்கட்டு 1940 ஆம் ஆண்டு கட்டப்பட்டது. இவ்வணைக்கட்டில் இருந்து பொன்விளைந்தகளத்தூர் ஏரிக் கால்வாய்மூலம் பாசன வசதி பெறுகிறது. 1975 மற்றும் 1987 ஆம் ஆண்டுகளில் ஏற்பட்ட வெள்ளப் பெருக்கில் இவ்வணைக்கட்டு சேதம் அடைந்ததனால் பொன்விளைந்தகளத்துார் ஏரிக்கு இதுநாள் வரை போதிய நீர்வரத்து கிடைக்கவில்லை.

இந்த அணைக்கட்டினைச் சீரமைக்கவும் பொன்விளைந்தகளத்தூர் ஏரிக் கால்வாயைத் தூர் வாரவும் ரூபாய் 1.5 கோடிக்கு மதிப்பீடு தயாரிக்கப்பட்டுள்ளது. இப்பணி நபார்டு உதவியுடன் செயலாக்கப்படும்.

**9. திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டம், ஸ்ரீராமசமுத்திரம் அருகே ஒரு மண் கொரம்பினைக் கட்டுமானக் கொரம்பாக அமைக்கும் திட்டம்**

திருச்சிராப்பள்ளி மாவட்டம், முசிறி வட்டத்தில் காவிரியின் கரையில் வடகரை வாய்க்கால் தலைமதகிற்குத் தண்ணீர் வழங்குவதற்காக ஸ்ரீராமசமுத்திரம் அருகே உள்ள ஒரு மண் கொரம்பினைக் கட்டுமானக் கொரம்பாக நிரந்தரமாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகளை, கட்டளைக் கதவணையின் நீர்ப்பிடிப்பினை ஆராய்ந்த பின்பு வடிவமைத்துக் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும்.



2007 ஏப்ரல் 4]

**10. வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டத்தில் பொன்னை ஆற்றின் குறுக்கே தரைப் பாலம் அமைத்தல்**

வேலூர் மாவட்டம், வாலாஜா வட்டத்தில் பொன்னை-ராணிப்பேட்டை சாலையையும் வள்ளிமலைக்கு அருகே உள்ள மேலபாடியையும் இணைக்கக்கூடிய வகையில் பொன்னை ஆற்றின் குறுக்கே ரூபாய் 1.5 கோடி செலவில் 200 மீட்டர் நீளத்திற்கு ஒரு தரைப் பாலம் அமைக்கப்படும்.

**11. சிவகங்கை மாவட்டத்தில் ஷீல்டு கால்வாய் மற்றும் 40 ஏரிகள் சீரமைத்தல்**

சிவகங்கை மாவட்டத்தில் பெரியாறு பிரதானக் கால்வாயின் 12-வது கிளைக் கால்வாய் குறிச்சி ஏரியில் முடிகிறது. அதன் தொடர்ச்சியாக ஷீல்டு கால்வாய் என்ற பெயரில் இந்தக் கிளைக் கால்வாய் நீட்டுவிக்கப்பட்டு, 40 ஏரிகளுக்குப் பாசன நீர் அளிக்கிறது. இந்தக் கால்வாயினைச் சீரமைத்து அதன் முதல் பகுதியிலுள்ள மூன்று ஏரிகளையும் கடப்பதற்கு மாற்றுக் கால்வாய் (Bye-pass) அமைக்கவும், இக்கால்வாயினால் பயன்படும் 40 ஏரிகளையும் சீரமைப்பதற்கும் ரூபாய் 5.4 கோடியில் திட்டம் நபார்டு உதவியுடன் செயலாக்கத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும்.

**12. ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மைல் 26/5.420–ல் புதிய பாலம் கட்டுதல்**

ஈரோடு மாவட்டம், கோபி வட்டம், குருமந்தூர் கிராமத்தில் நடுப்பாளையம் முதல் மோளப்பாளையம் செல்லும் வழியில் கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மைல் 26/5.4200-ல் உள்ள குறுகிய பாலம் மிகவும் பழுதடைந்துள்ளதால், பொது மக்களும், மாணவர்களும் சிரமப்படுவதால் இந்தப் பாலம் பேருந்து செல்லக்கூடிய வகையில் சுமார் ரூபாய் 60 இலட்சம் செலவில் புதிய பாலமாகக் கட்டப்படும்.

**13. திருவாரூர் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், முடிகொண்டான் ஆற்றில் படுகை அணை கட்டுதல்**

திருவாரூர் மாவட்டம், திருமருகல் ஒன்றியம், புத்தகரம் வட்டம் முடிகொண்டான் ஆற்றின் குறுக்கே கேதாரிமங்கலம் கிராமம் அருகே ஒரு படுகை அணை (Bed dam) ரூபாய் 25 இலட்சம் செலவில் கட்டப்படும்.

[2007 ஏப்ரல் 4

## 14. தமிழகத்திலுள்ள ஆறுகளில் வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீரினைக் கணக்கிட உயர்மட்ட குழுவினை அமைத்தல்

தமிழகத்திலுள்ள ஆறுகளில் வெள்ளக் காலங்களில் வரக்கூடிய உபரி நீரினைத் தேக்கவும், தேவையான பகுதிகளுக்குத் திருப்பவும் கட்டளைப் படுகை அணை, கன்னடியன் வெள்ள நீர்க் கால்வாய் ஆகிய திட்டங்களை இந்த அரசு ஆய்வுக்கு எடுத்துக்கொண்டபோதிலும், தொடர்ந்து பல சட்டமன்ற உறுப்பினர்களும், ஒரு சில ஆண்டுகளுக்கு ஒரு முறை ஆறுகளில் வெள்ளமாகச் சென்று கடலில் கலக்கும் உபரி நீரையும் பயன்படுத்துவதற்கான திட்டங்களை வடிவமைத்துச் செயலாக்கும்படி வலியுறுத்தி வருகின்றனர்.

ஏற்கெனவே இத்தகைய ஒரு ஆய்வினை திரு டி.எஸ். விஜயராகவன், இ.ஆ.ப. தலைமையில் ஒரு மேல்மட்டக் குழு அமைக்கப்பட்டு ஒவ்வொரு ஆற்று வடிநிலத்திலும் உபரி நீரின் அளவு கணக்கிடப்பட்டுள்ளது. இருப்பினும், கடந்த ஆண்டு வரை ஏற்பட்ட வெள்ள நீரையும் கணக்கில்கொண்டு அத்தகைய ஒரு அளவீட்டினை எல்லா வடிநிலங்களுக்கும் கணக்கிட வேண்டும் எனும் நோக்கில் ஒரு உயர்மட்டக் குழுவினை ஏற்படுத்த அரசு முடிவு செய்துள்ளது. அக்குழுவின் அறிக்கை கிடைத்த பிறகு வெள்ளக் காலங்களில் வீணாகக் கடலுக்குச் செல்லும் நீரைப் பயன்படுத்துவதற்குத் திட்டங்கள் வடிவமைக்கப்படும்.

## 15. கன்னியாகுமரி மாவட்டத்தில் ஏற்படும் கடல் அரிப்பைத் தடுக்கும் பணிகள் பற்றிய ஆய்வு

கன்னியாகுமரி மாவட்டத்தில் சுனாமியால் ஏற்பட்ட சேதங்களைக் கவனத்தில்கொண்டு கடல் அரிப்பைத் தடுக்கும் நோக்கத்துடன் கருங்கல் சுவர் மற்றும் தூண்டில் வளைவுகள் அமைக்கப்பட்டுள்ளன. இருந்தபோதிலும் கடலோரப் பகுதிகளில் பல இடங்களில் கடல் அரிப்பைத் தடுக்கும் பணிகளை மேற்கொள்ள வேண்டும் என்ற கோரிக்கைகள் வந்துள்ளன. எனவே, கன்னியாகுமரி மாவட்டத்தில் மேற்குக் கடலோரத்தில் ஏற்படும் கடலரிப்பினால் பாதிக்கப்படும் மக்களின் குறைகளைத் தீர்க்க, உடனடியாக ஒரு தொழில்நுட்பக் குழு அமைத்து, இந்தப் பிரச்சினைகளுக்கு சிக்கனமான முறையில் நிரந்தரமாகத் தீர்வு ஏற்படும் வகையில், ஒரு திட்டம் தயாரிக்கப்பட வேண்டும் என முடிவு செய்யப்பட்டுள்ளது.



2007 ஏப்ரல் 4]

அதன் அடிப்படையில், இந்திய தொழில்நுட்பக் கழகம், மத்திய அரசு கடல்சார்பு மையம், பொதுப் பணித் துறை, நீரியல், மற்றும் நீர்நிலையியல் ஆய்வுக் கழகம், பூண்டி ஆகியவற்றினைச் சார்ந்த வல்லுநர்களை உள்ளடக்கி ஒரு தொழில்நுட்பக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இக்குழுவின் அறிக்கையைப் பெற்றுத் தேவையான இடங்களில் கடலரிப்பைத் தடுக்கக் கட்டுமானங்கள் அமைக்கப்படும்.

## 16. ஏரிகள் பாதுகாப்புச் சட்டம்

தமிழ்நாட்டில் பெரும்பாலான பகுதிகள் வடகிழக்குப் பருவ மழையினால் மழைபெறும்போது கிடைக்கும் தண்ணீரைத் தேக்க, ஆங்காங்கே சீரிய முறையில் பற்பல ஏரிகள் நம் முன்னோர்களால் அமைக்கப்பட்டு, பாசனம் மற்றும் குடிநீருக்காகப் பயன்படுத்தப்பட்டு வந்தன. இந்த ஏரிகள், தற்போது தொடர்ந்த ஆக்கிரமிப்புகளாலும், மாசுபடுதலாலும் பாதிக்கப்படுகின்றன. அவற்றைத் தடுத்து நிறுத்த தற்போதுள்ள சட்டங்கள் வலுவான அளவில் இல்லை. இதனால் ஏரிகளைப் பாதுகாப்பதற்கு உரிய தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க முடியாத நிலைமை உள்ளது. எனவே, வனத்தைப் பாதுகாக்கச் சட்டம் இருப்பதைப்போன்று ஏரிகளைப் பாதுகாக்க "ஏரிகள் பாதுகாப்புச் சட்டம்" ஏற்படுத்த வேண்டும் என அரசு கருதுகிறது. இந்த நோக்கில் இத்தகைய ஒரு சட்டத்தை விரைவில் உருவாக்குவதற்கும் எளிதில் இச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான வழிமுறைகளை வகுக்கவும் ஒரு நிபுணர் குழு அமைக்கப்படும். இக்குழுவின் அறிக்கையைப் பெற்று ஏரிகள் பாதுகாப்புசட்டம் வகுக்கப்படும்.

## 17. ஏரிகள் பராமரிப்பு

தமிழ்நாட்டில் பொதுப் பணித் துறையினால் பராமரிக்கப்படும் 10,540 ஏரிகளையும் இந்த அரசு தொடர்ந்து அக்கறையுடன் வெவ்வேறு நிதி உதவிகளுடன் சீரமைத்து வருகிறது. இருப்பினும், சட்டமன்ற உறுப்பினர்களும், விவசாயிகளும் ஏரிகளைத் தூர் வாரி சீரமைக்க வேண்டும் என்ற வேண்டுகோளினைத் தொடர்ந்து வைத்தவண்ணம் உள்ளனர். இப்பிரச்சினையை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்தில் விவாதித்தபோது விவசாயிகளின் பிரச்சினைகளில் முழுக் கவனம் செலுத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தெரிவித்தபடி தமிழகத்தில் உள்ள ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரது

[2007 ஏப்ரல் 4

தொகுதியிலும் அவர்களது பரிந்துரையின்படி இரண்டு ஏரிகள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவைகளை நபார்டு நிதியுதவியுடன், ஒவ்வொரு ஏரிக்கும் ரூபாய் 10 இலட்சத்திற்கு மிகைப்படாமல், தூர் வாரிச் சீரமைத்து மேம்படுத்தும் பணிகளை பொதுப் பணித் துறை மேற்கொள்ளும் என மகிழ்ச்சியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.

### 18. கட்டடப் பிரிவு

2007-08-ல் செயலாக்கத்திற்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ள பகுதி II திட்டங்கள்

1. ரூபாய் 1.00 கோடி மதிப்பீட்டில் தஞ்சாவூர் மாவட்டம் தஞ்சாவூரில் கூடுதல் சுற்றுலா மாளிகை கட்டப்படும்.

2. ரூபாய் 15.00 இலட்சம் மதிப்பீட்டில் திருவாரூரில் உள்ள சுற்றுலா மாளிகைக்குக் கூடுதலாக சாலை வசதி, சுற்றுச் சுவர் அமைத்தல் போன்ற பிற வசதிகள் செய்யப்படும்.

3. ரூபாய் 65.00 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை, சைதாப்பேட்டை, தாடண்டர் நகரில் 'சி' வகை அரசு ஊழியர் குடியிருப்பு (12 எண்கள்) மூன்று தளத்துடன்கூடிய 2 பிளாக் கட்டப்படும்.

4. ரூபாய் 51.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பில் உள்ள 12 கோட்டங்களுக்குப் புதிய வாகனங்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்யப்படும்.

5. ரூபாய் 8.00 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறைக் கட்டட அமைப்பில் உள்ள 2 வட்டங்களுக்குப் புதிய கார்கள் மாற்றீடு வகையில் கொள்முதல் செய்யப்படும்.

### 19. பொதுப் பணித் துறையில் பொறியாளர்கள் சுழற்சி முறையில் பணி மாறுதல்

பொதுப் பணித் துறையில் பணியாற்றும் பொறியாளர்கள் அனைவரும் திட்டக் கட்டுமானம், திட்டப் பராமரிப்பு, திட்ட உருவாக்கம், அலுவலகங்களில் உள்ள தொழில்நுட்பப் பிரிவு, ஆராய்ச்சி மற்றும் வடிவமைப்பு, நிலத்தடி நீர்ப் பிரிவு ஆகிய அனைத்துப் பிரிவுகளிலும் பணியாற்றி அனுபவம்பெறும் வகையில், இனி வருங்காலத்தில் **"சுழற்சி முறையில் பணி மாறுதல்"** வழங்கும் திட்டத்தினை அமல்படுத்த அரசு எண்ணியுள்ளது. இதன்மூலம்



2007 ஏப்ரல் 4]

பொறியாளர் ஒவ்வொருவரும் குறிப்பிட்ட காலத்திற்கு இத்துறையில் உள்ள ஒவ்வொரு பிரிவிலும் பணியாற்ற வேண்டியது கட்டாயமாக்கப்படும். இந்தச் சுழற்சி முறையில் பணி மாறுதலை அமல்படுத்துவதன்மூலம் இத்துறையின் அனைத்துப் பிரிவுகளிலும் பொறியாளர்கள் நேரடி அனுபவம்பெற்று துறையின் வளர்ச்சிக்குப் பெரிதும் உதவுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
227564
சென்னை-600 008
நூலகம்